
ஜோதிட ரகசியங்கள்-
1008
எடையூர் சிவமதி

# ஜோதிட ரகசியங்கள் 1008

ஆசிரியர் :

**எடையூர் சிவமதி**

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600-017.
தொலைபேசி : 24342926, 24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
Website : www.tamilvanan.com

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ➢ | ஜோதிட ரகசியங்கள் 1008 |
| ஆசிரியர் | ➢ | எடையூர் சிவமதி |
| மொழி | ➢ | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ➢ | 2001, 2004, 2015 |
| பதிப்பு விவரம் | ➢ | மூன்றாம் பதிப்பு |
| தாளின் தன்மை | ➢ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ➢ | கிரௌன் சைஸ் (12 x 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ➢ | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ➢ | 392 |
| நூலின் விலை | ➢ | ரூ. 170 |
| அட்டைப்பட ஓவியம் | ➢ | திரு. ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | ➢ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை -24. |
| அச்சிட்டோர் | ➢ | ஸ்கிரிப்ட் ஆப்ஸெட்,<br>செல்: 9551429203 |
| நூல் கட்டுமானம் | ➢ | தையல் |

# படிப்பதற்கு முன்!



'ஜோதிட இரகசியங்கள் 1008' என்னும் இந்த நூலைப் படிக்கும் முன் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளுங்கள். இதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நமது முன்னோர்கள் சொன்ன அதி அற்புதமான இரகசியத் தகவல்கள் ஆகும். இதில் கூறப்பட்டுள்ள ஜோதிட இரகசியங்கள் யாவும் பொதுவானவை ஆகும். தங்கள் ஜாதகத்தைக்கொண்டு பார்க்கும்போது அந்தக் கிரகம் நிற்கும் நட்சத்திரத்தின் சாரம், கிரகத்தின் பார்வை, கிரகத்தின் வீடு முதலியவற்றின் தன்மையைப் பொறுத்துப் பலன்கள் மாறுபடலாம். அதனை முதலில் கவனித்துக் கொள்ளவேண்டும். மற்றும் இந்த நூலில் பெதுவான சில விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. இவை யாவும் ஜோதிடக் கலையின் சூட்சுமத்தையும், நமது முன்னோர்களின் விஞ்ஞான பூர்வமான அறிவுத் திறமையையும் எடுத்துக் காட்டும் அதி அற்புத இரகசியங்கள் ஆகும். அதனை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அதன்படி நடந்து வளமான வாழ்வைப் பெற எல்லாம் வல்ல அந்த பரம்பிரம்மத்தை வேண்டி, தியானித்து, அருளைப் பெறுவோமாக!

# ஜோதிட ரகசியங்கள் 1008

## 1. விநாயகர் படம்!

கேது மகாதிசை, கேது புத்தி நடப்பவர்கள் விநாயகர் படத்தையோ (உதாரணமாய்ப் பிள்ளையார் பட்டி விநாயகர் படம்) மகான்கள் படத்தையோ (உதாரணமாய் ஓம்ஸ்ரீ அரவிந்த அன்னை படம்) பையில் வைத்துக்கொண்டால் கேது திசையில் அல்லது கேது புத்தியில் எந்தக் கெடுதலும் நேராது! இதனுடன் இவர்களுக்குரிய மந்திரத்தைத் தினமும் ஜெபிப்பது மிகுந்த நன்மையை அளிக்கும்!

## 2. விதியை மதியால் வெல்லலாம்!

'விதியை மதியால் வெல்லலாம்' என்பது வழக்கில் உள்ள பழமொழி. அதற்கு விதியைப் புத்திசாலித்தனத்தால் வெல்லலாம் என்பது பொருளன்று. விதி என்பது இலக்கினத்தைக் குறிக்கும். மதி என்பது இராசி ஆகிய சந்திரன் இருக்கும் இடத்தைக் குறிக்கும். இலக்கினத்திற்கு ஆகாத கிரகத்தின் திசை நடக்கும்போது, அந்தத் திசைக்குரிய கிரகம்

சந்திரனுக்குக் கேந்திரத்தில் இருந்து விட்டால் விதியை அதாவது, இலக்கினத்தை மதியால் - சந்திரனால் வெல்ல இயலும் என்பதுதான் இதன் கருத்து ஆகும்.

## 3. மனத்துக்குப் பிடித்தவரை மணக்க!

காதலுக்கு உரிய கிரகம் சுக்கிரன். வெள்ளிக்கிழமையன்று மாலையில் பளபளப்பான வெள்ளைத்துணி, வெள்ளைமொச்சை, வாசனையுள்ள வெள்ளைப்பூ ஆகியவற்றைக் கொண்டு நவகிரகத்தில் உள்ள சுக்கிரனுக்கு அர்ச்சனை செய்து ஒன்பது தடவை சுற்றி வரவேண்டும். "ஓம் சுக்ராய நமஹ" என 108 தடவை சொல்லி, ஆறு வெள்ளிக்கிழமை இவ்வாறு தொடர்ந்து செய்தால் நினைப்பவரை மணக்க அருள் கிட்டும். முதல் வாரத்தில் மட்டும் துணி சாத்தினால் போதும். மற்ற வாரங்களில் வாசனையுள்ள வெள்ளைப்பூவும், வெள்ளைமொச்சையுமே போதுமானவை!

## 4. மகத்துப்பெண்

'மகத்துப்பெண் ஜெகத்தை ஆள்வாள்' என்பது பழமொழி. ஆனால், அவர்களுக்குக் குடும்ப வாழ்க்கை சரிவர அமைவதில்லை! ஏனென்றால், ராசியாதிபதி (சிம்மம்) சூரியனுக்கு 7-ஆம் இடமான கும்பத்தின் அதிபதியாகிய சனி மிக்க பகை என்பதால்தான்!

## 5. பிளட்பிரஷர் நீங்க!

இரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் (Blood Pressure) அதற்கான வைத்தியங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

மேலும் கிரகத்தில் உள்ள குருபகவானுக்கு மஞ்சள் துணி அணிவித்து, கொண்டக்கடலையை நிவேதனம் செய்து, மஞ்சள்பூ கொண்டு அவரை அர்ச்சனை செய்து வழிப்பட வேண்டும். "ஓம் குருவே நமஹ" என 108 தடவை கூறிக் குருபகவானை ஒன்பது முறை வலம் வந்து வணங்கவேண்டும். இந்தப் பரிகார வழிபாட்டை மூன்று வியாழக்கிழமை செய்யவேண்டும். பின் நிவேதனம் செய்து கொண்டக்கடலையை அர்ச்சகருக்குத் தானமாய்க் கொடுத்து விடவேண்டும். இவ்வாறு செய்தால் பிளட்பிரஷர் குணமாவதைக் காணலாம்.

## 6. மஞ்சள் ஆடை!

குருதிசை நடப்பவர்கள் மஞ்சள் ஆடை அல்லது காவி உடையை வீட்டில் உள்ளபோது அணிந்து கொண்டால் குருதிசை நீச்ச திசையாய் இருந்தாலும் செல்வத்தையும், வளத்தையும் கொடுக்கும். எப்போதும் மஞ்சள் துண்டோ அல்லது மஞ்சள் கைக்குட்டையோ இருப்பது அவசியம்!

## 7. சர்ப்பதோஷம்!

ஒருவர் ஜாதகத்தில் சந்திரனுடன் கேதுவும், சூரியனுடன் இராகுவும் இணைந்து காணப்பட்டால் அவருக்கு சர்ப்பதோஷம் உண்டு. இப்படி அமைந்திருப்பவர்களுக்கு எவ்வளவு திறமை இருந்தாலும் வாழ்வில் முன்னேறுவது மிகவும் சிரமம் ஆகும். இவர்கள் 'காளஹஸ்தி' சென்று சர்ப்ப சாந்தி செய்து கொண்டால் கெடு பலன்கள் குறையும்!

## 8. அமாவாசையும் பௌர்ணமியும்!

சந்திரனும் சூரியனும் சேர்ந்திருக்கப் பிறந்தவர்கள். அதாவது, அமாவாசை அன்று பிறந்தவர்கள் எந்த ஒரு காரியம் செய்தாலும் இரகசியமாகவே இருக்கும். என்ன தவறு செய்தாலும் வெளியில் தெரியாது. ஆனால், அதே சூரியனும் சந்திரனும் 7க்கு 7இல் சப்தமாய் இருக்க அதாவது, பௌர்ணமி அன்று பிறந்தவர்கள் எந்த ஒரு சிறு குற்றம் செய்தாலும் அது வெளியில் தெரிந்துவிடும். அல்லது அவரே உளறி மாட்டிக்கொள்வார்!

## 9. அரசியல்வாதியும் அகால மரணமும்!

ஒருவரது ஜாதகத்தில் செவ்வாய் ஆட்சி உச்சம் பெற்றிருந்தால் அவருக்கு அரசியலில் பெரிய செல்வாக்கு ஏற்படும். மக்களை ஆளும் தன்மை ஏற்படும். ஆனால், செவ்வாய் திடீர் மரணத்திற்குக் காரணகர்த்தா! இரத்தத்தைச் சிந்திக் கொடூரமரணத்தைக் கொடுப்பவர். அதனால்தான் அரசியல் தலைவர் பலர் துப்பாக்கிக் குண்டுக்கும் வெடிகுண்டுக்கும் பலியாவதற்குக் காரணமாகும்.

## 10. சித்திரை மாதமும் அப்பாவும்!

ஜாதகர் சித்திரை மாதத்தில் பிறந்தால் அவர் அப்பாவுக்கு ஆகாது எனச் சொல்லப்படுவது உண்டு. சித்திரை மாதத்தில் சூரியன் உச்சத்தில் இருப்பார். சூரியன், தகப்பனாரைக் குறிக்கும் கிரகம். எனவே, ஜாதகத்தில் சூரியன் பலம் பெறுவதால் சதாதமகனைக் குறை சொல்லியும் மிரட்டியும் விரோதம் காட்டுவார். மகனும் தந்தையை விரோதி போலப் பாவிப்பார். அதே போல், ஐப்பசி மாதம் பிறந்த ஜாதகரின்

ஜாதகத்தில் சூரியன் நீசத்தில் இருப்பார். எனவே அந்த ஜாதகருக்குத் தகப்பனார் பயப்படுவார் அல்லது இருவரும் நண்பர்கள் போலப் பழகுவார்கள்!

## 11. ஆட்டிப் படைக்கும் ஆடிமாதம்!

குருபகவானே பண நடமாட்டத்திற்கு அதிபதி. செல்வம் அவரது இயக்கந்தான். அவர் ஓர் இராசியில் ஒரு வருடம் சஞ்சரிப்பார். ஆடி மாதத்தில் 'வக்ரகதி' அடைவார். அவர் வக்கிரமானவுடன் பொருளாதாரம் மிகவும் தட்டுப்பாடு ஆகிவிடும். அதனால்தான் 'ஆடிமாதம் ஆட்டுவிக்கிறது' பணம் புரளவில்லை எனச் சொல்லுவார்கள்.

## 12. நிலாச்சோறு!

சந்திரன், உணவிற்கு அதிபதியானவர். சந்திரன் ஒரு ஜாதகத்தில் வலுத்திருந்தால், அவருக்கு உணவுக்குப் பஞ்சம் இருக்காது! ருசியான உணவை விரும்பி உண்ணக்கூடியவர்! பௌர்ணமி இரவு அன்று எல்லோரும் சேர்ந்து வீட்டு முற்றத்தில், மாடியில் நிலாவைப் பார்த்துக்கொண்டே 'நிலாச்சோறு' சாப்பிடுவார்கள். பௌர்ணமியன்று சந்திரனின் முழு ஆதிக்கம் உள்ள நாள். அதனால்தான் எல்லோரும் உணவு அருந்துவதை அவர் பார்வைபடும்படி ஆயிற்று! ஒரு குழந்தைக்கு உணவு ஊட்டும் தாய்கூட நிலவைக்காட்டி உணவு ஊட்டும் அதிசயத்தைப் பாருங்களேன்!

## 13. காதல் தோல்வி!

எட்டாம் இடத்தில் சுக்கிரன் இருந்து, அவர் பார்வை கிடைக்காவிட்டால், ஜாதகர் காதல் தோல்வி அடைவார்,

பாலியல் நோய் ஏற்படும்: நாய்க்கடியால் தொல்லைப்படுவார்.

## 14. நாய்க்கடி!

சுக்கிரன் நாய்களுக்குக் காரகத்துவம் உடையவர். ஒருவர் ஜாதகத்தில் சுக்கிரன் கெட்டுப்போயிருந்தால் அவரை நாய் கடிக்கும்!

## 15. காதல் நிலவு!

சோதிடசாஸ்திரப்படி காதலுக்கும், நட்புக்கும் சந்திரனே காரணம் வகிக்கின்றான். பௌர்ணமியன்று சந்திரன் ஆண், பெண் இருபாலாருக்கும் ஒரு வித மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணுவார். காதலுக்கு அதிபதி சந்திரன் என்பதால்தான் அந்தக்காலம் முதல் இந்தக்காலம்வரை காதல் பாடல்கள் பெரும்பாலானவற்றில் நிலவு இடம் பெற்றிருப்பதை அறியலாம். மேலும் அந்த நிலவு எத்தனை காதலுக்குச் சாட்சியாக இருந்திருக்கிறது என இந்த உலகம் அறியும்!

## 16. நடிகைகளும் நாய்களும்!

பெண்களுக்கு சுக்கிரன் நன்றாய் அமையப் பெற்றிருந்தால் தோற்றப்பொலிவையும் நளினத்தையும், கலை ஆர்வத்தையும் தருவார் சுக்கிரன். சிலருக்கு நடிகையாகும் பாக்கியமும் கிட்டும். அதன் மூலமாய்க் கார், பங்களா எனப் பலவிதச் சுகங்களை அவர்கள் அனுபவிப்பார்கள். அதே சுக்கிரன் நாய்களுக்கும் காரகத்துவம் உடையவராதலால் அவர் ஆதிக்கம் உள்ள நடிகைகளுக்கு நாயின் மேல் பிரியம் ஏற்படும். எனவேதான் அவர்கள் தங்களது பேட்டியில் ‘நாய் இல்லாத

வாழ்வை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை' எனக் கூறுகிறார்கள். எனவே, நடிகைகள் ஏன் நாய்களை வளர்க்கிறார்கள் என்பது இப்போது விளங்கியிருக்கும். மேலும், சுக்கிரனுக்கு மிகவும் பிடித்த நிறம் வெள்ளை ஆகும். அதனால்தான் நடிகைகள் வளர்க்கும் நாய்களுள் பல வெள்ளை நிறமுடையனவாய் உள்ளன என்பது சுவையான தகவல்தானே!

## 17. செவ்வாய் தோஷமும் விஞ்ஞானமும்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் நின்றால் அதைச் செவ்வாய் தோஷம் என்பார்கள். அவர்களுக்குச் செவ்வாய் தோஷம் உடையவர்களையே மணமுடித்து வைக்கவேண்டும். இவ்வாறு நமது சோதிட சாஸ்திரம் கூறுகிறது. இதைப்பற்றி மருத்துவ விஞ்ஞானம் என்ன சொல்கிறது?

செவ்வாய் நமது உடலில் ஓடும் இரத்தத்திற்குக் காரணமாகிறார். செவ்வாய் தோஷமுள்ள ஆண் அல்லது பெண்ணின் இரத்தத்தை ஆராய்ந்தால் அவர்கள் இரத்தத்தில் 'HO' கிருமிகள் அதிக அளவில் இருக்கும். ஆனால், அவை அவர்களைப் பாதிக்கா. காரணம், அவற்றை எதிர்க்கும் சக்தி அவர்கள் உடம்பில் இயற்கையாக இருக்கும். எனவே, செவ்வாய் தோஷம் உடையவனை, செவ்வாய் தோஷம் இல்லாத பெண்ணுக்கு மணம் முடித்தால், அக்கணவனின் இரத்தத்தில் உள்ள HO கிருமிகள் மனைவியின் உடலில் சென்றுவிடும். அக்கிருமிகளை எதிர்க்கும் சக்தி மனைவியின் உடலில் இல்லாததால், அவளது உடல் பாதிக்கப்படும். அதனால் அவள் நிரந்தர நோயாளியாகிவிடுவாள். உயிருக்குக் கேடு ஏற்படக்கூடும் என மருத்துவ விஞ்ஞானம் இந்த ஜோதிட

உண்மையை நிரூபித்துள்ளது. எனவே, செவ்வாய் தோஷமுள்ள ஒருவருக்கு செவ்வாய் தோஷம் உள்ள ஒருவரை மணம் முடிக்கவேண்டும். ஏனென்றால் இருவருக்கும் எதிர்ப்புச் சக்தி இருப்பதால் இருவருக்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படுவதில்லை!

### 18. காக்கா வலிப்பு!

வலிப்பு நோய்க்குக் 'காக்கா வலிப்பு' என்னும் பெயர் சோதிடரீதியில் அமைந்திருக்கும் அதிசயத்தைப் பார்க்கலாம். அந்த வலிப்புக்கு மூலகாரணமே சனியின் தோஷம் ஆகும். அதனைச் சனி வலிப்பு எனக் கூறாமல், சனீஸ்வரபகவானின் அமிசமாய் விளங்கும் காக்கை வாகனத்தை மையமாய்க்கொண்டே அதனைக் 'காக்கா வலிப்பு' என வழங்கினார்கள். மேலும், அந்த நோயால் பாதிக்கப்பட்டவருக்குச் சனீஸ்வர பகவானின் உலோகமாகிய இரும்பைக் கையில் கொடுத்தால் சனி தோஷம் குறைந்து, இழுப்புநோய் நின்றுவிடும். இதனை மருத்துவ விஞ்ஞானம் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், இந்தப் பரிகாரமானது 'கிரகஆகர்ஷணம்' என்னும் முறையில் அமைந்தது ஆகும். இந்தக் கிரக ஆகர்ஷண முறையில் பல நோய்களைக் குணப்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### 19. சந்திரன் கெட்டது பெண்ணாலே!

'இந்திரன் கெட்டதும் பெண்ணாலே,
சந்திரன் கெட்டதும் பெண்ணாலே'

என்று ஒரு பழமொழி உண்டு.

குருவுக்கு, அதாவது வியாழனுக்கு-சீடர், சந்திரன். சகல வேதங்களையும் கற்க வேண்டி, குருவிடம் குருகுலவாசம் செய்தார், சந்திரன். குருபகவானுக்குத் தம் சீடராகிய சந்திரனை மிகவும் பிடித்துவிட்டது. குருவின் மனைவி தாராதேவி ஆவாள். அவள் சந்திரனின் அழகில் மயங்கி, சந்திரனை மன்மதக் கலையைக் கற்றுக்கொள்ள அழைத்தாள். சந்திரனும் அறிவு கெட்டுத் தாராதேவியுடன் கூடிவிட்டார். அதைக் குரு அறிந்தார். அவரது சாபத்திற்கு ஆளானார், சந்திரபகவான். அதனால் ஏற்பட்டதே மேற்கண்ட பழமொழி.

இதே பாதிப்பைச் சோதிட சாஸ்திரத்திலும் பார்க்கலாம் என்பதே விந்தையான செய்தியாகும்! அதாவது, ஒருவர் சாதகத்தில் குருவும் சந்திரனும் கூடி இருந்தால் குரு சந்திரயோகம் ஏற்பட்டு அந்த ஜாதகரை உயர்வடையச் செய்யும். ஆனால், அதே குருவும் சந்திரனும் ஒரு ஜாதகத்தில் மனைவிஸ்தானமான 7-ஆம் இடத்தில் இருந்தால், குருவுக்குத் தம் மனைவியுடன் சந்திரன் கள்ளத்தொடர்பு கொண்டது நினைவுக்கு வர, அதற்கான பாதிப்பைக் காட்டிவிடுவான்! ஒருவரது ஜாதகத்தில் 7-ஆம் இடத்தில் குருவும் சந்திரனும் இணைந்துவிட்டால் அந்த ஜாதகரின் திருமணம் குளறுபடியாகும்; குடும்பம் பிரச்சினைக்குரியதாகும். இதைத்தான் புலிப்பாணி தமது பாடலில், 'பாரப்பா பால் மதியும், பரம குருவும் ஏழில் ஏற; ஹப்பா கோதையவளும் விலகிடுவாள்!' என்று குறிப்பிட்டுள்ளார்.

## 20. யானை முடியின் இமை!

சந்திரனுக்கு 6, 8, 12இல் குரு இருந்தால் அதற்குச் 'சகடைதோஷம்' என்று பெயர். அதற்கான பலன்

என்னவென்றால் நிலையில்லா வாழ்வையும், சதா கஷ்டமும், தேவையில்லாத நிறைய அனுபவங்களும் ஏற்படும். இந்தத் தோஷத்தைப் போக்கிக்கொள்ள யானை வால் முடியைத் தங்கத்தில் காப்போ மோதிரமோ செய்து அணிய வேண்டும். மேலும், யானைக்குப் பச்சரிசி வெல்லம் ஆகியவற்றைக் கலந்து வைத்தும், கரும்பு, வாழைப்பழம் ஆகியவற்றைக் கொடுத்தும், அதன் தும்பிக்கையால் ஆசீர்வாதம் பெற்றும் இந்தச் சகடை தோஷத்தின் பாதிப்பை ஓரளவு குறைக்கலாம்!

## 21. தீர்க்க தரிசனம்!

சனி, ஐஸ் கட்டிகளால் ஆன கிரகம், அதைச் சுற்றி வளையமாய மீதேன் வாயு அமைந்திருக்கிறது. அது கருநீல நிறத்தில் உள்ளது. இவ்வாறு மேலைநாட்டு விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்து கூறியுள்ளார்கள். இங்கு குறிப்பிடத்தக்கது என்னவென்றால், பின்வரும் செய்திதான். புதுக்கோட்டைக்கு அருகேயுள்ளது, சித்தன்னவாசல் குகை. அங்குள்ள ஓவியத்தில் சமணர்கள், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சனிக்குக் கருப்பு வண்ணம் கொடுத்துள்ளனர்; அதற்கு ஒரு வளையத்தையும் இட்டுள்ளனர்! மேலும் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த 'புலிப்பாணி' தமது பாடலில், சனி ஒரு பனிக்கிரகம் எனப் பாடியுள்ளார். இதிலிருந்து நம் தமிழர்களின் அறிவியல் திறனை அறிந்து கொள்ளலாம்.

## 22. இந்தியாவும் புதனும்!

நவகோள்களுள் புதன் இந்தியாவுக்கு வெகு அருகில் இருக்கிறது. காவியம், வானவியல், சாஸ்திரம், ஆன்மீகம், கணிதம் ஆகியவற்றிற்குக் காரணகர்த்தா புதன் ஆவார்.

அதனால்தான் நம் நாட்டில் பற்பல மகான்கள், ரிஷிகள், வானவியல் நிபுணர்கள், ஜோதிடர்கள் தோன்றினார்கள். கணிதத்தில் மிகப்பெரிய கண்டுபிடிப்பான பூஜ்ஜியத்தைக் கண்டதும் நம்நாடுதான். மேலும், புதன் கிரகம் அறிவையும், கற்பனையையும் அள்ளித்தரும் கிரகம். அதனால்தான் நமது நாட்டில் இராமாயணம், மகாபாரதம் போன்ற உலகம் போற்றும் காவியங்கள் தோன்றின. ஆனால், புதன் ஒரு வறுமைக்கிரகம். அதனால்தான் நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

## 23. மகாபாரதமும் நவகிரகங்களும்!

மகாபாரதத்தின் முக்கிய கதாபாத்திரங்களான ஒன்பதின்மர். ஒன்பது கிரகங்களின் குண சாராம்சத்தைப் பெற்றிருப்பது ஆச்சரியமான ஒன்றாகும். குருவின் அமிசமாய் விளங்கியவர். தருமர், அவர் குருவின் குணமாகிய நீதி, தர்மம், பொறுமை என்னும் குணங்களைப் பெற்றுச் செயல்பட்டார். செவ்வாயின் அமிசமாய் விளங்கியவன். அர்ச்சுனன் செவ்வாயின் குணத்தைப் பெற்று அவன் வீரனாயும், சூரனாயும் காம இச்சை அதிகம் உள்ளவனாயும் இருந்தான். சூரியனின் அமிசமாய் விளங்கியவன், கர்ணன். அவன் சூரியனைப் போலக் கொடையாளியாயும், க.ர்மவீரனாயும் திகழ்ந்தான். சந்திரனின் அமிசமாய் விளங்கியவன் கண்ணன். சந்திரனின் குணத்தைப்பெற்று அவன் அழகனாயும், பெண்களுக்குப் பிரியமானவனாயும் காதல் வயப்பட்டவனாயும் திகழ்ந்தான். புதனின் அமிசமாய் விளங்கியவன் சகாதேவன். அவன் புதனின் குணத்தைப் பெற்றுச் சோதிடம், வானவியல், கணிதம் ஆகியவற்றை அறிந்தவனாயும், பொறுமைசாலியாயும் திகழ்ந்தான். கேதுவின் அமிசமாய் விளங்கியவன் நகுலன்.

அவன் கேதுவின் குணத்தைப்பெற்று மருத்துவனாயும், குதிரை பாஷை தெரிந்தவனாயும் விளங்கினான். சனியின் அமிசமாய் விளங்கியவன், சகுனி. அவன், சனியின் குணமாகிய சூதாட்டத்தில் வல்லவனாயும், பிறர் சந்தோஷம் கொள்வதைப் பொறுத்துக் கொள்ளாதவனாயும், சனியைப் போல் சாய்ந்து நடப்பவனாயும் இருந்தான். சுக்கிரனின் அமிசமாய் விளங்கியவள் பாஞ்சாலி. சுக்கிரனின் குணம் காமசுகம் அளித்தல். அவள் நிகரில்லாத ஆண்மக்கள் ஐவருடன் குடும்பம் நடத்தினாள். இராகுவின் அமிசமாய் விளங்கியவன் துரியோதனன். இராகுவின் குணமான பழிவாங்குதல் எண்ணத்தைப் பெற்றுத் தன்னைப் பார்த்துச் சிரித்த பாஞ்சாலியைப் பழிவாங்கும் எண்ணத்துடன் அரசவையில் அவன் துகிலை உரித்தான். பழி வாங்கும் துரியோதனனின் குணமே மகாபாரதம் தோன்றக் காரணமாய் அமைந்துவிட்டது!

## 24. ரிஷப இராசியின் அதிசயக் குணம்!

ரிஷப இராசிக்காரர்கள் சந்திரன் உச்சத்தில் இருக்கப் பிறந்தவர்கள். சந்திரன் சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்றுப் பிரதிபலிக்கும் கிரகம். அதே குணம் அவர்களுக்கும் உண்டு. அதாவது, பிறரிடம் கேட்டு வாங்கும் குணமாகும். இதற்கு ஓர் எடுத்துகாட்டு வருமாறு: ரோகிணி நட்சத்திரம் ரிஷபராசியில் பிறந்தவன், கண்ணன் அவன் நண்பன், குசேலர். அவர் 27 பிள்ளைகளைப் பெற்றுச் சீர்குலைந்து, ஏழ்மையின் பிடியில் சிக்கித் தவித்தார். அவர் தன்னைக் காண வந்தபோது, அவரை எதிர்கொண்டு அழைத்த கண்ணன் முதலில் கேட்ட கேள்வி என்ன தெரியுமா? "என்னை நீண்ட நாள் கழித்துக் காண வந்திருக்கிறாயே, இந்த நண்பனுக்காக என்ன கொண்டுவந்தாய்?" என்பதுதான். குசேலரும், தாம் கொண்டு

வந்த அவலைக் கண்ணனிடம் கொடுத்தார். இது பற்றிப் பிரம்மாவிடம் கண்ணன் கேட்க, அதற்குப் பிரம்மா, "நீ தெய்வமாய் இருந்தாலும், மானிடப் பிறவியில் இருந்ததால் உனக்கு அந்த ரிஷப ராசியின் குணம் அமைந்துவிட்டது" என்றார்!

## 25. பணக்கார நோய்!

ஒருவரது சாதகத்தில் சுக்கிரன் மிகவும் பலம் பெற்றிருந்தால் கார், பங்களா, பெண் இன்பம் என அனைத்துச் சுகமும் வாய்க்கும். ஆனால், சுக்கிரன் மிகவும் சர்க்கரைப் பிரியர், நீரிழிவு நோய்க்குக் காரணகர்த்தாவாய் உள்ளவர்! எனவேதான் அவரின் ஆதிக்கம் அதிகமாய் உள்ளவர்களுக்கு நீரிழிவு நோயைத் (சர்க்கரை வியாதியை) தந்துவிடுவார், சுக்கிரபகவான். சுகங்களைத் தரும் சுக்கிரபகவான், நீரிழிவு நோயையும் தந்துவிடுவார். இப்போது புரிகிறதா, பணக்காரர்களைச் சர்க்கரை வியாதி அதிகம் தாக்குவதன் இரகசியம்?

## 26. நகை கூறும் இரகசியம்!

'பொன்னுக்கு வீங்கி' என்னும் வியாதி ஒன்று உள்ளது. அந்த வியாதி ஏற்பட்டதால் முகம், கை, கால் எல்லாம் வீங்கிவிடும். அது உடலில் உப்பு அதிகமாவதால் ஏற்படும் நோய் என்கிறார்கள், டாக்டர்கள். அதற்கான காரணம், ஒருவர் சாதகத்தில் குரு, தோஷம் பெற்றிருந்தாலோ, குரு நீசம் அடைந்திருந்தாலோ, குரு எட்டில் இருந்தாலோ இந்த நோய் ஏற்படும். ஏனெனில், உப்புக்குக் காரணகர்த்தா, குரு ஆகும். மேலும், இந்த நோய் ஏற்பட்டவுடன் நோயாளிக்குத் தங்க நகைகளை அணிவித்துவிடுவார்கள். உடனே, அந்த வீக்கம்

வற்றிவிடும். குருவிற்கு உரிய உலோகம், தங்கம். எனவேதான், குருவினால் ஏற்படும் இந்த நோய்க்குப் பரிகாரமாய் அவருக்கு உரிய உலோகமாகிய தங்கத்தைப் போட்டவுடன் நோய் குணமாகிவிடுகிறது! இங்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்கவேண்டும். இந்தப் பொன்னுக்கு வீங்கி ஏற்பட்டவர்களுக்கு மலட்டுத்தன்மை அமைந்துவிடும் என மருத்துவ விஞ்ஞானம் கூறுகிறது. புத்திரகாரகன் 'குரு' என்பதும் ஆச்சரியமான ஒன்றாகும்.

## 27. யார் அலி?

எந்த இலக்கினமாய் இருந்தாலும், அவர் பார்வை இல்லாது சனி வீட்டில் புதனும், புதன் வீட்டில் சனியும் இருந்து பரிவர்த்தனை ஏற்பட்டால் அந்த ஜாதகர் அலித்தன்மை பெற்றவராய் இருப்பார்.

## 28. சதயம் நட்சத்திரம்!

சதயம் நட்சத்திரம் உடைய ஆண்களுக்குப் பெண் பிள்ளைகளே பிறப்பார்கள். ஆண் குழந்தை இருப்பது கஷ்டம். அதே போல், சதயம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்களுக்கு ஆண் பிள்ளைகளே பிறப்பார்கள். பெண் குழந்தை இருப்பது கஷ்டம். ஆனால் அவர்களுள் சாதகம் பலம் பெற்றிருந்தால் அதன் பலன் மாறும்.

## 29. தற்கொலைக் கிரகம்!

சந்திரனும் கேதுவும் 6, 8, 12 ஆகிய இடங்களில் கூடி அவர் பார்வையின்றி, இலக்கினாதிபதி பார்வையின்றி இருந்தால் அவர் தற்கொலை செய்துகொள்வர்.

## 30. அழகிய பெண்!

கடக இலக்கினமாகி, அதிலேயே சந்திரன் இருக்கப்பெற்ற பெண், அழகில் இரதியாவாள். வனப்பும், இளமையும் தோற்றப் பொலிவும் உடையவளாய் இருப்பாள்!

## 31. ரோஜாப்பூ இரகசியம்!

ஒரே ஒரு ரோஜாப்பூவை மட்டும் தன் கூந்தலில் வைத்துக்கொள்ளவும், காதில் வளையத்தை அணிந்து கொள்ளவும் விரும்பும் பெண்ணுக்குச் செவ்வாய் அல்லது இராகுவின் தசாபுக்தி நடப்பு எனத் தெரிந்துகொள்ளலாம்.

## 32. ஆமாம் - இல்லை!

மற்றவருடன் பேசிக்கொண்டிருக்கும் போது பயன்படுத்தி இல்லை, இல்லை என்னும் சொல்லை மறுத்துப் பேசிக்கொண்டிருந்தால் அவர் தனுசு இராசிக்காரர் என்று கண்டுகொள்ளலாம்! ஆனால், ஆமாம், ஆமாம் என்றோ, அப்படியா, ஓஹோ என்றோ உடன்பாட்டு வார்த்தைகளைச் சொன்னால் அவர் ரிஷப இராசிக்காரர் என்று சொல்லிவிடலாம்!

## 33. இரகங்களும் காய்களும்!

சில காய்கள் சில கிரகங்களின் சாரம் பெற்றுள்ள இரகசியத்தைப் பாருங்கள்! வெண்டைக்காய் புதன் சாரத்தையும், புடலங்காய் சந்திரன் சாரத்தையும், முட்டைக்கோஸ், காலிஃபிளவர் ஆகியன சுக்கிரனின் சாரத்தையும் பெற்றுள்ளன!

## 34. பூமிக்காரகன் இரகசியம்!

பூமிக்காரகன் செவ்வாய் என்று சொல்வதில் மட்டும் அர்த்தம் இல்லை! பூமியின் மேற்பரப்பிலிருந்து அரை மீட்டர் ஆழம் வரைதான் செவ்வாயுடையது. பிறகு, ஆழமாய்ச் செல்ல அந்தப் பகுதி சனி பகவானுடையது. அதனினும் ஆரமாய்ச் செல்ல அது இராகு பகவானுடையது ஆகும்.

## 35. பற்களின் இரகசியம்!

நமது வாயிலுள்ள பற்களின் மேல்வரிசையைச் சூரியனும், கீழ்வரிசையைச் சனியும் ஆதிக்கம் செய்கிறது!

## 36. கடக இலக்கினமும் திருமணமும்!

கடக இலக்கினம் உடைய ஒருவருக்கு ஜன்ம நட்சத்திரம் சனி. புதனுடையதாய் இருந்தால் வாலிப வயதில் கேது அல்லது சுக்கிரனின் திசை நடைமுறையில் இருக்கும். கேது, இயல்பாகவே இல்வாழ்க்கைச் சுகத்தைக் கெடுப்பவர். சுக்கிரனோ, கடக இலக்கினத்திற்குப் பாத காதிபதியாகிவிடுவதால் காலம் கடந்தே திருமணம் நடக்கும்.

## 37. ஏழாம் வீட்டுச் செவ்வாய்!

ஒருவரின் ஜாதகத்தின் ஏழாம் வீட்டில் செவ்வாய் இருந்தால், அவருக்கு ஏழாவது வீட்டின் பலன்கள் தாமதப்பட்டுக் கிடைக்கும். கணவன், மனைவி அமைவதில் பல தடைகள் ஏற்படும். வியாபாரத்தில், கூட்டுத் தொழிலில் முன்னுக்குப் பின் முரண்பாடுகள் காணப்படும். வழக்குகள் பலவற்றைச் சந்தித்துக்கொண்டே இருக்கவேண்டிய தர்மசங்கடமான சூழ்நிலைகள் ஏற்படலாம்!

## 38. தோஷம் தரும் யோகம்!

சிம்ம இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு ஏழாம் வீட்டிற்குரிய சனி பகவானே சத்துரு (எதிரி) வீட்டிற்கும் பொறுப்பேற்கிறார். எனவே, சனி சப்தமாதியாய் இருந்தாலும் ஆறில் எட்டில் மறைவது நல்லது. எட்டில் சனி இருப்பது காலதாமதத் திருமணத்தை ஏற்படுத்தும். அல்லது தன்னிலும் மூத்தவர்களை மணக்க வேண்டிய தோஷத்தை ஏற்படுத்தும் என்பது பொது விதி. ஆனால், ஆறாம் வீட்டிற்குரியவர் எட்டில் மறைகிறார் என்று பார்க்கும்போது, நோயற்ற வாழ்வு, கடன் தொல்லையற்ற வாழ்க்கை, எதிரிகள் மறைதல், திடீர்த் தன வரவு போன்ற விபரீத இராஜயோகத்தை ஏற்படுத்தும்.

## 39. கிரகங்களின் கதிர்த்தாக்கம்!

நவக் கிரகங்கள் நம் மீது செலுத்தும் கதிர்களின் அளவு நமது வயதுக்கு ஏற்றாற்போல் மாறுபட்டு, ஆதிக்கம் செலுத்துகின்றன. மூன்று வயது வரை புதன், எட்டு வயது வரை சுக்கிரன், பத்து வயது வரை செவ்வாய்; பதினான்கு வயது வரை சந்திரன்; பதினாறு வயது வரை சூரியன், இருபத்திரண்டு வயது வரை சனி; இருபத்தெட்டு வயது வரை இராகு, முப்பத்து மூன்று வயது வரை குரு; கேது இவ்வளவு கிரகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. அதன் பிறகு முப்பத்தேழு வயதிலிருந்து, மீண்டும் முதலில் இருந்து புதன், சுக்கிரன், செவ்வாய் என மேற்கண்ட வருடக்கணக்கில் கிரகங்களின் ஆதிக்கம் உள்ளன. இவற்றுள் முதல் சுற்றில் சுமாராகவும், அடுத்த சுற்றில் மிக அதிகமாகவும் கிரகங்களின் கதிர்வீச்சு இருக்கும். அதன்படியே பலனும் மாறுபட்டிருக்கும்.

## 40. திசையின் இரகசியம்!

ஆண்களுக்குச் சுக்கிர திசை நடைபெறும்போதும், பெண்களுக்குச் செவ்வாய் திசை நடைபெறும்போதும் அதிக யோகப் பலன்களைக் கொடுக்கும். காரணம், சுக்கிரன் பெண் கிரகமாயும் செவ்வாய் ஆண்கிரகமாயும் இருப்பதால்தான்.

## 41. திருமணத் தடையின் இரகசியம்!

ஆண்களின் ஜாதகத்தில் கேது, சனி, குரு ஆகிய கிரகங்கள் ஏழு அல்லது எட்டாம் இடங்களில் நின்றிருந்தால், தோஷம் அதிக அளவில் செயல்பட்டு அதிகத் துன்பங்களையும், திருமணத்தில் கால தாமதத்தையும், சிக்கலையும் ஏற்படுத்தும். அதேபோல், பெண்கள் ஜாதகத்தில் ஏழு அல்லது எட்டாமிடத்தில் இராகு, சுக்கிரன் ஆகியன இருந்தால் மேற்கண்ட பலன்களையே தரும்.

## 42. இராகு தரும் தோஷம்!

ஒவ்வொருவர் மீதும் இருபத்து மூன்று வயது முதல் இருபத்தெட்டு வயது வரை இராகுபகவானின் ஆதிக்கம். மேலோங்கி இருக்கும். எனவே, இராகுவால் தோஷம் ஏற்பட்டிருந்தால் அவர்கள் இருபத்தெட்டு வயதுக்குப் பிறகே திருமணம் முடிப்பது மிகவும் நல்லது ஆகும்.

## 43. சப்தமாதிபதி சுக்கிரன்!

விருச்சிக, மேஷ இலக்கினத்திற்குச் சப்தமாதிபதி சுக்கிரன் ஆவார். அவர் குரு, சூரியன், சந்திரன், கேது ஆகிய கிரகங்களுடன் சேர்ந்து காணப்பட்டாலோ அக்கிரகங்களுக்கு

ஏழில் அமர்ந்திருந்தாலோ திருமணம் காலதாமதமாகும். அது மட்டுமின்றித் திடீர்த் திருமணமோ, தூரதேசத்தில் நிர்ப்பந்தத்தின் பேரில் திருமணமோ ஏற்படும்.

## 44. செவ்வாய் கூறும் திருமண இரகசியங்கள்!

ரிஷபம், துலாம் ஆகிய இலக்கினங்களுக்குச் சப்தமாதிபதியாய்ச் செவ்வாய் வருகிறார். அவர் மூன்று, நான்கு, பத்து, பதினோராம் இடங்களில் காணப்பட்டால் திருமணம் சிறப்பாய் முடிவடையும். கணவன் அல்லது மனைவி மூலம் வீடு, செல்வம், செல்வாக்கு ஆகியன பெறவும் யோகம் உண்டு. அதே செவ்வாய் பகவான் அவருக்குப் பகை கோள்களான சனி, சூரியன், இராகு, புதன் போன்ற கிரகங்களுடன் சேர்ந்தோ ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களில் மறைந்தோ காணப்பட்டால், மோசமான பலன்களையே தரும். குறிப்பாய்ச் செவ்வாய் சனியுடன் சேர்ந்திருந்தால் திருமணம் தாமதமாவதுடன், சதாகாலமும் நோயுள்ள வாழ்க்கைத் துணை அமையும். அதேபோல், செவ்வாய் சூரியனுடன் காணப்பட்டால், திருமணம் தாமதமாவதுடன், தம்பதியருக்குள் இடைவிடாத மனப்போரட்டமும், முன்னுக்குப்பின் முரணான சிந்தனை போன்றவையும் நிகழும். செவ்வாய் இராகுவுடன் சேர்ந்திருந்தால், திடீரெனத் திருமணம் உண்டாகும். வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவி வஞ்சனை செய்வதை விட்டுத் தலைமறைவாகிவிடும் நிலையும் ஏற்படும். செவ்வாய் புதனுடன் சேர்ந்து காணப்பட்டால் திருமணம், காதல் திருமணமாய் இருக்கும். அதுவும் தாமதமாகவே நிகழும். மேலும், தம்பதியருக்குள் எவர் பெரியவர், எவர் அதிகம் சம்பாதிப்பவர் என்பதில் போட்டி ஏற்பட்டு அது விவாகரத்து வரை இழுத்துச் சென்றுவிடும். மற்றும், செவ்வாய் ஆறு, எட்டு, பன்னிரண்டாம்

இடங்களில் மறையும்போது திருமணம் தாமதமாய் முடியும். உடலுறவின்போது திருப்தியின்மை. பிறப்புறப்பில் அவ்வப்போது நோய் வந்து விலகுதல் போன்ற பலன்கள் உண்டாகும்.

## 45. குரு கூறும் திருமண இரகசியங்கள்!

மிதுனம், கன்னி இலக்கினக்காரர்களுக்குச் சப்தமாதிபத குருபகவானாகிறார். இந்த உபய இலக்கினங்களில் பிறந்த பலருக்குக் குருபகவான் திருமணத்தை மிகவும் தாமதப்படுத்தி முடிக்கிறார். பலரைக் காதலில் ஈடுபடுத்தி பின்பு, இருவரையும் பல வருடங்கள் பிரிந்திருக்கச் செய்து, திடீரென ஓரிடத்தில் எதிர்பாராமல் சந்திக்கச் செய்து, அதன் பின் திருமணத்தை நடத்தி வைப்பார். குரு பகவானின் எதிரிகளான சுக்கிரன், சந்திரன், புதன் போன்ற கிரகங்களுடன் சேர்ந்து காணப்படும் போது, திருமணம் தவிர்க்க முடியாத பல காரணங்களால் தள்ளிப் போகும். மேலும், குரு பகவான் சுக்கிரனுடன் காணப்பட்டால் பலருக்குத் திருமணம் கனவிலேயே நடைபெறும். அவர்களுக்குத் திருமணம் முடிந்த பின்னரும் இருவருக்குள்ளும் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். ஆண் குழந்தை பிறந்தவுடன் அவை அதிகரிக்கும். குருபகவான் புதனுடன் காணப்பட்டால் சந்நியாசத்தில் மனம் ஈடுபாடு கொள்ளும். முறையற்ற காமசுகத்தை மனம் நாடும். அதனால் திருமணம் செய்து கொள்வதில் ஆர்வம் ஏற்படாது. தாமதித்துத் திருமணம் செய்து கொள்வதில் ஆர்வம் ஏற்படாது. தாமதித்துத் திருமணம் முடிந்தாலும் தம்பதியருள் ஒருவருக்கு மனநிலை பாதிக்கும்.

## 46. புதன் கூறும் திருமண இரகசியங்கள்!

தனுசு, மீனம் ஆகிய உபய இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குச் சப்தமாதிபதி புதனாகி வருகிறார். இலக்கினாதிபதி குருவுக்கும், சப்தமாதிபதி புதனுக்கும் உறவு நிலை சுமுகமாய் இல்லாத காரணத்தால் இவர்களுக்குத் திருமணம் பொதுவாகவே தாமதித்துத் தான் முடியும். சிலருக்கு விரைந்து திருமணம் முடிந்தாலும் புத்திரபாக்கியம் தடைபடுவதைக் காணலாம். மேலும், சப்தமாதிபதியாகிய புதனுக்குப் பகை கிரகங்களுடன் புதன் காணப்பட்டால் திருமணம் காலதாமதமாகவே முடியும். புதன், செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் உறவினர்கள், தந்தை வழியினர் ஆகியோரால் திருமணம் தள்ளிப்போகும். இதயம் சம்பந்தப்பட்ட நோயாலும் திருமணம் தாமதமாகும். புதன், குருவுடன் இணைந்திருந்தால் சிலர் ஊமையாகவோ கட்டுக்கடங்காத மனவெழுச்சியால் [Emotion] மூளை பாதிக்கப்பெற்றோ இருப்பர். அதனால் அவர்கள் திருமணம் தடைபடும். புதன், கேதுவுடன் சம்பந்தப்பட்டிருந்தால் எதிர்பார்ப்புகள் எல்லாம் தோல்வியடைந்து, பொருளாதார நெருக்கடியால் திருமணம் தாமதமாகும். இத்தகைய அமைப்புடைய சிலர் ஆன்மிக வழிகளில் சென்றுவிடுவார்கள்.

## 47. சனி பகவான் கூறும் திருமண இரகசியங்கள்!

கடகம், சிம்மம் ஆகிய இலக்கினக்காரர்களுக்குத் திருமணம் என்பது எப்போதும் சிக்கலாய்த்தான் இருக்கும். பலர், இரண்டாவது திருமணமும் செய்து கொள்வார்கள். அவர்களுக்குச் சப்தமாதிபதி சனிபகவானாய் இருப்பதால், அவர் தமக்கே உரிய மந்தகதியில்தான் மண வாழ்க்கையை அமைத்துத்

தருகிறார். புகழ்பெற வேண்டும், சாதிக்க வேண்டும்; அதன் பின்னர்தான் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இவர்களிடம் அதிகம் காணப்படுவதால், பலருக்குத் திருமணம் தாமதமாகவே முடிகிறது. இளம் வயதில் திருமணம் செய்துகொள்பவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டுப் புகழ், செல்வம் ஆகியவற்றைப் பெற்ற பிறகு, இரண்டாவது திருமணத்தைச் செய்ய வைத்துவிடுகிறார், சனி பகவான். சனி பகவானின் பகைக் கிரகங்கள் செவ்வாய், கேது, சூரியன் ஆகியவையாகும். அவற்றுடன் சனி காணப்படும்போது பொதுவாய்த் திருமணம் தாமதமாய் முடியும். மேலும், சனிபகவான் செவ்வாயுடன் சேர்ந்து காணப்பட்டால், காமத்தில் ஈடுபாடு அதிகரிக்குமே தவிரத் திருமணம் செய்து கொள்வதில் மனம் இலயிக்காது. பிறப்புறுப்புகளில் நீர் வடிதல், இரணியா அறுவைச் சிகிச்சை ஆகியவற்றால் திருமணம் தாமதமாகிப் பின்னர் முடிவடையும். சனி பகவான் கேதுவுடன் சேர்ந்திருந்தால் பிறர்மீது நம்பிக்கையின்மை, வயிற்றுவலி, கல்விப்பணியை மென்மேலும் தொடர்ந்த வண்ணமிருத்தல் போன்ற காரணங்களால் திருமணம் தள்ளிப்போகும். சனி பகவான் சூரியனுடன் சேர்ந்திருந்தால் தந்தையால் அல்லது தம் பேச்சால் திருமணத்தடை ஏற்படும். அடிக்கடி ஏற்படும் உடல்நலக் குறைவுகளாலும் திருமணம் தாமதமாய் முடியும். அதேபோல், சனியும் செவ்வாயும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்வதும் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

### 48. மூலம் நட்சத்திர இரகசியம்!

'ஆண்மூலம் அரசாளும்; பெண்மூலம் நிர்மூலம்' என்பார்கள். இதன் உண்மையான பொருள், 'ஆனி மூலம்

அரசாளும்; பின் மூலம் நிர்மூலம்' என்பதே ஆகும். ஆண், பெண் யாராய் இருப்பினும் ஆனி மாதத்தில் மூல நட்சத்திரத்தில் பிறந்திருந்தால் அது பௌர்ணமி யோகம் எனப்படும். மேலும், சூரிய சந்திரநாள் உபய வீடுகளில் நின்றிருப்பதும் விசேஷ சௌபாக்கியங்களை ஏற்படுத்தும். நாடாளும் யோகம் போன்றவற்றை உண்டாக்கும். அதே போல், பின் மூலம் என்பது மூலம் நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தைக் குறிக்கும். அதற்கான பலனைச் சாதக அலங்காரம் நூற்று நாற்பத்து நான்காவது செய்யுள் கூறுவதாவது: வீரம் வாய்ந்தவன், வல்லவன், கோபமில்லாதவன், சந்நியாச குணமுடன், தன்னை எதிர்த்தவர்களிடம் வெற்றி பெறுபவன். தன் கழுத்தில் கண்ட மாலை என்னும் நோய் உடையவன். அதன்படி நாலாம் பாதத்தில் பிறந்தவர்கள் அதாவது, பின் மூலத்தில் பிறந்தவர்கள் தன்னை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அல்லது எதிரிகளைச் சின்னாபின்னமாக்கும் வல்லமை உடையவர்கள் என்பதைக் குறிக்கும். இதைத்தான் 'நிர்மூலமாக்கும்' என்பார்கள். மேலும், மூலம் நட்சத்திரத்தில் பிறந்தால் மாமனாருக்கு ஆகாது என்பார்கள். இது எல்லோருக்கும் பொருந்தாது. அதாவது, மூலம் நட்சத்திரத்தில் பிறந்து, இலக்கினத்திற்கு மூன்றாம் வீடாகிய மாமனார் வீட்டில் கேது அமர்ந்திருந்தாலோ மாரகஸ்தானமான நான்கு ஒன்பதாம் வீடுகளில் கேது அமர்ந்திருந்தாலோ மாமனாருக்குக் கண்டத்தை ஏற்படுத்தும். மற்றபடி, மூல நட்சத்திரத்தால் மாமனாருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது.

## 49. ஆயில்யம் நட்சத்திர இரகசியம்!

ஆயில்ய நட்சத்திரம், இடம் பெறுவது சந்திரனின் ஆட்சி வீடாகிய கடகத்தில் ஆகும். சந்திரன் தாய்க்குக்

காரகம் வகிக்கிறார். மாமியார் எனப்படுபவர் மணப்பெண்ணுக்கோ, மணமகனுக்கோ தாயாய் விளங்குபவர். அப்படி இருக்கும் போது தாய்க்கிரகம் சந்திரனே தாயை அதாவது, மாமியாரை கொல்வாரா? ஆயில்ய நட்சத்திரத்தின் நாயகன், புதன் ஆவார். அவர் இருக்கும் நிலையைப் பொறுத்துத்தான் ஒருவரின் மாமியாருக்குப் பாதிப்பு ஏற்படுமா என்பதை முடிவு செய்யவேண்டும். ஒருவரின் ஜாதகத்தில் ஜென்ம இலக்கினத்திலிருந்து பத்தாம் வீடு மாமியார் ஸ்தானமாகும். அந்தப் பத்தாவது வீட்டில் புதபகவான் செவ்வாய் அல்லது இராகு அல்லது கேதுவுடன் இருந்தாலோ, இலக்கினத்திற்கு நான்காவது வீட்டில் மேற்கண்ட பகைக்கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலோதான், திருமணம் முடிந்தவுடன் மாமியாருக்குத் தோஷம், ஆபத்து போன்றவை ஏற்படும். அவ்வாறில்லாமல் புதபகவான் ஆட்சி, உச்சம் அல்லது சுக்கிரபகவானின் நட்சத்திர சாரம் பெற்று அமர்ந்திருத்தல் போன்ற அமைப்பில் காணப்பட்டால், அந்த ஜாதகர் ஆயில்யத்தில் பிறந்திருந்தாலும் மாமியாருக்கு எவ்விதக் கெடுதலையும் ஏற்படுத்தாது.

## 50. விசாக நட்சத்திரத்தின் இரகசியம்!

விசாக நட்சத்திரம் இளைய மைத்துனருக்கு ஆகாது என்பார்கள். விசாகம், முருகப்பெருமான் பிறந்த புனித நட்சத்திரமாகும். அந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஒரே நேரத்தில் பல வேலைகளை நிர்வகிக்கும் திறமை படைத்தவர்கள். இலக்கினத்திற்கு ஒன்பதாம் வீடுதான் இளைய மைத்துனரைக் குறிக்கும் வீடாகும். அந்த வீட்டில் பாவக் கிரகங்களான இராகு, கேது, செவ்வாய் ஆகியன இடம் பெற்றிருந்தால், இளைய மைத்துனருக்கு ஆயுள் குறைவை

உண்டாக்கும். அதே போல், விசாக நட்சத்திர நாயகன் குருபகவான், ஒருவரின் ஜாதகத்தில் கெட்டுப் போயிருந்தாலோ, புதனுடன் சேர்ந்திருந்தாலோ இளைய மைத்துனருக்குச் சில இன்னல்களை ஏற்படுத்தும். இவ்வாறு அல்லாமல், குரு பகவான் பலமான நிலையில் இருந்தால், இளைய மைத்துனருக்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது!

## 51. கேட்டை நட்சத்திரத்தின் இரகசியம்!

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தால் மூத்த மைத்துனருக்கு ஆகாது என்பார்கள். அந்த நட்சத்திரத்தில்தான் இந்திரன் பிறந்தார். இதில் பிறந்தவர் மிகச்சிறந்த சிந்தனையாளர்களாகவும், பல பெரிய பதவிகளில் இருப்பவர்களாகவும் இருப்பார்கள். இக்கிரகத்திற்கு ஐந்தாம் வீடுதான் மூத்த மைத்துனரைக் குறிப்பிடும் இடமாகும். இந்த வீட்டில் பாவக்கிரகங்கள் இடம் பெற்றிருந்தாலோ ஐந்தாம் வீட்டிற்கு ஏழில் பாவக் கிரகங்கள் அமர்ந்திருந்தாலோ தான் மூத்த மைத்துனருக்கு இன்னல்களை ஏற்படுத்தும். இதே போல் விசாக நட்சத்திர நாயகனாகிய புதன், இராகு, கேது, குரு, செவ்வாய் போன்ற கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருந்தாலும் மூத்த மைத்துனருக்கு ஆகாது! மற்றபடி கேட்டை நட்சத்திரம் மூத்த மைத்துனருக்கு எந்த வித ஆபத்தையும் தராது!

## 52. பெண்களின் ருது இரகசியம்!

ஒரு பெண்ணுக்கு மிக முக்கியமானது பிறந்த ஜாதகமே ஆகும்; ருது ஜாதகம் எப்படி என்று என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும், ஒரு பெண்ணானவள் தாமதமாய் ருதுவானால் அந்தப் பெண்ணிற்கு ஏழரைச் சனி அல்லது கேது

திசை நடப்பில் இருக்கும், எந்தத் திசையாய் இருந்தாலும் சூரியன், செவ்வாய், குரு ஆகிய கிரகங்களின் புத்தியோ, அந்தரமோ நடைபெறும்போதுதான் ஒரு பெண் பூப்பெய்த முடியும்.

## 53. சுக்கிரன் தரும் திருமணத் தோஷங்கள்!

இலக்கினத்திற்கு ஆறு, ஏழு, பத்து ஆகிய இடங்களில் சுக்கிரன் இருந்தால் பலருக்குத் திருமணம் நடைபெறாமலேயே போய் விடுகிறது. சுக்கிர பகவான் சூரியன் அல்லது சந்திரனுடன் சேர்த்து ஜலக இராசிகளில் காணப்பட்டாலும், தோஷத்தை ஏற்படுத்தித் திருமணத்தைத் தாமதப்படுத்துவார். கடகம், சிம்மம் ஆகிய இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு 1, 4, 7, 10 ஆம் வீடுகளில் சுக்கிரன் அமர்ந்திருந்தால், திருமண வாழ்வில் நிம்மதியற்ற மனப்போக்கை ஏற்படுத்தி விடுவார், திடீரென விவாகரத்து, இரண்டாந்திருமணம் போன்றவை நடந்துவிடும். சுக்கிரபகவான் பத்தாம் வீட்டில் அமர்ந்து அது ஜலகராசியாய் இருந்தாலும் திருமணம் காலதாமதமாகி விடும். சிலருக்கு இல்வாழ்க்கை அமைப்பே இல்லாமலும் போய்விடும்.

## 54. செவ்வாய் தரும் திருமணத் தோஷங்கள்!

இலக்கினத்திற்கு இரண்டாம் இடம் குடும்ப ஸ்தானம்; நான்காம் இடம் சுகஸ்தானம், எட்டாமிடம் ஆயுள் ஸ்தானம், பன்னிரண்டாம், இடம் சயனஸ்தானம், இந்த இடங்களில் செவ்வாய் இருப்பது தோஷத்தை ஏற்படுத்தும். இரண்டாம் வீட்டில் இடம் பெற்ற செவ்வாய் குடும்ப வாழ்க்கை அமைவதில் போராட்டங்களின் போது திடீரெனக் கருத்து வேறுபாடுகளை உண்டாக்குவார். தகாத வார்த்தைகள் பேச வைத்து, ஆறாத வடுக்களை ஏற்படுத்திவிடுவார். நாவில் இருக்கும் செவ்வாய் ஏழாமிடத்தை நான்காம் பார்வையாய்ப் பார்ப்பதால்,

திருமணத்தைத் தாமதப் படுத்துவார். நிச்சயதார்த்தம் முடிந்து, திருமணம் முடியாமல் நின்றுவிடும்படி செய்வார். தாயால் திருமணத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் தடைகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். அதே போல், ஏழாம் வீட்டில் இருக்கும் செவ்வாய் எட்டாம் பார்வையாக குடும்பஸ்தானமாகிய இரண்டாமிடத்தைப் பார்ப்பதால், காதல் களியாட்டம் ஆகியவற்றில் ஈடுபடவைத்து, பின்னர் ஏமாற்றத்தை ஏற்படுத்தி விடுவார். அதனால் மனத்தில் விரக்தி, வெறுப்பு ஆகியன உண்டாக்கித் திருமணத்தைத் தாமதப்படுத்துவார். மற்றும், எட்டாம் வீட்டில் இருக்கும் செவ்வாய் அவ்வப்போது உடல் நலக்குறைவு, பிறப்பு உறுப்பில் நோய், ஊர்விட்டு ஊர்மாறுதல், அயல்நாடு சென்று திரும்புதல் போன்றவற்றை ஏற்படுத்தித் திருமணத்தைத் தாமதமாக்குவார். பன்னிரண்டாம் வீட்டிலுள்ள செவ்வாய், எவர் மீதும் சந்தேகம், எதிலும் நிலையற்ற தன்மை போன்ற காரணங்களால் திருமணத்தைத் தாமதப்படுத்துவார். அதேபோல் சந்திரனுக்கும் செவ்வாய் தோஷம் உண்டு. செவ்வாய் தோஷம் இருப்பவர்களுக்கு இயல்பாகவே உடலின் உஷ்ணநிலை அதிகரித்துக் காணப்படும். அதேபோல், காம உணர்வுகளும் அதிகமுண்டு. இரத்தத்தின் தன்மை அதிக வீரியமுடன் காணப்படும். அதனால் தான் ஆண், பெண் இருவருள் ஒருவருக்கு மட்டும் செவ்வாய் தோஷம் இருந்து, மற்றொருவருக்கு இல்லாவிடில் திருமணம் செய்தல் கூடாது. மாறாய்த் திருமணம் செய்தால் உடலுறவில் போதிய திருப்தியின்மை அல்லது அதிவேகமாய் உறவு கொள்ளுதல் போன்ற விரும்பத்தகாத சம்பவங்களால் தம்பதியினருக்குள் பிரிவு ஏற்படும். நடத்தை விஷயங்களும் மாறிவிடும். சிலருக்குக் குழந்தை பாக்கியமும் இல்லாமல் போகும். எனவேதான், செவ்வாய்க்குச் செவ்வாய் பொருந்தி வருமாறு பார்த்துத் திருமணம் முடிப்பதே நல்லதாகும். பொதுவாக, செவ்வாய்

தோஷம் இருப்பவர்கள் திருமணத்திற்குப் பிறகு தங்கள் சகோதரனைத் தம்முடன் வைத்திருப்பது நல்லதல்ல. வைத்திருந்தால் சிறுசிறு பிரச்சினைகள், சலசலப்புகள், சந்தேகங்கள் வீணாய் ஏற்பட நேரும். செவ்வாய் சகோதரகாரகனாக வருவதால் இத்தகைய இடர்ப்பாடுகள் தோன்றி மறையும். மேலும், செவ்வாய் பகவான் ஏழு அல்லது எட்டாம் இடத்தில் இடம் பெற்று, வக்கிரமும் பெற்றுக் காணப்பட்டு, அவரின் திசையும் நடந்து கொண்டிருக்கும் போது திருமண முயற்சியில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. அதையும் மீறித் திருமணம் நடைபெற்றால் விபத்துகள் ஏற்பட்டு, இருவருள் ஒருவர் பிரியும் அவலநிலை ஏற்படுகிறது. திருமதி மேனகா காந்தியின் ஜாதகத்தில் எட்டில் இடம் பெற்ற செவ்வாய், தமது திசைக்காலத்தில் மேனகாவின் கணவருக்குத் திடீர் மரணத்தைத் தந்தார். திரு. சஞ்சய்காந்திக்குச் செவ்வாய் தோஷம் இல்லை என்பதும் கவனிக்கத்தக்கது ஆகும். செவ்வாய் பகவான் புதன், சனி, குரு ஆகிய கிரகங்களுடன் சேர்ந்து காணப்பட்டால் அவர்களுக்குச் செவ்வாய் தோஷம் ஏற்படுவதில்லை. அதேபோல், செவ்வாய் தனது மேஷம், விருச்சிகம் வீடுகளில் இடம் பெற்றாலும், சூரியன் வீடாக சிம்மத்தில் இடம் பெற்றாலும் சுபத்தன்மை பெற்றவராகி விடுகிறார். மகரத்தில், கடகத்தில், மீனத்தில் இடம் பெறும் செவ்வாய் தோஷத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## 55. இராகு தரும் திருமணதோஷம்!

அளவற்ற மதிப்புள்ள சொத்துகளுக்கும், அரசாங்கத்திற்கே சவால் விடக்கூடிய அளவிற்கு மன உறுதிக்கும் காரணமானவர் இராகுபகவான். திருமணத்திற்கு முன்பே காம விளையாட்டுகளில் கைதேர்ந்தவர்களாய் இராகுவின் ஆதிக்கம்

உடையவர்கள் இருப்பார்கள். ஆதிக்கம் உடையவர்கள் இருப்பார்கள். எதையும் முறைப்படி செய்ய இவர்களுக்குப் விரும்புவார்கள். எதிலும் குறுக்கு வழியைக் கையாண்டு வெற்றி காண்பதில் மனத்தைத் தூண்டுவார். இராகுபகவான் ஏழு அல்லது எட்டாம் இடங்களில் இடம் பெற்று இருந்தால் திருமணத்தைத் தாமப்படுத்துவார். அதே போல், சுக்கிரனுடன் சம்பந்தப்பட்டு எங்குக் காணப்பட்டாலும் திருமணத்தைக் காலங்கடத்தி முடிப்பார். ஏழு அல்லது எட்டாம் இடத்தில் இராகுபகவான் அமர்ந்தால் குடும்பத்தில் குழப்பம், போதிய செல்வமின்மை, தந்தைவழி பாட்டன், பாட்டியால் தொல்லைகள், தான் விரும்பிய வாறு அல்லது தன் தகுதிக்குத் தக்க இணை இடைக்காத நிலைபோன்ற சூழ்நிலைகள் உண்டாகி, அதனால் திருமணம் தாமதமாகிக் கொண்டேயிருக்கும். சுக்கிரனுடன் இராகுவும் இருந்தால் மனத்தில் எப்போதும் தாழ்வுணர்ச்சி ஏற்படும். செயல்பாடுகளில் திருப்தியின்மை கடக்கும் நல்ல நிலைக்கு வந்தபின்னர் திருமணம் செய்து கொள்ளலாம் என்னும் மனநிலை ஏற்படும். தகாத உறவுகளில் ஈடுபட்டு அதிலேயே திருப்தி அடைந்து கொள்ளுதல் போன்ற காரணங்களால் திருமணம் தடைப்பட்டுக் கொண்டே இருக்கும். இராகுபகவான் சிலருக்கு விதைப்பை, கர்ப்பப்பை ஆகிய வற்றில் கோளாறுகலையும் வயிற்றுவலி போன்ற நோய்களையும் ஏற்படுத்தி, காலதாமதத்தை ஏற்படுத்துவார், திருமணத்தில் சுக்கிரனாலோ குருவாலோ பார்க்கப்பட்டிருந்தாலும், மேஷம், ரிஷபம்,கடகம் மகரம், கன்னி ஆகிய இடங்களில் இடம் பெற்றிருந்தாலும் இவரால் ஏற்படும் கெடுதல் கள் குறையும். செவ்வாய், சனி, சூரியன், சந்திரன் ஆகியவர்களால் பார்க்கப்பட்டால் இராகுபகவானின் கெடுதல் தன்மை அதிகரிக்கும்!

## 56. கேது தரும் திருமண தோஷம்

கேதுபகவான் துறவறத்தில் ஈடுபட்டுக் கொண்டே காம இச்சைகளிலும் நாட்டம் கொள்பவர். வேதங்களும், வேள்விகளும், சட்ட திட்டங்களும் பிறருக்காக. தனக்காக அல்ல என்று நினைப்பவர். மனத்தில் எப்போதும் கடுகடுப்பையும், செயலில் முன்னுக்குப்பின் முரணான போக்கையும் கொண்டவர். இப்படிப்பட்ட கேது பகவான் ஒருவரின் ஜாதகத்தில் இரண்டு, ஏழு, எட்டாம் வீடுகளில் இடம் பெற்றிருந்தால் அவரின் நிலை மதில் மேல் பூனையாகவே இருக்கும். மணவாழ்வு வந்தால் வரவு வராவிட்டால் துறவு என்னும் நிலைக்குத் தள்ளுவார். திருமண வாழ்வு கைக்கு எட்டிய பழமானால் இனிக்கும். எட்டாததாகி விட்டால் அந்த வாழ்வு புளிக்கும் என்னும் மனப்போக்கை வளர்த்து விடுவார். கேதுவின் ஆதிக்கம் நிறைந்த பவர் தாயைவிட வயதில் குறைந்த, தேக ஆரோக்கியம் இல்லாதவர்களுடன் உறவு கொள்வதைக் காணலாம். கால சர்ப்பதோஷம் ஒருவருக்கு அமைந்திருந்து, கேது பகவான் இரண்டு, ஏழு அல்லது எட்டாமிடங்களில் காணப்பட்டால் கடைசிவரை திருமணம் நடைபெறாமலேயே போய் விடும். அதனால் அவர்களின் மனத்தில் தீராத ஏக்கம் இருந்து கொண்டே இருக்கும். இரண்டாம் வீட்டில் இருக்கும் கேதுபகவான், அவர்களின் வாழ்க்கை நன்கமையவேண்டும் என்ற எண்ணத்தில் தம் திருமணத்தைத் தியாகம் செய்ய வைத்து விடுவார். அதனால் சிலருக்கு நாற்பது வயதுக்குமேல் விவாகம் நடைபெறுவதும் உண்டு. ஏழில் இருக்கும் கேது பகவான், மனத்தில் எப்போதும் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார். எதிலும் நிலையற்ற தன்மையை உண்டாக்குவார். சில நேரம் துறவிலும், சில நேரம் இல்வாழ்விலும் ஆர்வங்காட்ட

வைப்பார். இரத்த சம்பந்தப்பட்ட நோயாலும், குடல் புண் போன்றவற்றாலும் திருமணத்தைத் தாமதப்படுத்திவிடுவார். எட்டில் நிற்கும் கேது பகவான் யாருக்கும் கட்டுப்பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்தை மேலோங்க வைத்தும், உலகமே மாயம், வாழ்க்கையே போலி என்ற வேதாந்தத்தில் மூழ்க வைத்தும் திருமணத்தைத் தாமதப்படுத்திவிடுவார். அதுபோல், கேது பகவானின் செயல்பாட்டுத் தன்மை மாறுபட்டதாய் இருக்கும். அதிகநேரம் தனிமையில் இருக்க வைத்தல், மனத்தில் போட்டிகளை ஏற்படுத்துதல் போன்றவை கேதுவின் குணாதிசயங்களாகும்.

## 57. புதையல் இரகசியம்!

பத்துக்கு உடையோன் நாலிலிருந்தால் புதையல் கண்டெடுப்பான். இல்லையேல் முயற்சியில்லாமலேயே பொருள் சேரும்.

## 58. ஊமைப் பிறப்பின் இரகசியம்!

வாக்குஸ்தானாதிபதியாகிய இரண்டாம் அதிபதியுடன் புதன் கூடி ஒன்று, மூன்று, ஆறாமிடங்களிலிருந்தாலும், இலக்கினாதிபதி சுக்கிரனுடன் கூடி 6, 8, 12 இடத்தில் இருந்தாலும் ஜாதகர் ஊமை ஆவர்.

## 59. பெரிய பேச்சாளன்!

இரண்டுக்குடையோனும், குருவும் பலமாய் இருந்து சுக்கிரன் பார்வை பெற்றிருந்தால், ஜாதகன் பெரிய பேச்சாளன் ஆவான்.

## 60. விஷ ஜந்துக்கள் தீண்டா!

இலக்கினத்திற்கு ஆறில் இராகு நின்றால், அவர்களை விஷ ஐந்துக்கள் தீண்டா!.

## 61. பலபேரைக் கூடும் ஜாதகம்!

களத்திர ஸ்தனாதிபதியாகிய ஏழாம் அதிபதியும், இலக்கினாதிபதியும் ஒன்றுசேர்ந்து ஏழாம் அதிபதி வீட்டில் இருந்தால் ஜாதகன் பலரைக்கூடி ஒரே விவாகம் செய்வான்.

## 62. பிரம்மச்சாரி இரகசியம்!

இலக்கினாதிபதி ஏழுக்குடையவனோடு கூடி ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருந்தால், அவன் பிரம்மச்சாரியாய் இருப்பான்.

## 63. காதல் மன்னன் யாவன்?

இலக்கினாதிபதி, சுக்கிரன் வீட்டிலிருந்து சுக்கிரனோடு சேர்ந்தாலும், இலக்கினாதிபதி சுக்கிரன் வீட்டிலிருந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டாலும் அவர்கள் காதல் மன்னராய் இருப்பார்கள்.

## 64. சிவயோகி ஜாதகம்!

செவ்வாய், சனி, குரு, புதன், சுக்கிரன் இவர்கள் ஒரு வீட்டிலிருந்தால் அவர்கள் சிவயோகியாய் இருப்பார்கள்.

## 65. முரட்டு பிள்ளையார்?

ஐந்துக்கு உடையவனோடு, இராகுவும் சூரியனும் கூடி ஒருவரின் ஜாதகத்தில் இருந்தால் அவருக்குப் பிறக்கும் பிள்ளை முரட்டுப்பிள்ளையாய் இருக்கும்.

## 66. மாலை போட்டுப் பிறக்கும் குழந்தை!

பெண்களின் ஜாதகத்தில் இலக்கினத்தில் இராகு அல்லது கேதுவின் பார்வை பட்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை மாலை போட்டுக்கொண்டு பிறக்கும்.

## 67. தந்தையும் மகனும் ஒன்றாய் இறக்கும் ஜாதகம்!

மகனின் ஜாதகத்தில் ஆறில் சூரியனும், ஏழில் செவ்வாயும், சனியும் இருந்தால் தந்தையும் மகனும் ஒன்றாய் இறப்பார்கள்.

## 68. திருடர் பயம் யாருக்கு?

இலக்கினாதிபதி சனி, செவ்வாய் ஆகிய மூவரும் ஒருவரின் ஜாதகத்தில் சேர்ந்து காணப்பட்டால் அவர்களுக்குத் திருடர்களால் பயம் உண்டு.

## 69. ஆபத்தான மரணங்கள்!

எட்டுக்குடையவனோடு சூரியனும் செவ்வாயும் சேர்ந்து எட்டில் இருக்கவும் அல்லது எட்டாம் இடத்தைப் பார்க்கவும் இருந்தால் மலை, மரம், மாடி என மேலேயிருந்து விழுந்து இறப்பார். இவற்றோடு சுக்கிரனும் சேர்ந்துவிட்டால் விலங்குகளால் மரணம் ஏற்படும்.

## 70. இளநரை யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் சனி, சூரியன் ஆகியன கூடியிருந்தாலும், சனியும், சூரியனும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும் இளமையில் நரை உண்டாகும்!

## 71. இளம் விதவை இரகசியம்!

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் செவ்வாய், சூரியன் ஆகியன கூடி எங்கிருந்தாலும், பாவிகள் ஏழில் இருந்தாலும், பாவிகள் ஏழாம் இடத்தைப் பார்த்தாலும் அந்தப் பெண், இளமையில் விதவையாவாள்.

## 72. கிழவரை மணக்கும் குமரி!

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் ஏழாவது வீடு சனி வீடானாலும் அல்லது களத்திரஸ்தானமாகிய ஏழாவது வீட்டைச் சனி பார்த்தாலும் அந்தப் பெண் வயதானவரையே மணப்பாள்.

## 73. கணவனுக்கு அடங்காத மனைவி!

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் ஏழாம் வீடு சூரியவீடானாலும் ஏழில் சூரியன் இருந்தாலும் அந்தப் பெண் கணவனுக்கு அடங்கமாட்டாள். அதனால் கணவர் மனைவியருக்கு இடையே பிரிவினை ஏற்பட வாய்ப்புண்டு. சுபர் பார்த்தால் இந்த ஆபத்து ஏற்படாது!

## 74. எவன் திருடனாவான்!

சந்திரனோடு பாவக் கிரகங்கள் கூடி நான்கில் இருந்தால், அவன் திருடனாவான்.

## 75. இளந்துறவி யார்?

இலக்கினாதிபதி சுக்கிரனாயிருந்து, நான்கில் சனியிருந்து, சுக்கிரன் பார்த்தால் அவர் இளந்துறவி ஆவார்!

## 76. இரசவாத இரகசியம்!

இலக்கினாதிபதியிருக்கின்ற வீட்டுக்குடையவனும், சந்திரன் இருக்கிற வீட்டுக்கு உடையவனும் உச்சமாகி, சந்திரன் நான்கு அல்லது ஏழில் கேந்திரம் ஏறி இருந்தால் அந்த ஜாதகர் இரசவாத ஆராய்ச்சி உடையவராய் இருப்பர்.

## 77. பூர்விகச் சொத்து எவருக்கு இல்லை!

இலக்கினாதிபதி பலமின்றி ஆறு, பன்னிரண்டாம் இடங்களில் நிற்க, ஜன்ம இலக்கினத்தைப் பாபர்கள் பார்த்தால், ஜாதகருக்குப் பூர்வீகச் சொத்து இல்லை.

## 78. எவர் பூமிக்கே அரசன் ஆவார்?

சுக்கிரன், சூரியன், சந்திரன், குரு, சனி ஆகிய கிரகங்கள் ஆட்சி பெற்று, செவ்வாய், புதன் ஏழில் இருந்தால் ஜாதகர் பூமிக்கே அரசராய்த் திகழ்வார்.

## 79. வீட்டில் பூனை, வெளியில் யானை!

பாக்கியாதிபதியாகிய ஒன்பதாமிடத்து அதிபதியும், சுக்கிரனும் கூடி இலக்கினத்திலிருந்து குருவும், ஒன்பதாமிடத்தில் இருந்தால் ஜாதகர் தம் வீட்டில் பூனையாகவும், வெளியில் யானையாகவும் இருப்பார்.

## 80. எச்சரிக்கையான ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஆறுக்குடையவர், இலக்கினாதிபதி, சுக்கிரன் ஆகியோர் ஒன்றுசேர்ந்து காணப்பட்டால் பெண்களால் ஆபத்து நேரும். மேலும்,

அவர்களோடு இராகு அல்லது கேது கூடினால் விஷப் பூச்சிகளால் ஆபத்து ஏற்படும். முக்கியமாய்ப் பாம்புகளால் ஆபத்து ஏற்படும். எச்சரிக்கை!

## 81. விஷபயம்!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாமிடத்தில் சூரியன் இருந்தாலும், சூரியன் பார்த்தாலும், இரண்டாமிடம் சனியின் வீடாய் இருந்தாலும் அவருக்கு விஷபயம் உண்டு.

## 82. தண்ணீர்க் கண்டம்!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாமிடத்தில் தேய்பிறைச் சந்திரன் இருந்தாலும், இரண்டாமிடத்தைத் தேய்பிறைச் சந்திரன் பார்த்தாலும் தண்ணீரில் கண்டமுண்டு.

## 83. இரண்டாமிடம் தரும் எச்சரிக்கை!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாமிடத்தில் செவ்வாய் இருந்தால் நெருப்பால் ஆபத்து உண்டு. இரண்டாமிடத்தில் பாவிகளுடன் சுக்கிரன் கூடி இருந்தால் விஷம் சாப்பிடுவார். இரண்டாமிடத்தில் சனி இருந்தாலும், சனி பார்த்தாலும் நோயால் தொந்தரவு உண்டு.

## 84. ஒரே காலத்தில் பெற்றோர் இறக்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் சூரியன், சந்திரன் கூடி, தாய்ஸ்தானமாகிய நான்காமிடத்திலாவது, தந்தைஸ்தானமாகிய ஒன்பதாவது இடத்திலாவது இருந்தால், அந்த ஜாதகரின் தாய், தந்தை இருவரும் ஒன்றாய் ஏக காலத்தில் இறப்பார்கள்!

## 85. மருத்துவர் ஆகும் ஜாதகம் எத்தகையது?

ஒருவரின் ஜாதகத்தில் சூரியனும், செவ்வாயும் கூடியிருந்தாலும், அல்லது கேது பகவான் ஒன்பது அல்லது பத்து அல்லது பதினோராம் இடத்தில் இருந்தாலும் அவர்களுக்கு மருத்துவம் கூடும்.

## 86. பல கலைகளை அறிந்தவர் யார்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஒன்று அல்லது நான்கு அல்லது எட்டில் புதனும் சூரியனும் சேர்ந்து காணப்பட்டால், அவர் பல கலைகளைக் கற்றவராய் இருப்பார்.

## 87. வக்கீல் தொழில் யாருக்கு?

ஐந்தில் அவர் இருந்து, ஐந்தாம் அதிபதி பலம் பெற்று இருந்து, பத்தில் குரு இருந்தால் அவர் வக்கீல் ஆகலாம்!

## 88. யார் சினிமாத் தொழில் புரிவார்?

பத்தில் செவ்வாயும் இராகுவும் கூடி இருந்தால் சினிமாத் தொழிலில் இருக்க நேரும். அந்தக் கிரக அமைப்பு வேறு எந்த இடத்தில் அமைந்திருந்தாலும் அவர் சினிமா பைத்தியமாய் இருப்பார்!

## 89. நல்ல பலன் தரும் புத்திகள்!

1. சூரிய திசையில் சந்திரன், செவ்வாய், குரு புத்தியும், 2. சந்திர திசையில் சூரியன் புதன் புத்தியும் 3. செவ்வாய் திசையில் சூரியன், சந்திரன், குரு புத்தியும் 4. இராகு திசையில்

சனி, புதன், சுக்கிர புத்தியும் 5. குருதிசையில் சூரியன், சந்திரன், செவ்வாய் புத்தியும் 6. சனி திசையில் இராகு, புதன், கேது, சுக்கிரன் புத்திகளும் 7. புதன் திசையில் இராகு, கேது, சூரியன், சுக்கிரன் புத்திகளும் 8. கேது திசையில் சனி, புதன், சுக்கிரன் புத்திகளும் 9. சுக்கிரதிசையில் இராகு, சனி, புதன், கேது புத்திகளும் நல்ல பலன் தரும். எந்தத் திசையிலும் சுயபுத்தி பலன் தராது.

## 90. கல்வியில் சிறப்புற வழி!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாம் வீட்டு அதிபதியும், புதனும் கூடி இருந்தாலும் அல்லது புதனும் சூரியனும் கூடி இருந்தாலும் கல்வியில் சிறப்பு உண்டு.

## 91. வெளிநாடு போக யாருக்கு யோகம் உண்டு?

கடல் கடந்த பயணம் ஏற்க ஜல இராசிக்காரர்கள், ஜல இராசியிலிருந்தாலும், குரு ஜல இராசியையோ ஜல இராசிநாதனையோ பார்த்தாலும் நிச்சயம் கடல் கடந்த வெளிநாட்டுப் பயணமுண்டு. கடகம், மகரம், மீனம் ஆகியன ஜலராசிகள் ஆகும். சந்திரன், சனி, குரு நீர்க்கோளங்கள் ஆகும். நான்காமிடம் ஜலப் பிராப்தியைத் தெரிவிக்கும் இடமாகும். அந்த நான்காம் வீடு ஜல இராசி வீடாய் இருப்பது சிறப்பு. அல்லது அந்த நான்காம் வீட்டை ஜலக்கோள்கள் பார்ப்பதும் சிறப்பாகும்!

## 92. தாயால் இறக்கும் பிள்ளை!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினம் கன்னியாய் இருந்து, அதில் பாவிகளும், மீனத்திலும் பாபர் இருந்து, எட்டாமிடத்தில்

சந்திரனும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் தாயின் கொடுமையால் பிள்ளை இறக்கும்!

## 93. கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொள்ளும் ஜாதகர்!

ஒருவரின் ஜாதகத்தில் சனி, சுக்கிரன் கூடி எட்டாமிடத்திலிருந்தாலும், சனியும் சந்திரனும், எட்டுக்குடையோனைச் சேர்ந்தாலும், பார்த்தாலும் அந்த ஜாதகர் கிணற்றில் விழுந்து இறப்பார்!

## 94. நவகிரகங்களின் அறுசுவைகள்!

1. சூரியன் - காரம் 2. சந்திரன் - உப்பு 3. செவ்வாய் - துவர்ப்பு 4. குரு - இனிப்பு 5. சுக்கிரன் - புளிப்பு 6. சனி - கசப்பு 7. புதன் - கலப்படமான சுவை.

## 95. ஜாதகர் பிறந்த வீட்டின் திசை!

ஒருவருக்குக் கடகம், சிம்மம் இலக்கினமாய் இருந்தால் அவருடைய வீடு தெற்கில் இருக்கும். கன்னி, தனுசு, மீனம், மிதுனமாய் இருந்தால் வடக்கு வீடாய் இருக்கும். மேஷம், ரிஷபம், மகரம், கும்பமானால் மேற்குப் பக்க வீடாய் இருக்கும். விருச்சிகம், துலாமாய் இருந்தால் கிழக்கு வீடாய் இருக்கும்.

## 96. பில்லிசூன்ய மரணம்!

ஒருவர் ஜாதகத்தில் பத்தில் சூரியன், ஆறில் செவ்வாய், பன்னிரண்டில் சனி, இரண்டில் இராகு இருந்தால் பில்லிசூன்ய மந்திர ஏவலால் உயிருக்குக் கேடு நேரும். எச்சரிக்கை தேவை.

## 97. யாருக்கு இரு தாரம் அமையும்?

ஒருவரின் ஜாதகத்தில் ஏழு, எட்டுக்கு உடையவர்கள் பாபிகளானாலும், பாபர் பார்வை பெற்றிருந்தாலும், 12இல் குரு, செவ்வாயுடன் கூடினாலும், 2, 7க்குடையவர்களுள் ஒருவராவது பலவீனராயிருந்தாலும் அந்த வீடுகளில் பாபிகள் இருந்தாலும், 2, 7இல் பாபிகளிலிருந்தாலும், அந்த வீட்டுக்குடையோனைப் பாவிகள் பார்த்தாலும், ஏழுக்குடையோன் பாபருடன் கூடி இரண்டிலிருக்க அவனைச் செவ்வாய் பார்த்தாலும் இவர்களுக்கு எல்லாம் இருதார விவாகம் உண்டு.

## 98. இராசிகளும் உடல் உறுப்புகளும்!

எந்த, எந்த இராசிக்காரர்களுக்கு உடலுறுப்பில் எந்த எந்த இடங்கள் முக்கியம் பெற்றவை என்பதைக் காண்போம்: 1. மேஷம் - தலை 2. ரிஷபம் - முகம், கண்கள் 3. மிதுனம்- கழுத்து, தோள், காது 4. கடகம் - மார்பு 5. சிம்மம் - மேல் - வயிறு, முதுகு 6. கன்னி - அடிவயிறு 7. துலாம் - இடை 8. விருச்சிகம் - மர்ம உறுப்பு 9. தனுசு - தொடை 10. மகரம் - முழங்கால் 11. கும்பம் - கணுக்கால் 12. மீனம்- பாதம் ஆகும். மேலே சொன்ன உடலுறுப்புகளால் வலிமை, காமத்தின் விருப்பம், மாரக நோய் போன்ற பலன்களை அடையலாம். இதனையே இலக்கினமாய்க் கொண்டு பலன் அறியலாம்.

## 99. பாலுறவின் இரகசியங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் குரு, இராகு ஆகியன இணைந்து காணப்பட்டால் அவருக்குப் பாலுணர்வு அதிகம். இதே அமைப்பு ஏழாம் இடத்தில் இருந்தால் தாமும் கெடுவார். தம்

மனைவியையும் கெடுப்பார். சனியும், சந்திரனும் சேர்ந்து இருந்தால் தெரிந்தே படுகுழியில் விழுவார். ஏழில் கேது இருந்தால் நாணயமான மனைவி அமையமாட்டார். பத்திரகாளியாய் இருப்பார். இலக்கினத்திற்கு மூன்றில் சுக்கிரன், நான்கில் சனி நின்றால் உடல் உறவில் சிரமமிராது. இப்படிப்பட்ட அமைப்பு உடையவர் பாலுறவில் வெறியராய்ச் செயல்பட்டுச் சிறியவர், பெரியவர், கன்னி, விதவை என்று பாராது அனைவரோடும் உடல் உறவு கொள்வார்.

## 100. அழியாத சொத்து யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாயைக் குரு பார்த்தாலும், செவ்வாய் ஆட்சி, உச்சம் பெற்றாலும், அவர் அழியாத சொத்தை அடைவார்.

## 101. கல்யாணத்திற்கு முன் பிள்ளை!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஐந்தில் செவ்வாய், சனி கூடி அவரோ அல்லது பாவிகளோ யாரும் பார்க்கவில்லை என்றால், அவர் காதல் கொண்டு, அப்பெண் கருவுற்றுப் பிள்ளை பெற்ற பின்பே அவர்கள் திருமணம் செய்துகொள்வார்கள்.

## 102. வேண்டா சொந்தம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் சனி நின்றால் சொந்தத்தில் பெண் எடுக்கக்கூடாது. அப்படி எடுத்துவிட்டால் நிச்சயம் அவருக்கு மறுமணமோ அல்லது வைப்பாட்டியோ அமைந்துவிடும்.

## 103. பெண்டாட்டி தாசன் யார்?

ஒருவர் மேஷம் அல்லது விருச்சிகம் இலக்கினக்காரராய் இருந்தால் அவர் பெண்டாட்டிதாசராய் இருப்பார்.

## 104. ஏகதாரம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் ஏழுக்குடையோன் நான்கு, ஏழு, பத்தில் இருந்தால் அவருக்கு ஏகதாரம் அமையும்.

## 105. சூரியனும் திருமணமும்!

சூரியன் ரிஷபத்திலாவது துலாத்திலாவது இருந்தால் அவர்களுக்குத் திருமணம் தாமதமாய் நடக்கும்.

## 106. நிச்சயம் புத்திரர் உண்டு!

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் அதிபதி மிதுனம் அல்லது கன்னியில் இருந்தாலும், அல்லது ஐந்தாம் வீடு மிதுனம் அல்லது கன்னியாய் இருந்தாலும் நிச்சயம் புத்திரர் உண்டு.

## 107. யாருக்குக் கடன் கிடைக்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் ஆறாம் அதிபதியைச் சூரியன் பார்த்தால் அவருக்கு வங்கி போன்ற நிறுவனங்களிலும், அரசாங்கங்களிலும், செல்வர்களிடமும் கேட்ட மாத்திரத்தில் கடன் கிடைக்கும்.

## 108. கம்பெனி டைரக்டர் யார்?

ஒருவரின் ஜாதகத்தில் குரு இரண்டாமதிபதியாகி, அந்தக் குரு பத்தில் நின்று, நற்பார்வை பெற்றால், ஒரு கம்பெனியின் நிருவாகியாய்த் திகழ்வார்!

## 109. சினிமா நட்சத்திரம் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் இரண்டாமாதிபதியாகி, அந்தச் சுக்கிரன் பத்தில் நின்று, நற்பார்வை பெற்றால் அவர் ஒரு பிரபல சினிமா நடிகராகவோ பாடகராகவோ இருப்பார்.

## 110. கர்ப்பக்கோளாறுகள் யாருக்கு ஏற்படும்?

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் வீடு செவ்வாய் வீடாய் இருந்தாலும், ஐந்துக்கு உடையவர் கெட்டாலும், ஐந்தில் பாபர் இருந்தாலும், ஐந்தில் அவர் இருந்து நல்லோர் காணாவிட்டாலும் கர்ப்பச்சிதைவு, அறுவைச் சிகிச்சை செய்து குழந்தையை எடுத்தல், கருப்பை அகற்றுதல், கருப்பைக் கோளாறுகள் போன்றவை ஏற்படும்.

## 111. பெண்களால் ஆதாயம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் பதினொன்றில் நின்று அவர்களின் பார்வை பெற்றால், பெண்களால் சுகமுண்டு. அதேபோல், குரு நான்கில் இருந்தால் பெண்ணால் சுகம் உண்டு; பூர்வீகச் சொத்தும் உண்டு.

## 112. நான்காமிடம் கூறும் இரகசியங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் நான்கில் சுக்கிரன் இருந்தால் மனைவியால் சுகம் அற்பம் ஆகும். நான்கில் சனியிருந்தால் கல்வி கற்கத் தடை ஏற்படும். நான்கில் இராகு அல்லது கேது இருந்தால் மனைவியைச் சந்தேகிப்பான்.

## 113. ஐந்தாமிடம் கூறும் இரகசியங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தில் சூரியன் இருந்தால் காதலில் வெற்றி உண்டு. ஐந்தில் சந்திரன் இருந்தால் தினம் ஒரு பெண்ணோடு நட்புக்கொள்வான். ஐந்தில் செவ்வாய் இருந்தால் சூதாட்ட புத்தி இருக்கும். ஐந்தில் குரு இருந்தால் லாட்டரிச்சீட்டு அதிர்ஷ்டமுண்டு. ஐந்தில் சனி இருந்தால், காதலில் தோல்வி ஏற்படும். திருமணமானாலும் குழந்தை தாமதித்துப் பிறக்கும். ஐந்தில் இராகு அல்லது கேது இருந்தால் தத்துப்பிள்ளை பிராப்தம் ஏற்படும்!

## 114. பெண் மோகம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் ஆறாமிடத்தில் இருந்தால், சதாபெண் ஸ்பரிசம் உடையவராய் இருப்பார். அதாவது, பெண்கள் மீது மோகமுள்ளவராயும் இச்சை உடையவராயும் இருப்பார்.

## 115. ஏழாமிடம் கூறும் இரகசியங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சூரியன் இருந்தால் அவர் ஒழுக்கக்குறைவு உடையவராய் இருப்பார். அதேபோல், ஏழாமிடத்தில் இருந்தால் வழக்கு, விவகாரங்கள் ஏற்படும்.

## 116. பன்னிரண்டாம் இடம் கூறும் இரகசியங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் பன்னிரண்டில் சூரியன் இருந்தால், தகப்பனார் பகையாய் இருப்பார். பன்னிரண்டில் சந்திரன் இருந்தால், அவர் சோம்பேறியாய் இருப்பார். பன்னிரண்டில் செவ்வாய் இருந்தால் சிறைவாசம் ஏற்படும். பன்னிரண்டில்

புதன் இருந்தால் அவர் மந்திர, தந்திர, ஜோதிடம் அறிந்தவராய் இருப்பார்; ஆனால், பணக்கஷ்டமுடையவராயும், சோம்பேறியாயும் இருப்பார். பன்னிரண்டில் குரு இருந்தால் எதிரியால் நன்மை உண்டாகும். பன்னிரண்டில் சுக்கிரன் இருந்தால் தகாத ஒழுக்கம் கலந்த வாழ்க்கை அமையும்.

## 117. எவர் கண்மருத்துவர் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாம் அதிபதி பத்தில் சூரியனுடன் சம்பந்தப்பட்டால், அவர் ஒரு சிறந்த கண்மருத்துவராய் விளங்குவார்.

## 118. எவர் காது மருத்துவர் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் சூரியனுடன் மூன்றாம் அதிபதி சம்பந்தப்பட்டிருந்தால் அவர் ஒரு சிறந்த காது வைத்திய நிபுணராய் இருப்பார்.

## 119. நாக்கில் உள்ள மச்சம் கூறும் இரகசியம்!

ஒருவரின் நாக்கில் மச்சம் இருந்தால் அவர் நாவன்மை படைத்தவராய் இருப்பார். ஆனால், அவர் தம் அந்தரங்கங்களையெல்லாம் வெளியில் கொட்டிவிடுவார்; இரகசியம் நிற்காது.

## 120. தோஷம் தரும் பிள்ளைகள்!

ஒருவருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்து, நான்காவதாய்ப் பெண் குழந்தை பிறந்தால் தோஷம். அதேபோல், ஒருவருக்கு மூன்று பெண் குழந்தைகள் பிறந்து

நான்காவதாய் ஓர் ஆண் குழந்தை பிறந்தால், தோஷம் ஆகும். இது தாய், தந்தை, மூத்தவர் குடும்பம் முதலியவற்றுக்குக் கஷ்டத்தைத் தரும்.

## 121. ரோகிணி நட்சத்திரமும் பரிகாரமும்!

ஒருவருக்கு ரோகிணி நட்சத்திரத்தில் ஆணோ பெண்ணோ பிறந்தால் தாய்மாமனுக்குக் கண்டத்தைக் கொடுக்கும். அதற்குப் பரிகாரம் பின்வருமாறு: நெய், நல்ல எண்ணெய், விளக்கெண்ணெய் ஆகிய மூன்று எண்ணெய்களையும் கூட்டி, ஒரு மண் மடக்கில் ஊற்றவேண்டும். அதற்கு மேல் குழந்தையைக் கவிழ்த்துப் பிடித்தால் அதன் உருவம் அந்த எண்ணெயில் தெரியும். அவ்வாறு முதன் முதலாய் தாய்மாமன் அக்குழந்தையை அந்த எண்ணெயில் தரிசனம் செய்துவிட்டு, பிறகு தாய்மாமன்கள் ஒவ்வொரு மாதமும் அமையும் ரோகிணி நட்சத்திரத்தன்று விரதம் இருந்தால் நன்மை உண்டாகும்!

## 122: மாமாங்கமும் திருமணமும்!

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நிகழும் மாமாங்கத்தின் போது திருமணம் செய்யக்கூடாது என்னும் ஒரு கருத்து உள்ளது. அதனைப் பற்றிச் சோதிட சாஸ்திரம் என்ன கூறுகிறது? மாமாங்கம் நடைபெறும் மாதமாகிய மாசி மாதம், அதற்கு முந்திய தைமாதம், அதற்குப் பிந்திய பங்குனி மாதம் ஆகிய மூன்று மாதங்களில் அதாவது மாமாங்க வருடத்தில் தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களில் மட்டுமே திருமணம் மற்ற சுபகாரியங்களைச் செய்யக்கூடாது எனச் சோதிடசாஸ்திரம் தெரிவிக்கின்றது.

## 123. கற்பனா சக்தி நாள்!

ஒருவரின் ஜென்ம நட்சத்திரத்திற்குப் பதினாறாவது நட்சத்திரம் 'கலைஞான பாத நட்சத்திரமாகும்' ஒவ்வொரு மாதமும் இந்த நட்சத்திரம் அமையும் போது அவர்களுக்குக் கற்பனை வளமும் சிந்தனா சக்தியும் சிறந்து காணப்படும். இந்த இரகசிய நாளைத் தெரிந்துகொண்டு செயல்பட்டால் சிறப்பாய் இருக்கும்.

## 124. இரகமாலையோகம் கூறும் இரகசியம்!

அனைத்துக் கிரகங்களும் வரிசையாய் ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட இராசிவீடுகளில் வரிசையாய்த் தொடர்ந்து இடம் பெற்றால் அது தோஷத்தை ஏற்படுத்தும். அது அசுப பலன்களையே தரும். அது போன்ற அமைப்பு ஏற்படும் போது நாட்டில் அரசியல் மாற்றம், இயற்கைப் பாதிப்பு, கனமழை, புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும்.

## 125. பஞ்ச பூதங்களும் நவகிரகங்களும்!

ஒன்பது நவகிரகங்களும், பஞ்ச பூதத்தின் அமிசமாய் விளங்குகின்றன. நெருப்பு அமிசமாய்ச் சூரியனும், செவ்வாயும் விளங்குகிறது. நீரின் அமிசமாய்ச் சந்திரன் விளங்குகிறது. மண்ணின் அம்சமாய்ப் புதன் விளங்குகிறது. ஆகாயமாய்க் குரு விளங்குகிறது. காற்றாய்ச் சனிக்கிரகம் விளங்குகிறது.

## 126. தீமை தரும் நட்சத்திர இரகசியங்கள்!

அசுவினி, பரணி, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை, பூராடம், உத்திரட்டாதி, ரேவதி, ஆயில்யம், விசாகம்,

கேட்டை ஆகிய பதின்மூன்று நட்சத்திரங்களும் தோஷத்தை தரக்கூடியவை ஆகும். அதன் விவரம் வருமாறு:

1. அசுவினி நட்சத்திரம் பாதம் ஒன்றானால், தந்தைக்குக் கண்டம் அல்லது அந்தக் குழந்தைக்கே கண்டம் ஏற்படும்; பாதம் இரண்டானால், தாய்க்குக் கண்டம்; பாதம் மூன்றானால், தனநாசம் ஏற்படும்; பாதம் நான்கானால், சுகசௌகரியம் ஏற்படும்.

2. பரணி நட்சத்திரம் ஒன்று, இரண்டு மூன்று ஆகிய பாதங்கள் ஆண்களுக்கு இருந்தால் தந்தைக்கும், பெண்களுக்கிருந்தால் தாயக்கும் கண்டம் ஏற்படும். பாதம் நான்கானால் எந்தத் தோஷமும் இல்லை.

3. பூச நட்சத்திரத்தில் பிறந்து, கடக இலக்கினமாய் இருந்தால் தந்தைக்குக் கண்டம் ஆகும்.

4. மக நட்சத்திரத்தில் பாதம் ஒன்றானால் தந்தைக்குக் கண்டம், பாதம் இரண்டானால் தாய்க்குக் கண்டம், பாதம் மூன்றானால் தனநாசம் ஏற்படும்; பாதம் நான்கஈனால் சுகமான சௌக்கியம் கிடைக்கும்.

5. உத்திர நட்சத்திரத்தில் பாதம் ஒன்றானால், தந்தைக்குக் கண்டம்; இரண்டாம் பாதம் ஆனால் தாய்க்குக் கண்டம்; மூன்றாம், நான்காம் பாதம் ஆனால் தோஷமில்லை.

6. அஸ்தம் நட்சத்திரத்தில் ஒன்று, இரண்டு, நான்கு ஆகிய பாதங்களுக்குத் தோஷமில்லை. ஆனால், மூன்றாம் பாதம் ஆண்களுக்கிருந்தால் தந்தைக்குக் கண்டம். பெண்களுக்கிருந்தால் தாய்க்குக் கண்டம்.

7. சித்திரை நட்சத்திரம் பாதம் ஒன்று, இரண்டு, மூன்று ஆகி, அது ஆண் ஜாதகமானால், தந்தைக்கும், பெண்ணானால் தாய்க்கும் கண்டத்தைத் தரும். பாதம் நான்கானால் தந்தைக்கு நிம்மதியிராது.

8. பூராட நட்சத்திரத்தில் பிறந்து அவருக்குத் தனுசு இலக்கினமானால் தந்தைக்குக் கண்டம் ஆகும். மற்ற இலக்கினமாய் இருந்து ஒன்றாம் பாதமானால் தந்தைக்குக் கண்டம். மூன்றாம் பாதமானால் மூத்தோர்களுக்கு எல்லாம் கண்டம். நான்காம் பாதமானால் தாய் மாமனுக்குக் கண்டம்.

9. உத்திரட்டாதி நட்சத்திரம் ஒன்றாம் பாதமானால் தாய்க்குக் கண்டம். இரண்டு, மூன்று, நான்கு பாதமானால் தோஷம் இல்லை.

10. ரேவதி நட்சத்திரம் ஒன்று, இரண்டு, மூன்று பாதங்களுக்குத் தோஷமில்லை. நான்காம் பாதமானால் தாய், தந்தை, உடன்பிறந்தவர்களுக்கெல்லாம் கண்டத்தை ஏற்படுத்தும்.

11. கேட்டை நட்சத்திரத்தை ஆதியந்த பரம நாழிகையாய்ப் பத்து சமபாகமாய் ஆக்கி முதல் முதல் பாகமானால் தாய்க்குக் கெடுதல். இரண்டாம் பாகமானால் தாய்வழிப் பாட்டனுக்கு அதிஷ்டத்தைத் தரும். மூன்றாம் பாகமனால் தாய்மாமனுக்கு அதிஷ்டம். நான்காம் பாகமானால் தாய்க்கு அதிஷ்டம். ஐந்தாம் பாகமானால் ஜாதகரின் மூத்த குழந்தைக்கு அதிஷ்டம். ஆறாம் பாகமானால் குடும்ப நாசம். ஏழாம் பாகமானால் தாய்க் குடும்பத்துக்கு

ஆகாது. எட்டாம் பாகமானால் மூத்த சகோதரருக்கு அதிஷ்டம். ஒன்பதாம் பாகமானால் மாமனாருக்கு அதிஷ்டம். பத்தாம் பாகமானால் சர்வநாசம்.

12. ஆயில்ய நட்சத்திரம் முதல் பாதமானால் நன்மையே. இரண்டாம் பாதமானால் தனநாசம். மூன்றாம் பாதமானால் தாய்க்கு அதிஷ்டம். நான்காம் பாதமானால் தந்தைக்கு அதிஷ்டம்.

13. கேட்டை நட்சத்திரம் மூத்த மகனுக்கும், விசாகம் நட்சத்திரம் மைத்துனருக்கும் ஆகாதென்பது பொதுக்கருத்து ஆகும்.

## 127. மூலம் நட்சத்திரம் தரும் பலன்கள்!

மூல நட்சத்திரம் முதல் பாதமானால் தந்தைக்கு அதிஷ்டம். இரண்டாம் பாதமானால் தாய்க்கு அதிஷ்டம். மூன்றாம் பாதமானால் தனநாசம். நான்காம் பாதமானால் தோஷமில்லை.

## 128. தேய்பிறைச் சதுர்த்தசி தரும் பலன்கள்!

ஒருவர் தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் பிறந்திருந்தால், அந்தச் சதுர்த்தசி திதியை ஆதியந்த பரமசமநாழிகையை ஆறு சமபங்காக்கி, முதல் பாகமானால் பிதுருக்கு அதிஷ்டம். இரண்டாம் பாகமானால் தந்தைக்கு அதிஷ்டம். மூன்றாம் பாகமானால் தாய்க்கு அதிஷ்டம். நான்காம் பாகமானால் மாமனுக்கு அதிஷ்டம். ஐந்தாம் பாகமானால் தரித்திரம். ஆறாம் பாகமானால் நன்மையே தரும்.

## 129. சந்திரன் கூறும் இரகசியங்கள்!

சந்திரனுக்கு இரண்டாம் இடத்தில் சுபகிரகங்கள் இருந்தால் அவர் சமத்து உள்ளவராயும், அரச சன்மானம் பெறுபவராயும், சுயமுயற்சியில் பொருள் சம்பாதிப்பவராயும் இருப்பார். சந்திரனுக்கு இரண்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் சுபகிரகங்கள் இருந்தால் சகல விஷயங்களிலும் அனுபவம் பெற்றவராயும், சுகமாய் வாழக்கூடியவராயும் இருப்பார். சந்திரனுக்கு இரண்டு, பன்னிரண்டில் கிரகங்கள் இல்லாமல் இருந்தால், மேற்கண்ட இருயோகங்கள் தரும் பலன்களில் சரிபாதிப் பலன்களைத் தரும்.

## 130. கிராம அதிகாரி யார் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் சனி நின்ற இராசிக்கும், சுக்கிரன் நின்ற இராசிக்கும் நடுவிலுள்ள இராசியில் சந்திரன் இருந்தால் அவர் நீதிமானாயும், போகியாயும், தனதானிய சம்பத்து உடையவராயும், கிராம அதிகரியாயும் இருப்பார்.

## 131. பிதுர் சொத்து இல்லாத ஜாதகம்!

ஒருவர் ஜாதகத்தில் சந்திரன் நின்ற வீட்டுக்கு இரண்டில் சனி இருந்தால், பிதுர் சொத்து அமையாது சுயமாய்ச் சம்பாதித்து அரசனைப்போல வாழ்வார்.

## 132. பெண்களால் இலாபமும் அவப்பெயரும்!

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன், செவ்வாய் சேர்ந்து இருந்தாலும், அல்லது இவர்கள் கேந்திரமாகிய ஒன்று, நான்கு, ஏழு பத்தில் இடம் பெற்றிருந்தாலும் இவர்களுக்குப் பெண்கள்

மூலம் தனசேர்க்கை ஏற்படும். மேலும், இவ்விருவரும் அல்லது இருவருள் ஒருவர் அசுபஸ்தான அமைப்புப் பெற்றிருந்தால் பெண்கள் மூலம் அவப்பெயர் உண்டாகும்.

## 133. யோகமுடைய ஜாதகம் எது?

ஒருவரின் ஜனன இலக்கினம் எதுவாயினும் அந்த ஜாதகத்தில் சூரியன் நின்ற ஸ்தானத்திற்கு மூன்றாம் இடத்தில் சந்திரன் இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் யோகமுடையவராய் இருப்பார்.

## 134. மறுபிறப்பு இரகசியங்கள்!

ஒருவர் ஜாதகத்தில் பன்னிரண்டில் கேதுபகவான் நல்ல விதத்தில் இடம் பெற்றிருந்தால் அவருக்கு மறுபிறப்பு இல்லை. அதேபோல், சிம்ம இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மறுபிறவி இல்லை. மேலும், பன்னிரண்டாம் வீட்டில் ஆட்சி பெற்றுக் கிரகம் இருந்தாலும் மறுபிறப்பு இல்லை. பன்னிரண்டாம் இடமும், ஏதாவது ஒரு பிற கிரகமும் பரிவர்த்தனையானால் மறுபிறப்பு இல்லை. மேற்கண்ட அமைப்பு உடைய யாவருக்கும் இப்பிறவியே ஒரு சோதனையாய் அமைந்து, அவர்கள் பல வேதனைகளை அனுபவிப்பார்கள். இவர்கள் காலப்போக்கில் புடமிட்ட தெய்வ பக்தர்களாகிவிடுவார்கள்.

## 135. ஜீவனயோகம் யாருக்கு?

ஒருவரின் ஜனன இலக்கினத்திற்கு மூன்று, ஆறு, பத்து பதினொன்றில் சூரியன் இருந்தால் அந்த ஜாதகருக்கு ஜீவனயோகம் சிறப்பாய் அமைந்து, அவர் தமது ஜீவனயோகத்தின் மூலமாய் சர்வ சாதாரணமாய்ப் பணம் சம்பாதிக்கக்கூடிய வித்தையை அறிந்திருப்பார்.

## 136. தோஷங்கள் நீங்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் குரு, சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்கள் கேந்திரஸ்தானமாகிய ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் இடம் பெற்றிருந்தால், அந்த ஜாதகத்தில் உள்ள பலவகைப்பட்ட தோஷங்களும் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

## 137. தோஷம் தரும் நட்சத்திரங்கள்!

ரோகிணி நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது என்பது தெரிந்த விஷயம். அந்தக் குழந்தை வளர்ந்து பன்னிரண்டு வயதாகும்போது, தாய்மாமனுக்குப் பெரிய கண்டங்களைக் கொடுக்கும். எனவே, மாதந்தோறும் அமையும் ரோகிணி நட்சத்திரத்தன்று தாய்மாமன்கள் விரதம் இருப்பது அவசியம் ஆகும். அதேபோல், தேய்பிறை மூலநட்சத்திரத்தில் பிறந்த பெண் மாமனாருக்குத் தோஷத்தைக் கொடுப்பாள். ஆயில்ய நட்சத்திரம் மாமியாருக்கு ஆகாது என்றாலும், ஜாதகத்தில் மாதுலகாரகனாகிய புதன் ஆட்சி, உச்சம், கேந்திரம், திரிகோண அமைப்பு பெற்றிருந்தால் இந்தத் தோஷம் பெருமளவு கட்டுப்படுத்தப்படும். மேலும், கேட்டை நட்சத்திரத்தில் பெண் பிறந்தால், இளைய சகோதரர் பலர் இருந்த போதிலும்! அது கணவனுக்கு நேர் இளைய சகோதரரான மூத்த மைத்துனருக்கே ஆகாது.

## 138. யோகம் தரும் குழந்தை!

ஒரு பெண்ணின் ஜெனன ஜாதகத்தில் இலக்கினாதிபதியும், சுகஸ்தானனாகிய நான்காமிடத்து அதிபதியும் பரிவர்த்தனை ஆகி இருந்தால், அப்பெண் பிறந்த

முதல் எட்டு வயது ஆவதற்குள் அப்பெண்ணின் பெற்றோர் பொன், பொருள், பூமி ஆகியவற்றைப் பெறும் யோகத்தைப் பெறுவார்கள்.

## 139. தோஷம் தரும் குழந்தை!

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் மாதுர்ஸ்தானமாகிய நான்காம் இடத்தில் சனி அல்லது இராகு இடம் பெற்று, அவை பலம் பெற்று இருந்தால், அப்பெண்ணின் தாய்க்குப் பிரச்சினையை உண்டாக்கும் வகையில் ஈனம் அல்லது ஊனமுடையதாய் அமையும். அல்லது அப்பெண்ணுக்கு மாற்றாந்தாய் ஏற்பட்டுவிடும். இப்பலன் ஆணின் ஜாதகத்துக்குப் பொருந்தும்.

## 140. தந்தைக்குத் தோஷம் தரும் குழந்தை!

ஒரு பெண் குழந்தையின் ஜாதகத்தில் பிதுர்ஸ்தானமாகிய ஒன்பதாமிடமும், அதன் அதிபதியும், பிதுர்காரகனான சூரியனும் பலம் பெற்றிருக்கவேண்டும். இலக்கினத்திற்கு அல்லது சூரியனுக்கு முன்னும் பின்னும் பகை அல்லது நீசமான கிரகங்கள் இருபுறத்திலும் இடம் பெற்றிருந்தால், ஒன்று அக்குழந்தை கர்ப்பமாய் இருக்கும் போதே அக்குழந்தையின் தந்தை இறப்பார். அல்லது அக்குழந்தை இறக்கும். பிதுர்ஸ்தானமாகிய ஒனப்தாமிடத்தில் சனி, இராகு, கேது ஆகியவை இடம் பெற்றிருந்தால், அக்குழந்தையின் வயதிலேயே அதன் பெற்றோருக்குக் கஷ்டத்திற்கு மேல் கஷ்டம் ஏற்படும்; பொன், பொருள், பூமி அனைத்தையும் இழப்பார்கள். மீண்டும், பட்டமரம் துளிர்ப்பது போல், தெய்வ அனுகூலத்தினால் பழைய உன்னத நிலையை அடையக்கூடிய பாக்கியம் உண்டாகும்.

## 141. அதிர்ஷ்டம் தரும் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினம், இரண்டாமிடம், மூன்றாமிடம் ஆகிய மூன்று இடங்களிலும் குரு, சுக்கிரன், புதன் ஆகியவர்கள் இடைவிடாது தொடர்ந்து இடம் பெற்றிருந்தால் அப்பெண் அழகுடையவளாயும், தனதானிய அமைப்பு, சுகபோக வாழ்க்கை உடையவளாயும் இருப்பாள்.

## 142. மாடி வீட்டுப் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் பன்னிரண்டாம் இடம் சுபஸ்தானமாய் இருந்து, அந்த இடத்துக்குரிய அதிபதி ஆட்சி பெற்றிருந்தால் அவள் பிறந்தது முதல் மாடி வீட்டில் வாழ்வாள்!

## 143. காலத்தில் நடைபெறும் திருமணம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் அபகிரகங்களில் வலிமை பொருந்திய குருவும், சுக்கிரனும் இலக்கினத்தையும், சந்திரனையும் பார்க்க, அப்பெண்ணுக்கு மற்ற கிரக அமைப்புகள் எந்த விதத்தில் திருமணத்தடையை ஏற்படுத்தினாலும், அந்தப் பெண்ணுக்கு வாலிப வயதில் திருமணமும், இல்லறபோக வாழ்க்கையும் கூடிவரும்.

## 144. காலம் கடந்த திருமணம்!

ஒருவரின் ஜாதகத்தில் சந்திரனைப் பாவகிரகங்களான சனி, செவ்வாய் ஆகிய கிரகங்கள் பார்த்தால், காலம் கடந்தே திருமணம் நடக்கும்.

## 145. பார்வை நடத்தி வைக்கும் திருமணம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்தையும் இராசியையும் சுபக்கிரகங்களான குரு, சுக்கிரன் பார்க்காவிட்டாலும், இலக்கினாதிபதி, இராசியாதிபதியைக் குரு அல்லது சுக்கிரன் பார்த்தாலும் அப்பெண்ணுக்குக் கூடிய விரைவில் திருமணம் நடக்கும்!

## 146. அழகிய பெண்!

பெண் ஒருத்தியின் இலக்கினத்திலேயே சந்திரன் இடம் பெற்று இருந்தால் அந்தப் பெண் அழகுடையவளாய் இருப்பாள்!

## 147. சுகபோக வாழ்க்கை!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்தில் சந்திரனும் சுக்கிரனும் இடம் பெற்றிருந்தால் அந்தப் பெண் பெருமைபடக்கூடிய சுகபோக வாழ்க்கையை அனுபவிப்பாள்.

## 148. விபசாரத்திற்கு உடந்தை!

ஓர் ஆணின் ஜாதகத்தில் இலக்கினத்தில் சந்திரனும், சுக்கிரனும் இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் தம் மனைவியின் விபச்சாரத்திற்கு உடந்தையாய் இருப்பார்.

## 149. ஆயகலைகள் அறுபத்து நான்கனையும் அறிந்தவள்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்தில் புதனும், சந்திரனும் கூடி இருப்பதால் அந்தப் பெண் ஆயக்கலைகள் அறுபத்து நான்கனையும் கற்றறிந்தவள் போல் காட்சியளிப்பாள்.

## 150. ஞானமார்க்கப் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்தில் புதனும், சுக்கிரனும் கூடியிருந்தால், அவள் அழகாகவும், இனிமையாகப் பேசக்கூடியவளாய் இருப்பாள். மேலும், ஞானமார்க்கத்தில் அளவு கடந்த பற்று உடையவளாயும் இருப்பாள்.

## 151. சுகமான பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு மூன்றாம் இடத்தில் சுபக்கிரகம் இடம் பெற்றிருந்தால் அப்பெண் தனசம்பத்தும், நற்குணமும், தயவும், சுகமும் ஒருங்கே அமையப்பெற்றவளாய் இருப்பாள்!

## 152. தீர்க்க சுமங்கலியாய் மரணம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் மாங்கல்யஸ்தானமான எட்டாம் இடத்தில் பாவக்கிரகங்கள் இடம்பெற்று, குடும்பஸ்தானமான இரண்டாமிடத்தில் சுபக்கிரகங்கள் இடம்பெற்றிருந்தால் அப்பெண் கணவனுக்கு முன்பாய்த் தீர்க்க சுமங்கலியாய் இறப்பாள்.

## 153. சமூக சேவை செய்யும் பெண்!

பெண் ஒருத்தி பலருக்கு உபகாரியமாய் இருக்கவும் சமூக சேவையில் ஈடுபடவும், புகுந்த வீட்டில் சிறந்த நிருவாகியாகவும் செயல்பட அவர் ஜெனன இலக்கினம் மேஷம் அல்லது விருச்சிகமாய் அமைந்து, அவருடைய சப்தமஸ்தானமாகிய ஏழாமிடம் சுக்கிரனுடைய ஆட்சி வீடாய் அமையவேண்டும்.

## 154. ஆயுள் பாதிப்பை ஏற்படுத்தும் நட்சத்திரம்!

பெண் ஒருத்தி விசாகம் நட்சத்திரத்தில் பிறந்திருந்தால் அந்தப் பெண்ணின் கணவனுக்கு ஆயுள் பாதிப்பை ஏற்படுத்தும். தக்க ஜாதகம் பார்த்துத் திருமணம் செய்விக்கவும்.

## 155. கணவனுக்குத் தோஷம் தரும் நட்சத்திரங்கள்

பெண் ஒருத்தி சித்திரை, திருவாதிரை, ஆயில்யம், கேட்டை, சதயம், மூலம், கிருத்திகை, பூசம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்திருந்தால், அது அந்தப் பெண்ணின் கணவனுக்கு ஆயுள் தோஷத்தையோ வருவாய் பாதிப்பையோ அளிக்கக்கூடும். எனவே, தக்க ஜாதகம் பார்த்துத் திருமணம் செய்விக்கவும்.

## 156. சோரம் போகும் தாய்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் நான்காம் இடத்தில் செவ்வாயும் சந்திரனும் கூடியிருந்தால், அப்பெண்ணின் தாய் அக்குழந்தை பிறப்புக்கு முன் கற்புடையவளாயும், அக்குழந்தை பிறந்த பின்பு அத்தாய் சோரம் போகக்கூடியவளாகவும் இருப்பாள்.

## 157. எவருக்கு இரண்டாம் தாரம் அமையும்?

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாம் இடத்தில் சந்திரனும் சுக்கிரனும் இருந்தால் அவள் இரண்டாம் தாரமாய் மணமுடிக்கப்படவோ அதிக வயதுள்ள வயோதிகரை மணக்கும்படியோ நேரும்.

## 158. பலர் அறிய விபச்சாரம்!

பெண் ஒருத்தியின் ஜெனன இலக்கினம் கும்பம், மேஷம், மகரம், மீனம் ஆகியவைகளாய் அமைந்து, அதில் சந்திரனும் சுக்கிரனும் கூடி இருந்து, அக்கூட்டுக்கிரக அமைப்பைப் பாவக்கிரகங்கள் பார்த்தால், அவள் பலரறிய விபச்சாரத்தில் ஈடுபடுவாள்!

## 159. அகடவிகடம் பேசும் மனைவி!

பெண் ஒருத்தியின் இலக்கினம் கும்பமாயின் ஏழாம் இடம் சூரியனுடைய வீடாய் அமைவதால், அப்பெண் தன் கணவனுடன் அகடவிகடம் பேசக் கூடியவளாய் இருப்பாள். அந்த ஏழாம் இடத்தில் சூரியன் ஆட்சி பெற்றிருந்தால், அவள் கணவன் திருமணமான சில காலத்திற்குப் பின் அவளைக் குடும்பத்திலிருந்து விலக்கிவிடுவான்.

## 160. புலமை பெற்ற கணவன்!

பெண் ஒருத்தியின் ஏழாம் இடம் புதன் வீடாய் இருந்தால், அந்தப் பெண்ணின் கணவன் எழுத்துத் துறை, கலைத்துறை ஆகியவற்றில் ஈடுபாடுள்ளவனாயும் நல்லபுலமை உடையவனாயும் இருப்பான்.

## 161. நல்ல கணவன்!

பெண் ஒருத்தியின் ஏழாவது வீடு குரு வீடாய் இருந்தால் அவள் கணவன் நல்ல குணமுடையவனாய் இருப்பான்.

## 162. பெண்களுக்கு எச்சரிக்கை!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஒன்று, நான்கு, ஏழு ஆகிய ஸ்தானாதிபதிகள் அனைவரும் நீசம் பெற்று, அவர்கள் எந்த வகையிலும் நீச்சபங்க ராஜயோகத்தைப் பெறவில்லை என்றால், அப்பெண் எவ்வளவு மன உறுதியோடு கற்புடையவளாய் இருந்தபோதும் அவள் எத்தகைய சூழ்நிலையிலும் கற்பழிக்கப்படுவாள். எனவே, இத்தகைய ஜாதக அமைப்புள்ள பெண்கள் எந்தத் தருணத்திலும் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும்.

## 163. சந்நியாசிப் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் பாவக்கிரகமும், ஒன்பதாமிடத்தில் சுபக்கிரகமும் இடம் பெற்றிருந்தால் அப்பெண் சந்நியாசிப் பெண்ணாய் இருப்பாள்.

## 164. விரும்பிய கணவன்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஆறாமிடத்தில் சுபக்கிரகமான குருவும், சுக்கிரனும் இருந்தால் அவள் விருப்பப்படியே கணவன் அமைவான். ஆனால், அவளுக்கு ஏதாவது சிற்சில பிணிபாதிப்புகள் இருந்துகொண்டே இருக்கும்.

## 165. அற்ப ஆயுளுள்ள கணவன்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் பன்னிரண்டாம் இடத்தில் சுபக்கிரகமான குருவும், சுக்கிரனும் இடம் பெற்றிருந்தால் அவள் கணவனுக்கு அற்ப ஆயுள் ஏற்படும். எனவே ஆயுள் பலமாய் உள்ள கணவனை அடைய முயலவேண்டும்.

## 166. மோசமான கணவன்!

ஆண் ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினம், ஐந்தாமிடம், எட்டாமிடம், ஒன்பதாமிடம் ஆகிய இடங்களில் சந்திரனும், சுக்கிரனும் இடம் பெற்றிருந்தால் அந்த ஆண்மகன் தன் மனைவிக்கு வேறு ஒருவரோடு சகவாசத்தை ஏற்படுத்தித் தந்து அதன் காரணமாய் அவர்களிருவரும் பல்வேறு ஆதாயங்களைப் பெற்று, தமது ஜீவனத்தை நடத்துவார். அதேபோல், ஆண் ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் குருவும் இராகுவும் கூடி இருந்தாலும், அந்த ஜாதகர் தம் மனைவியை மற்ற ஆடவர்களுக்குக் கூட்டிவைத்து அதனால் தமது ஜீவனத்தை நடத்துவார்.

## 167. சோரம் போகும் மனைவி!

ஆணின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஆறாம் இல்லத்தில் ஏழாம் இல்லத்து அதிபதியும், பாவக் கிரகங்களான சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது ஆகியவற்றுள் ஏதாவது ஒன்று அல்லது பல ஆறாம் இல்லத்தில் கூடி இருந்தால் அந்த ஜாதகர் மனைவி வெகுசாமர்த்தியமாய்ப் பிறர் அறியாமல் சோரம் போகக்கூடியவளாய் இருப்பாள். அதேபோல், களத்திரகாரகனான சுக்கிரனும், ஏழாம் இல்லத்து அதிபதியும் அல்லது சுக்கிரனும் கூடி, ஆணின் ஜாதகத்தில் ஆறாம் இடத்தில் இடம் பெற்றால், மனைவி இரகசியமாய்ச் சோரம் போவாள்.

## 168. ஆண்களுக்கு ஓர் எச்சரிக்கை!

ஆணின் ஜாதகத்தில் ஏழாம் இல்லத்தில் கேது இருந்தால் அவர் 27 வயதுக்கு மேலேயே திருமணம்

செய்யவேண்டும். அவருக்குத் திருமணம் இலகுவில் கூடிவராது. அதற்குமுன் திருமணம் செய்தால், அவர்கள் ஏழு வருடமே கூடி வாழ்வார்கள். பிறகு, விவாகரத்து ஏற்படும். அடுத்து சிலகாலம் கழித்து அப்பெண் சோரம் போவாள். எச்சரிக்கை தேவை. அதேபோல், ஆணின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் இராகு இருந்தால் அந்த ஜாதகர் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். காரணம், அவர் மனைவி அவரைக் கொல்லவும் துணிவாள்.

**முக்கியக்குறிப்பு :**

மேற்கண்ட பலன்கள் யாவும் பொதுவானவையே. சுபர் பார்த்தாலோ தக்க பரிகாரங்கள் செய்தாலோ, இந்த பலன்கள் மாறுபடும்.

## 169. காதல் திருமணம்!

ஆணின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சந்திரன் இருந்தாலோ பன்னிரண்டாம் இடத்தில் குரு இருந்தாலோ பெற்றோர் பார்த்த பெண் மனைவியாய் அமையமாட்டாள். காதல் திருமணமே அமையும்.

## 170. எச்சரிக்கை தரும் சாரம்!

ஆணின் ஜாதகத்தில் ஏழாம் இல்லத்து அதிபதி எதுவாயினும் அக்கிரகம் சனிச்சாரம் பெற்றிருந்தால், மனைவி சோரம் போகக்கூடிய தன்மை பெற்றுவிடுவாள். எனவே, அந்த ஆண் திருமணத்திற்கு முன்பு அதற்கான பரிகார முறைகளை ஏற்றுக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

## 171. ஜீவனயோகம் சிறப்பாய் அமைய!

ஆண், பெண் இருவருக்கும் பத்தாம் இடம் ஜீவனஸ்தானமும், உத்தியோக ஸ்தானமும் ஆகும். அந்தப் பத்தாமிடத்தில் குரு, சுக்கிரன், புதன் முதலிய சுபகிரகங்களின் ஆட்சி வீடாய் அமையவிடக்கூடாது. அது கேந்திராதிபத்திய தோஷம் ஆகும். அதனால் சிறப்பான ஜீவனயோகம் அமையாது. அப்படி அமைந்தாலும் அதில் ஒரு பகுதி வீண் விரயம் ஆகிவிடும். அல்லது போட்டி வியாபாரம், பதவி உயர்வில் காலதாமதம், ஊதிய முடக்கம் போன்றவை ஏற்படும். பத்தாம் இடம் சுபக்கிரகங்களின் ஆட்சி வீடாய் அமைந்து, அந்தச் சுபக்கிரகம் கெட்டிருந்தால் அந்த ஜாதகருக்கு ஜீவன யோகம் சிறப்பாய் அமையும்.

## 172. பெண்ணுக்குச் சிறப்புத் தரும் பத்தாமிடம்!

பத்தாமிடத்து அதிபதி ஜெனன இலக்கினத்திற்கு ஒன்று, இரண்டு, ஐந்து, ஏழில் இடம் பெற்றிருந்தால் அந்தப் பெண் நல்ல எடுப்பான உடலுடன், அழகாய் ஆடம்பர உடை அணிந்து அழகு இராணி போல் உத்தியோகம் செய்வாள்!

## 173. மோசமான ஜாதகம்!

ஆணாயினும் பெண்ணாயினும் பன்னிரண்டில் சுக்கிரன் இருந்தால், காரியம் முடியும் வரை இனிக்க இனிக்கப் பேசிக்காரியம் முடிந்ததும், மிகவும் மட்டமான கூலி கொடுத்து, தகாத வார்த்தைகளைச் சொல்லி, வந்தவர்களை விரட்டி அடிக்கக்கூடியவராய் இருப்பார்கள்.

## 174. படுகஞ்சனான ஆசாமிகள்!

ஆண் அல்லது பெண் கன்னியாலக்கினம் அல்லது கன்னியாராசியில் பிறந்திருந்தால் படுகஞ்சனாய் இருப்பார்கள். அவர்கள் ஒரு ரூபாய்க்கான வேலையை வாங்கிக்கொண்டு, அந்த வேலையைச் செய்தவருக்கு, தாராளமாய் இருபது பைசா கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, வருபவரை பேசி மழுப்பி அனுப்பிவிடுவார்கள்! இது தவிர, தங்கள் நிறுவனத்தில் பணி செய்யக்கூடிய வேலையாள்களை அடிக்கடி மாற்றிக்கொண்டே இருப்பார்கள். அதே புதன் அமிசம் கொண்ட மிதுன இலக்கினக்காரர்களோ வீம்புக்காகக் கடன் வாங்கிச் செலவு செய்யக்கூடியவர்களாய் இருப்பார்கள்!

## 175. பெண்களுக்காகச் செலவிடுபவர்!

ஆணின் ஜாதகத்தில் சந்திரன் பன்னிரண்டில் இருந்தால் அவர் பெண்கள் விஷயத்திற்காக ஏராளமான பொருள்களை செலவிடுவார்!

## 176. நோயான பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் பன்னிரண்டில் சந்திரன் இருந்தால் அவள் மருத்துவச் செலவிற்காக ஏராளமான பணத்தைச் செலவு செய்வாள்.

## 177. கெட்ட வழியில் செலவு செய்யும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் பன்னிரண்டாம் இடத்தில் இராகு இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் குதிரைப்பந்தயம், சூதாட்டம், குடிப்பழக்கம், லாகிரிவஸ்துகளைப் பயன்படுத்துதல்

போன்ற ஆடம்பர வாழ்க்கையை மேற்கொள்ளுதல் மூலம் ஏராளமான பொருள்களைச் செலவு செய்வார். அதேபோல், எட்டில் குரு இருந்தாலும் மேற்கண்ட வகையில் அதிகச்செலவாகும்.

## 178. சாப்பாட்டு மன்னர்கள்!

ஆண், பெண் ஜாதகத்தில் ஆறாம் இடத்தில் இலக்கினாதிபதி இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் சம்பாதிக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பங்கு அவர் உணவிற்கே சரியாகிவிடும். இத்தகைய ஜாதக அமைப்புடையவர்களை வயிறு புடைத்தவர்கள் என்று சொல்லலாம்.

## 179. அர்த்தத்தோடு செலவு செய்யும் ஜாதகர்!

ஒருவரின் ஜாதகத்தில் பன்னிரண்டில் குரு அல்லது கேது இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் செய்யும் ஒவ்வொரு செலவும் இலாபம் கருதியே செய்யக்கூடியதாய் இருக்கும். அப்படிப் பட்டவர்களிடமிருந்து எவ்விதப் பயனும் கருதாத சன்மானத்தைப் பெறமுடியாது.

## 180. தர்மகாரியம் செய்யும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டு அல்லது பதினோராம் இடத்தில் சுக்கிரன் இருந்தால் ஆண்டவனை அலங்கரிப்பதில் அதிகச்செலவு செய்வார். கோவில் கட்ட, குளம், கிணறு வெட்ட, பள்ளிக்கூடம், மருத்துவமனைகள், சமூகக் கூடங்கள் ஸ்தாபிக்க தம்மால் இயன்ற நன்கொடைகளை அவ்வப்பொழுது இயன்ற நன்கொடைகளை வாரி வழங்குவார். அவர்களிடம் திருமணம் என்று சொல்லிப் பொருளுதவி கேட்டால் இல்லை என்று

சொல்லாமல், எதிர்பார்க்கும் அளவுக்கு அதிகமாய்ப் பணம் கொடுத்து உதவுவார்கள்.

## 181. மாதவிலக்கால் கோளாறு ஏற்படும் ஜாதகம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஒன்று, ஐந்து, ஒன்பதில் இராகு அல்லது கேது இடம் பெற்றிருந்தால் அந்தப் பெண்ணின் மாதவிலக்கில் கோளாறு ஏற்பட்டு, அது பலவிதக் கருச்சிதைவுகளை ஏற்படுத்திவிடும். அதே அமைப்பு ஆண் ஒருவரின் ஜாதகத்தில் இருந்தால் அவர் மனைவிக்கு இந்தப் பாதிப்புகளை ஏற்படுத்தும். அவை நாகதோஷம் புத்திரதோஷம் எனப்படும். அத்தகைய அமைப்புள்ளவர்கள் தக்க பரிகாரம் செய்துகொள்வது அவசியமாகும். அதேபோல் பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சனியும் செவ்வாயும் கூடி இருந்தாலும், செவ்வாயும் இராகுவும் கூடி இருந்தாலும், சூரியனும் கேதுவும் கூடி இருந்தாலும், அந்தப் பெண்ணிற்கு மாதவிலக்கில் நிச்சயம் சரியான போக்கு இராது; அடிக்கடி மாதவிலக்கில் தொந்தரவு ஏற்படும். அப்படிப்பட்டவர்கள், தக்க மருத்துவ சிகிச்சை செய்துகொள்வதும் அவசியமாகும்!

## 182. சமூக சேவை செய்யும் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் பத்தாம் இடத்தில் சுக்கிரன் இருந்தாலும், 10ஆம் இடம் சுக்கிரனது ஆட்சி வீடாய் இருந்தாலும், பத்தாமிடத்தைச் சுக்கிரன் பார்த்தாலும் அந்தப் பெண் சமூக சேவையில் ஈடுபடுவாள். மேலும், புதன் ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய திரிகோணஸ்தானங்களில் இடம் பெற்றிருந்தாலும், அல்லது 2, 4, 7, 10இல் இடம்பெற்றிருந்தாலும் அவர் சமூக சேவையில் ஈடுபடுவார்.

## 183. கௌரவ பதவி!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் கேது இருந்தால் பலரால் போற்றிப் பாராட்டக்கூடிய கௌரவத்தைப் பெற்று ஏதாவது ஒரு கௌரவப் பதவியை அடைவார்!

## 184. அறுவைச் சிகிச்சை நிபுணர்!

ஒருவரின் ஜாதகத்தில் சூரியனும் செவ்வாயும் பரிவர்த்தனை பெற்றிருந்தால் அவர் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணராய் திகழ்வார்!

## 185. ஐந்தில் இருக்கும் புதன் தரும் பலன்கள்!

டாக்டர் ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தில் புதன் இருந்தால் அவர் நயமாய் பேசி வேடிக்கையாய் நோயாளிக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதில் சிறந்தவராய் இருப்பார். மேலும், ஐந்தில் புதன் இருப்பவர்கள் தங்கள் எதிர்காலத்தில் சகல துறைகளிலும் நல்ல வெற்றி வாய்ப்பினைப் பெற்றுத் திகழ்வார்கள். பதவியை வேண்டா என்று உதறித் தள்ளினாலும் அவர்களிடம் பதவி தானாக வலிய வந்து சேரும். மற்றும், ஐந்தில் புதன் ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் பாடல்களை மடை திறந்தவெள்ளம் போல் பாடும் திறன் பெற்றிருப்பார்.

## 186. பெருமைமிகு ஜாதகம்!

ஒரு ஜாதகத்தில் குருவும் கேதுவும் கூடி இருந்தாலும் அல்லது கேதுவைக் குரு பார்த்திருந்தாலும் அந்த ஜாதகர் எப்படியும் பெருமை பெறும் வாழ்வினை வாழக்கூடியவராய் விளங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## 187. அமாவாசை யோகம் தரும் ஜாதகம்!

ஒரு ஜாதகத்தில் சூரியனும் சந்திரனும் கூடி ஒரே இராசியில் இடம் பெற்றிருந்தால் அந்த அமைப்பு 'அமாவாசையோகம்' என்று சொல்லப்படும். அத்தகைய ஜாதக அமைப்பைப் பெற்றவர் கலைத்துறை, எழுத்துத்துறை, பத்திரிகைத்துறை ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபாடுகொண்டு கதை, கவிதை காவியம் போன்றவற்றைப் படைப்பார்கள்.

## 188. கோதுளியா இலக்கினம்!

சூரியன் உதயம் ஆகும் காலமும், சூரியன் அஸ்தமனம் ஆகும் காலமும் 'கோதுளியா இலக்கினம்' எனப்படும். அது, பசுவானது தனது முதல் காலடியை எடுத்து வைக்கும் நேரம் எனவும், அந்தக் காலடியில் சகல விதமான தேவர்களும் வாசம் செய்யும் காலமும் ஆகும் எனவும் சொல்வார்கள். இந்த இலக்கினத்திற்குத் திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் முதலியவற்றால் ஏற்படும் தோஷங்களைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

## 189. குழந்தை பிறக்கும் தோஷம்!

ஒரு குழந்தை பிறக்கும் போது கொடி சுற்றிக்கொண்டு பிறந்தால் அது தந்தைக்கும், பங்காளிக்கும் ஆகாது. அதேபோல், மாலை போட்டுக்கொண்டு பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது. அதற்குப் புண்ணியதனத்தன்று தக்க சாந்தி பரிகாரம் செய்து கொண்ட பின்னர், குழந்தையின் முகத்தில் விழிக்கவேண்டும்.

## 190. கிரகங்களின் சக்தி இரகசியங்கள்!

கிரகம் உச்சமாய் இருப்பது உச்சபலனைக் குறிக்கும். சொந்த வீட்டில் இருப்பது இரண்டாவது பலனையும், சொந்த வீட்டைப் பார்ப்பது மூன்றாவது பலனையும் தரும். அதேபோல், கிரகம் நீசனாய் இருக்கும்போது, தன் வீட்டிற்குப் பன்னிரண்டாம் வீட்டில் வியஸ்தானத்தில் இருக்கும் போதும் அந்தக் கிரகத்தின் சக்தி மிகக்குறைவாய் இருக்கும்.

## 191. இலக்கினம் கூறும் இரகசியங்கள்!

இலக்கினத்தில் சூரியன் இருந்தால் உஷ்ண உடம்பு ஆகும். இலக்கினத்தில் செவ்வாய் இருந்தாலோ, செவ்வாய் பார்த்தாலோ நல்ல உயரமாய் இலக்கினத்தில் இருப்பார். இலக்கினத்தில் சனி இருந்தால் குள்ளமாய் இருப்பார்கள். சிவப்பு நிறத்துடனும் சனி பார்த்தால் கருப்பு நிறத்துடனும் காட்சியளிப்பார்கள்.

## 192. குருவின் இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் குரு உச்சமாய் இருந்து அது எட்டாமிடமாய் இருந்தால், அந்த குரு விரோதியாய் மாறி விடுவார். அதேபோல், கோசாரத்தில் குருபலன் வரும்போது சனி பார்வை இருந்தால் திருமணத்தடையை ஏற்படுத்துவார்.

## 193. திசைகள் கூறும் இரகசியம்!

ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணப் பொருத்தம் பார்க்கும்போது, கணவனுக்குக் கஷ்ட திசை என்றால்

மனைவிக்கும் கஷ்ட திசை நடக்கக்கூடாது. இருவருக்கும் திசைகள் ஒரே சமயத்தில் தொடங்கக்கூடாது. ஆறுமாத இடைவெளிக்குள் புதிய திசை தொடங்கினாலும் கணவன் மனைவிக்குக் கெடுதல் ஏற்படும். அதிலும், குறிப்பாய் இருவருக்கும் ஒரே திசை தொடங்குவதும், நடப்பதும் ஆகவே ஆகாது. இதன் இரகசியம் என்னவென்றால், ஒருவர் கைதாழ்ந்து மற்றொருவர் கை உயர்ந்திருக்கவேண்டும்.

## 194. மலட்டுத் தன்மையின் இரகசியம்!

ஆண் ஒருவரின் விந்தணுக்களின் பலத்தைக் கேது, செவ்வாய், சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்களும் நிர்ணயிக்கப்படுகின்றன. பெண்ணின் அண்டத்தின் அரோணிதத்தின் வல்லமையைப் புதனும் இராகுவும் வெளிப்படுத்தும். பூர்வ புண்ய தனாதிபதியான ஐந்துக்கு உரியோன் பாவியுடன் கூடிப் பலவீனமாய் ஏழில் இருந்தால் அந்த ஜாதகர் மலடு ஆவார். ஐந்தாம் வீட்டுக்கு உரியவர் ஆறில் நீச்சம் அடைந்தால் அந்த ஜாதகர் மலடு ஆவார். ஐந்தாம் வீட்டுக்கு உரியவர் நீச்சனாய் ஆறு, எட்டு, பன்னிரண்டாம் வீடுகளில் மறைந்தால் அவர் மனைவி மலட்டுத்தன்மையைப் பெறுவார். அதேபோல், ஐந்தாம் வீட்டில் புதனும் கேதுவும் இருந்தால் அவர் மனைவி மலடி ஆவார். இது எந்த இலக்கினத்திற்கும் பொருந்தும். ஆனால், இவர்களை குருவோ சுக்கிரபகவானோ பார்த்தாலோ, புதன் கேது நின்ற வீட்டுக்குரியவர் பலம் அடைந்து காணப்பட்டாலோ அவர் மனைவியின் மலட்டுத்தன்மை விலகும். மேலும், ஐந்தாம் வீட்டுக்குரியவர் நீசமாகி ஐந்தாம் வீட்டைப் பார்க்காமல் இருந்து, ஐந்தாம் வீட்டில் புதனும் சனியும் இருந்தால் அந்த ஜாதகரின் மனைவி மலடி ஆவார். மற்றும், ஒருவரின் ஜாதகத்தில்

இலக்கினம் அல்லது ஏழாம் வீட்டில் சுக்கிரனும் சூரியனும் கூடியிருந்தால் அந்த ஜாதகரின் மனைவி மலடி ஆவார்.

## 195. சோதிடம் கூறும் ஆண்மை இரகசியம்!

ஆண் ஒருவரின் வீரியத் தன்மையைத் தந்து நிற்பதில் சுக்கிரனும், வீரியத்தை வெளிப்படுத்த உதவுவதில் செவ்வாயும் பங்கு வகிக்கின்றன. சுக்கிரனின் பலத்தை அதிகப்படுத்திக்கொள்ளச் சுக்கிரனின் பழமாகிய மாதுளம்பழத்தை அதிகம் உட்கொள்ளலாம். அதே போல், அத்திக்காய்களைப் பொரியல் செய்து சாப்பிடலாம். சிறு வெங்காயத்தையும் மொச்சைப் பயற்றையும் உணவில் சேர்த்துக்கொள்ளலாம். மேற்கண்டவை யாவும் சுக்கிரனின் ஆதிக்கம் பெற்ற உணவு வகைகளாகும்.

மேலும், சுக்கிர பகவானின் காயத்ரியை ஜெபித்தல், வெண்தாமரை மலர்கள் கொண்டு மகாவிஷ்ணு மற்றும் ஸ்ரீலட்சுமியை வழிபடுதல் ஆகியவை சுக்கிரனின் பலத்தை அதிகப்படுத்தும். அதே போல், செவ்வாய் பகவானின் பலத்தைப் பெறத் துவரம் பருப்பு, முந்திரிப் பருப்பு போன்றவற்றை உண்ணுதல், மற்றும் சற்றே காரத்தை உணவில் சேர்த்துக்கொள்ளுதல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். மேலும், கந்தர் சஷ்டிக் கவசம் பாராயணம் செய்வதன் மூலமாகவும், முருகப்பெருமானைச் செம்பருத்திப் பூவைக்கொண்டு அர்ச்சனை செய்வதன் வாயிலாகவும் செவ்வாய் பகவானின் பலத்தை மேம்படுத்திக்கொள்ள இயலும்.

## 196. வீரியக்குறைவு யாருக்கு?

ஒற்றைப்பட இராசியாகிய மேஷம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவை இலக்கினமாகி அதில் சுக்கிரன் இருந்தால் அந்த ஜாதகர் அற்ப வீரியம் உடையவராய் இருப்பார். அந்தச் சுக்கிரனைக் குருவோ, செவ்வாயோ பார்த்தால் அந்த நிலைமாறும். மேலும், இலக்கினத்திற்கு நான்கில் சந்திரனும் சனியும் இருந்தால் வீரியக்குறைவு ஏற்படும். ஆனால், பௌர்ணமிச் சந்திரனாய் இருந்தால் வீரிய சக்தி குறைவுபடாமல் நிரம்பவே இருக்கும். மேலும், சுக்கிரபகவான் ஏழாம் வீட்டில் இடம் பெற்று, இலக்கினாதிபதியால் பார்க்கப்பட்டால் அந்த ஜாதகருக்கு வீரியக்குறைவு ஏற்படும். சுக்கிரனின் வீடுகளான ரிஷபம், துலாம் ஆகியவற்றில் சந்திரன் அமர்ந்திருந்து அவரை எவரும் பார்க்காமல் இருந்தால் இத்தகைய வீரியக்குறைவு ஏற்படும். மேற்கண்ட அமைப்புகளைப் பெற்றவர்கள் சுக்கிலத்திற்கு அதிபதியான சுக்கிர பகவானுக்குத் தகுந்த பரிகாரங்கள் மற்றும் பக்தி வழிபாடுகளை மேற்கொள்வதுடன், அவரின் ஆதிக்கம் நிறைந்த உணவுப்பொருள்களை அன்றாட உணவில் சேர்த்துப் பலம் பெறலாம்.

## 197. வீரியம் ஒழுகுவது யாருக்கு?

ஒரு சிலருக்குப் பெண்களிடம் உறவு கொண்டாலும், கொள்ளாவிட்டாலும் வீரிய சக்தி சிறுநீருடன் கலந்தோ ஒழுகிக்கொண்டோ இருக்கும். அத்தகையவர்களுக்குக் குழந்தை பாக்கியம் மிகவும் தாமதமாய்க் கிடைக்கும். இத்தகைய அமைப்பு ஜாதகத்தில் இராகுவோ சனியோ உச்சனாயிருந்து, கடகத்தில் சூரியனும், மேஷத்தில் சந்திரனும் இருந்தால் அந்த ஜாதகருக்குத்தானே வீரியம் வெளிப்பட்டுவிடும். மேலும்,

ஒருவரின் பிறந்த இலக்கினம் கன்னியாகி இலக்கினத்திற்கு ஏழில் புதன், சனி நின்று, சனியின் வீடாகிய கும்பத்தில் சுக்கிரன் இருந்தால், அவரின் வீரியம் ஒழுகிய வண்ணம் இருக்கும். மேற்கண்ட கிரக அமைப்பில் பிறந்தவர்களுக்குச் சனிதிசை, புதன் திசை, அல்லது சனி புக்தி, புதன் புக்தி நடைபெறும் காலத்தில் இவர்களுக்கு வீரிய ஒழுக்கு மிக அதிகமாய் இருக்கும். அதற்குப் பரிகாரமாய் யோகாசனம், தியானம் ஆகியவற்றில் ஈடுபடுதல்வேண்டும். மற்றும் சித்த வைத்தியத்தை மேற்கொள்ளவேண்டும். பிரதோஷ நாள்களில் விரதமிருப்பதும் நன்று. அதேபோல், இலக்கினத்தில் சந்திரபகவான் அமர்ந்து, ஐந்தாம் வீட்டில் சனிபகவானுடன் குருவும் அமர்ந்தாலும் விந்தணுக்கள் தாமே வெளியேறிக்கொண்டிருக்கும். இவ்வாறு வீரியம் ஒழுகும் ஜாதகர்களுக்குப் புத்திர பாக்கியம் காலதாமதம் ஆவதுடன், குழந்தையும் ஏதேனும் குறைகளுடன் பிறக்கவும் வாய்ப்பு உள்ளது.

சிலருக்குக் குழந்தை பாக்கியம் இல்லாமலும் போய்விடும். இத்தகைய குறைபாடுள்ளவர்கள் இரத்தினங்கள் அணிந்து கொள்ளலாம்; ஜாதகத்திற்குப் பொருத்தமான உலோகத்தை ஆபரணமாய் அணியலாம். தகுந்த பரிகார முறைகளைத் தங்களின் ஜன்ம நட்சத்திரத்திற்குப் பொருத்தமான நாள்களில் மேற்கொள்ளலாம். இத்தகைய முறைகளின் மூலம் குறைகள் நீங்கப்பெற்றுக் குழந்தை பாக்கிய அமைப்பைப் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம்!

## 198. சோதிடம் கூறும் அந்தரங்கம்!

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாயுடன் சுக்கிரன் காணப்பட்டாலோ, சுக்கிரனைச் செவ்வாய் பார்த்தாலோ

விந்தானது விரைவாய் வெளிப்பட்டுவிடும். சுக்கிரன்மீது, சனி, சந்திரன் பார்வை இருந்தால் சற்றே தாமதத்துடன் விந்தணுக்கள் வெளிப்படும். சுக்கிரன் தன் நட்சத்திரத்தில் அமர்ந்திருந்தாலோ செவ்வாயின் நட்சத்திரத்தில் இருந்தாலோ, வெளிப்படும் வீரியத்தின் அளவு மிகவும் அதிகமாய் இருக்கும். மேலும், சுக்கிரன் ஒருவரின் ஜாதகத்தில் ரிஷபம், துலாம், மீனம் ஆகியவற்றில் இடம் பெற்றிருந்தால் அவரின் விந்து வெண்மையானதாயும், தூய்மையானதாயும் இருக்கும். அதே சுக்கிரபகவான் மிதுனம், விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய வீடுகளில் காணப்பட்டால் விந்து சற்றே நிறம் மங்கிக் காணப்படும். அதே சுக்கிரபகவான் கடகம், சிம்மம், கன்னி, மேஷம், தனுசு ஆகியவற்றில் இருந்தால் வெளிப்படும் வீரியம் துர்நாற்றத்தை உண்டு பண்ணக்கூடியதாயும் இருண்ட நிறம் உடையதாயும் காணப்படும்.

## 199. கோபப்படுபவர்!

ஒருவரின் ஜாதகத்தில் மூன்றில் பாவக் கிரகங்கள் அமர்ந்தால், அந்த ஜாதகர் எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவராயும், கோபப்படுபவராயும் இருப்பார்!

## 200. ஜடமாய் இருக்கும் ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் மூன்றுக்குரிய கிரகம் சரியான வலுவுடன் அமர்ந்திராவிட்டால் அந்த ஜாதகருக்குக் காமத்தில் அதாவது, உடல் உறவு கொள்வதில் ஆர்வம் இல்லாமலேயே போய்விடும். அதே போல், ஜென்ம இலக்கினத்திற்கு மூன்றுக்குடையோன் இராகுவுடன் சேர்ந்திருக்க, அவர்களைச் சனியோ, சந்திரனோ பார்த்தால் அந்த ஜாதகர் ஜடமாகவே

இருப்பார். மற்றும் இலக்கினாதிபதி சனி பகவானுடன் சேர, இலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டுக்கு உரியவர், பாவியுடன் சேர்ந்திருக்க, மூன்றாம் வீட்டைச் செவ்வாய் பார்த்தால் அந்த ஜாதகர் ஜடத்தன்மை அதிகம் உடையவராய் இருப்பார்!

## 201. அலியாய் இருப்பவர் யார்?

நவகிரகங்களுள் புதன் பகவானும், சனி பகவானும் அலிக் கிரகங்களாய் விளங்குகின்றனர். அவற்றுள் புதபகவான் பெண் தன்மை அதிகம் கொண்ட பெண் அலியாகவும், சனி பகவான் ஆண் தன்மை அதிகம் கொண்ட ஆண் அலியாகவும் விளங்குகின்றனர்.

இவ்விரு கிரகங்களுடன் பிற கிரகங்கள் சம்பந்தப்படும்போது, அந்த ஜாதகருக்கு அலித்தன்மை ஏற்படுகிறது. சுக்கிரன் ஆறிலும், எட்டில் சனியும் நின்றால் அந்த ஜாதகர் அலித்தன்மை உள்ளவர் ஆவார். அதேபோல், சனியும் சுக்கிரனும் ஜென்ம இலக்கினத்திற்கு எட்டு அல்லது பத்தாம் வீட்டில் அமர்ந்து சுபக்கோள்களின் பார்வை பெறாவிடில், அந்த ஜாதகர் அலியாவார். மேலும், இலக்கினத்திற்கு ஆறு, பன்னிரண்டாம் வீடுகள் ஜல இராசியாகிய கடகம், மகரம், மீனமாய் இருந்து, அதில் சனியும் இருந்து சுபக்கோள்களின் பார்வை இல்லாவிடில் அவர் அலியாவார். இத்தகைய அமைப்பு சிம்மம், கும்பம் ஆகிய இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கே அதிகம் ஏற்படும். மேலும், சனி பகவான் நீசனாய் ஜென்ம இலக்கினத்திற்கு ஆறு அல்லது எட்டில் அமர்ந்தாலும் அந்த ஜாதகர் அலியாவார். இந்த அமைப்பு கன்னி, விருச்சிகம் ஆகிய இரு இலக்கினக்காரர்களுக்கு ஏற்படுகிறது. சனிபகவான் நீசம் அடைவது மேஷத்தில்தான்.

இதில் செவ்வாய் ஆட்சி பெறாமல் இருந்தாலும் அந்த ஜாதகர் மேற்சொன்னபடி அலியாய் இருப்பார். அதேபோல், சந்திரனும் சூரியனும் ஒருவருக்கொருவர் பார்த்தாலும் அலியாவார். மேற்கண்ட நிலை பௌர்ணமியன்றுதான் ஏற்படும். அப்படியென்றால், பௌர்ணமியன்று பிறந்தவர்கள் எல்லாம் அலியாய் இருப்பார்கள் என்று நினைக்கவேண்டா. சந்திரனும் சூரியனும் ஆண் இராசிகள் ஆகிய மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவற்றிலோ, பெண் இராசிகள் ஆகிய ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றிலோ இருந்து, சமமான பாதையில் இருவரின் கதிர்களும் சந்தித்தால் அந்த ஜாதகர் அலியாவார்! அதே சூரியனும் சந்திரனும் ஆண் - பெண் இராசிகளென்று கலந்து, மாறி மாறிக் காணப்பட்டால் அலித்தன்மை ஏற்படாது! அதே போல், ஒருவரின் இலக்கினம் ஒற்றை இராசியாகிய மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பமாய் இருந்து, செவ்வாய் பகவான் இரட்டை இராசியாகிய ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றில் இருந்து இலக்கினத்தைப் பார்த்தால் அந்த ஜாதகர் அலியாவார். மேலும், சந்திரன் இரட்டை இராசிகள் ஆகிய ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவற்றில் இடம்பெற்று, புதன் ஒற்றை இராசியாகிய மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவற்றில் இருக்க, அவர்களைச் செவ்வாய் பார்த்தால் அலித்தன்மை ஏற்படும்.

## 202. காமம் பற்றி ஜோதிடம் கூறும் இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் மூன்றாம் இடம், ஏழாம் இடம், பன்னிரண்டாம் இடம் ஆகிய மூன்று வீடுகளுமே ஒருவரின் காம இரகசியத்தை வெளிப்படுத்தும் இடங்களாகும். ஒருவரின்

ஜாதகத்தில் மூன்றாம் இடமே போக சக்தியைத் தூண்டக்கூடியதாயும், வீரிய சக்திக்கு மூல காரணமாயும் இருக்கக்கூடியதாகும். அத்துடன் மட்டுமன்றி, மூன்றாம் இடத்துக்கு அதிபராய் விளங்கும் கிரகத்தின் நிலையைப் பொறுத்து, அந்த ஜாதகரின் மர்ம உறுப்பின் தன்மை, அளவு ஆகியன நிர்ணயிக்கப்படுகின்றன. மூன்றாம் வீட்டுக்குரியவர் கேந்திர மாதிரிகோணங்கள் ஆகியவற்றில் அமரும் போது அந்த ஜாதகருக்கு அதிக வீரியசக்தியும், மர்ம உறுப்பின் தன்மை இயல்பில் பெரிதாயும் காணப்படும். மாறாய், மூன்றாம் வீட்டுக்குரியவர் நீச்சம் பெற்றோ அல்லது இராகு, கேது, சனி ஆகியவர்களுடன் சேர்ந்து காணப்பட்டாலோ அவரால் தொடர்ந்து உடலுறவில் ஈடுபட இயலாது. அடுத்து, ஏழாம் வீடு காமத்துக்கு உரிய வீடாகும். அந்த ஏழாம் வீட்டுக்கு உரியவர் சுயபலம் பெற்றுக் காணப்பட்டால் காமவேட்கை அதிகம் இருக்கும்; காமத்தை அனுபவிக்கும் யோகமும் கிடைக்கும். ஏழாம் வீட்டில் சனி, இராகு, கேது போன்ற கிர்கங்கள் மற்றும் செவ்வாய் அமரும்போது காமத்தை அனுபவிக்கும் தன்மை குறைகிறது. அதேபோல், உடலுறவின் போது கடினத்தன்மை ஏற்படுகிறது. மாறாய் ஏழாம் வீட்டைக்குரு, சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் பார்த்தால் அந்த ஜாதகருக்குக் காமத்தில் ஈடுபாடும், அதிக நேரம் ஈடுபடுதலும், போகத்தின் போது இன்பமும் முழுமையாய்க் கிடைக்கும். அடுத்து, பன்னிரண்டாம் வீடு மிக முக்கியமாகும். அந்த இடத்தைப் பொறுத்துதான் ஒருவர் உடலுறவு கொள்ளும் இடத்தின் தன்மை நிர்ணயிக்கப்படுகிறது. பன்னிரண்டாம் வீட்டைச் சுபக்கிரகம் பார்வை செய்தால் அந்த ஜாதகர் மெத்தை மற்றும் பூக்கள் தூவிய உயர்ரக மெத்தையில் பெண்ணுடன் கூடி இன்பம் அனுபவிப்பார். பன்னிரண்டாம் வீட்டில்

செவ்வாயும் சனியும் கூடியிருந்தாலோ அல்லது செவ்வாய், சனி இருவரும் பன்னிரண்டாம் வீட்டைப் பார்த்தாலோ முதலிரவுடன் அவருக்கு உடலுறவில் வெறுப்பு ஏற்பட்டுவிடும். அதே போல், பன்னிரண்டாம் வீட்டில் பாவக்கிரகங்கள் இருந்தால் காம போகத்தில் ஆர்வம் குன்றும். பன்னிரண்டில் இராகு, செவ்வாய் இருந்தாலும் சனி இருந்தாலும் குறுகிய இடத்தில் பயந்த சுபாவத்துடன் விருப்பம், இன்றியோ இருவருள் ஒருவரின் தூண்டுதலின் பேரில் மட்டுமோ தாம்பத்தியத்தில் ஈடுபடவேண்டி வரும்.

## 203. புத்திர தோஷ இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் வீட்டுக்கு உரியவர் பாவியாய் ஏழாம் வீட்டுக்கு உரியவரின் சாரம் பெற்றும், குருபகவான் ஜன்ம இராசிக்கோ புத்திரஸ்தானத்திற்கோ மூன்றாம், ஆறாம் இராசியில் இருக்க, சூரியன் நின்ற இராசிக்குப் பன்னிரண்டில் சுக்கிரன், புதன் இருந்தால் அவருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. மேலும் இலக்கினத்திற்கு ஐந்தாவது வீடானது கடகம் அல்லது கும்பமாய் இருந்து ஐந்தில் குரு இருந்தால் குழந்தை இல்லை. அதே போல், ஐந்தாம் வீட்டில் புதனும் கேதுவும் அமர, ஒன்பதாம் இடத்து அதிபதி இலக்கினகேந்திரம் பெற்று அவர்களைச் செவ்வாய் பார்த்தாலும் குழந்தைப் பாக்கியம் இல்லை. மேலும், ஐந்தாம் வீட்டைப் பாவிகள் பார்த்து, ஐந்துக்குரியவர் பாவியுடன் கூடியிருக்கப் புத்திரக்காரர்கள் குரு, ஐந்தாம் வீட்டில் நின்றாலும் குழந்தைப் பாக்கியம் இல்லை. மற்றும், திருவாதிரை அல்லது அஸ்த நட்சத்திரத்தில் ஐந்தாம் வீட்டுக்கு உரியவர் அமர்ந்தால், அவருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. அதே போல், ஐந்தாம் வீட்டுக்கு உரியவர் ஏழில் இருந்தாலும், பாவரின்

பார்வை, சேர்க்கை அடைந்து இருந்தாலும், சந்திரன் பாபிகளுடன் கூடி கேந்திரம் பெற்றாலும், குழந்தைப் பாக்கியம் இராது. மேலும், சந்திரனுக்குப் பத்தில் சனி, செவ்வாய் இருந்தாலும் குரு, புதன் இருந்தாலும் அவர்களுக்குக் குழந்தை யோகம் இல்லை. மற்றும், பகவான் ஐந்தாம் வீட்டில் அமர, இலக்கினம் அல்லது நான்காம் வீட்டில் பவாக்கிரகம் அமர்ந்திருந்து, ஐந்து, ஒன்பதாம் வீடுகளும் பாவிகளின் பிடியில் இருந்தால் அந்த ஜாதகருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. மீறிப் பிறந்தாலும் இறக்கும். அதே போல், ஐந்தாம் வீட்டுக்கு உரியவர், ஆறாம் வீட்டுக்கு உரியவருடன் சேர, பன்னிரண்டாம் வீடு, ஆறாம் வீடு பாவக்கிரகங்களின் ஆதிக்கத்தில் இருந்தால் குழந்தை பிறந்து இறக்கும். மேலும், ஐந்தாம் வீட்டில் செவ்வாய் அமர்ந்து, இலக்கினாதிபதி இரண்டில் அமர்ந்தால், குழந்தை பிறக்க, பிறக்க இறக்கும். மற்றும், இலக்கினத்தில் சூரியனும் ஐந்தில் செவ்வாயும் இருந்தால் குழந்தை பிறக்காது.

## 204. குலதெய்வ சாபம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் இடந்தான் குல தெய்வத்தைக் குறிப்பிடும் இடமாகும். குலதெய்வக் காரகனாகச் சனிபகவான் விளங்குகிறார். ஒரு ஜாதகத்தில் சனிபகவானுக்கு ஆறாமிடம் புதன், சந்திரன், சூரியன் ஆகியவர்களால் பார்க்கப்பட்டு இலக்கினமும் பாவக்கிரகத்தால் பார்க்கப்பட்டால் குலதெய்வத்தால் சாபம் ஏற்படும். அந்தச் சாபத்தால் அந்த ஜாதகர் குழந்தைப் பாக்கியம் அடைவதில் தடைகள் ஏற்படும். அதேபோல், சனிபகவானின் வீட்டில் அமர்ந்திருக்கும் சூரிய பகவானைச் செவ்வாய் பகவான் பார்த்தாலும் குல தெய்வத்தால் சாபம் ஏற்படும். அதன் வாயிலாயும் குழந்தை தோஷம் ஏற்பட்டு அந்த வமிசத்தில் வளர்ச்சி தடைப்பட்டுவிடும்.

## 205. பத்தினி சாபம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழாம் வீட்டுக்கு உரியவர் எட்டாம் வீட்டில் அமர, பன்னிரண்டாம் வீட்டிற்கு உரியவர் ஐந்தாம் வீட்டிலும் அமர்ந்து, புத்திரக்காரகர் குருபாபருடன் சேர்ந்து இருந்தால் அந்த ஜாதகருக்குப் பத்தினி சாபத்தால் குழந்தைகள் இல்லாமற்போகும். மேலும், ஐந்தாம் வீட்டில் சுக்கிரன் அமர்ந்து ஏழுக்குடையவர் எட்டாம் வீட்டில் அமர, புத்திரக்காரகர் பாவியுடன் சேர்ந்து இருந்தாலும் பத்தினி சாபத்தால் புத்திர தோஷம் ஏற்படும். மற்றும், ஏழுக்குடையவர் பன்னிரண்டில் அமர்ந்து, இரண்டாம் வீட்டில் பாவக்கிரகம் அமர்ந்து, ஐந்தாம் வீட்டில் பாவி அமர்ந்திருந்தால் அந்த ஜாதகருக்கும் பத்தினி சாபத்தால் புத்திர தோஷம் உண்டாகும்! மேலும் ரிஷபம் மற்றும் துலாம் புத்திரஸ்தானமாகி சுக்கிர பகவான் சந்திரன், இராகுவுடன் கூட இரண்டு, பன்னிரண்டு, இலக்கினம் ஆகிய இடங்களில் பாவிகள் இருந்தால் அந்த ஜாதகர் காமத்தூண்டுதலினால் தவறான வகையில் அணுகி, பத்தினியிடம் சாபம் பெறுவார். அதனால் குழந்தைப் பாக்கியம் தடைப்படும்.

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் சனியும் சுக்கிரனும் இருக்க, எட்டில் குருவும் ஐந்தில் சூரியனும் இடம்பெற்றிருந்தால், அவர் முன் ஜென்மத்தில் தம் உத்தம மனைவியைத் தவறான காரியங்களில் ஈடுபட வைத்து அதனால் கோபம் அடைந்து அப்பத்தினி இட்ட சாபத்தால் இந்த ஜன்மத்தில் புத்திர பாக்கியம் இல்லாதிருப்பர். மேலும், ஒருவரின் ஜாதகத்தில் இரண்டில் செவ்வாயும், பன்னிரண்டில் குருவும், ஐந்தில் சனியும் இராகுவும் இருந்தால், பத்தினிப் பெண்ணைத் தகாத வார்த்தைகள் பேசி, அதனால் அப்பெண்

சினமடைந்து தந்த சாபத்தால் குழந்தை பாக்கியம் தடைப்படும்.

அதேபோல், ஒருவரின் ஜாதகத்தில் ஐந்து, ஏழுக்கு உடையவர்கள் ஆறாம் வீட்டில் மறைய, ஐந்தாம் வீட்டில் செவ்வாயும் இலக்கினத்தில் சனியும் அமர குருபகவான் இராகு அல்லது கேதுவுடன் சம்பந்தப்பட்டால், பத்தினிப் பெண்ணின் ஸ்திர சொத்துகளை ஏமாற்றி அனுபவித்ததன் விளைவாய்ச் சாபம் ஏற்பட்டு அதனால் குழந்தைப்பாக்கியம் இல்லாது போகும். மற்றும், ஒருவரது ஜாதகத்தின் பாக்கியவீடாகிய ஒன்பதாம் இடத்தில் சுக்கிரனும், ஏழாமிடத்து அதிபதி, எட்டாமிடத்தில் நிற்க, இலக்கினத்தில் பாவக்கிரகம் காணப்பட்டால் அவர் முன் ஜன்மத்தில், தம் உத்தம் மனைவியைத் தினசரி துன்புறுத்தியதால் வருந்தி அவள் இட்ட சாபத்தால் இந்தப் பிறவியில் குழந்தைப் பாக்கியம் தடைப்படும்.

## 206. புத்திரபாக்கியத்தைத் தடுக்கும் சர்ப்பதோஷம்!

நமது உயிரின் மூலமாகிய குண்டலினி இருப்பது பாம்பு வடிவத்தில்தான். அதே போல் ஆணிடமிருந்து வெளிப்படும் உயிரணுவான விந்தணுக்களின் வடிவம் பாம்பு வடிவமே ஆகும். நமது உலகைத் தாங்குவதும் ஆதிசேடன் என்னும் பாம்பே. இப்படி நமது வாழ்வில் பின்னிபிணைந்த பாம்பைக்கொல்வதால் சாபம் ஏற்பட்டு, புத்திரபாக்கியம் தடைப்படுகிறது.

ஒருவரின் ஜாதகத்தில் இராகுபகவான் ஜெனன இலக்கினத்திற்கு ஐந்தில் அமர்ந்து செவ்வாயின் பார்வையைப் பெற்றிருந்தாலும் அல்லது செவ்வாயின் வீடுகளான மேஷம், விருச்சிகம் ஆகியவற்றில் இடம் பெற்றிருந்தாலும் சர்ப்பத்தின்

சாபத்தால் குழந்தைப் பாக்கியம் கெடும். அதே போல், ஐந்தாம் வீட்டுக்கு உரியவர் இராகுவுடன் சேர்ந்தும், சனிபகவான் புத்திர ஸ்தானத்தில் அமர்ந்திருக்க, சந்திரபகவான் பதினோராம் வீட்டிலிருந்து சனியைப் பார்த்தால் பாம்பின் தோஷத்தால் புத்திரபாக்கியம் கெடும்.

மேலும், குருபகவான் ஒருவரின் இலக்கினத்திற்கு பாதகஸ்தானத்தில் அமர்ந்து, அவருடன் இராகுவும் சேர்ந்திருக்கும் நிலையில், இலக்கினாதிபதியுடன் செவ்வாய் சேர்ந்தால் சர்ப்பதோஷத்தால் குழந்தைபேறு தடைப்படும். அதேபோல், குருவுடன் செவ்வாய் சேர்ந்திருக்க இராகுவுடன் இலக்கினாதிபதி சேர்ந்து எங்கு வேண்டுமானாலும் காணப்பட, ஐந்தாம் வீட்டில் சந்திரன் இருந்தாலும் பாம்பின் சாபத்தால் குழந்தை பாக்கியம் தடைப்படும். மேலும், ஒருவர் கடக இலக்கினத்திலோ தனுசு இலக்கினத்திலோ பிறந்து, ஐந்தாம் வீடாகிய செவ்வாயின் வீட்டில் இராகு அமர்ந்திருந்து, புதன், சனியால் பார்க்கப்பட்டால் பாம்பின் சாபத்தால் தோஷம் உண்டாகிக் குழந்தைப் பாக்கியம் கெடும். அதேபோல்; ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஐந்தாவது வீட்டில் இராகு, குரு, புதன், சனி, செவ்வாய், சூரியன் ஆகிய அறுவரும் அமர்ந்திருந்தால் அந்த ஜாதகர் முன் பிறவியில் பாம்பின் புற்றில் நெருப்பைக் கொட்டியதால் ஏற்பட்ட சாபத்தால் குழந்தைப் பாக்கியம் இல்லாதிருப்பார்.

## 207. புத்திரபாக்கியத்தைத் தடுக்கும் தாயின் சாபம்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினம் கடகமாகி இலக்கினத்திலேயே செவ்வாய், இராகு அமர்ந்திருக்க, சந்திரபகவான் புத்திரஸ்தானத்தில் நீச்சமாகி சனியுடன்

அமர்ந்திருந்தால், அவர் தாம் தாய்க்கு உணவு அளிக்காததால், பட்டினியால், பசியால் துடிதுடித்துக் கொடுத்த சாபத்தால் குழந்தைப் பாக்கியம் தடைப்படும். மேலும், ஒருவரின் இலக்கினத்தில் சனியும், நான்காம் வீட்டில் இராகு அல்லது கேது அமர, சந்திரன், ஏழாம் வீட்டில் அமர அந்த ஜாதகர் தம் தாயின் சாவுக்குக் காரணமாய் விளங்கியதால் ஏற்பட்ட சாபத்தால், புத்திர தோஷம் ஏற்படும். மேலும், ஒன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டு ஆகிய வீடுகளில் முறையே செவ்வாய், சூரியன், இராகு சனி ஆகியவர் அமர்ந்திருந்து இலக்கினாதிபதியும் அகாதிபதியாக நான்காமிடத்து அதிபதியும் ஆறு, எட்டு பன்னிரண்டு ஆகிய இடங்களில் மறைந்தார்களானால், தகாத வார்த்தைகள் கூறித்தாயின் மனத்தைப் புண்படுத்தியதால் ஏற்பட்ட சாபத்தால், குழந்தைப் பாக்கியம் கெடும். மேலும், புத்திரஸ்தானாதிபதி மறைய, இலக்கினாதிபதி நீச்சம் அடையச் சந்திரன் இராகு அல்லது கேது அல்லது செவ்வாயுடன் சேர்ந்து இருந்தால், தாய்க்கு ஈமக்கடன் செய்யாத காரணத்தால் ஏற்பட்ட சாபத்தால், அவருக்குப் புத்திரதோஷம் ஏற்படும். மேலும், சிம்ம இலக்கினத்தில் பிறந்து நான்காம் அதிபதியான செவ்வாய் இராகு அல்லது கேது அல்லது சனியுடன் சேர்ந்திருக்க, அவர்களுடன் சந்திரனும் இணைந்திருந்தால், அந்த ஜாதகருக்குத் தாயின் சாபத்தால் குழந்தைப் பாக்கியம் கெடும். மேலும், ஜென்ம இலக்கினாதிபதியும், பூர்வ புண்ணியாதிபதியாகிய ஐந்தாம் அதிபதியும் ஆறாம் வீட்டில் மறைய, நான்காம் அதிபதி, எட்டாம் வீட்டில் மறைய, இவர்களைக் குரு பார்க்காமல் இருந்தால், அந்த ஜாதகர் மனைவி அவர் தாய்க்குச் செய்த கொடுமையால், மனம் நொந்து அந்தத் தாய் தம் மகனுக்கு இட்ட சாபத்தால், புத்திரதோஷம் ஏற்படும்.

மேலும், ஜென்ம இலக்கினத்திற்கு இரு பக்கத்திலும் பாவிகள் அமர்ந்திருக்க, தேய்பிறைச் சந்திரன் ஏழில் அமர, நான்காம் வீட்டில் இராகுவும், ஐந்தாம் வீட்டில் சனியும் இருந்தால், அந்த ஜாதகருக்குத் தாயின் சாபத்தால் புத்திரதோஷம் உண்டாகும். மேலும், ஒருவரின் ஜாதகத்தில் ஒழுக்குடையவர் ஐந்திலும் ஐந்துக்குடையவர் எட்டிலும் அமர, நான்காம் வீட்டுக்குரியவரும், சந்திரனும் மறைவுஸ்தானங்களுக்குச் சென்றிருந்தால், அந்த ஜாதகர் தம் தாய்க்குத் தங்குவதற்கு இடம் தர மறுத்ததால் ஏற்பட்ட சாபத்தால், குழந்தைப் பாக்கியம் கெடும். அதே போல் ஆறாம், எட்டாம் வீட்டுக்குரியவர்கள் பலம் பெற நான்காம் வீட்டுக்குரியவர் நீச்சமோ மறைவுஸ்தானங்களிலோ நின்று பலவீனம் பெற சந்திரன், குரு ஆகியவர்கள் பாவிகளுடன் சேர்ந்து காணப்பட்டால், அந்த ஜாதகர் தம் தாயைப் பிரிந்து அயலூர் அல்லது அயல்நாடு சென்று வாழ்ந்திருப்பார். அவர் தம் தாய் நலம் விரும்பாது இருந்த காரணத்தால் ஏற்பட்ட சாபத்தால் புத்திரதோஷம் உண்டாகும். அதே போல், சந்திரன் ஒருவரின் இலக்கினத்திற்குப் பாதக ஸ்தானத்தில் சென்று அமர, ஐந்தாம் வீட்டில் சனி அமர்ந்திருக்க அந்த ஜாதகருக்குத் தாயின் சாபத்தால் குழந்தைப் பாக்கியம் தடைப்படும்.

## 208. புத்திர தோஷத்தை ஏற்படுத்தும் தந்தையின் சாபம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாமிடத்தில் சூரியன் அமர்ந்து, அவருடன் அந்த வீட்டுக்குரியவரும் அமர, ஒன்று, ஐந்து, ஒன்பது ஆகிய இடங்களில் பாவக்கிரகங்கள் அமர்ந்திருந்தால், அந்த ஜாதகர் தம் தந்தையின் வார்த்தைகளைத் தட்டிச் சென்றதால் ஏற்பட்ட சாபத்தால் புத்திரநாசம் ஏற்படும். ஒன்பதாம் இடத்து அதிபதி ஆறு, எட்டு, பன்னிரண்டாம் இடங்களுள் ஒன்றில் அமர

புத்திரகாரகன் குருபாவ இராசிகளில் அமர்ந்து பாவியான இலக்கினாதிபதி ஐந்தில் அமர்ந்தால், ஜாதகருக்குத் தகப்பனாரின் சாபத்தால் புத்திர தோஷம் ஏற்படும். மேலும், தந்தைக் கிரகமாகிய சூரிய பகவான் சனி, செவ்வாய் ஆகியவற்றுடன் சேர்ந்து ஐந்தில் அமர இராகுவும், குருவும் சேர்ந்து பன்னிரண்டில் அமர்ந்தால், அந்த ஜாதகர் தம் தந்தையைத் தகாத வார்த்தைகளைக் கூறி அவர் மனம் புண்படச்செய்ததால் ஏற்பட்ட கஷ்டத்தால் தந்தையின் சாபம் ஏற்பட்டு, அதனாலும் புத்திர தோஷம் ஏற்படும். மேலும், சூரியன் துலாத்தில் அமர, அவருக்கு இருபுறங்களிலும் பாவக் கிரகங்கள் இருக்க உள்ள மிதுன இலக்கின ஜாதகர் தம் மனைவியின் சொல்லைக் கேட்டுத் தம் தந்தையைத் துன்புறுத்தியதால், அவர் தந்தை இட்ட சாபத்தால் புத்திர தோஷம் ஏற்படும். அதேபோல், குருபகவான் சிம்ம இராசியில் அமர்ந்திருக்க, ஐந்தாம் வீட்டுக்குரியவர் சூரியனுடன் சேர, ஐந்தில் பாவியும் இருந்தால், தந்தை பொறுப்புள்ள அரசுப்பதவியில் இருக்கும் போது அவருக்குக் கௌரவக் குறைவு ஏற்படும்படி நடந்து இன்னல் ஏற்படுத்தியதால் அவர் மனம் நொந்து இட்ட சாபத்தால் ஜாதகருக்குக் குழந்தை பாக்கியம் தடைப்படும். மேலும், இலக்கினாதிபதியானவர் பகை நட்சத்திரப் பாகை ஏறி ஐந்தில் அமர, ஐந்தாம் வீட்டுக்கு உடையவர் சூரியனுடன் அமர்ந்து எட்டில் காணப்பட்டால், அவர் தம் தந்தை சேர்த்த தனத்தை வீணே அழிக்க, அதனால் ஏற்பட்ட மனவருத்தத்தால் அவர் தந்தை இட்ட சாபத்திற்கு அவர் ஆளாகி புத்திர தோஷம் ஏற்படும்.

## 209. முதல் இரவு இரகசியங்கள்!

தம்பதியர் முதன் முதலாய் உடல் உறவு கொள்ளும் நேரத்தில் உரிய இலக்கினத்திற்குப் பன்னிரண்டாம் வீட்டு

அதிபதிகள் பலம் பெற்றிருக்கவேண்டும். அந்த மூன்று வீடுகளிலும் பாவிகள் அமர்ந்திராமல் இருக்கவேண்டும். காலற்ற நட்சத்திரங்கள் ஆன கிருத்திகை, உத்திரம், உத்திராடம், உடலற்ற நட்சத்திரங்கள் ஆன மிருக சீரிடம், சித்திரை, அவிட்டம், தலையற்ற நட்சத்திரங்கள் ஆன புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்கள் உள்ள நாள்களிலும் முதல் இரவு கூடாது. அதே போல் சுக்கிரன் ஓரை, புதன் ஓரை, சந்திரன் ஓரை ஆகியவற்றில் உடலுறவு கொள்ள ஆரம்பித்தால் உபாதை எதுவும் ஏற்படாமல் சுக்கிலம், சுரோணிதம் ஆகியவை வெளிப்படும். இருவருள் ஒருவரின் ஜென்ம நட்சத்திரத்திற்காவது 'தாராபலன்' பொருந்தி வருமாறு முதலிரவு நாள் அமையவேண்டும்.

## 210. வேண்டாம் உடல் உறவு!

கிருத்திகை நட்சத்திரம், சஷ்டி திதி, அஷ்டமி திதி, சதுர்த்தசி திதி, அமாவாசை, பௌர்ணமி, சூரிய, சந்திர கிரகணம், சிவராத்திரி ஆகிய நாள்களில் உடல் உறவு கூடாது. மேலும், கணவன், மனைவி இருவருள் ஒருவர் விரதம் மேற்கொள்ளும் நாள்களிலும், பகல் பொழுதிலும் உடல் உறவு கூடாது. மேலும், தம் மனைவிக்கு மாதவிலக்கு முடிந்து பன்னிரண்டு பதினைந்து, பதினாறு, பதினெட்டு ஆகிய நாள்களில் கூடும்போது நாதம் கனிந்து, சினை முட்டை ஒழுங்கான நிலையில் இருக்கும். கர்ப்பம் அடையும் வாய்ப்புகள் மிகவும் எளிதாய் அமையும். எனவே, மேற்கண்ட நாள்களில் மனைவியுடன் கூடுதல் சந்தானபாக்கியம் அமைய வழி வகுக்கும்.

## 211. சுவீகாரக்குழந்தை பற்றிய இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஐந்தில் சனி, செவ்வாய் ஆகியன இருந்து அவர்கள் மீது இலக்கினாதிபதி, புதனின் பார்வையோ புதனின் சேர்க்கையோ ஏற்பட்டிருந்தால் தம் தாய்வழி உறவினரின் குழந்தையைச் சுவீகாரம் கொண்டு மகிழ்வர். அதேபோல் ஐந்தாம் வீடு புதனுடையதாகவோ, சனியின் வீடாகவோ இருக்கச் சனியின் சேர்க்கை அல்லது பார்வையை அந்த வீடு அடைந்தால், வேற்று மதத்தினரின் குழந்தை சுவீகாரமாய் வந்தமையும், மேலும், கும்ப இலக்கினத்தில் பிறந்து, ஐந்தாம் வீட்டைப் புதன் பார்த்துக்கொண்டிருந்தால் தன் இனம் வணங்கும்படியான அறிவாற்றல் நிறைந்த சுவீகாரக் குழந்தைப் பாக்கியம் அமையும். அதேபோல், ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் ஏழாம் வீட்டுக்குரியவர் அமர, குருபகவான் பாவிகளின் சேர்க்கையின்றி இருக்க, ஐந்தாம் வீட்டில் புதனோ சனியோ இருந்தால் தம்மைவிட அறிவு, அழகு மிகுந்த, தம் வமிசம் தழைக்கத் தகுந்த புத்திரன் சுவீகாரனாய் அமைவான்!

## 212. சோதனைக் குழாய்க் குழந்தை யாருக்கு?

மேஷம், தனுசு, சிம்மம் முதலிய இலக்கினக்காரர்களுக்குச் சோதனைக்குழாய்க் குழந்தை யோகம் ஏற்படும். பொதுவாய் ஐந்தாம் வீட்டுக்கு உரியவரிடம் ஏழாம் வீட்டுக்குரிய கிரகமும் சேர்ந்திருக்க, இவர்களைச் சூரியனோ, செவ்வாயோ பார்க்கும்போதுதான் இத்தகைய சோதனைக்குழாய்க் குழந்தைப்பாக்கியம் ஒருவருக்கு ஏற்படும். மேலும், ஒருவர் தனுசு இலக்கினத்தில் பிறந்து ஐந்தாம் வீட்டுக்குரியவர் செவ்வாய், சூரியனின் பார்வையிலோ சேர்ந்தோ இருக்க

இவர்களைக் குருவோ, சுக்கிரனோ பார்வையிட்டால் சோதனைக்குழாய் குழந்தைப் பாக்கியம் ஏற்படும். அதே போல், சிம்ம இலக்கினத்தில் பிறந்து, குருபகவான் மகரத்தில் அமர அவருடன் சனியும் சேர்ந்திருக்க, தனுசில் சூரியன் அமர்ந்திருந்தால், சோதனைக் குழாய்க் குழந்தைப்பாக்கியம் ஏற்படும். அதே போல், மேஷ இலக்கினத்தில் பிறந்து ஐந்தில் கேது அமர, அவரைச் செவ்வாய் காணச்சூாயின் குடும்பத்தில் நின்றால், அந்த ஜாதகருக்கு மேற்கண்ட வகையில் சோதனைக் குழாய்க் குழந்தைப்பாக்கியம் அமையும்.

## 213. புகழும், செல்வமும் உடைய ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் சூரியன் நின்ற இராசிக்குச் சந்திரன் மூன்றாம் வீட்டிலும், சந்திரன் நின்ற இராசிக்குச் செவ்வாய் மூன்றாம் வீட்டிலும் அல்லது சூரியன் நின்ற இராசிக்குச் சந்திரன் நான்காம் வீட்டிலும், சந்திரன் நின்ற இராசிக்குச் செவ்வாய் நான்காம் வீட்டிலும் அல்லது சூரியன் நின்ற இராசிக்குச் சந்திரன் ஐந்தாம் வீட்டிலும், சந்திரன் நின்ற இராசிக்குச் செவ்வாய் ஐந்தாம் வீட்டிலும் இருக்கும் அமைப்புள்ளவர்கள் குன்றாத புகழும், குறையாத செல்வமும் உடையவர்களாய் இருப்பார்கள்.

## 214. வியாபார மன்னர்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் புதனும் செவ்வாயும் ஒன்று, நான்கு, ஐந்து, ஏழு ஒன்பது, பத்து ஆகிய வீடுகளுள் ஏதேனும் ஒன்றில் பலம் பொருந்தி அமையப்பெற்றால் அவர்கள் வியாபாரத்தில் மன்னராய் இருப்பார்கள்!

## 215. எவர் ஸ்டேஷனரி வியாபாரி ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் ஆறாம் வீட்டு அதிபர் மூன்றாம் வீட்டை அடைந்திருந்தால், அவர் பெரும் ஸ்டேஷனரி வியாபாரியாய் ஆவார்.

## 216. எவர், பஸ் - லாரி உரிமையாளர் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் எந்த இராசியில் வீற்றிருக்கிறாரோ, அந்த வீட்டுக்கு அதிபதி சந்திரனுடன் கூடியிருக்க அல்லது இலக்கினத்திற்கு ஐந்தாம் வீட்டு அதிபதி சந்திரனுக்கு நான்கு, ஏழு, பத்து போன்ற கேந்திரங்களுள் ஒன்றில் வீற்றிருக்க அமைந்த ஜாதகர் பஸ், லாரி உரிமையாளராய் இருப்பார்.

## 217. மனைவியால் துன்பம்!

சந்திரன் நின்ற இராசிக்கு ஆறாம் வீட்டில் இலக்கினாதிபதி, எட்டாம் வீட்டு அதிபரோடு கூடி, அவர்களைப் பாவக்கிரகங்கள் நோக்கினால் மனைவியால் துன்பம் அடைவார்கள்!

## 218. பிரபல டாக்டர்!

ஒரு ஜாதகத்தில் விருச்சிக இராசியில் சந்திரன், செவ்வாய், குரு கூடி இருந்தால் அல்லது விருச்சிக இராசி இலக்கினமாய் இருந்து அதற்குப் பத்தாம் வீட்டில் சந்திரன், செவ்வாய், குரு ஒன்றுகூடி இருந்தாலும் அந்த ஜாதகத்திற்குரியவர் பிரபல டாக்டர் ஆவார்.

## 219. பிரபல இஞ்ஜினியர்!

ஒருவரின் ஜாதகத்தில் மிதுனம், துலாம், கும்பம் ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றிலாவது இலக்கினம், இரண்டாமிடம், மூன்றாமிடம், ஐந்தாமிடம், ஒன்பதாமிடம் ஆகியவற்றிலாவது சுக்கிரனும், செவ்வாயும் கூடி இருந்தால் அவர் பிரபல இஞ்ஜினியராய் இருப்பார்!

## 220. புதையல் கிடைக்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் பத்தாம் வீட்டு அதிபர் நான்காம் வீட்டில் அமர்ந்திருந்தால் மறைபொருள், புதைபொருள் ஆகியன கிடைக்கும். அவற்றை எவரும் அறிந்துகொள்ள மாட்டார்கள். ஏமாற்றம் இருக்காது!

## 221. மங்கையரை மகிழ்விக்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் வக்கிரமடைந்த கிரகம் சுக்கிரனைக் கூடியிருந்தால் சிற்றின்பத்தில் பெண்ணை மகிழ்விப்பார். அதே போல், செவ்வாய் இருக்கும் இடத்திலிருந்து நான்காம் வீட்டில் அல்லது பத்தாம் இடத்தில் சனியும், சந்திரனும் கூடி இருந்தால், பெண்களுக்கு இன்பமும், களிப்பும் ஊட்டுவார்கள். கடக இலக்கினமாகிச் சந்திரன் நான்காமிடத்தில் அமர்ந்து, பன்னிரண்டுக்கு உடையவர் தனஸ்தானத்தில் இருக்க அவருக்கு ஏழில் செவ்வாய் நிற்க, குருமேஷத்தில் அமைய, பதினோராம் இடத்து அதிபர் பன்னிரண்டில் அமர்ந்திருக்க அவர் சகல சௌபாக்கியத்துடனிருந்து மனைவியை மகிழ்விப்பார்!

## 222. யார் நொண்டியாய் இருப்பார்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் சனி இருந்து, அதோடு செவ்வாய், இராகு ஆகியன கூடினாலும், இவ்விருவருள் ஒருவர் சனியோடு கூடினாலும் அல்லது மற்ற பாவக் கிரகங்கள் ஆகிய கேது, சூரியன் கூடினாலும் அவர் நொண்டியாய் இருப்பார்.

## 223. வீட்டை விட்டு வெளியேறும் ஜாதகர்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழாம் வீட்டுக்குடையவர் இலக்கினத்தில் அமர்ந்திருந்தால் அவருக்கு இல்வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு வீட்டை விட்டே வெளியேறிவிடுவார்.

## 224. பிறப்பின் இரகசியம்!

ஒரு ஜாதகர் எப்போது பிறந்தார் என்பதை அவரது ஜாதகத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஒருவரின் ஜாதகத்தில் சூரியனுக்கு ஆறு வீட்டுக்குள் இலக்கினம் அமைந்தால் அந்த ஜாதகர் பகலில் பிறந்திருப்பார். சூரியனுக்கு ஏழாம் வீட்டில் இருந்து பன்னிரண்டாம் வீட்டுக்குள் இலக்கினம் அமைந்தால் ஜாதகர் இரவில் பிறந்திருப்பார். சூரியன் நின்ற வீட்டில் இலக்கினம் அமைந்தால் அதிகாலையிலோ, சூரிய உதயத்திலோ பிறந்திருப்பார். சூரியனுக்கு ஏழாம் வீட்டில் இலக்கினம் அமைந்தால் சூரியன் அஸ்தமன நேரத்திலோ, மாலையிலோ ஜாதகர் பிறந்திருப்பார் என்று தெரிந்துகொள்ளலாம்.

## 225. எட்டில் இருக்கும் சனி கூறும் இரகசியம்!

இலக்கினத்திற்கு எட்டில் சனி இருந்தால் அந்த ஜாதகரின் வாழ்க்கை பல சோதனைகள் நிறைந்ததாய் இருக்கும்.

இலக்கினமும், இலக்கினாதிபதியும் மற்ற ஆதிபத்தியங்களும் சிறப்பாய் அமைந்திருந்தால் மட்டுமே தப்ப முடியும்.

## 226. நான்காவது சனிதிசை கூறும் இரகசியம்!

ஒருவருக்கு நான்காவது திசையாய்ச் சனி திசை நடந்தால், என்ன யோக ஜாதகமாய் இருந்தாலும் சரி, அந்தச் சனி திசையில் ஜாதகர் விருத்தி அடையமாட்டார். பலவிதக் கஷ்டங்களை அனுபவிப்பார். இலக்கினமும், இலக்கினாதிபதியும், மற்ற ஆதிபத்தியங்களும் சிறப்பாய் அமைந்திருந்தால் அந்த நான்காவது சனி திசையின் கெடு பலன்கள் அறுபது சதவிகிதம் குறையும். பெரும்பாலும் நான்காவது சனி திசை மரணத்தையே உண்டு பண்ணும். ஜாதகத்தில் ஆயுள் ஸ்தானாதிபதி வலுவாய் இருந்தால் மரணம் ஏற்படாது. ஆனால், அதற்கு ஒப்பான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும். நான்காவதாய் அமையும் சனி திசை அவ்வளவு நல்லது அன்று. சிலருக்கு அது இராஜயோகமாய் அமைவது உண்டு. ஆனால், நான்காவது சனி திசை அந்திம காலத்தில் பெரும் கண்டத்தை ஏற்படுத்திவிடும். எனவே, மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரத்தில் பிறப்பவர்களுக்கே இந்த அமைப்பு ஏற்படும். எனவே, இந்த மூன்று நட்சத்திரங்களும் அசுப நட்சத்திரங்கள் ஆகும்.

## 227. ஜாதகத்தில் நன்மை செய்யும் சனி பகவான்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திலிருந்து நான்கு, எட்டு ஆகிய இடங்களில் சனி ஆட்சி, உச்சம் பெற்றிருப்பது நல்லது. அதேபோல் சனிபகவான் ஆறு, எட்டு, பன்னிரண்டு

ஆகியவற்றால் உச்சம், நீசம் பெற்று இருப்பதும் நல்லது. சனிபகவான் இரண்டில் இருப்பதும் சிறப்பாகும்!

## 228. பிறந்தது வளர்பிறையா தேய்பிறையா?

ஒருவர் வளர்பிறையில் பிறந்துள்ளாரா, தேய்பிறையில் பிறந்துள்ளாரா என்பதை, அவரது ஜாதகத்தின் மூலம் அறிந்துகொள்ள முடியும். ஒருவரின் ஜாதகத்தில் சூரியன் நின்ற வீட்டுக்கு ஆறு இராசிகளுக்குள் சந்திரன் இருந்தால் ஜாதகர் வளர்பிறையில் பிறந்தவராய் இருப்பார். சூரியன் நின்ற வீட்டுக்கு ஏழாம் இராசி முதல் பன்னிரண்டாம் இராசி வரை சந்திரன் இருந்தால் அந்த ஜாதகர் தேய்பிறையில் பிறந்தவர் ஆவார்.

## 229. மர்ம உறுப்பின் பலம்!

ஒருவரின் ஜாதகத்தில் எட்டாமிடத்து அதிபதியும் சுக்கிரனும் ஏழுக்குடையவனும் ஒன்பதிலோ ஐந்திலோ நின்றால் அல்லது எட்டாமிடத்து அதிபதி கேந்திரம் ஏறி, ஒழுக்குடையவரும் சுக்கிரனும் திரிகோணத்தில் நின்றால், மர்ம உறுப்பு பலம் வாய்ந்ததாய் இருக்கும். அதே போல், சுக்கிரனும் செவ்வாயும் குருவின் வீட்டில் அமர்ந்து அந்த வீடு ஒன்பதாமிடமாய் இருந்தால் உயிர்த்திரவம் பலம் வாய்ந்ததாயும், மல்லிகை வாசனையுடையதாயும் இருக்கும். அதேபோல், மிதுனம் இலக்கினமாய் இருந்து, கும்பத்தில் சுக்கிரன், சனி ஆகியன இருக்க, குரு ஐந்தில் நின்றால் மர்ம உறுப்பு மிகவும் பலம் வாய்ந்ததாய் அமைந்து உயிர்த்திரவம் மிகவும் கெட்டியாய்த் தங்க நிறத்தில் பளபளக்கும்.

## 230. இல்லை இன்பம் இவர்களுக்கு!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழுக்குடைய கிரகம், எட்டில் சஞ்சாரம் செய்யும் போது பிறந்தால், அவர்கள் இல்லற வாழ்க்கையின் தலையாய் இன்பங்களை இழந்துவிடுவார்கள். அதேபோல், கோச்சார ரீதியாய் ஏழுக்குடையவர், எட்டில் இருக்கும் நேரத்தில் திருமணம் செய்தால், அந்தத் திருமண வாழ்க்கையும் மேற்படி பலனைத்தான் தரும். எனவே, திருமண நேரத்தைப் பார்த்து அமைக்கவேண்டும்.

## 231. இளைய சகோதரர் பற்றிய இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினாதிபதி ஒன்பதில் நின்றாலும், மூன்றுக்கு உடையவர் ஒன்பதில் நின்றாலும் அவருக்கு இளைய சகோதரர் ஒருவர் இருந்தே ஆகவேண்டும். ஆனால், அவர் நேர் இளைய சகோதரராய் இருக்கமாட்டார். சகோதரதோஷத்தை உண்டுபண்ணிய பின்னரே மறுபடியும் சகோதரர் பிறப்பார். மாறாய்ப் பிறந்தால் அவர் முப்பத்திரண்டு வயதுக்கு மேல் உயிரோடு இருக்கமாட்டார்.

## 232. சில இலக்கினங்கள் கூறும் விஷயங்கள்!

விருச்சிக இலக்கினத்தில் பிறந்தவர்கள் பாவம் செய்ய அஞ்சுவார்கள். சிம்ம இலக்கினத்தில் பிறந்தவர்கள் பாவம் செய்ய அஞ்ச மாட்டார்கள். பழிவாங்கும் குணமுடையவர்கள். கும்ப இலக்கினத்தில் பிறந்தவர்கள் சுயநலவாதியாய் இருப்பார்கள்.

## 233. முன்னோர் கண்ட உண்மை!

சூரியன் வெளிப்படுத்தும் ஏழுவிதமான வண்ணங்களுள் 'அல்டிரானவல்ட்' என்னும் நீலநிறக்கதிர்தான் அதிக சக்தி

படைத்தது ஆகும். அந்தக் கதிருடன் குரு மண்டலத்திலிருந்து வெளிவருகின்ற 'மீதேன்' என்னும் மஞ்சள் நிறக்கதிரும் இணைந்தே உலகத்திலுள்ள ஜீவ இராசிகள் அனைத்தும் கருத்தரிக்கின்றன. அதனாலேயே குருவை நமது ஜோதிட சாஸ்திரங்கள் 'புத்திரகாரகன்' என்றும் 'போககாரகன்' என்றும் குறிப்பிட்டுள்ளன.

## 234. வக்கிரம் தரும் நன்மை, தீமைகள்!

குரு வக்கிரம் அடைந்தால் ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், மகரம், கும்பம் ஆகிய ஆறு இராசிகளுக்கும் மிகவும் நல்லது. மற்ற ஆறு இராசிகளுக்குத் தீமை அளிக்கும். அதே போல், சனி வக்கிரம் அடைந்தால் துலாம், மகரம், கும்பம் ஆகிய மூன்று இராசிகளுக்குக் கெடுதலையும், மற்ற ஒன்பது இராசிகளுக்கும் நன்மையும் செய்யும்.

## 235. ஜோதிடமும் வாக்குப் பலிதமும்!

ஒருவருக்கு இரண்டில் குரு இருந்தால், நல்ல வாக்கு உடனே பலிக்கும்; இரண்டில் சனி இருந்தால், கெட்ட வாக்கு உடனே பலிக்கும். புதன் இரண்டில் நின்றால் பொய் பேசுவதில் வல்லவராய் இருப்பார்கள். ஒருவரின் ஜாதகத்தில் இரண்டு அல்லது ஐந்தில் கேது இருந்தால் ஜோதிடத்தில் வாக்கு பலிதம் ஏற்படும். அதேபோல், ஐந்தில் குரு இருந்தால் அவர்கள் ஜோதிட ஞானம் அறிந்தவர்களாய் இருப்பார்கள். ஒருவரின் ஜாதகத்தில் புதனும், சுக்கிரனும் கெடாமல் இருந்தால் மட்டுமே கணிதத்தில் ஞானம் ஏற்படும். ஜோதிடருக்குப் புதன் வலுவாய் இருக்கவேண்டும். புதன்தான் விஞ்ஞானகாரகன், ஜோதிடகாரகன், கணிதகாரகன் ஆகும்!

## 236. உலகப்புகழ் பெற்ற அரசியல்வாதி!

கடக இலக்கின ஜாதகரின் ஜாதகத்தில் ஏழு கிரகங்கள் பரிவர்த்தனை பெற்றால் அவர் உலகம் புகழும் அரசியல்வாதி ஆகலாம்!

## 237. நடிகராகும் ஜாதகம்!

சுக்கிரன், புதன், சந்திரன் வலுவாய் இருக்கும் ஜாதகர்கள் சிறந்த நடிகராய்ப் புகழ் பெறலாம். அதேபோல், கன்னியா லக்கினத்துக்கு எட்டில் சுக்கிரன் பரணி மூன்றில் நின்றால் நடிகராகலாம். அதே போல், கன்னியாலக்கினத்துக்கு, இலக்கினம், மூன்றில், நான்கில், ஏழில் பத்தில் இவற்றுள் ஏதாவது ஒன்றில் சுக்கிரன், புதன் இருக்கக் குரு பார்த்தால் நடிகராகலாம்.

## 238. யோகம் தரும் சில ஜாதகங்கள்!

ஒரு ஜாதகத்தில் ஐந்து கிரகங்கள் உச்சம் பெற்றால் பெரும்புகழ் அடையலாம். மீன இலக்கினத்திற்கு எட்டில் சூரியன் நின்றால் சூரிய திசை, சூரிய புத்தியில் உயர் பதவி யோகம் ஏற்படும். அதே போல், பெரும்பாலான கால சர்ப்பயோகமுள்ள ஜாதகங்கள் பெரும்புகழ் பெற வாய்ப்புண்டு. ஆனால், பஞ்சமாதிபதியாகிய ஐந்தாமிடத்து அதிபதி கெட்டுப் போய் இருக்கக்கூடாது. ஐந்தாமிடத்து அதிபதியுடன் மாந்தி சேர்ந்து காணப்பட்டால் என்னதான் கிரகங்கள் வலுத்திருந்தாலும் அவர்களால் புகழ்பெற முடியாது.

## 239. பெண் வியாதி ஏற்படும் ஜாதகங்கள்!

எட்டில் மாந்தி இருந்தாலும், எட்டுக்கு உடையவருடன் மாந்தி சேர்ந்து காணப்பட்டாலும், எட்டாம்மிடத்தை மாந்தி பார்த்தாலும், எட்டாமிடத்தைச் சனி பார்த்தாலும், எட்டில் நீசகிரகம் இருந்து செவ்வாய் பார்த்தாலும், எட்டுக்கு உடையவருடன் இராகு அல்லது கேது சேர்ந்திருந்தாலும் எட்டில் இராகு அல்லது கேது இருந்தாலும், எட்டுக்குடையவரைச் சனி பார்த்தாலும், எட்டுக்குடையவர் சூன்யம் அடைந்தாலும், எட்டுக்கு உடையவர் அஸ்தங்கதோஷம் அடைந்தாலும் பெண் வியாதிகள் ஏற்படும், எச்சரிக்கை!

## 240. சளியால் பாதிக்கும் ஜாதகங்கள்!

கும்ப இலக்கினத்திற்கு ஆறுக்கு உடைய சந்திரனுடன் புதன் சேர்ந்து எங்கு இருந்தாலும் ஆஸ்துமாவால் பாதிக்கப்படுவார்கள். ஒருவரின் ஜாதகத்தில் இரண்டு அல்லது ஐந்தில் சந்திரன் நின்று, இரண்டுக்குடைய கிரகம் பார்த்தால் சளி சம்பந்தப்பட்ட வியாதி ஏற்படும். அந்த இரண்டுக்கு உடையவர் நீசம் ஆகிவிட்டால் அந்த வியாதி குணமாகாது. பன்னிரண்டுக்கு உடையவர் பார்த்துவிட்டால் நெஞ்சில் சளி அதிகமாகி ஆஸ்துமாவில் கொண்டுபோய் நிறுத்தும். அதேபோல், கும்ப இலக்கினத்துக்கு ஆறில் சந்திரன் நின்று, குரு பன்னிரண்டில் நின்று எட்டில் மாந்தி நின்றால், காசநோய் ஏற்படும்.

## 241. சர்க்கரை வியாதி யாருக்கு?

இலக்கினத்தில் மாந்தி இருப்பவர்களுக்கும், பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பவர்களுக்கும், குருநீசம் அல்லது உச்சம் அடைந்தவர்களுக்கும் சர்க்கரை வியாதி உண்டு!

## 242. கடுமையான செவ்வாய் தோஷங்கள்!

ஒருவரின் ஜென்ம இலக்கினத்துக்கு ஒன்று இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பன்னிரண்டில் செவ்வாய் இருந்து அந்த வீடுகள் மிதுனம், கன்னியாய் இருந்தால் கடுமையான செவ்வாய் தோஷம் ஆகும். அதேபோல், மேஷ இலக்கினத்திற்கு இலக்கினத்தில் செவ்வாய் அசுவினி மூன்றில் அல்லது பரணி இரண்டில் செவ்வாய் இருந்தால் கடுமையான செவ்வாய் தோஷமாகும். அதேபோல் மேஷ இலக்கினத்திற்கு இரண்டில் செவ்வாய் இருந்து ரோகினி மூன்றில் அல்லது மிருக சீரிடம் இரண்டில் செவ்வாய் இருந்தால் கொடிய செவ்வாய் தோஷம் ஆகும். அதேபோல், மேஷ இலக்கினத்திற்கு நான்கில் செவ்வாய் இருந்து பூசம் இரண்டில் செவ்வாய் இருந்தாலும் கடுமையான செவ்வாய் தோஷம் ஆகும். மேஷ இலக்கினத்திற்கு ஏழில் செவ்வாய் இருந்து விசாகம் மூன்றில் செவ்வாய் இருந்தால் கடுமையான செவ்வாய் தோஷம் ஆகும். மேஷ இலக்கினத்திற்கு எட்டில் செவ்வாய் இருந்து அனுஷம் இரண்டில் செவ்வாய் இருந்தால் கொடிய செவ்வாய் தோஷம் ஆகும். மேஷ இலக்கினத்திற்குப் பன்னிரண்டில் செவ்வாய் இருந்து, உத்திரட்டாதி இரண்டில் செவ்வாய் இருந்தால் கொடிய செவ்வாய் தோஷம் ஆகும். மேஷ இலக்கினத்திற்குச் செவ்வாய் ஒன்று, இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் மேற்கண்ட பாதங்களில் செவ்வாய் இல்லாவிட்டால் செவ்வாய் தோஷம் பார்க்க வேண்டியதில்லை.

மேலே சொன்ன விதிகளின்படிதான் செவ்வாய் தோஷம் பார்க்க வேண்டும். அதேபோல் ரிஷப, கடக இலக்கினத்திற்கு இரண்டில் செவ்வாய், மிதுன லக்கினத்திற்கு நான்கில் செவ்வாய், கடக இலக்கினத்திற்குப் பன்னிரண்டில் செவ்வாய், சிம்ம

இலக்கினத்துக்கு இரண்டில் செவ்வாய், துலாம் இலக்கினத்துக்கு எட்டில் செவ்வாய், தனுசு இலக்கினத்துக்கு ஏழில் செவ்வாய், கும்ப இலக்கினத்துக்கு எட்டில் செவ்வாய், மீன இலக்கினத்துக்கு நான்கு, ஏழில் செவ்வாய் இருந்தால் நட்சத்திரபாதமே பார்க்கவேண்டா. மேலே கண்ட யாவையுமே கொடிய செவ்வாய் தோஷங்கள். இத்தகைய ஜாதகங்களுக்கு, இவை போல் செவ்வாய் தோஷம் உள்ள ஜாதகங்களையே சேர்க்க வேண்டும். மேலும் ஒரு ஜாதகத்தில் ஜென்ம இலக்கினத்திற்கு ஒன்று, இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பன்னிரண்டு ஆகிய இடங்களில் செவ்வாய் இருந்து அசுவினி முன்றாம் பாதம், பரணி இரண்டாம் பாதம், ரோகிணி முன்றாம் பாதம், மிருகசீரிடம் இரண்டாம் பாதம், புனர்பூசம் முன்றாம் பாதம், பூசம் இரண்டாம் பாதம், மகம் முன்றாம் பாதம், பூரம் இரண்டாம் பாதம், அஸ்தம் முன்றாம் பாதம், சித்திரை இரண்டாம் பாதம், விசாகம் மூன்றாம் பாதம், அனுஷம் இரண்டாம் பாதம், மூலம் மூன்றாம்பாதம், பூராடம் இரண்டாம் பாதம், திருவோணம் மூன்றாம் பாதம், அவிட்டம் இரண்டாம் பாதம், பூரட்டாதி மூன்றாம் பாதம், உத்திரட்டாதி இரண்டாம் பாதம் போன்ற பாதங்களில் செவ்வாய் இருந்தால், செவ்வாய் தோஷம் ஆகும். அவற்றிற்குப் பரிகாரம் அவை போல் செவ்வாய் தோஷம் உள்ள ஜாதகத்தையே சேர்க்க வேண்டும். செவ்வாய் தோஷம் உள்ளவர்களுக்குப் பெரும்பாலும் காலதாமதம் ஏற்பட்டாவது தடைப்பட்டாவது, வயது கடந்தாவது திருமணம் நடக்கும்.

## 243. கடுமையான தோஷம்!

ஒருவரைச் செருப்பால் அடித்தால் அடித்தவருக்குக் கடுமையான தோஷம் ஏற்படும். அப்படிச் செய்பவர் குடும்பமே அழிந்துவிடும். செருப்பால் அடிபட்டவர்கள் மனம் நொந்து

கண்ணீர் விட்டால், அந்தக் கண்ணீர் அடிப்பவர்களைச் சுட்டெரித்துவிடும். தங்களது அழிவைத் தேடிக் கொள்பவர்களே இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவார்கள். இதற்குப் பரிகாரமே இல்லை. அதேபோல், ஒருவனை பூட்ஸ் காலால் உதைப்பவர்களும் உருப்படமாட்டார்கள். இவை எல்லாம் தெய்வக்குற்றங்கள் ஆகும். இவற்றிற்கு ஒரே பரிகாரம், பாதிக்கப்பட்டவருக்குப் பாதபூஜை செய்வதே ஆகும்!

## 244. பழிவாங்கும் நட்சத்திரம்!

அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பழிவாங்கும் குணமுள்ளவர்கள். அதிகாரதோரணை உடையவர்கள். உடலில் நிரந்தரவியாதி உடையவர்கள். கற்பனை வளம் உடையவர்கள்.

## 245. கொக்கோகம் அறிந்த நட்சத்திரம்!

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் காமசேஷ்டைகளில் மிதமிஞ்சி ஈடுபடுவார்கள். கொக்கோகம் சாஸ்திரத்தின் நுட்பங்களை உணர்ந்து செயல் வடிவாக்கிப் பார்ப்பவர்கள் அவர்கள் தாம். அவர்கள் ஒரு பெண்ணிடம் உறவுகொண்டால், அந்தப் பெண் அவர்களைக் காலம் முழுவதும் மறக்கமாட்டாள். பெண்களின் துல்லியமான பாலியல் உணர்வுகளைப் புரிந்து கொள்வதில் அசகாய சூரர்கள். உள்ளுணர்வின் மூலம் எதிர் காலத்தின் செயல்களை உணர்ந் திருப்பார்கள். கோபம் அதிகமாய் ஏற்படும். பிடிவாத குணம் இருக்கும். இவர்களின் அதிகாரத்தை, எண்ணங்களை மீறி நடந்தால் அவர்களை ஜென்ம விரோதிகளாய் நினைப்பார்கள். எல்லா விஷயங்களையும் தெரிந்து வைத்திருப்பார்கள். இவர்களுக்கு உலக அனுபவங்களும் மிகுதியாய் உண்டு;

நண்பர்களும் பலர் உண்டு. பிரயாணம் செய்வதில் ஆசை உள்ளவர்கள். எதிரியை வீழ்த்துவதில் சாமர்த்தியசாலிகள். இந்தப் பலன்கள் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்த பெண்களுக்கும், ரிஷப இராசியில் பிறந்தவர்களுக்கும் பொருந்தும்.

## 246. பரணியில் பிறந்தவர்கள் தரணியைக் கட்டி ஆள்வார்களா?

பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தரணியைக் கட்டி ஆள்வார்கள் என்பது பழமொழி. கிரகங்களும், ஆதிபத்தியங்களும் வலுவாய் இருக்குமானால் நிச்சயம் இவர்கள் தரணி ஆளப்பிறந்தவர்களே, கலைகளில், இசை ஞானத்தில் சிறந்து விளங்குவார்கள்.

## 247. தகப்பனாருக்குத் தோஷம் தரும் நட்சத்திரம்!

கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தகப்பனாருக்குத் தோஷத்தை ஏற்படுத்துவார்கள். இவர்கள் இளமையில் மிகவும் கஷ்டப்படுவார்கள். நடுத்தரவயதில் நல்ல வசதியாய் வாழ்வார்கள். கோபவசப்பட்டு நண்பர்கள் பலரையும், நன்மைகளையும் இழந்து விடுவார்கள்.

## 248. கோழை மனம் கொண்ட நட்சத்திரம்!

திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கோழை மனமுள்ளவர்களாய் இருப்பார்கள். இந்த நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் பிறந்தவர்களுக்குக் குருதிசை யோக திசையாகவும், நான்காம் பாதத்தில் பிறந்தவர்களுக்குச் சனி திசை யோகதிசையாகவும் அமையும். இந்த நட்சத்திரக்காரர்கள் தந்திரசாலிகள் ஆவர்.

## 249. வாசனைத் திரவியத்தை விரும்பும் நட்சத்திரம்!

புனர்பூசம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வாசனைத் திரவியங்கள் மீது நாட்டம் உடையவர்களாய் இருப்பார்கள். இந்த நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமும், நாலாம் பாதமும் அதிக பலம் வாய்ந்தவை ஆகும். மூன்றாம் பாதத்தில் பிறந்தவர்கள் கொஞ்சம் குறைவான பலம் உடையவராயும், ஒன்றாம் பாதத்தில் பிறந்தவர்கள் அதைவிடக் கொஞ்சம் குறைவான பலம் உடையவராயும் இருப்பார்கள். இந்த நட்சத்திரக்காரர்கள் அறிவு தீட்சண்யம் உள்ளவர்களாய் இருப்பார்கள்.

## 250. எண்ணிச் செலவு செய்யும் நட்சத்திரம்!

பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எண்ணிச் செலவு செய்யும் குணமுடையவர்கள். பணம் உள்ளவனை மட்டுமே மதித்துப் பேசுவார்கள். கண்கோளாறு உள்ளவர்கள் முகத்தில் கடுமையும், ஆழமான சோகமும் காணப்படும்.

## 251. சண்டையில் பிரியமுள்ள நட்சத்திரம்!

ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சண்டையில் பிரியமுள்ளவர்களாய் இருப்பார்கள். குடும்ப வாழ்க்கையில் நிம்மதி இல்லாதவர்களாய் இருப்பார்கள். அடிக்கடி பிரயாணங்களை மேற்கொள்வார்கள். இவர்கள் அழுத்தமானவர்கள் ஆவார்கள்

## 252. முன்கோபம் உடைய நட்சத்திரம்!

மக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் முன்கோபமுள்ளவர்களாய் இருப்பார்கள். மகம் இரண்டாம் பாதம் மிகவும் பலம் வாய்ந்தது.

நான்காம் பாதம் அதைவிடச் சிறிது குறைவான பலம் வாய்ந்தது. ஒன்றாம், மூன்றாம் பாதங்கள் பலம் குறைந்தனவாகும். இவர்கள் கலை ஆர்வம் நிறைந்தவர்கள். கலையார்வத்தால் வாழ்க்கையின் முக்கியமான விஷயங்களைத் தியாகம் செய்வார்கள். இவர்கள் வாழ்க்கையில் ஈடுகட்ட முடியாத ஓர் இழப்பு நிச்சயம் உண்டு! அன்புக்குரியவர்களின் பிரிவு அல்லது மரணம் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

## 253. அழகான தோற்றமுள்ள நட்சத்திரம்!

பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அழகான தோற்றம் உள்ளவர்களாய் இருப்பார்கள். அவர்கள் கலையார்வம் உடையவர்கள். முன்கோபி, அவர்கள் திருமண வாழ்க்கை சோபிக்காது.

## 254. பயந்த சுபாவமுள்ள நட்சத்திரம்!

உத்திர நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பயந்த சுபாவம் உள்ளவர்களாய் இருப்பார்கள். அழகான கண்களை உடையவர்கள். உரத்துப்பேசுவாக்ள். எதிலும் பிடிவாதமாய் இருப்பார்கள்.

## 255. மண்டைக் கனமுள்ள நட்சத்திரம்!

அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மண்டைக் கனமுடையவர்களாய் இருப்பார்கள். தங்கள் தகுதிக்கு மீறித் தங்களை உயர்வாய் எண்ணியபடி காலம் கழிப்பார்கள். ஸ்திரிலோலர்கள். பெண்மைத்தனமுள்ள சுபாவமும், ஆண்மையான தோற்றமும் கொண்டவர்கள். நாட்டியம் தெரிந்த

கலைஞர்கள். பேச்சால் மற்றவர்கள் மனத்தைச் சித்திரவதை செய்வார்கள். சண்டைப் பயிற்சிகள், யோகப் பயிற்சிகள் ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர்கள். தங்கள் துர்க்குணங்களால் தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்வார்கள்.

## 256. உஷ்ண தேகமுள்ள நட்சத்திரம்!

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் உஷ்ண தேகம் உள்ளவர்களாய் இருப்பார்கள். இவர்கள் வலக்கண் சாய்ந்தபடி இருக்கும். இவர்கள் துரதிர்ஷ்டசாலிகள். வியாதி உள்ளவர்கள். கிரிமினல் வேலைகளில் அதிகம் ஈடுபடுவார்கள்!

## 257. நேர்மையான நட்சத்திரம்!

சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நேர்மையான குணமுள்ளவர்களாய் இருப்பார்கள். தியாகிகளாய் விளங்குவார்கள். அடிக்கடி காதல் வயப்பட்டுத் தங்களைத் துயரத்துக்கு ஆளாக்கிக் கொள்வார்கள்.

## 258. பெரிய மனிதர் தோரணையுள்ள நட்சத்திரம்!

விசாக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பெரிய மனிதர் தோரணையுடன் காணப்படுவார்கள். வயதுக்கு மீறின அறிவும், அனுபவமும், ஆள் பழக்கமும் உடையவர்களாய் இருப்பார்கள்.

## 259. மற்றவர்களுக்குக் கட்டுப்படாத நட்சத்திரம்!

அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மற்றவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். சோம்பேறித்தனமுள்ளவர்கள். அனுஷம் நான்காம் பாதத்தில் பிறந்தவர்கள், தாயை சுகவீனம் அடையச் செய்வார்கள்.

## 260. குடும்பவாழ்க்கை சரியாய் அமையாத நட்சத்திரம்!

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் குடும்ப வாழ்க்கை சரியாய் அமையாது. பெரும்பாலான விவகார வழக்குகள் இவர்களாலேயே ஏற்படுகின்றன. இவர்களது அந்தரங்க வாழ்க்கை நிம்மதியாய் இராது.

## 261. புகழ்ச்சிக்கு மயங்காத நட்சத்திரம்!

மூல நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் புகழ்ச்சிக்கு மயங்கமாட்டார்கள். தோல்வியால் தளர்ந்துவிட மாட்டார்கள். வேதாந்திகள், ஞானிகள், தத்துவமேதைகள், நல்ல புகழ்பெற்ற கலைஞர், நல்ல சிந்தனைவாதிகள். தீர்க்கதரிசிகள், கலை மேதைகள், எழுத்தாளர்கள், சண்டைப் பயிற்சியாளர்கள், சினிமாத்துறையில் புகழ்பெற்ற கலைஞர்கள், நல்ல பேச்சாளர்கள், வசீகர முகவெட்டு உடையவர்கள், மனிதாபிமானிகள் முதலியவர்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களே.

## 262. போராட்டம் நிறைந்த நட்சத்திரம்!

பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வாழ்க்கை பெரும்பாலும் பெரிய போராட்டமாகவே அமையும். இவர்களது வாழ்க்கையே ஒரு குருச்சேத்திரயுத்தமாய் இருக்கும். கிரகங்களும், ஆதிபத்திய வலுவாய் இருந்தால் வாழ்ககை நல்லவிதமாய் அமையும். ஆணாய் இருந்தால் பெண்களாலும், பெண்ணாய் இருந்தால் ஆண்களாலும் பல துயரத்துக்கு ஆளாவார்கள். காமம் இவர்களுக்குப் பலமும், பலவீனமுங்கூட. இந்தப் பலன் தனுசு இராசிக்குக்கூட அப்படியே பொருந்தும்.

## 263. பேச்சால் விரோதி ஆகும் நட்சத்திரம்!

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தங்கள் பேச்சால் விரோதிகள் அதிகம் இருப்பார்கள். அதிவேகமாக தீப்பொறி பறக்கப் பேசுவார்கள். மென்மையான குணம் இவர்களிடம் இருக்காது. இவர்களில் சாதுக்கள் கூடப் பயங்கர மானவர்களாகவே இருப்பாக்ள். இடம் மாறி வந்து தொழில் செய்வார்கள். கலைஞர்களாக வாழ்வார்கள்.

## 264. அனுசரித்துப் போகத்தெரியாத நட்சத்திரம்!

திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அனுசரித்துப் போகத்தெரியாதவர்களாக இருப்பார்கள். மண்டைக் கனம் உடையவர்கள். எப்பொழுதும் சூடாகவே இருப்பார்கள். சுறுசுறுப்பாய்ச் செயல்படக்கூடியவர்களாகவே இருப்பார்கள். தூங்குவதில் மிகவும் பிரியம் உள்ளவர்கள். எந்த அளவுக்கு உழைப்புக்கு மரியாதை கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு ஓய்வெடுக்கவும் செய்வார்கள். மிகவும் கோபப்படுவார்கள். தெய்வபக்தி மிகுந்தவர்கள். நேர்மையாகப் பேசுவார்கள். கல்வியை வெறுத்து ஒதுக்குவார்கள். சிந்தனைவாதிகள். செயல்முறைகளில் அதிக நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் உள்ளவர்கள். எதற்கும் அஞ்ச மாட்டார்கள். கருணையினால் சில உள் பயங்கள் இருக்கும். உண்மையான அன்புக்குப் பணிவார்கள். அதிகாரம் செய்வார்கள். உயர்வு மனப்பான்மை உடையவர்கள். அதிபுத்திசாலிகள். அதிகம் பேசமாட்டார்கள். உஷ்ணம் அதிகம் உடையவர்கள். புத்திரதோஷம் உடையவர்கள். பலமொழிகள் பேசுவார்கள். புகழ்ச்சிக்கு மயங்கமாட்டார்கள். புகழ்பெற்ற கலைஞர்களாய் இருப்பார்கள். நல்ல உழைப்பாளிகளாய்த் திகழும் இவர்கள் ஒரு வித்தியாசமானவர்கள்.

## 265. அவிட்டம் தவிட்டுப் பானையைப் பொன்னாக்குமா?

'அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தால் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம் ஆகும்' என்று சொல்லுவார்கள். கிரகங்களும், ஆதிபத்தியமும் வலுவாய் இருக்கும்போது நிச்சயம் இளமையிலே இவர்கள் பல இலட்சங்களுக்கு அதிபதிகளாய் இருப்பார்கள். அவிட்டம் நான்காம் பாதத்தில் பிறந்தால் இன்னும் சிறப்பாய் வாழ்வார்கள். ஆனால், அந்திம காலத்தில் மிகவும் கஷ்டப்படுவார்கள்.

## 266. சதய நட்சத்திரம் கூறும் பலன்!

சதய நட்சத்திரத்தில் பிறந்தவர் பலர் எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் உள்ளார்கள். கிரகங்களும், ஆதிபத்தியமும் வலுவாய் இருந்தால் இந்த நட்சத்திரக்காரர்கள் எல்லாவிதமான ஐஸ்வர்யங்களுடன் வாழ்வார்கள்.

## 267. பண்ணையார் நட்சத்திரம்!

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த பலர் பண்ணையாராயும் பெரும் செலவராயும் இருப்பார்கள். இந்த நட்சத்திரத்தின் இரண்டாம் பாதமும், நான்காம் பாதமும் அதிகப்பலம் வாய்ந்த பாதங்கள் ஆகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், வயதில் மூத்த பெண்களைப் புணர்வதில் ஆவலுள்ளவர்கள்.

## 268. யாரையும் நம்பாத நட்சத்திரம்!

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் யாரையும் நம்பமாட்டார்கள், சந்தேகப் பிராணிகள். மிகவும்

அழுத்தமானவர்கள். அதிபுத்திசாலிகள். தாய் சுகம் இல்லாதவர்கள். வைராக்கியம் உள்ளவர்கள்.

## 269. இரக்க குணம் படைத்த நட்சத்திரம்!

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மிகுந்த இரக்க குணமுள்ளவர்களாய் இருப்பார்கள். புகழ்பெற்ற பல திரைப்படக் கலைஞர்கள் இந்த நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பெயர் சரித்திரத்தில் பொறிக்கும்படி எந்த விதத்திலாவது சாதனைகள் செய்யவேண்டும் என்னும் துடிப்புமிக்கவர்கள். எளிதில் யாரையும் நம்பி விடமாட்டாகள். மிகவும் அழுத்தமானவர்கள். இவர்களை யாரும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெறக்கூடியவர்கள். இவர்களை நம்புவது கடவுளை நம்புவது போல ஆகும். இவர்கள் சாதாரண மனிதர்களைக் கூடப் பெரிய மனிதனாக்கும் திறமைசாலிகள். போராடும் குணமுள்ளவர்கள். வெளியில் கோழை போல் காணப்பட்டாலும், உள்ளுக்குள் அதிபயங்கரத் தைரியசாலிகளாய் இருப்பார்கள். எந்தவோர் எதிர்ப்புக்கும் அஞ்சமாட்டார்கள். சிரித்த வண்ணமே காரியம் சாதிப்பார்கள். இவர்கள் ஒருவரை நம்பிவிட்டால், இவர் நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் அந்த நபர் அதிர்ஷ்டசாலியே. வீழ்ந்தால் அடிபாதத்தில் வீழ்வார்கள். வாழ்ந்தால் உன்னதமான ஸ்தானத்தில் வாழ்வார்கள். அளவு கடந்த புத்திசாலிகள். சகலகலாவல்லவர் எனப்பெயரெடுப்பார்கள். உலக அளவு புகழ் பெறும் தகுதி உடையவர்கள். இவர்கள் பின்னால் எப்பொழுதும் ஒரு கூட்டமே இருக்கும். இவர்களுள் நாத்திகவாதிகளைப் பார்ப்பது அரிது. பழமையான விஷயங்களை ஆதரித்துப் பேசுவார்கள். நண்பர்கள் பலரிருப்பார்கள். பணத்துக்கு

மரியாதை தரமாட்டார்கள். காமத்தி அதிக ஈடுபாடுடையவர்கள். அழகான உடற்கட்டுடையவர்கள். கண்களால் யாரையும் கவர்ந்துவிடுவார்கள். பெரும்பாலும் காதல் திருமணம் செய்வார்கள். இந்தப் பலன்கள் மீன இராசிக்கும் அப்படியே பொருந்தும்.

## 270. ரேவதி நட்சத்திரம் கூறும் இரகசியம்!

ஒருவர் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்து, இராசியில் செவ்வாய் இருந்தாலும், இராசியைச் செவ்வாய் பார்த்தாலும், மிதுன இலக்கினமாய் அமைந்தாலும் அவர்கள் வஞ்சக எண்ணங்கள் உடையவர்களாய் இருப்பார்கள். உத்தமர்களைப் போல் நடிப்பார்கள். அவர்கள் இசை ஞானம் உடையவர்கள். குரல்வளம் உடையவர்கள். மொழிப்புலமை உடையவர்கள். யோகப்பயிற்சி, சண்டைப் பயற்சிகளில் ஈடுபடுவார்கள். கவிதை எழுதுவார்கள். நடிகர்களாய் புகழ்பெறுவார்கள். எல்லோரும் இவர்களைக் கண்டவுடன் மரியாதை தரும்படி இவர்கள் தோற்றம் அமைந்திருக்கும். பெண்கள் இவர்களை விரும்பிப் புணர்வார்கள். தனிமை, தியான வாழ்க்கை முறைகளை விரும்புவார்கள். போலித்தனங்களைக் கண்டு உள்ளுக்குள் சீறுவார்கள். இவர்களுக்கு மனைவி நிரந்தர வியாதி உள்ளவளாய் இருப்பாள். அல்லது மனைவி ஆரோக்கியமாய் இருந்தால் ஒழுக்கம் இல்லாதவளாய் இருப்பாள். அதனால் குடும்ப வாழ்க்கை நிம்மதி இல்லாமல், சுவாரசியம் இல்லாமலிருக்கும். மனைவிக்கு முக்கியத்துவம் தருவார்கள். பெண்களால் இவர்கள் வாழ்க்கையில் அழிக்க முடியாத ஒரு கறை ஏற்படும். இவர்களுக்கு இவர்களே வைத்தியர்களாய் இருப்பார்கள். ஜோதிட சாஸ்திரத்தை ஆழமாய் நம்புவார்கள்!

## 271. மேஷ இலக்கினம் கூறும் இரகசியங்கள்!

மேஷம் இலக்கினத்தில் பிறந்தவர்கள் அழகான கம்பீரமான தோற்றம் உடையவர்கள். அதிகமாய்க் கோபப்படுவார்கள். அழகான காந்தம் போன்ற கண்களை உடையவர்கள். குட்டையான வளர்ச்சி உடையவர்கள். கலையார்வம் நிறைந்தவர்கள். வாக்குவன்மை உடையவர்கள். சங்கீத ஞானம் உடையவர்கள். சிலர் காம உறவில் வித்தியாசமான முறைகளைக் கையாள்வார்கள். இவர்களுக்கு இளமையில் சுக்கிர திசை நடந்தால் மிகவும் கொடிய கஷ்டங்களுக்கு ஆளாவார்கள். சுக்கிர திசை பொதுவாய் இவர்களுக்கு நல்ல திசையன்று. அந்திம காலத்தில் சுக்கிரன் திசை நடந்தால் தொடங்கியவுடன் தப்பாமல் மாரகம் செய்வான். இவர்களுக்கு யோக திசைகள் குரு, செவ்வாய், சூரியன், சந்திரன் ஆகிய திசைகள் ஆகும். இவர்களுக்குப் பாவ ஆதிபத்தியம் பெற்ற கிரகங்கள் புதன், சனி, சுக்கிரன் ஆவார்கள். இவர்கள் எந்த ஒரு பெரிய விஷயத்தையும் சாமர்த்தியமாய்ப் பேசி செய்து முடிப்பார்கள். இவர்களுக்குச் சனிக் கிரகம் அசுவினி முதலாம் பாதத்தில் இருந்து குருவால் பார்க்கப்பட்டால் சனி திசையே, இராஜயோக திசையாகும். ஆனால், செவ்வாய் சனியைப் பார்க்கும்படி அமையக்கூடாது. இவர்களுக்குச் செவ்வாய் மகரத்தில் நின்று உத்திராடம் இரண்டாம் பாதம் அல்லது திருவோணம் இரண்டாம் பாதம் ஆகிய பாதங்களில் நின்றால் செவ்வாய் திசையே விசேஷமான இராஜயோக திசையாகும்.

இவர்களுக்குப் புதன் மீனத்தில் இருந்து பூரட்டாதி நான்கில் நின்று திசை நடத்தினால் அதிலும் ஏகாதசி திதியில் பிறந்தவர்களாய் இருந்தால் புதன் மகாதிசையே விசேஷமான

இராஜயோக திசையாகும். மேஷ இலக்கினத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் பன்னிரண்டில் மீனத்தில் நின்று ஏகாதசி திதியில் பிறந்து பூரட்டாதி நாள்கில் சுக்கிரன் இருக்க நடுவயதில் சுக்கிரன் திசை தொடங்கினால் சுக்கிரன் மகா திசையே விசேடமான இராஜயோக திசையாகும். இத்தகைய அமைப்புடையவர்கள் பூர்வீக இடத்தை விட்டு வேறு இடம் மாறி வந்த இடத்தில் பல இலட்சங்களுக்கு அதிபதியாவார்கள். மனைவியின் மூலம் இலட்சக்கணக்கில் சொத்துகள் சேரும். மனைவி இவர்களுக்கு அடங்கி உண்மையான பதிவிரதையாய் வாழ்வாள். அழகான, குடும்பப் பாங்கான மனைவியாய் இருப்பாள். மனைவிக்கு இவர்கள் கோவில் கட்டிக் கும்பிடலாம். திருமணத்துக்குப் பிறகு ஆளேமாறிவிடுவார்கள். இவர்களும் பார்க்க அழகாய் இருப்பார்கள். இரத்தச் சிவப்பாய் தள்தளவென்று இருப்பார்கள். அயன சயன சுகபோகங்கள் முறையாய் அமையும். ஆனால், வேறு எந்தக் கிரகத்தின் பார்வையோ, சேர்க்கையோ ஏற்பட்டால் மேற்கண்ட யோகப்பலன்களில் அறுபது சதவீதம் அடிபட்டுப் போய்விடும்.

இதேபோல், மற்ற கிரகங்களின் சேர்க்கையோ, பார்வையோ இல்லாமல் சனி விருச்சிகத்தில் விசாகம் நான்கில் நின்று, குரு கடகத்தில் புனர்பூசம் நான்கில் நின்று சுக்கிரன் திசை இளமையில் நடந்தால் சினிமாவில், நடிப்புத்துறையில் இமாலயப் புகழ் பெறுவார்கள். வாகனங்கள் பங்களாவாசம், ஆளடிமைகள் பெண்கள் பலரிடம் முறையான சுகங்கள் இப்படிப் பல யோகத்துடன் எல்லாவிதமான ஐஸ்வரியங்களையும் பெற்று ராஜாவைப் போல் வாழ்வான். இவர்களுக்கு எவ்வளவு பெரிய மனிதர்களும் அடங்கிவிடுவார்கள். மேஷ இலக்கினத்துக்குப் புதன் எட்டில் நின்று அஷ்டமியில் பிறந்து, புதனுடன் குரு, செவ்வாய், சூரியன்

ஆகியவர்கள் சேர்ந்து புதன் கேட்டை நான்கில் நின்று சந்திரன் இலக்கினத்தில் அசுவினி ஒன்றில் நிற்கப் பிறந்தவர்களுக்குப் புதன் மகாதிசை நடந்தால் அந்தப் புதன் மகாதிசை பிரபல இராஜயோகமான பலன்களைச் செய்யும். இதை விபரீதராஜயோகம் என்று சொல்வார்கள்.

## 272. விபரீத இராஜயோகம் என்றால் என்ன?

ஒருவரின் ஜாதகத்தில் ஆறுக்குடையவன் எட்டிலும், எட்டுக்குடையவன் ஆறிலும் நின்று, ஆறுக்குடையவன் திசையோ, எட்டுக்குடையவன் திசையோ நடந்தால், அது விபரீத இராஜயோகமாகும். ஆறுக்குடையவன் பன்னிரண்டிலோ, பன்னிரண்டுக் குடையவன் ஆறிலோ நின்று, ஆறுக்குடையவன் திசையோ பன்னிரண்டுக்குடையவன் திசையோ நடந்தால் அது விபரீத இராஜயோகமாகும். எட்டுக்குடையவன் பன்னிரெண்டிலோ, பன்னிரண்டுக்குடையவன் எட்டிலோ நின்று எட்டுக்குடையவன் திசையோ பன்னிரண்டுக்குடையவன் திசையோ நடந்தால், அது விபரீத இராஜயோகமாகும்.

## 273. அதியோகம் என்றால் என்ன?

ஆறு, எழு, எட்டில் குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச் சந்திரன் போன்ற சுபகிரகங்கள் வரிசைப்படி நின்று, பாவர் சேர்க்கையோ பார்வையோ இல்லாமல் மேற்கண்ட கிரகங்களின் திசை நடந்தால் அது 'அதியோகம்' என்று சொல்லப்படும். அந்த யோகம் அமையப்பெற்றவர்கள் கலைத்துறையில் ராஜாவைப் போல் நெடுங்காலம் ஆட்சி செய்வார்கள். நாட்டையே ஆளும் தகுதி படைத்தவர்களாம்.

## 274. கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்!

பாவ ஆதிபத்தியம் பெற்ற கிரகங்களைக் கெட்டவன் என்று சொல்கிறோம். கெட்டவன் மேலும் கெட்டு அந்தத் திசை நடந்தால், அது பெரிய இராஜயோகமாகும் பிச்சைக்காரனையும் கோடீஸ்வரன் ஆக்கும் யோகம் இது இதையே கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம் என்று சொல்கிறோம்!

## 275. நீசம் தரும் பலன்!

ஒரு கிரகம் மறைவு ஸ்தானத்தில் நீசம் பெறுவது பெரிய விசேஷமானதாகும். உதாரணமாய் முன்னாள் அமெரிக்க ஜானதிபதி ரொனால்டுரீகன் அவர்கள் ஜாதகப்படி விருச்சிக இலக்கினம் ஆறில் சனி மறைந்து நீசம் பெற்று இருந்தது அவருக்குச் சனி திசை, சனி புத்தி நடக்கும் போது அவர் தேர்தலில் நின்று அமோக வெற்றி பெற்று அமெரிக்க அதிபரானார்.

## 276. உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சை எடுப்பானா?

'உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சை எடுப்பான்' என்பார்கள்! இது உண்மையா? முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் ஜாதகத்தில் மிதுனம், ஜென்ம இலக்கினம். இரண்டில் குரு உச்சம், எட்டில் செவ்வாய் உச்சம். குரு என்ற உச்சன் செவ்வாய் என்னும் உச்சனை ஏழாம் பார்வையாகப் பார்க்கிறான். உச்சனை, உச்சன் பார்த்துக்கொள்கிறான். மொரார்ஜி தேசாயின் அந்தஸ்து என்ன என்பது யாவரும் அறிந்ததே. அப்படி என்றால் உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சை எடுப்பான் என்பதற்குப் பொருள்?

தமது பதவி நிலைக்கவேண்டும் என அரசியல் கட்சிகளை, அரசியல்வாதிகளைக் கேட்டுக்கொள்வதுகூட ஒருவகைப் பிச்சைதான். அன்புக்காய் யாசிப்பதுகூடப் பிச்சைதான். காமஇன்பத்துக்காகப் பெண்களிடம் யாசிப்பதுகூட ஒருவகையான பிச்சைதான். மனைவியிடம் அடிக்கடி கெஞ்சி யாசித்து உடல் உறவுகொள்வதுகூட ஒரு வகையான பிச்சைதான். இதுவே 'உச்சனை உச்சன் பார்க்கப் பிச்சை எடுப்பான்' என்பதன் இரகசியம் ஆகும்!

## 277. நீசபங்க இராஜயோகம் என்றால் என்ன?

ஒரு கிரகம் நீசம்பெற்று, அந்த நீச கிரகம் நின்ற இராசிக்கு உடைய கிரகம் ஆட்சி, உச்சம், வக்கிரம், வர்க்கோத்தமம் பெற்றால் அல்லது நீசக்கிரகம் அம்ஸக் கட்டத்தில் ஆட்சி, உச்சம் பெற்றால் நீசக்கிரகம் அஸ்தங்க தோஷம், கிரகண தோஷம் அடைந்தால், நீசவீட்டில், நீச டிகிரியைத்தாண்டி இருந்தால், நீசனை நீசன் பார்த்தால் அதனால் நீசநிலை பங்கப்படுகிறது. இதுவே நீசபங்க இராஜயோகம் என்று சொல்லப்படுகிறது.

## 278. குருசண்டாள யோகம்!

குருவும் இராகுவும் சேர்ந்து ஓர் இராசியில் இருந்தால் அது 'குரு சண்டாள யோகம்' என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு இராகு திசையும் குரு திசையும் நல்ல இராஜயோக திசைகளாய் அமையும். இராகுவுக்குப் பின்னால் குரு இருந்தால் இராகுவின் கடைசி ஆறு வருடங்கள் மட்டுமே யோகத்தைச் செய்யும். முதல் பன்னிரண்டு வருடங்கள் சோதனைக் காலமாய் அமையும்.

## 279. காலசர்ப்ப யோகம் தரும் பலன்கள்!

இராகு, கேதுக்களுக்குள் கிரகங்கள் அடங்கி நின்றால் அதுவே காலசர்ப்ப யோகம் என்று சொல்லப்படுகிறது. முழுமையான கால சர்ப்பயோக ஜாதகம் தரித்திர ஜாதகமாய் ஆகிவிடுவதுமுண்டு. கேது நின்ற வீடு தலையாயும், இராகு நின்ற வீடு வாலாயும், கிரகங்கள் உடம்பில் மறைந்து இருப்பது போலவும் காலசர்ப்ப யோகம் வருணிக்கப்படுகிறது. இராகு, கேதுக்களுக்குள் எல்லாக் கிரகங்களும் அடங்கிவிட்டால், இராகு, கேதுக்களை மீறி மற்ற கிரகங்கள் பலன் செய்யாது என்பதால், காலசர்ப்பயோகம் தரித்திரயோகம் என்று சொல்லப்படுகிறது. கால சர்ப்பயோகம் பங்கம் ஏற்படுதல் என்றால் இராகுவுக்கோ கேதுவுக்கோ முன்னால் ஒரு கிரகமாவது தவறி வந்துவிடவேண்டும். இவர்கள் ஆயுளில் பிற்பகுதியில் வசதியாய் இருந்தால் முற்பகுதியில் கஷ்டப்படுவார்கள். முற்பகுதியில் வசதியாய் இருந்தால் பிற்பகுதியில் கஷ்டப்படுவார்கள். திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் ஜாதகமும் கால சர்ப்பயோகம் பங்கம் ஏற்பட்ட ஜாதகமே ஆகும்.

## 280. சகடயோகம் தரும் பலன்!

ஒருவரின் ஜாதகத்தில் குருவுக்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் சந்திரன் நின்றால், அதுவே சகடயோகம் என்று சொல்லப்படுகிறது. சகடயோகம் உள்ளவர்களுக்குக் குரு திசை மற்றும் சந்திர திசை நடக்கும்போது, அந்த ஜாதகர் தரித்திரத்தின் சகிரமாய்க் கஷ்டப்படுவார்!

## 281. திருமணயோகம் எப்போது?

1) இரண்டு, ஏழு, ஐந்து, ஒன்பது, பதினொன்றுக்குடைய திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும் காலத்திலும் 2) பெண்ணின்

ஜாதகத்தில் எட்டுக்குடையவர் திசை, புத்தி, அந்தரம் நடக்கும் காலத்திலும் 3.) சுக்கிரன் திசை, புத்தி, அந்தரம் இளமையில் நடக்கும் காலத்திலும் 4.) சுக்கிரன் சாரம் பெற்ற கிரகத்தின் திசை, புத்தி, அந்தரம் நடக்கும்போது 5.) இரண்டு, ஏழு, ஐந்து, ஒன்பது, பதினொன்றுக்கு உடைய கிரகங்களின் சாரம் பெற்ற கிரகங்களின் திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும்பேதும் 6.) இரண்டு, ஏழு, ஐந்து, ஒன்பது, பதினொன்றில் நின்ற கிரகங்களின் திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும்போதும் திருமணம் நடக்கும். 7.) இரண்டு, ஏழு, ஐந்து, ஒன்பது, பதினொன்றில் நின்ற கிரகங்களின் சாரம் பெற்ற கிரகங்களின் திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும்போதும் 8.) பெண் ஜாதகத்தில் இராசிக்கு எட்டாம் இடத்தையோ, இலக்கினத்துக்கு எட்டாம் இடத்தையோ குரு பார்த்தாலும் 9.) எட்டுக்குடைய கிரகத்தின் சாரம் பெற்ற கிரகங்களின் திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும்போது பெண்ணுக்குத் திருமணம் நடக்கும். 10.) எட்டில் நின்ற கிரகத்தின் சாரம் பெற்ற கிரகங்களின் திசை, புத்தி, அந்தரங்கள் நடக்கும்போதும் பெண்ணுக்குத் திருமணம் நடக்கும். 11.) குரு இரண்டு, ஏழு, ஐந்து, ஒன்பது, பதினொன்றில் நின்று அவர் திசை, புத்தி, அந்தரங்கள் வரும்போதும் திருமணம் நடத்தி வைப்பார். மேலே கண்ட அமைப்புகள் யாவும் திருமணத்தை நடத்தி வைக்கும்.

## 282. திருமணத்தைத் தாமதமாக்கும் இரகசியம்!

ஒருவருக்கு ஏழாமிடம், ஏழாமிடத்துக்குரிய கிரகம் கெட்டிருந்தால் திருமணமே நடவாது. கெட்டியிருக்கும் ஏழாமிடத்தையோ, ஏழுக்குடையவனையோ குரு பார்த்தால் திருமணம் காலதாமதம் ஏற்பட்டு நடக்கும். அதே போல், சுக்கிரனை இராகு, கேது, எட்டாமிடத்து அதிபதி, ஆறுக்கு

உடையவர் பன்னிரண்டுக்கு உடையவர். இவர்கள் பார்த்தாலும் சரி, இவர்களுடன் சேர்ந்தாலும், திருமணம் நடவாது. ஆனால், சுக்கிரனைக் குரு பார்த்தால் இருபத்தெட்டு அல்லது முப்பது வயதுக்கு மேற்பட்டுத் திருமணம் நடக்கும். இப்படிப்பட்ட அமைப்புடைய ஜாதகருக்கு இராகுவும், சுக்கிரனும் ஏழில் இருந்து, இராகு திசையும், இரண்டு, ஏழு, ஐந்து, ஒன்பது, பதினொன்றுக்குடைய கிரகங்களின் புத்தியும், அந்தரமும் எந்த வயதில் நடக்கிறதோ அந்த வயதில் திருமணம் நடக்கும். ஆனால், அந்தத் திருமணம் காதல் திருமணமாய் இருக்கும். இதற்கு ஜென்ம இராசிக்கும் ஏழாமிடத்தை ஆராய்ந்துகொள்வது நல்லது. ஜென்ம இலக்கினத்துக்கு என்னென்ன விதிகளை அலசிப் பார்க்கிறோமோ அதேபோன்று ஜென்ம இராசிக்கும் அவசியம் பார்க்கவேண்டும்.

## 283. திருமணம் நடக்காததன் இரகசியம்!

ஒருவருக்கு ஏழுக்குடையவன் நீசம் பெற்றாலோ, ஏழுக்குடையவன் எட்டில் மறைந்து அமிசத்தில் பகை வீட்டில் இருந்தாலோ, குடும்பாதிபதியாகிய இரண்டாமிடத்து அதிபதி எட்டு, பன்னிரண்டுக்குடையவர்களுடன் சேர்ந்து பன்னிரண்டில் இருந்தாலோ, சுக்கிரன் எட்டு, பன்னிரண்டுக்குடையவர்களுடன் சேர்ந்து பன்னிரண்டில் இருந்தாலோ, குரு பார்க்கவில்லை என்றாலும் குரு கெட்டுவிட்டாலும், குடும்பாதிபதியாகிய இரண்டாமிடத்து அதிபதி, ஏழாமிடத்துக் களத்திராதிபதி, களத்திரகாரகன் ஆகியோர் பாதகாதிபதியின் சாரம் பெற்றாலும், சேர்ந்தாலும் திருமணம் நடப்பதில்லை.

## 284. சேர்ந்து வாழமுடியாத ஒரு ஜாதகம்!

ஒருவருக்கு விருச்சிக இலக்கினம். ஏழில் சுக்கிரன், சனி இலக்கினத்துக்குக் களத்திரகாரனும், களத்திரஸ்தானாதிபதியும் சுக்கிரன் ஒருவனே, சனியுடன் சம்பந்தப்பட்டு, ஏழில் ஆட்சி பெற்றான். குரு எட்டில் மறைந்து குடும்பம், சுகம், அயன சயனம் என்ற மூன்று ஸ்தானங்களைப் பார்வையிடுவதுடன், குரு புனர்பூசம் மூன்றில் நின்று வர்க்கோத்தமம் பெற்றதால் திருமணம் நடந்தது. குழந்தையும் பிறந்தது. ஆனால், சேர்ந்து வாழ முடியவில்லை!

## 285. சோரம் போகும் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் செவ்வாய், சுக்கிரன், புதன் ஆகியவர்கள் ஏழில் நின்றால் அவள் ஒழுக்கமானவளாய் இருக்கமாட்டாள். அவள் புருஷர்கள் பலருடன் வாழ்க்கை நடத்துவாள். அதேபோல், கன்னியா இலக்கினம், இலக்கினத்தில் செவ்வாய் நின்ற பெண் இன்ப சுகத்தை வலிந்து தேடுவாள். அதே போல், கன்னிகாலக்கினத்திற்கு ஏழில் சுக்கிரன், செவ்வாய் நின்றால் காம இன்பத்துக்காக எதையும் தியாகம் செய்து, பலருக்குப் பத்தினியாய் வாழ்வாள்.

## 286. யாருக்குக் காமம் அதிகம்!

இலக்கினங்களிலேயே மேஷம், விருச்சிகம், கன்னி ஆகிய மூன்று இலக்கினக்காரர்களுக்கும் காமம் அதிகம். அதேபோல் எட்டில் செவ்வாய், சுக்கிரன் இருந்தால் காமம் அதிகம். அதேபோல், ஆறில் சுக்கிரன், சூரியன் நின்றால் காமம் அதிகம்.

## 287. யாருக்குக் காதல் திருமணம் நிகழும்?

ஒருவருக்கு ஆறில் சுக்கிரனும், ஏழில் புதனோ சந்திரனோ இருவருமோ நின்றால் காதல் திருமணம் நடக்கும். அதேபோல், சுக்கிரன் அஸ்தங்க தோஷம் அடைந்தால் காதல் திருமணம் நடக்கும். அதேபோல், சுக்கிரன் நீசம் பெற்றாலும் காதல் திருமணம் நடக்கும்.

## 288. அத்தை மகளைக் காதலிப்பவர்!

மேஷ இலக்கினத்துக்குச் சுக்கிரன் ஆறில் நின்று சூரியன் சாரம் பெற்று, ஏழில் புதன் குருவின் சாரம் பெற்றால் தகப்பன் வழி சொந்தத்தில் அத்தை மகளைக் காதல் திருமணம் செய்வார்.

## 289. தாய்மாமன் மகளைக் காதலிப்பவர்!

கன்னிகா லக்கினத்துக்கு சுக்கிரன் நாலில் நின்று, சுயசாரம் பெற்று, புதன், சனியுடன் சேர்ந்து குருபத்தில் நின்றால், தாய்மாமன் மகளைக் காதல் திருமணம் செய்வார். அதேபோல், ஏழில் புதன் சுயசாரத்தில் நின்று சந்திரன், சுக்கிரன் சேர்ந்து சனி பார்த்தால் தாய்மாமன் மகளைக் காதல் திருமணம் செய்வார்.

## 290. தாய்வழி உறவில் திருமணம் நடக்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் புதன், பஞ்சமாதிபதி, நாலுக்குடையவன், சந்திரன், கேது, சுக்கிரன் ஆகியவர்கள் சம்பந்தம் ஏற்பட்டால் தாய்வழி உறவில் திருமணம் நடக்கும்.

## 291. தகப்பன்வழி உறவில் திருமணம் நடக்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சூரியன், பாக்யாதிபதி, இராகு, குரு, சுக்கிரன் ஆகியவர்கள் சம்பந்தம் ஏற்பட்டால் தகப்பன் வழி உறவில் திருமணம் நடக்கும்.

## 292. சொந்தத்தில் திருமணம் நடக்கும் ஜாதகங்கள்!

ஒருவர் ஜாதகத்தில் ஏழில் ஒரு சுப கிரகத்தின் சாரம் பெற்றால் சொந்தத்தில் திருமணம் நடக்கும். அதே போல், ஏழாமிடத்தில் சுபக்கிரக சம்பந்தம் ஏற்பட்டால் சொந்தத்தில் திருமணம் நடக்கும். அதேபோல், மேஷம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம், மீனம் ஆகிய இலக்கினங்களுக்கு ஏழாமிடத்தைக் குரு பார்த்தால் சொந்தத்தில் திருமணம் நடக்கும்.

## 293. அந்நியத்தில் திருமணம் நடக்கும் ஜாதகங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் ஒரு பாவ கிரகம் நின்று, ஏழில் நின்ற ஒரு பாவகிரகம், மற்றொரு பாவ கிரகத்தின் சாரம் பெற்றால் அந்நியத்தில் திருமணம் நடக்கும். (சுபகிரகம் பாவகிரகம் என்பது அந்த ஜாதகரின் இலக்கினத்துக்கு ஆகும்). அதே போல், ஏழாமிடத்தில் பாவ கிரக சம்பந்தம் ஏற்பட்டால் அந்நியத்தில் திருமணம் நடக்கும். அதேபோல் ரிஷபம், துலாம், மகரம் ஆகிய இலக்கினங்களுக்கு ஏழாமிடத்தைக் குரு பார்த்தால், அந்நியத்தில் திருமணம் நடக்கும்.

## 294. தம் ஜாதியில் திருமணம் செய்யும் ஜாதகம்!

ஒருவரின் இலக்கினத்திற்கு இராகு, கேது, சனி, மாந்தி யோக கிரகங்களாய் இருந்து ஏழாமிடத்துடன் சம்பந்தப்பட்டால்

தன் ஜாதியிலேயே திருமணம் நடக்கும். அதேபோல் குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச் சந்திரன் ஆகியவர்கள் ஏழாமிடத்துடன் சம்பந்தப்பட்டால் அல்லது அவர்கள் சாரம் பெற்ற கிரகங்கள் ஏழாமிடத்துடன் சம்பந்தப்பட்டால் தம் ஜாதியிலே திருமணம் செய்வார். அதேபோல் மேஷம், விருச்சிகம் ஆகிய இலக்கினங்களுக்கு ஐந்து ஒன்பதில் சுக்கிரன் நின்று சுபகிரக சம்பந்தம் பெற்றால், தம் ஜாதியில் அல்லது தம் உறவில் கண்ணகி போன்ற மனைவி கிடைப்பாள். குரு பார்த்துவிட்டால் இன்னும் விசேஷம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பதற்கேற்ப, மனைவியே இவர்களுக்கு ஒரு பூர்வ ஜென்ம பாக்கியம் ஆகும். ஆனால், ஜாதகர் மட்டும் பெண்கள் பலருடன் உறவு வைத்திருப்பார். எந்தவிதமான பெண்ணையும் திருப்தி அடையும்படி இவர் லீலைகள் அமைந்திருக்கும். சனி அந்தச் சுக்கிரனுடன் சம்பந்தப்பட்டுவிட்டால் அடிக்கடி மனைவியைப் பிரிந்து வாழ்வார். மனைவி இவர்களைப் புரிந்துகொள்ளாமல் இவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தகராறு செய்வாள். ஆனால், வாழ்க்கையில் நிரந்தர முறிவு ஏற்படாது!

## 295. அந்நிய ஜாதியில் மணம் முடிக்கும் ஜாதகர்!

ஒருவரின் ஜாதகத்தில் இராகு, கேது, சனி, மாந்தி ஆகியவர்கள் ஏழாமிடத்துடன் சம்பந்தப்பட்டால், அவருக்கு அந்நிய ஜாதியில் திருமணம் நடக்கும்.

## 296. தாழ்ந்த ஜாதியினை மணம் முடிக்கும் ஜாதகர்!

ரிஷபம், துலாம், மகரம் ஆகிய இலக்கினங்களாயிருந்து குரு ஏழாமிடத்துடன் சம்பந்தப்பட்டால் ஜாதகர் தம்மைவிடத்

தாழ்ந்த ஜாதியில் அல்லது தாழ்ந்த குடும்பத்தில் மணம் முடிப்பார்.

## 297. விதவையை மணக்கும் ஜாதகர்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் சுக்கிரன், செவ்வாய் ஆகியன நின்றால் அவர் விதவையைத் திருமணம் செய்வார்!

## 298. பலதார யோகம்!

ஒருவருக்கு ஏழில் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் நின்றாலும், ஏழுக்குடையவனுடன் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் சேர்ந்தாலும், (இராசிக்கும், இலக்கினத்துக்கும்) சுக்கிரனுடன் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் சேர்ந்தாலும், குருவும், குடும்பாதிபதியாகிய இரண்டுக்கு உடையவரும் கெடாமல் இருந்தால் எத்தனை கிரகங்கள் சம்பந்தப் படுகின்றனவோ அத்தனை தாரயோகம் ஏற்படும்! குருவும் குடும்பாதிபதியாகிய இரண்டாம் அதிபதியும் கெட்டுவிட்டால் ஒரு தாரயோகமே ஏற்படும்!

## 299. ஒரு தாரயோக ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் குரு இலக்கினாதிபதியுடனோ செவ்வாயுடனோ சம்பந்தப்பட்டால் ஒரே தாரயோகந்தான் ஏற்படும்!

## 300. இருதார யோகம் யாருக்கு?

விருச்சிக இலக்கினத்துக்கு எட்டில் செவ்வாய் நின்ற ஆணுக்கு இரு தார யோகம் ஏற்படும். அதேபோல், கும்ப

இலக்கினத்துக்கு எட்டில் செவ்வாய் நின்ற ஆணுக்கு இரு தாரயோகம் ஏற்படும்!

## 301. கணவனைப் பிரியும் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் கும்ப இலக்கினமாய் இருந்து எட்டில் செவ்வாய் இருந்தால், அந்தப் பெண் கணவனை நிரந்தரமாய்ப் பிரித்து வாழ்நாள்!

## 302. முப்பது வயதுக்குமேல் யாருக்குத் திருமணம் நிகழும்?

மேஷ இலக்கினத்துக்கு நாலில் சுக்கிரன், கேது அல்லது சுக்கிரன், இராகு நின்றால் திருமணம் முப்பது வயதுக்கு மேல்தான் நடக்கும்!

## 303. இவர்களுக்குத் திருமணம் எங்கு நடக்கும்?

ஒருவருக்கு ஏழாமிடம் சரமாயிருந்தால் அல்லது சர கிரகங்கள் சம்பந்தப்பட்டால் மிகவும் தொலைதூரத்தில் திருமணம் நடக்கும். (சர இராசிகள் - மேஷம், கடகம், துலாம், மகரம்) அதேபோல், ஒருவருக்கு ஏழாமிடம் ஸ்திரமாயிருந்தால் அல்லது ஸ்திர கிரகங்கள் சம்பந்தப்பட்டால் உள்ளூரில் திருமணம் நடக்கும். (ஸ்திர இராசிகள் - ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம்) அதேபோல், ஒருவருக்கு ஏழாமிடம் உபயமாயிருந்தால் அல்லது உபய கிரகங்கள் சம்பந்தப்பட்டால் சமீபமான ஊர்களில் திருமணம் நடக்கும். (உபய இராசிகள் - மிதுனம், கன்னி, தனுசு, மீனம்) அதேபோல், குடும்பாதிபதி, பஞ்சமாதிபதி, பாக்யாதிபதி, இலக்கினாதிபதி (2, 5, 9, 1) ஆகியவர்கள் ஏழாமிடத்துடன் சம்பந்தப்பட்டால் பூர்விக ஊரில் திருமணம் நடக்கும். அதே போல், அஷ்டமாதிபதி

சம்பந்தப்பட்டு, குடும்பாதிபதி பஞ்சமாதிபதி, பாக்யாதிபதி ஆகியவர்களுள் யாராவது ஒருவர் மறைந்தால் அந்நிய ஊரில் திருமணம் நடக்கும்.

## 304. வெளிநாட்டுப் பெண்ணை மணக்கும் ஜாதகம்!

ஒருவரின் ஜாகத்தில் சனிஸ்திர கிரகமாய் இருந்து, ஏழாமிடத்துன் சம்பந்தப்பட்டு இராகு அல்லது கேதுவின் சம்பந்தமும் ஏற்பட்டால், வெளிநாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்வார்கள்.

## 305. சில திருமண இரகசியங்கள்!

துலாம் இலக்கினத்துக்கு ஆறு, பன்னிரண்டில் செவ்வாய் மறைந்தால் விதவையைத் திருமணம் செய்வார்.

மாந்தி ஏழில் நின்றால், சனி இலக்கினத்துக்குப் பாவியாய் இருந்தால் நீசகுலத்தில் திருமணம் செய்வார்.

ஏழாமிடத்தில் பாக்கியம், பஞ்சமம், குடும்பம், இலக்கினம் (9, 5, 2, 1) ஆகிய ஆதிபத்தியம் பெற்ற கிரகங்கள் சம்பந்தப்பட்டால் திருமணம் பூர்விக ஊரில் நடக்கும்.

இரண்டில் இராகு அல்லது கேது இருந்தால் இருதாரயோகம் ஏற்படும்.

## 306. காவல் நிலையத் திருமணம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் இராகு, கேது, சூரியன், செவ்வாய், சனி, தேய்பிறைச் சந்திரன், பாவியோடு சேர்ந்த

புதன், இலக்கினத்துக்குப் பாவ ஆதிபத்தியம் பெற்ற குரு ஆகியவர்கள் சம்பந்தப்பட்டால் காவல் அலுவலகத்தில் அல்லது பதிவு அலுவலகத்தில் திருமணம் நடக்க வாய்ப்புண்டு. சுபஆதிபத்தியம் பெற்ற குரு சம்பந்தப்பட்டால் கோவிலில் திருமணம் நடக்க வாய்ப்புண்டு.

## 307. எந்த வயதில் திருமணம்?

ஒருவருக்கு ஏழுக்குடையவன் வலுவாய் இருந்து பஞ்சமாதிபதி ஆதிபத்தியம் அல்லது பாக்யாதிபதி ஆதிபத்தியம் பெற்று சுக்கிர திசை இளமையில் நடந்தால் பதினாறு வயதில் திருமணம் நடக்கும். அதேபோல், சுக்கிரன் குடும்பாதிபதியாகவோ களத்திராதிபதியாகவோ இருந்து இளமையில் சுக்கிர திசை நடந்தால், பதினெட்டு வயதிலோ இருபத்தொரு வயதிலோ திருமணம் நடக்கும். அதேபோல், களத்திராதிபதி கெட்டுவிட்டால் முப்பத்தைந்து வயதில்கூடத் திருமணம் நடக்கும்.

## 308. இல்லற சுகம் இல்லை!

ஒரு ஜாதகத்தில் மகர இலக்கினத்துக்கு சந்திரன் எட்டில் நின்று பூரம் நான்காம் பாதத்தில் நின்றால் ஜாதகரால் இல்லற சுகத்தை அனுபவிக்கமுடியாது. அப்படி இல்லற சுகம் ஏற்பட்டு ஆண்குழந்தை பிறந்தால் குழந்தையோ தகப்பனோ மரணம் அடைவார்கள்.

## 309. திருமணம் நடக்காத ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் ஏழுக்குடையவன் மறைவது தோஷமாகும். ஏழுக்குடையவன் நீசம் பெற்று, இராகு

சம்பந்தப்பட்டு, இரண்டுக்குடையவன் கெட்டுக் கேது சம்பந்தப்பட்டால் திருமணமே நடவாது.

## 310. எந்தப் பெண்ணைத் திருமணம் செய்வது?

மீன இலக்கினத்து ஏழில் செவ்வாய் இருந்தால் அவர்களுக்கு மிதுன இலக்கினத்துக்கு நான்கில் செவ்வாய் உள்ள பெண்ணையோ சிம்ம இலக்கினத்துக்கு இரண்டில் செவ்வாய் உள்ள பெண்ணையோ திரும்ணம் செய்விக்கவேண்டும்.

## 311. நரகமாகும் திருமண வாழ்க்கை!

துலாம் இலக்கினத்துக்கு பன்னிரண்டில் செவ்வாய் உள்ள ஜாதகருக்குத் திருமண வாழ்க்கை நரகமாகும். சுக்கிரனும் பன்னிரண்டில் நின்றுவிட்டால் மகாகொடுமையானதாகும்.

## 312. விபச்சாரத்தில் ஈடுபடும் பெண் யார்?

மீன இலக்கினத்துக்கு ஏழில் செவ்வாய், சுக்கிரன், இராகு நின்ற அமைப்புள்ள விதவைக் கோலம் பூண்டு விபச்சாரத்தில் ஈடுபடுவாள். அதே ஜாதகம் ஆணுக்கு அமைந்தால் அவர் காதல் தோல்வியால் தற்கொலை செய்துகொள்வார். அதே போல், தனுசு இலக்கினத்துக்கு ஏழில் செவ்வாய், இராகு, சுக்கிரன் நின்றிருந்தால், அந்த அமைப்புள்ள பெண் விபச்சாரம் செய்வாள்.

## 313. விவாகரத்து ஜாதகம்!

ரிஷப இலக்கினத்துக்கு இரண்டில் செவ்வாய் நின்று சனி பார்த்தால் விவாகரத்து ஏற்பட்டு இருதாரயோகம் ஏற்படும்.

அதே அமைப்பு பெண் ஒருத்திக்கு இருந்து குரு பார்த்தால் அந்தப் பெண் கணவனை விட்டுப் பிரிந்து மீண்டும் கூடுவாள்.

## 314. பெண்களுக்கு மாங்கல்ய தோஷம் ஏற்படுத்தும் ஜாதகங்கள்!

1.) எட்டுக்குடையவன் சூனியம் அடைந்தாலோ, சூனிய இராசியில் நின்றாலோ சூனிய கிரகத்தின் சாரம் பெற்றாலோ மாங்கல்ய தோஷம் ஏற்படும். 2.) எட்டுக்குடையவன் நீசம் பெற்றாலோ, அஸ்தங்க தோஷம் பெற்றாலோ, ஆறுக்குடையவன் சேர்ந்தாலோ, ஆறுக்குடையவன் சாரம் பெற்றாலோ, ஆறில் அமர்ந்தாலோ மாங்கல்ய தோஷம் ஏற்படும். 3.) எட்டில் ராகு, கேது, மாந்தி, சூரியன், செவ்வாய், சனி அமர்ந்தால் மாங்கல்ய தோஷம் ஏற்படும். 4.) எட்டுக்குடையவனுடன் இராகு, கேது, மாந்தி, சூரியன், செவ்வாய், சனி ஆகியன சம்பந்தப்பட்டால் மாங்கல்ய தோஷம் ஏற்படும். 5.) எட்டுக்குடையவனையோ, எட்டாம் இடத்தையோ இராகு, கேது, மாந்தி, சூரியன், செவ்வாய், சனி ஆகிய கிரகங்கள் பார்த்தால் மாங்கல்ய தோஷம் ஏற்படும். 6.) எட்டுக்குடையவன் பாதகாதிபதி சம்பந்தப்பட்டால், எட்டாம் இடத்தில் பாதகாதிபதி சம்பந்தம் ஏற்பட்டால் மாங்கல்ய தோஷம் ஏற்படும். 7.) ரிஷப இலக்கினத்துக்கும், சிம்ம இலக்கினத்துக்கு குரு சூனியும் அடைந்தாலோ, மாந்தி, இராகு, கேது ஆகியன சம்பந்தப்பட்டாலோ, அஸ்தங்க தோஷம் அடைந்தாலோ மாங்கல்ய தோஷம் ஏற்படும். நீசம் பெற்றால் மாங்கல்ய பலம் ஏற்படும். 8.) பலமான மாங்கல்ய தோஷத்தை ஏற்படுத்தும் கிரகங்கள் இராகு, கேது, மாந்தி ஆகிய மூன்று கிரகங்களே ஆகும்!

## 315. பெண்களுக்கு மாங்கல்ய பலம் தரும் ஜாதகங்கள்!

1.) எட்டாம் இடத்தை அல்லது எட்டுக்குடையவனைக் குரு பார்த்தால் அது மாங்கல்ய பலம் உள்ள ஜாதகம் ஆகும். 2.) எட்டில் சுபகிரகங்கள் நின்றால் அது மாங்கல்ய பலம் உள்ள ஜாதகம் ஆகும். 3.) எட்டுக்குடையவனுடன் சுப கிரகங்கள் சேர்ந்தால், பார்த்தால் அது மாங்கல்ய பலம் உள்ள ஜாதகம் ஆகும். 4.) எட்டாம் இடத்துடன் அல்லது எட்டுக்குடைய கிரகத்துடன் இலக்கினாதிபதி, பஞ்சமாதிபதி, பாக்யாதிபதி சம்பந்தம் ஏற்பட்டால் அது மாங்கல்ய பலம் உள்ள ஜாதகம் ஆகும்.

## 316. சண்டையிடும் கணவன்-மனைவி யார்?

ஒருவர் ஜாதகத்தில் குருவும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் கணவன், மனைவி இருவரும் எந்த நேரமும் சண்டையிட்டுக்கொண்டே இருப்பார்கள். இவர்களுக்கு ஏழுக்கு உடையவன் கெட்டுவிட்டால் விவாகம் இரத்து ஆகிவிடும்!

## 317. இதய வியாதி யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் ஆறுக்குடையவன், எட்டுக்குடையவன் இருவரும் ஐந்துக் குடையவருடன் சம்பந்தம் பெற்றால் நெஞ்சுவலி ஏற்படும். அதேபோல், கன்னிகா இலக்கினத்துக்குச் செவ்வாய் இலக்கினத்திலும், சனி நான்கிலும் நின்றால் இதய வியதியால் பாதிக்கப்பட்டு அற்ப ஆயுளில் மரணம் அடைவார்கள்.

## 318. மூளைக்காய்ச்சல் யாருக்கு?

மகர இலக்கினத்துக்கு ஐந்தில் சூரியன், சுக்கிரன், சந்திரன், இராகு நின்று இராகு திசை, சந்திரன் புத்தி நடந்தால் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மரணம் ஏற்படும்.

## 319. ஜாதகங்கள் தெரியப்படுத்தும் நோய்களின் இரகசியங்கள்!

கடக இலக்கினத்துக்குச் செவ்வாய் இலக்கினத்தில் நின்று குரு, திருவாதிரை இரண்டில் நின்று, இராகு எட்டில் நின்று, மகம் ஒன்றில் சனி நின்று, செவ்வாய் திசை, சனி புத்தி நடந்தால் காக்காவலிப்பு அல்லது ஜன்னி கண்டு மரணம் ஏற்படும்.

பத்து, பதினொன்றுக்குடையவர்கள் அஷ்டமாதிபதி சம்பந்தப்பட்டு, அவருக்குடைய திசை நடந்தால் வாதநோயால் மரணம் ஏற்படும்.

சிம்ம இலக்கினத்துக்குக் குரு ஆறில் நின்றால் நிரந்தரமான ஆஸ்துமா வியாதியால் வாழ்வார்கள்.

கன்னிகா லக்கினத்துக்குக் குரு ஐந்தில் நின்று, சனி எட்டில் நின்று, சந்திரன் மூன்றில் நின்றால் நிரந்தரமான ஈரல் நோயால் பாதிக்கப்படுவார்கள்.

## 320. எவர் ஊமை ஆவார்?

கன்னி இலக்கினத்துக்கு இலக்கினத்தில் சுக்கிரனும், பஞ்சமத்தில் குருவும் இருந்தால் அந்த ஜாதகர் ஊமையாவர். அதேபோல், மகர இலக்கினத்துக்குச் சனியும், மாந்தியும்

நான்கில் நின்று அசுவினி இரண்டில் மாந்தியும் சனியும் இருந்தால் ஜாதகர் பிறவி ஊமையாய் இருப்பார்கள்.

## 321. எவருக்குக் கண் குருடாகும்?

இரண்டுக்குடையவன் அஷ்டமாதிபதி சம்பந்தம் பெற்று, இரண்டுக்குடையவன் திசை, புத்தி, அந்தரத்தில் வலக்கண் குருடாகும். அதேபோல், ஜென்மத்திலேயே இரண்டுக்கு உடையவன் திசையில் பிறந்திருந்தால் பிறக்கும்போதே குருடராய்ப் பிறப்பர். அந்த இரண்டுக்குடையவனை இலக்கினாதிபதியோ, குருவோ, பஞ்சமாதிபதியோ பார்த்திருந்தால் சுயபுத்தி முடித்தவுடன் ஒளிபெறுவான். இல்லையேல் நிரந்தர ஊனமாகிவிடும்.

## 322. மாறுகண் எவருக்கு அமையும்?

ஆறுக்குடையவன் இரண்டில் இருந்து இரண்டுக்குடையவன் பன்னிரண்டில் அஷ்டமாதிபதி, விரயாதிபதியுடன் சேர்ந்து இலக்கினத்தில் மாந்தி இருந்து, விரயாதிபதி சூரியனாகவும், இரண்டுக்குடையவன் சுக்கிரனாகவும் இருந்தால் ஜாதகர் மாறுகண் உடையவராய் இருப்பார். பார்வைக் குறையும் இருக்கும். கண்ணாடி அவசியம் அணிய நேரிடும்.

## 323. மூளை வளர்ச்சி இல்லாத பிறப்பு!

இலக்கினாதிபதி எட்டில் மாந்தி, இராகுவுடன் சேர்ந்திருந்தால், பஞ்சமாதிபதி நீசம் அடைந்திருந்தால் ஜாதகர் பிறவியிலேயே மூளை வளர்ச்சி இல்லாமல், கை, கால் விளங்காமல் பிறந்திருப்பார்!

## 324. கவிஞராகும் யோகம் யாருக்கு?

1. சந்திரன், கேது ஒன்பதில் நின்று, சந்திரன் ரோகிணி இரண்டிலோ மூன்றிலோ நின்று, சுக்கிரன் பன்னிரண்டில் நின்றால் கவிஞராகலாம். 2. சுக்கிரன் பன்னிரண்டில் நின்று சந்திரன், குரு ஒன்பதில் நின்று, கேது பத்தில் நின்றால், கவிஞராகலாம். 3. புதன், சந்திரன், சுக்கிரன் ஒன்பதில் நின்று, கேது பதினொன்றில், குரு ஐந்தில் நின்றால் கவிஞராகலாம். 4. பதினொன்றில் சந்திரன் உச்சம் பெற்று, ரோகிணி இரண்டில் நின்று, புதன், சுக்கிரன் பன்னிரண்டில் நின்று, குரு ஐந்தில் நின்றால் கவிஞராகலாம்.

## 325. எழுத்தாளராகும் யோகம் யாருக்கு?

ஒருவருக்குப் புதன் இலக்கினத்தில் உச்சம் பெற்று, சுக்கிரன் பதினொன்றில் நின்று குரு ஏழில் நின்றால் எழுத்தாளராகலாம். சந்திரன் மூன்று அல்லது ஒன்பதில் இருக்கத் திரைக்கதை வசனம் எழுதிப் புகழ் பெறுவார்கள்.

## 326. திரைப்பட இயக்குநர் ஆகும் யோகம் யாருக்கு?

1. இலக்கினத்திற்குப் புதன் உச்சம் பெற்று, பன்னிரண்டில் சுக்கிரன் அமர்ந்து, பதினொன்றில் சனி அமர்ந்து, பத்தில் சந்திரன் அமர்ந்து, குரு இரண்டில் இருந்தால் திரைப்பட இயக்குநராகலாம். 2. மேஷ இலக்கினமாய் இருந்து பன்னிரண்டில் சந்திரன், கேது பத்தில் சூரியன், புதன் ஒன்பதில் குரு, சுக்கிரன், சனி, செவ்வாய் இருந்தால் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஆனார். 3. கும்ப இலக்கினமாய் இருந்து, இலக்கினத்தில் சூரியன், புதன் இரண்டில் சுக்கிரன், செவ்வாய் மூன்றில் குரு, நான்கில் சந்திரன், ஒன்பதில் சனி அமர்ந்தால்

புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஆவார். 4. மிதுன இலக்கினமாய் இருந்து நான்கில் சனி, ஆறில் சுக்கிரன், ஏழில் சந்திரன், புதன், எட்டில் செவ்வாய், பத்தில் குரு அமர்ந்தால் திரைப்பட இயக்குநர், நடிப்பு, திரைக்கதை வசனம் போன்ற துறைகளில் பெரும்புகழ் பெறுவார் 5. மகர இலக்கினம், இரண்டில் சந்திரன், இலக்கினத்தில் செவ்வாய் எட்டில் குரு, பதினொன்றில் சனி, இராகு; ஐந்தில் புதன், சூரியன், கேது; ஆறில் சுக்கிரன் அமர்ந்தால் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் ஆவார். ஓவியராயும் இருப்பார். காதல் திருமணம் செய்வார்.

## 327. நடிகராகும் யோகம் யாருக்கு?

மேஷ இலக்கினம் இரண்டில் சுக்கிரன், கேது; நான்கில் குரு; எட்டில் சனி, இராகு; ஒன்பதில் செவ்வாய், சந்திரன், பன்னிரண்டில் சூரியன், புதன் நின்றால் இருபத்தேழு வயதுக்கு மேல் இருபத்தொன்பது வயதுக்குள் புகழ்பெறும் திரைப்பட நடிகராவார். அதே போல், சிம்ம இலக்கினம் இரண்டில் சந்திரன்; மூன்றில் சனி வக்ரம்; ஐந்தில் செவ்வாய், இராகு; ஒன்பதில் சூரியன், சுக்கிரன், பத்தில் குரு, மாந்தி நின்றால் வறுமையில் வாடும் நடிகராய் இருப்பார்.

## 328. திரைப்படத் தயாரிப்பாளர் ஆகும் யோகம் யாருக்கு?

சிம்ம இலக்கினம் பத்தில் சுக்கிரன், புதன்; நான்கில் குரு; எட்டில் சுக்கிரன் நின்றால் திரைப்படத் தயாரிப்பாளர் ஆகலாம். அதே போல் இலக்கினத்துக்குப்பத்தில் சுக்கிரன் நீசம் பெற்றால் வறுமையில் வாடும் தயாரிப்பாளராய் இருப்பார். அதேபோல் கன்னி இலக்கினத்திற்குப் பத்தில் சுக்கிரன், புதன் நின்று நான்கில் குரு இருந்து, ஒன்பதில் சந்திரன் நின்றால் வெற்றிப்படத் தயாரிப்பாளராய் இருப்பார்.

## 329. திரைப்பட ஒளிப்பதிவாளர் ஆகும் யோகம் யாருக்கு?

1. நான்கில் சுக்கிரன், சனி; பத்தில் சந்திரன், குரு இருந்தால் சிறந்த திரைப்பட ஒளிப்பதிவாளராகலாம். 2. நான்கில் சந்திரன், குரு; பத்தில் சுக்கிரன், சனி நின்றால் சிறந்த திரைப்பட ஒளிப்பதிவாளர் ஆகலாம் 3. ஒன்பதில் சுக்கிரன், சந்திரன்; மூன்றில் குரு, சனி இருந்தால் சிறந்த திரைப்பட ஒளிப்பதிவாளர் ஆகலாம்.

## 330. டாக்டர் ஆகும் யோகம் யாருக்கு?

மேஷ இலக்கினமாய் இருந்து பத்தில் குரு, சூரியன், செவ்வாய்; இலக்கினத்தில் சனி; நான்கில் தேய்பிறைச் சந்திரன் நின்றால் வெளிநாடு சென்று படித்து, புகழ்பெற்ற டாக்டராய் இருப்பார். அதேபோல், மகர இலக்கினமாய் இருந்து பத்தில் சூரியன், சுக்கிரன், புதன் நின்று, ஆறில் செவ்வாய், சந்திரன் நின்றால் புகழ்பெற்ற சர்ஜனாய் இருப்பார்.

## 331. வக்கீலாகும் யோகம் யாருக்கு?

சிம்ம இலக்கினம் இரண்டில் புதன், சுக்கிரன், மாந்தி; ஆறில் சனி; எட்டில் சந்திரன்; பத்தில் குரு, இராகு இருந்தால் புகழ்பெற்ற வக்கீலாய் இருப்பார். இரண்டில் புதன் நீசப்பட்டால் வறுமையில் வாடும் வக்கீலாய் இருப்பார்.

## 332. காவல்துறை அதிகாரி ஆகும் யோகம் யாருக்கு?

துலாம் இலக்கினமாய் இருந்து பத்தில் குரு, செவ்வாய், நான்கில் சந்திரன், சனி இருந்தால் காவல்துறை அதிகாரியாகலாம்.

## 333. மந்திரியாகும் யோகம் யாருக்கு?

1. இராஜகிரகங்களான குரு, சந்திரன், செவ்வாய், சூரியன் ஆகியவர்கள் பரிவர்த்தனை அடைந்து மேஷம், கடகம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மீனம் ஆகியவற்றுள் ஏதாவதொன்று இலக்கினமாய் அமைந்தால் அவர் மந்திரியாவார். புதன் உச்சம் பெற்றுப் பத்தில் இருந்தால் கல்வி மந்திரியாவார். செவ்வாய் உச்சம் பெற்று பத்தில் நின்றால் போலீஸ் அல்லது இராணுவ மந்திரியாவார். சுக்கிரன் பத்தில் உச்சம் பெற்றால் போக்குவரத்து அல்லது இரயில்வே மந்திரியாவார். அதேபோல், கன்னி இலக்கினமாய் இருந்து நான்கில் சூரியன், சுக்கிரன், புதன், ஐந்தில் செவ்வாய்; ஏழில் சந்திரன், ஒன்பது அல்லது பத்தில் சனி; மூன்றில் குரு அமர்ந்தால் முதல் மந்திரியாவார். அதே போல், கடக இலக்கினமாய் இருந்து நான்கில் சனி; ஐந்தில் குரு, பதினொன்றில் சந்திரன்; பத்தில் சூரியன்; ஏழில் செவ்வாய்; பன்னிரண்டில் புதன் நின்றால் முதல் மந்திரியாவார்.

## 334. பின்னணிப் பாடகர், இசை அமைப்பாளராக யாருக்கு யோகம் உண்டு?

கன்னி இலக்கினம் மூன்றில் சுக்கிரன், புதன்; ஒன்பதில் குரு, சந்திரன் நின்றாலும்; எட்டில் சுக்கிரன், புதன், சந்திரன் நின்றாலும், பன்னிரண்டில் சுக்கிரன் இரண்டில் புதன் நின்றாலும் இந்த யோகம் ஏற்படும். ஆனால், இரண்டில் புதன் பகை பெற்றால் வறுமைப்பாடகராய்க் காலம் தள்ளுவார். பொதுவாக, மேஷம், ரிஷபம், மிதுனம், கன்னி, விருச்சிகம், கும்பம் ஆகிய ஆறு இலக்கினங்களில் மட்டுமே பெரும்பாலான இசை மேதைகள் பிறந்துள்ளனர்!

## 335. ஞானியாகும் யோகம் யாருக்கு?

1. ஏழு கிரகங்கள் நீசம் பெற்றால் அல்லது ஐந்து கிரகங்கள் நீசம் பெற்றால் ஞானியாவார். 2. எட்டில் சுக்கிரன், ஆறில் குரு, இரண்டில் கேது, மூன்றில் சந்திரன் நின்றால் ஞானியாவார். 3. ஒன்பதில் சந்திரன், கேது நின்று குரு பார்த்தாலும், ஐந்தில் சந்திரன், கேது நின்று குரு பார்த்தாலும் ஞானியாவார்.

## 336. போலிச்சாமியார் ஜாதகம்!

கும்ப இலக்கினம், இரண்டில் இராகு; ஏழில் வக்ரம் குரு; பதினொன்றில் செவ்வாய், சுக்கிரன், சந்திரன், புதன், சனி; பத்தில் சூரியன் நின்றால் பல கோடிக்கு அதிபதியாய் வெளிநாட்டில் வாசம் செய்யும், காமக்கடலில் குளிக்கும் போலிச்சாமியாராய் இருப்பார். அவருக்கு வால் பிடிக்கப் பலர் இருப்பார்கள். அவர் தேசத்துரோகியாய் இருப்பார். இது புகழ்பெற்ற காமயோகி ஜாதகம் ஆகும்!

## 337. அண்ணியரே தாரமாகும் யோகம் யாருக்கு?

1. விருச்சிக இலக்கினம்; ஐந்தில் சுக்கிரன், புதன்; பதினொன்றில் குரு, செவ்வாய் நின்றால் அண்ணியே தாரமாய் வாழ்வாள். 2. இரண்டில் சந்திரன், மாந்தி, செவ்வாய்; எட்டில் குரு; ஆறில் சுக்கிரன் நின்றால் அண்ணியே தாரமாவாள். 3. ஒன்பதில் சுக்கிரன்; பத்தில் குரு; மாந்தி, மூன்றில் சனி; ஐந்தில் செவ்வாய், இராகு இருந்தால் அண்ணியும், சின்னம்மாவும் தாரமாவார்கள்!

## 338. காம குணம் யாருக்கு?

மிதுனம், ரிஷபம், துலாம் ஆகிய இராசிகளில் சுக்கிரன் இருந்தால் காம குணம் அதிகம் இருக்கும்.

## 339. மனைவி பற்றிய அந்தரங்க விஷயங்கள்!

ஒருவர் ஜாதகத்தில் ஏழாம் இடத்துக்கு உரிய கிரகம் சுபகிரத்தோடு சேர்ந்திருந்தால் மனைவி மிகப்பெரிய ஸ்தாபனங்களை உடையவளாய் இருப்பாள். அதேபோல், ஏழாம் இடத்து அதிபதி பாவ கிரகத்தோடு சேர்ந்திருந்தால், மனைவி சிறப்பான மர்மஸ்தானத்தைக் கொண்டவளாய் இருப்பாள். அதேபோல், மிதுனம், கன்னி, கடகம், மகரம் கும்பம் ஆகிய இராசிகளைச் சனி அடைந்திருந்தால் மனைவி குறுகலான மர்ம ஸ்தானத்தைக் கொண்டவளாய் இருப்பாள். அதேபோல், ஏழாம் பாவத்தைச் சந்திரன் பார்த்தாலும் அல்லது சுக்கிரன் ஜலராசியை அடைந்திருந்தாலும் மனைவியின் பெண்குறி நனைந்திருக்கும்.

## 340. புதையல் தரும் ஜாதகம்!

சூரியனுக்குப் பன்னிரண்டில் சனி இருக்கப் பிறந்த ஜாதகர்களாலே புதைந்து கிடக்கும் பெரும் புதையல், பொக்கிஷங்கள் ஆகியவற்றை வெளிக்கொணர முடியும். அவர்களின் கைகளுக்கு மட்டுமே புதையல் கிட்டும்!

## 341. செவ்வாய் தரும் எச்சரிக்கை!

கோசாரப்படி செவ்வாய் பன்னிரண்டு வீடுகளுள் எந்த வீட்டில், அதிக காலம் தங்குகிறதோ, அந்தக்காலம்

ஜாதகர்களுக்கு மட்டுமன்று உலகுக்கே இரணகாயத்தைப் பெருக்கும் காலமாகும்!

### 342. செவ்வாயின் சிறப்பு!

செவ்வாயின் உச்ச வீடு, மகரம். செவ்வாயின் நட்சத்திரமான அவிட்டத்தின் முதல்பாதமும், இரண்டாம் பாதமும் மகர இராசியில் உள்ளன. வேறு எந்தக் கிரகங்களுக்கும் இப்படிப்பட்ட சிறப்புகள் இல்லை!

### 343. பிற ஆடவரை விரும்பும் மனைவி!

செவ்வாய்க்கு ஏழுக்குடையவனாய் குருநீசத்தில் இருந்து அல்லது ஆறாம் வீட்டில் இருந்தால் மனைவி பிற ஆடவரை விரும்புவாள்.

### 344. கணவனைக் கொலை செய்யும் மனைவி!

புதன் ஏழுக்குடையவனாகி, நீசவீடு, பகை வீடுகளில் பாவக்கிரகங்கள் தங்க அல்லது பாவக் கிரகங்களின் பார்வை கிடைத்தால், அந்தப் பெண் கணவனைக் கொலை செய்வாள்.

### 345. க்ஷயரோகத்தால் பாதிக்கப்படும் ஜாதகர் எவர்?

குருபகவான் பாவக்கிரகங்களான சனி, செவ்வாய், இராகு, கேது ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றுடன் சேர்ந்து இலக்கினத்திற்கு இரண்டாமிடம், ஆறாமிடம், எட்டாமிடம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றில் இருந்து பாவக்கிரகங்களின் பார்வையும் பெற்ற அமைப்புடைய ஜாதகர் க்ஷயரோகத்தால் கஷ்டப்படுவார்.

## 346. பூமி இலாபம் யாருக்கு கிடைக்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் பத்தாம் வீட்டில் செவ்வாய் இருந்தாலும், செவ்வாய் பார்வையிட்டாலும், அவர் பூமி தொடர்பான இலாபம் கிடைத்து மகிழ்வார்!

## 347. மெய்ஞ்ஞானம் உணர்த்திய விஞ்ஞானம்!

பல ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் சித்தர்கள், இங்கிருந்தபடியே யோக நிலையில் தங்கள் மெய் ஞானத்தால் சிவப்பான கிரகம் எனக் கண்டு 'செவ்வாய்' என அதற்குப் பெயரிட்டனர். அதனை இன்று விண்கலங்களை அனுப்பி, உண்மை என நிரூபித்துள்ளன. அமெரிக்க வானவியல் விஞ்ஞானிகளான வில்லியம் டி. பிளம்மர், ராபர்ட்கார்சன் ஆகியோர், சூரியனின் மாற்றுக்குறைவான ஒரு ஆக்ஸைடு செவ்வாய்க் கிரகத்திற்குச் சிவப்பு நிறத்தை அளிக்கிறது எனக் கண்டுபிடித்துள்ளார்கள் இன்று!

## 348. பன்றி தரும் சகுனம்!

நாம் ஒரு காரியத்தை நினைத்துச் செல்லும் சமயம், பன்றி எதிர்நோக்கி வந்தால் நல்ல சகுனம். செல்லும் வேலை மிகச்சிறப்பாய் வெற்றி பெறும்!

## 349. நட்சத்திரம் தரும் சகுனம்!

இரவு நேரத்தில் மனத்தில் எதையாவது நினைத்துக்கொண்டு இருக்கும் பொழுது, விண்கற்கள் கீழே விழுவதைக் கண்ணால் கண்டால் நினைத்த காரியம் வெற்றி பெறும்!

## 350. எதிரியால் தம் பொருளை இழப்பவர் யார்?

ஒருவருக்குப் பதினொன்றாம் வீட்டுக்குரிய கிரகம் ஆறாம் வீட்டிலும்; ஆறாம் வீட்டுக்குரிய கிரகம் பதினொன்றாம் வீட்டிலும் இருந்தால், ஜாதகர் நாற்பது வயதுக்குள் தம் பொருள்கள் எல்லாவற்றையும் எதிரிகள் மூலம் இழந்து விடுவான்!

## 351. கடுமையான நோய் எப்போது ஏற்படும்?

ஒருவருக்கு ஆறுக்குடையவர் நீசமடைந்திருந்தால், ஆறுக்குடையவரின் திசை நடக்கும் காலத்தில் கடுமையான நோய் உண்டாகும்! ஆறுக்குடையவர் உச்சமானால் வியாதி ஏற்படாது!

## 352. குஷ்ட நோய் யாருக்கு ஏற்படும்?

ஜென்ம இலக்கினத்திற்கு ஏழில் இலக்கினாதிபதியும், இராகுவும் சேர்ந்து நிற்க எட்டில் சனி நிற்கும் அமைப்புடைய ஜாதகர், குஷ்ட நோயால் அவதிப்படுவார்!

## 353. நரம்புக்கோளாறு யாருக்கும் ஏற்படும்?

ஆறாம் வீட்டதிபனும் இராகுவும் சேர்ந்து இரண்டாம் வீட்டிலிருக்கவும், ஜென்ம இலக்கினத்தில் செவ்வாய் இருந்து சூரியன், சனி, இராகு ஆகிய பாவக்கிரகங்களின் பார்வையைப் பெறும் அமைப்பினை உடைய ஜாதகர் நரம்புக் கோளாறினால் துன்பப்படுவார்.

## 354. கிரகங்களும் இராகங்களும்!

ஒவ்வொரு கிரகத்திற்கும் ஓர் இராகம் உள்ளது. அந்த இராகத்தினால் அந்தக் கிரகங்களைச் சந்தோஷப்படுத்தலாம். 1. சூாயின் - ஹரிகாம்போதி 2. சந்திரன் - வனஸ்பதி 3. செவ்வாய் - காமவர்த்தினி 4. புதன் - சக்ரவாகம் 5. வியாழன் - கோசலம் 6. சுக்கிரன் - தர்மவதி 7. சனி - தடாகப் பிரியா.

## 355. இராசிகளும், இராகங்களும்!

ஒவ்வோர் இராசிக்கும் ஓர் இராகம் உள்ளது. அந்த இராகத்தால் அந்த அந்த இராசிக்குடையவர் பாடித் தங்களது இராசிநாதனைச் சந்தோஷப்படுத்தலாம். 1. மேஷம் - லதாங்கி இராகம் 2. ரிஷபம் - வாஸஸ்பதி இராகம் 3. மிதுனம் - கிர்வாணி 4. கடகம் - ஹேமாவதி இராகம் 5. சிம்மம் - கல்யாணி ராகம் 6. கன்னி - ஷன்முகப்பிரியா இராகம் 7. துலாம் - ராகவர்த்தனி இராகம் 8. விருச்சிகம் - நடபைரவி இராகம் 9. தனுசு - தர்மவதி இராகம் 10. மகரம் - ஞானமூர்த்தி இராகம் 11. கும்பம் - சரசாங்கி இராகம் 12. மீனம் - சாருகேசி இராகம்.

## 356. அப்துல் காதரும் அமாவாசையும்!

அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் என்ன சம்பந்தம் என்பார்கள். சம்பந்தம் உண்டு! முஸ்லிம்கள் தாங்கள் நோன்பு (விரதம்) இருப்பதற்குக் கணக்கிடுவது அமாவாசையை அடுத்து அமையும் மூன்றாம் நாளைத்தான்! அதனைத்தான் நமது முன்னோர்கள் மறைமுகமாய் இந்தப் பழமொழி மூலம் நமக்கு உணர்த்தியுள்ளார்கள்.

## 357. விருத்தியாகாத வீடுகள்!

1. கோபுரத்தின் நிழல் விழும் வீடும், 2. கோபுரத்திற்கு நேரில் இருக்கும் வீடும் 3. விநாயகர், சிவன் ஆகிய ஆலயங்களுக்கு முன்புள்ள வீடுகளும் 4. விஷ்ணு ஆலயத்தின் பின்புறமுள்ள வீடுகளும் விருத்தியம்சம் பெறா. எனவே, இத்தகைய வீட்டில் வசிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

## 358. 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' என்பதன் பொருள் என்ன?

முழுமையான சூரிய கிரகணம் நடைபெறும் நாளன்று மட்டுமே நாம் புதன் கிரகத்தைப் பார்க்க முடியும்! சூரியனின் மேற்புறத்தில் மஞ்சளாய் டென்னிஸ் போன்ற உருவத்தில் ஒரு கிரகம் தெரியும். அதுதான் புதன் கிரகம் 'பொன்' என்பது வியாழன் கிரகத்தைக் குறிக்கும். வியாழக்கிரகத்தைப் பார்த்துவிடலாம். ஆனால், புதன் கிரகத்தைப் பார்த்துவிட முடியாது? இவ்வுண்மையை விளக்கவே 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' எனக் கூறினார்கள், நம் முன்னோர்கள்!

## 359. காந்திக்கு மரணம் நேரும் என முன்னரே கூறிய ஜோதிடம்!

காந்தி சுடப்பட்டே மரணமாவார் என்பதை நமது ஜோதிடக்கலை முன்பே கூறியுள்ளது. அதுபற்றி இந்தியாவிற்கான வெளிநாட்டுத் தூதராய் இருந்த 'ஜான் கென்னட்' என்பவர் தாம் எழுதியுள்ள 'இந்தியன் அஸ்ட்ராலஜி அண்டு பால்மிஸ்ட்ரி' என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அதனைத் தெரியப்படுத்தியவர் திருத்தணி கோவில் அருகே

வாழ்ந்த ஜோதிடர் ஒருவர், அவரைக் 'காந்தி ஜோசியர்' என்றே வழங்கினார்கள். அவர் இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்டாலும் அவர் வீட்டை இன்றும் 'காந்தி ஜோசியர் வீடு' என்றே குறிப்பிடுகின்றார்கள்.

## 360. குருபகவான் தரும் எச்சரிக்கை!

ஒருவரின் ஜாதகத்தில் குருபகவான் மூன்றில் இருந்துவிட்டால், அந்த ஜாதகரின் குடும்பம் விருத்திக்கு வராது! அதற்கு ஒரே பரிகாரம், அந்த ஜாதகரைக் குடும்பத்தை விட்டுப் பிரித்து வேறு இடத்தில் வளரும்படியும் படிக்கும்படியும் செய்வதுதான். அவரைக் குடும்பத்தில் வளர்க்கக்கூடாது! அதேபோல் கோசாரப்படி குரு மூன்றாம் இடத்துக்கு வரும்போது (இராசியில் இருந்து) மிகவும் வேதனையைக் கொடுத்துவிடும். மூன்றாம் இடத்துக்கு குரு குந்தி அழவைத்து விடும் என்பார்கள்.

## 361. எந்த ஜாதகரை நாய் துரத்தும்!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாம் இடத்தில் நீசம் பெற்ற கிரகம் இருந்தாலும் இரண்டுக்கு உடையவர் நீசம் பெற்றிருந்தாலும் அவரை நாய் துரத்தும். அவரைக் கண்டால் நாய் குரைக்கும்.

## 362. பெருமைக்குரிய நட்சத்திரங்கள்!

இருபத்தேழு நட்சத்திரங்களுள் 'திரு' என்னும் பெருமை உடையது மூன்று நட்சத்திரங்களே! சிவபெருமான் அவதரித்த 'திருவாதிரை' நட்சத்திரமும், ஸ்ரீமகா விஷ்ணு அவதரித்த 'திருவோணம்' நட்சத்திரமும் திரு மூலமும் ஆகும்!

## 363. சிறப்புப் பெறும் மழை நீர்!

சித்திரை மாதத்தில் அசுவினி நட்சத்திரத்தில் சூரியன் சஞ்சரிக்கும் போது பெய்யும் மழையின் நீருக்கு 'கங்கோதகம்' 'ஹம்ஸோதகம்' என்னும் விசேஷப் பெயர்கள் உண்டு.

## 364. எவர் புகழ்பெற்ற ஜோதிடர் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாம் இடத்தில் குருவும் சுக்கிரனும் இருந்தால் அவர் மிகப்பெரிய ஜோதிட வித்துவானாய் மாறி உலகப்புகழ் பெறுவார்!

## 365. 'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்!' இதன் அர்த்தம் என்ன?

'சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்' என்பது நம்மிடையே வழங்கி வரும் ஒரு சாதாரணப் பழமொழி ஆகும். அதன் பொருளையும் நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறோம். அதன் உண்மையான பொருள் என்ன? பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் முருகனைத் தியானித்து, 'சஷ்டி திதி' அன்று விரதம் இருந்தால் 'அகப்பையில்' அதாவது, 'கருப்பையில்' குழந்தை உண்டாகும் என்பதுதான்!

## 366. முதலில் செய்யுங்கள்!

எந்த ஒரு காரியத்தைச் செய்யும்போதும் கீழ்க்கண்ட வழிபாட்டை அவசியம் செய்யவேண்டும் என்றும், ஒவ்வொரு மனிதனும் கீழ்க்கண்ட வழிபாட்டை வருடம் தவறாமல் செய்யவேண்டும் என்றும், அப்படிச் செய்தால்தான் குடும்பமும், வம்சமும் தழைக்கும் என்றும் நமது ஆன்மிக ஞானிகள்

கூறியுள்ளார்கள். எனவே, ஒவ்வொரு மனிதரும் கீழ்க்கண்ட வழிபாட்டை அவசியம் செய்யவேண்டும். அவை:

1. விநாயகர் வணக்கம் 2. குலதெய்வ வணக்கம் 3. கிராமதேவதை வணக்கம் 4. வீட்டுத் தெய்வ வணக்கம் 5. இறந்த முன்னோர்களுக்காகச் செய்யப்படும் திவச வணக்கம் (திதி வழிபாடு) 6. அமாவாசை விரதம் முதலியனவாகும்.

## 367. அனுபவிக்கக் கூடாதவை!

1. சிவன் சொத்து 2. பங்காளி சொத்து 3. பிராமணர்கள் சொத்து 4. பிள்ளை இல்லாதவர் சொத்து 5. கோவில் சொத்து 6. கருமிகள் சொத்து ஆகியவற்றை அனுபவித்தால் பல வேதனைகளையும், சோதனைகளையும் அனுபவிக்க நேரிடும். எனவே, எக்காரணத்தைக்கொண்டும் மேற்கண்ட சொத்துகளை அனுபவிக்கக்கூடாது எனவும், அதற்குப் பரிகாரமே இல்லை எனவும், நம் ஆன்மிக ஞானிகள் கூறி உள்ளார்கள்!.

## 368. எட்டுக் கிரகங்கள் ஓர் இராசியில் இருந்தால் என்ன பலன்?

எட்டுக் கிரகங்கள் ஒரே வீட்டில் சேர்ந்திருந்தால் அவன் ஞானியாவான்; ஆனால், தரித்திரவானாய் இருப்பான். இது போன்ற அமைப்பு 1880ஆம் ஆண்டு முதல் 2000ம் ஆண்டு வரை ஒரே ஒரு முறைதான் ஏற்பட்டுள்ளது. அதாவது, '4-2-1962'ஆம் தேதி மகர இராசியில் எட்டுக் கிரகங்கள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. அதாவது, 'பிலவ' வருடம் தைமாதம் 22ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, (4-2-1962) காலை ஒரு குழந்தை பிறந்து இருந்தால், இலக்கினமும் மகரமாய் இருக்கும். **கூட்டுக்கிரகங்கள் இருந்தால் பெரும்பாலும் யோகங்கள் எல்லாம்**

கெட்டுவிடும். இந்த ஜாதகத்தில் அதியோகக் காரணனான சுக்கிரன், யோகக் காரணனான புதன் எல்லாம் கெட்டுவிடும். சந்திரமங்கள யோகம், குருமங்களயோகம், குருசந்திர யோகம், தர்ம கர்மாதிபதி யோகம் எல்லாம் கெட்டிருக்கும். இந்த நாளில், இந்த ஜாதகத்தில் பிறந்த குழந்தை இன்று பிச்சை எடுக்கும்!

## 369. சாஸ்திரம் கூறும் எச்சரிக்கை!

ஒருவர் தமது வீரியத்தைத் தரையில் விடலாகாது; அவ்வாறு விட்டால் பூமாதேவியை அவமதித்த பாவத்தை அடைந்து நரகத்தை அடைவார் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. எனவே, அலட்சியமாய் இல்லாமல், ‘விந்து விட்டவன் நொந்து கெட்டான்’ என ஆகாது இருக்க வேண்டும்.

## 370. சிறப்பான தை அமாவாசை!

ஸ்ரீபவ ஆண்டு, தைமாதம் 16 ஆம் தேதி (30.1.95) திங்கட்கிழமை அமைந்த தை அமாவாசைக்கு ஒரு தனிச் சிறப்பே உண்டு. அதாவது அன்று மௌனி அமாவாசையும் ஸோமவதி அமாவாசையும் சேர்ந்து அமைந்துள்ளன.

அதாவது, தைமாதத்திலும் திங்கள் கிழமை அமாவாசை அமைவது மிகச்சிறப்பாகும். இவ்வாறு நாற்பது ஆண்டுகளுக்கு ஒருமுறையே சேர்ந்து அமையும். இந்த நாளில் வடநாட்டில் அலாகாபாத்தில் உள்ள திரிவேணி சங்கமத்திலும், தமிழ்நாட்டில் இராமேஸ்வரம், வேதராண்யம், கோடியக்கரை, பூம்புகார் ஆகிய இடங்களில் கடலிலும் நீராடினால் மிகுந்த புண்ணியமும் சக்தியும் கிட்டும்.

## 371. அமாவாசை அதிசயம்!

1995 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அந்த வருடம் பிப்ரவரி மாதத்தில் அமாவாசையே இல்லை! அதற்குப் பதிலாய் அடுத்து மார்ச்சு மாதத்தில் இரு அமாவாசைகள் அமைந்தன! இது போன்ற ஓர் அதிசய அமைப்பு முப்பத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கவில்லை!

## 372. நட்சத்திரமும் கிரகங்களும்!

ஒருவர் ஜாதகத்தில் எந்தக் கிரகம் அதிகப் பலம் பெற்றிருக்கிறதோ அதன் அதிதேவதையை வணங்கினால் சகல நன்மையும் ஏற்படும். ஆனால், நட்சத்திர கதியைப் பார்க்க வேண்டும். அசுவினி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, கார்த்திகை இரண்டு; மிருகசீரிஷம் மூன்று, புனர்பூசம் நான்கு; மகம் ஒன்று; உத்திரம் இரண்டு; சித்திரை மூன்று; விசாகம் நான்கு; மூலம் ஒன்று; பூரட்டாதி நான்கு ஆகியவற்றில் பலம்பெற்ற கிரகம் சஞ்சரித்தால் பலன் ஏற்படாது; கிரகங்கள் திணறும். இதற்குத் தக்க பரிகாரங்கள் செய்ய வேண்டும். அப்போதுதான் வாழ்வில் நல்ல பலன் நடக்கும்.

## 373. சித்தர்களுக்கு உரிய இராசி எது?

துலாஇராசி சிம்மஇராசி கன்னிஇராசி, கடகஇராசி, ஆகியவற்றில் பிறந்தவர்களே மெய்ஞ்ஞானம் கற்று ரிஷயாய், சித்தராய் ஆகத் தகுதி உடையவர்கள் என்று இராமதேவர் என்னும் யாகோபுசித்தர் தம் ‘வைத்திய சிந்தாமணி 700’ என்னும் நூலில் கூறியுள்ளார்!

## 374. புதுப் பொருத்தம் தெரிந்துகொள்ளுங்கள்!

மணமகனையும் மணமகளையும் தேர்வு செய்யும்போது வெறும் ஜாதகப் பொருத்தத்துடன் இருந்து விடாமல் அவர்களின் இரத்தப் பொருத்தத்தையும் பார்க்கத் தவறக்கூடாது. அதனால் இரத்தச்சோகை, இரத்தப்போக்கு, குழந்தை இறத்தல் போன்றவற்றைத் தவிர்க்க முடியும். இந்த இரத்தப் பொருத்தமின்மையால் பிரசவ காலங்களில் கடும் விளைவுகள் ஏற்படும். ‘ஆர். எச். நெகட்டிவ்’ இரத்தம் கொண்ட பெண்ணுக்குப் பிறக்கும் குழற்தைகளுக்குக் கடுமையான நோய்கள் ஏற்பட வாய்புண்டு. எனவே, அவசியம் மணமக்களின் இரத்தத்தைப் பரிசோதனை செய்த பிறகு, அவர்களை மணமக்களாய்த் தேர்வு செய்ய வேண்டும். இது ஜோதிட விஞ்ஞானம் கூறும் ஒரு முக்கிய எச்சரிக்கை ஆகும்!

## 375. எவர் இசை மேதையாவர்?

ஒன்றாம், இரண்டாம் அதிபதிகளுடன் குருவும் ஐந்தில் இருந்தால், ஐந்துக்குடையவர் உச்சமாய் இருந்தால் சுக்கிரன் நட்பு வீட்டிலும் இருந்தால் அவர்கள் இசையால் பெரும்புகழ் பெறுவார்கள்!

## 376. ஜோதிட சங்கீத ஒற்றுமைகள்!

1. ஜோதிடத்தில் இரண்டாவது இராசி ரிசபம்; சங்கீதத்தில் இரண்டாவது சுரம் ரிசபம் ஆகும். 2. ஜோதிடத்தில் ஆரம்ப கிரகங்கள் ஏழு; சங்கீதத்தில் ஸ்வரங்கள் ஏழு. 3. இராசிகளில் 12; சங்கீதபேதஸ்வரம் 12 ஆகும்.

## 377. பரணியில் பிறந்தவர்கள் தரணியை ஆள்வார்கள்

'பரணியில் பிறந்தவர்கள் தரணியை ஆள்வார்கள்' என்பதற்கு, பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் அரசன் அளவிற்குப் புகழுடனும், செல்வாக்குடனும் பொருள் வசதியுடனும் வாழ்வார்கள் என அர்த்தம் கொள்கிறார்கள். 'பரணியில் சென்றவன் தரணியை ஆள்வான்' என்பதே பழமொழியின் சரியான வடிவம். இதன் பொருள், ஓர் அரசன் பரணி நட்சத்திரத்தில் போர் செய்யப் புறப்பட்டுச் சென்றால், அவன் வெற்றி பெற்றுத் தரணியை ஆள்வான் என்பதாகும்.

## 378. தோஷம் தரும் நட்சத்திரங்கள்!

ரேவதி அந்தத்தில் இரண்டு நாழிகை, ஆயில்யம் நான்காம் கால் அந்தத்தில் இரண்டு நாழிகை, மகம்முன் இரு நாழிகை, அசுவினி முற்பாதம் முன் இரு நாழிகை, கேட்டை அந்தத்தில் இரு நாழிகை, மூலம் முன் இரு நாழிகை ஆகிய வேளைகளில் பிறந்த பிள்ளைக்கு மிகுந்த தோஷம் உண்டு. அந்தத் தோஷம் நீங்குவதற்குப் பரிகாரம் பின்வருமாறு: சாதுவான கறவைப் பசுவைப் பின்னங்கால் அடிமடி தாங்க முன்னங்கால் நடுவாகப் பிள்ளையை வாங்கிப் பசுவின் முகத்தில் வைத்து அந்தப் பிள்ளையை அப்பசு ஈன்றதாய்க் கருதி வளர்த்து வர வேண்டும். மேற்கண்ட நட்சத்திரங்களில் பிறந்த குழந்தைகளுக்கு அவசியம் இந்த 'கோமுசாந்தி' செய்தே ஆக வேண்டும்.

## 379. எவர் சோதிடத்தில் புலி ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டுக்குடையவர் புதனுடன் கூடி அவர் உச்ச புதன் அல்லது ஆட்சி புதனாகிக் குரு பார்க்க, சனி

ஐந்துக்குடையவருடன் கூடி இருந்தால், அவர் சோதிடத்தில் புலியாய் விளங்குவார்!

## 380. எவர் நகைச்சுவைக் கலைஞர் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டுக்குடையவர் குரு, சுக்கிரன், புதன், சந்திரன் ஆகியோருடன் கூடி, ஒன்று, ஐந்து, ஒன்பதுக்கு உடையவரைப் பார்த்தால் அவர் கதாகாலட்சேபம், மிமிக்ரி, விகடம் மூலம் சம்பாதிப்பார். அவர் நகைச்சுவைக் கலைஞராய்ப் பரிமளிப்பார்.

## 381. தோஷம் நீங்கிவிடும் ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் குரு, சுக்கிரன், புதன் ஆகியன ஒன்று, நான்கு, ஏழு, பத்தில் இருந்தால், அந்த ஜாதகத்தில் உள்ள எல்லா தோஷங்களும் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

## 382. ஒசிவாகனம் யாருக்கு வாய்க்கும்?

இராகு அல்லது கேதுவுடன் குரு சேர, குரு நின்ற இராசிக்கு உடையவன் சுக்கிரனுடன் சேர, வாகன யோகமுண்டு அல்லது கண்டிப்பாய் ஓசி வாகனமாவது கிடைக்கும்!

## 383. கால்நடைச் செல்வம் எவருக்கு வாய்க்கும்?

ஒருவரின் இராசிக்குப் பத்தாவது இராசியில் சூரியன் இருந்து, அந்த இராசிக்குக் குருபகவானின் பார்வை உண்டானால், அவர் நிறைந்த பசுச் செல்வங்களைப் பெற்று ஜீவனம் செய்வார்.

## 384. எவருக்கு மூன்று மனைவியர் வாய்ப்பர்?

ஒருவரின் ஜாதகத்தில் குருவுக்கு ஐந்தில் சனி இருந்து, ஐந்தாமிடத்தில் பாவிகள் இருந்தால் அவருக்கு மூன்று மனைவியர் உண்டு. வேற்றுப் பெண்களுக்கு இத்தகைய ஜாதகர் மூலம் குழந்தைப் பேறு வாய்க்கும்.

## 385. தாய், தந்தையரோடு வாழமாட்டார்?

ஒருவரின் ஜாதகத்தில் சந்திரனுக்கு ஐந்து அல்லது ஒன்பதில் சனி இருந்தால் அவர்தம் தாய், தந்தையரோடு சேர்ந்து வாழமாட்டார்!

## 386. எவர் நூறு வயதுக்கு மேல் வாழுவார்?

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய் பலம் பெற்று உச்சவீடு, சொந்தவீடு, கேந்திரம் திரிகோணத்தில் இருந்து, சுபர்பார்வை பெற்றிருந்தால் அவர் நூறு வயதுக்கு மேல் வாழ்வார்.

## 387. வாக்குத் திறமையால் புகழ் பெறும் ஜாதகர் யார்?

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டாம் இடத்து அதிபர் கேந்திரத்தில் இருந்தாலும் அல்லது உச்ச வீட்டில் இருந்தாலும், அல்லது இரண்டுக்குடையவர் சுக்கிரனுடனும் புதனுடனும் கூடி உச்ச வீட்டில் இருந்தால், அவர், தம் திறமையால் புகழ் பெறுவார்.

## 388. மூல நட்சத்திரம் தெரிவிக்கும் இரகசியம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சந்திரன் மூல நட்சத்திரத்தில் இடம் பெறக்கூடாது என்பது பண்டைய காலம் தொட்டு நம்மிடையே வழக்கத்தில் இருந்து வருகிறது. அதற்குக்

காரணம், தனுசு இராசியில் மூலம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணிற்கு ஏழாம் இடமாய் அமைவது புதன் வீடாகிய மிதுன இராசியாகும். அந்தப் புதன் கிரகங்களின் காரகப்படி மாதுலகாரகன் என்றும் வழங்கப்படுவார். அந்தப் புதனே ஜாதகத்தில் மாமனார் மற்றும் மாமியார் ஆகியோரின் நிலையை அறியவும் பயன்படுகிறார். எனவே, மூலநட்சத்திரப் பெண்ணிற்குக் களத்திரஸ்தானமாய்ப் புதனுடைய வீடே அமைவதால், அந்தப் பெண்ணின் கணவன் தன் மாமனார் மற்றும் மாமியார் ஆகியோர் தயவிலேயே காலம் கழிக்க நேரிடும் என்பதாலேயே, மூலநட்சத்திரத்தில் பெண் எடுக்க இன்றும் சிலர் தயங்குகின்றனர். இப்போதுங்கூட மாமனார் வீட்டுடன் இருக்க மருமகன்கள் தயங்குவதும், அப்படி ஒரு பழக்கத்தை ஆண்டாண்டு காலமாய்க் கடைப்பிடித்து வருவதும் ஒரு காரணமாகும்!

## 389. பிறை கூறும் சோதிடம்!

மார்கழி மாதம் வளர்பிறையில் பிறைச்சந்திரனின் வடகோடு உயர்ந்து காணப்பட்டால் அதற்கு அடுத்த ஆண்டு வெள்ளம் ஏற்படும்.

## 390. எக்குழந்தை தந்தையிடம் வளராது?

ஒரு குழந்தையின் ஜாதகத்தில் செவ்வாய்க்குப் பதினொன்றில் சந்திரன் அமையப்பெற்று, அந்தப் பதினொன்றில் உள்ள சந்திரனைச் சுபர்பார்வை செய்தால், அந்தக் குழந்தை தந்தையிடம் வளராது, மற்றொருவரால் தத்தெடுத்துப்பட்டு வளர்க்கப்படும்.

## 391. இராஜயோக பிள்ளை!

ஒருவர் ஜாதகத்தில் புத்திரஸ்தானாதிபதி மற்றும் புத்திரகாரகர் ஆகிய குரு ஆகியோர் ஆட்சி, உச்சம் பெற்றாலும், ஐந்தாம் வீட்டு அதிபதி பதினோராம் வீட்டில் பலம் பெற்றுக் காணப்பட்டாலும் அந்த ஜாதகர் தம்மை விட இருபது மடங்கு இராஜயோகங்களைப் பெறும் பிள்ளைகளைப் பெற்றெடுப்பார்.

## 392. தோஷம் தரும் நாள்!

புதன் மற்றும் சுக்கிரன் கிரகங்களுக்கு இடையே சூரியன் வரும்காலம், எந்த நாளாயிருந்தாலும் நட்சத்திரமாய் இருந்தாலும் தோஷம் ஆகும். அக்காலத்தில் தானியம் சேமித்தல் கூடாது; வீடு குடி புகுதல் கூடாது; பந்தக்கால் நடுதல் கூடாது!

## 393. உடலுக்கு ஒன்பது வாசல்!

மனிதர்களுக்கு ஒன்பது வாசல் உள்ளது. அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கிரகம் ஆட்சி செய்கின்றது. அவையாவன: 1. சூரியன் - இடக்கண் வாசல் 2. சுக்கிரன் - வலக்கண்வாசல் 3. சந்திரன் - வாய் வாசல் 4. புதன் - இடமூக்கு வாசல் 5. செவ்வாய் - வலமூக்கு வாசல் 6. வியாழன் - வலக் காதுவாசல் 7. சனி - இடக்காது வாசல் 8. இராகு - மலவாசல் 9. கேது - சிறுநீர் வாசல் ஆகும். இவற்றுள் அடைக்கப்பட்ட வாயில் ஆகிய கொப்பூழை குளிகன் அல்லது மாந்தி ஆட்சி செய்கிறது! உயிர் பிரியும்போது எந்தத் திசை, எந்தப் புத்தி நடக்கிறதோ அதற்குரிய வாயில் வழியாக உயிர் பிரியும்!

## 394. தென்னைமட்டை இரகசியம்!

தென்னமட்டை ஒருவரின் தலையில் விழுவது நல்லதன்று! அது மரணத்துக்குச் சமமாகும். 'தென்னைமட்டை தலையில் விழுந்தால் தேசம் பூரா அழிந்துவிடுமே' இது விஜய நகரத்தில் பாடப்படும் ஒரு கர்ண பரம்பரை பாட்டு ஆகும். விஜயநகர சாம்ராஜ்ஜியம் அழியக் காரணம், அரசரின் தலையில் தென்னை மட்டை விழுந்ததே! அதே போல், திருநெல்வேலியில் ஆட்சி செய்த கட்டபொம்மன் தலையில் தென்னமட்டை விழுந்ததனால் அவர்தம் ஆட்சியை இழந்து தூக்கில் தொங்கினார்!

## 395. பூசத்து பழையது பூனை கூடத் தின்னாது - இதன் பொருள் என்ன?

'பூசத்துப் பழையது பூனை கூடத் தின்னாது' என்பது பழமொழி. இதற்குச் சரியான பொருள் தைபூசத்துப் பழையதைப் பூனைகூடத்தின்னாது என்பதாகும். தைமாதம் அறுவடைக்காலம். அதுவரை விவசாயிகள் பசிபட்டினியில் கிடைத்ததை உண்பார்கள். பழைய சோற்றை உண்பார்கள். தவிட்டு நெய், கிழங்குகளையும் சமைத்து உண்பார்கள். தைமாதத்தைப் பூச நட்சத்திரத்துக்குள் விளைந்த நெல்லை அறுவடை செய்து, உலர்த்தி, வீட்டில் குதிர் பத்தாயங்களில் சேமித்து வைத்துவிடுவார்கள். ஆகவே எல்லார் வீட்டிலும் புதுநெல் அரிசிச் சாதம் வடித்துச் சாப்பிடும் நிலை உருவாகிவிடும். ஆகவேதான், அப்போது யாரும் தம் பழையதை வைத்திருக்க மாட்டார்கள். எதையும் தின்னும் பூனைக்குக் கூடச் சமைத்த சுடுசோறு கிட்டும். அவ்வாறு வயிறு நிறைய உண்டபிறகு, பழையதை பூனை விரும்பித்

தின்னுமா? தைபிறந்தால் சோற்றுப்பஞ்சம் தீர்ந்து விடும் என்பதைத்தான் நம் முன்னோர்கள் பூச நட்சத்திரத்தை மையமாகக் கொண்டு இந்தப் பழமொழியை உருவாக்கியுள்ளார்கள்.

## 396. இரட்டைக் குழந்தையும் ஜாதகமும்!

ஐந்து நிமிட இடைவெளியில் பிறந்த இரட்டைக் குழந்தைகளின் ஜாதகத்தைக் கொடுக்கும்போது ஜாதகர்கள் திணற வேண்டியதில்லை. ஏனெனில் இந்த இரு குழந்தைகளுக்கும் கிட்டத்தட்ட இலக்கினம், இராசி, திசைஇருப்பு எல்லாமே ஒன்றுபோல இருக்கும். ஆனால், நவாம்ச இலக்கினம் வேறாகவே இருக்கும். நவாம்சத்தின் இலக்கினத்தை வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் அவர்களின் பலன்களைச் சரியாய்ச் சொல்லலாம். இந்த வகையில் பலன் சரியாய் அமையும். ஜோதிடம் என்றும் பொய்ப்பதில்லை!

## 397. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் - இதன் பொருள் என்ன?

'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்று ஒரு பழமொழி உண்டு. அதன் பொருள் என்ன? கண்களுக்கு சூரியனே காரணகர்த்தா ஆகும். சூரியனை வழிபட்டு வந்தால் கண்பார்வை வளப்படும். சூரியனை அதிகாலை வேளையில், கைகளை முறைப்படி வைத்து அவரைப் பார்த்து, அவருக்கு உரிய மந்திரத்தைக் கூறி வழிபட்டால் வளம் ஏற்படும். காலம் கடந்தோ, கண்கெட்டுவிட்ட பின்போ சூரியனை வழிபடுவதால் எப்பிரயோஜனமுமில்லை என்பதை உணர்த்துகிறது இந்தப் பழமொழி!

## 398. கைரேகையும் செவ்வாய் தோஷமும்!

கைரேகை மூலமும் செவ்வாய் தோஷத்தை அறியலாம். உள்ளங்கையில் விதிரேகை, ஆயுள்ரேகை, திருமணரேகை ஆகியவற்றில் அசுபக்குறிகள் காணப்படும். மேலும் சுக்கிரன், செவ்வாய், சந்திரன், சனி, ஆகிய மேடுகளில் பெருக்கல் குறி காணப்பட்டால் அந்த ஜாதகருக்குச் செவ்வாய் தோஷம் உள்ளது என அறியலாம்.

## 399. எவர் பள்ளியறைச் சுகமற்றவர் ஆவார்?

ஒருவரின் ஜாதகத்தில் பன்னிரெண்டாம் வீட்டில் இராகு இருந்து, அவர் மீது அசுப கிரகங்களின் பார்வை பட்டு, அது அந்த அசுப கிரகங்களின் பகை வீடாகவும் இருந்துவிட்டால் அச்சாதகர் பள்ளியறைச் சுகமற்றவர் ஆவார்.

## 400. இராணுவத்தில் சேர்வார்?

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய் பலமுற்றிருந்து அது குருவிற்கு எட்டாம் இடமாய் இருந்தால் அவர் இராணுவத்தில் சேர்வார். அந்தச் செவ்வாயைச் சூரியன் பார்த்தாலோ, சேர்ந்தாலோ அவர் இராணுவத்தில் தலைமைப் பதவியை அடைவார்!

## 401. இனிக்காத இல்லறம்!

ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் சூரியனுடன் சேர்ந்து அஸ்தங்கம் அடைந்தாலோ, களத்திரஸ்தானதிபதி இராகு அல்லது கேது அல்லது சூரியனுடன் சேர்ந்தாலோ அவரின் இல்லற வாழ்வு இனிக்காது!

## 402. திருமணம் நடப்பது சாமானியம் அன்று -எவருக்கு?

ஒருவருக்கு மிதுனம் இலக்கினமாய் அமைந்து தனுசுவில் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய மூவரும் இருந்தால், அவருக்குத் திருமணம் நடப்பது சாமானியம் அன்று. குருபார்வை இருந்தாலோ குடும்பாதிபதி சந்திரனைப் பார்த்தாலோ முப்பது வயதுக்கு மேல் திருமணம் நடக்கும்.

## 403. மனைவியால் யாருக்கு யோகம் கிட்டும்?

ஒருவரின் ஜாதகத்தில் களத்திரஸ்தானாதிபதி இலக்கினத்திலோ, இரண்டிலோ, பதினொன்றிலோ இடம் பெற்றிருந்து, இலக்கினாதிபதி மேற்கூறிய ஸ்தானங்களில் வீற்றிருந்தால் மனைவியால் யோகம், பொன், பொருள் சேர்க்கை ஆகியன ஏற்படும்.

## 404. திசையின் பலன் அறியும் இரகசியம்!

திசை ஆரம்பிக்கும் போதே திசையின் பலனைச் சந்திரனைக் கொண்டு அறியும் முறை ஒன்று உண்டு. அது சந்திரன் நின்ற வீட்டைக் கொண்டு அறியும் முறையாகும். அதாவது, திசை ஆரம்பிக்கும் அந்த நேரத்தில், சந்திரன் தன் வீட்டில் நின்றால் செல்வப்பெருக்கம், சுகம் ஆகியன உண்டாகும். சூரியன் வீட்டில் நின்றால் உணவுக்கும், உடைக்கும் பஞ்சம் இராது. செவ்வாய் வீட்டில் நின்றால் தகராறு, கடன், பயம், நோய் ஆகியன உண்டாகும். புதன் வீட்டில் நின்றால் கல்வி விருத்தி, தன் அறிவால் மற்றும் வாக்கால் செல்வவிருத்தி ஆகியன ஏற்படும். குரு வீட்டில் நின்றால் விவசாயப் பலிதம், தெய்வ அனுகூலம், சுகம் ஆகியன கிட்டும். சுக்கிரன் வீட்டில் நின்றால், பதவியும் அதனால் உண்டாகும் செல்வம் ஆகியன

வலிய வந்து சேரும்; பெண்ணின் சேர்க்கையும் அதனால் அழிவும் ஏற்படும். சனி வீட்டில் நின்றால் வாதநோய், வீணான பீதி, சிரமமில்லாத வேலை, தகுதிக்கு மீறிய ஊதியம் முதலிய பலன் நடைபெறும்!

## 405. தாய்மாமனின் உதவியால் படிப்பவர்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் புதனும் கேதுவும் இருந்து, குருவின் பார்வையும் இருந்தால் தாய்மாமனின் உதவியால் அவர் கல்வி கற்பார்.

## 406. எத்தகையவருக்குப் படிப்பில் நாட்டம் குறையும்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் புதனும் இராகுவும் இருந்தால், அவருக்குப் படிப்பில் நாட்டம் குறையும்; குருபார்வை இருந்தால், சங்கீதத்தில் ஞானம் அதிகமாகும்.

## 407. இராஜயோகம் காலம்!

ஞாயிற்றுக்கிழமை கூடிய அமாவாசையில் திருவோணம், அசுவினி, அவிட்டம், திருவாதிரை, ஆயில்யம் ஆகியவற்றில் ஒன்று சேர்ந்தால் அது வியாதீபாதயோகம் எனப்படும். அது நூறு சூரிய கிரகணங்களுக்குச் சமமானது. அந்தக் காலம் இராஜயோக காலமாகும்!

## 408. மஞ்சள் கடுதாசி தரும் ஜாதகர் எவர்?

ரிஷபம் இலக்கினமாகி, கும்பமாகிய பத்தாம் வீட்டில் சனி இருக்கப் பிறந்தவர்கள் பலவிதமான தொழில்களில் ஈடுபட்டுக் கோடீஸ்வரராய் விளங்குவார்கள். அந்தச் சனியுடன் குரு கூடாமலிருந்தால் ஏராளமாய்ப் பணம் சம்பாதித்துக்

கடைசியில் அனைத்தையும் இழந்து மஞ்சள் கடுதாசி கொடுக்கும் நிலை அவர்களுக்கு ஏற்படும்!

## 409. நோயின் இரகசியங்கள்!

ஒருவரின் உடலில் நோய் அசுவினி நட்சத்திரம் அன்று ஆரம்பித்தால், அது குணமாக ஒன்பது நாள் ஆகும். ரோகிணி நட்சத்திரத்தில் ஆரம்பித்தால், இருபத்தோராவது நாளில் குணமாகும்; திருவாதிரை அன்று ஆரம்பித்தால் ஐந்து நாள் ஆனாலும் ஆகும். அன்றி 45 நாளும் ஆகும். ஆயில்யம், மகம் ஆகிய நட்சத்திரங்களில் நோய் ஆரம்பித்தால் மரணத்திற்கு ஈடான துன்பம் ஏற்படும். முதன்முதலில் சிகிச்சை ஆரம்பிக்கும்போது, அன்று அசுவினி, ரோகிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் நடப்பில் இருந்தால் விரைவில் பூரண குணம் கிட்டும். மேற்காணும் நட்சத்திரங்கள் உள்ள நாள்களில் நோயை விரட்ட மருந்துண்டால் நோய் சொல்லாமல் ஓடிவிடும்!

## 410. பறவைகள் உணர்த்தும் சகுனம்!

ஆந்தை வீட்டில் வசித்தாலும் அல்லது இறந்தாலும் அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு நோய் உண்டாகும். நரி புகுந்தால், வீட்டை விட்டு வெளியேறுவார்கள். பருந்து புகுந்தால், அரசரால் துன்பம் உண்டாகும்.

## 411. தோஷம் நீக்கும் கிரகங்கள்!

கேதுவினால் ஏற்படும் தோஷத்தைக் குரு போக்குவார். இவ்விருவரினால் ஏற்படும் தோஷத்தைச் சனி போக்குவார்.

இம்மூவரினால் ஏற்படும் தோஷத்தைச் செவ்வாய் நீக்குவார். இந்த நால்வரின் தோஷத்தைச் சூரியனும், இந்த ஐவரின் தோஷத்தைப் புதனும், இந்த அறுவரால் ஏற்படும் தோஷத்தைச் சந்திரனும், இந்த எழுவரால் ஏற்படும் தோஷத்தைச் சுக்கிரனும் போக்குவார். மொத்தத்தில் மேற்கூறிய எல்லோரின் தோஷத்தையும் போக்க வல்லவர் குருவேயாவார்!

## 412. சகடை யோக பரிகாரம்!

ஜாதகத்தில் குருவிற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் சந்திரன் மறைந்திருந்தால் அது சகடையோகம் எனப்படும். இந்த யோகம் நல்ல பலனைத் தராது. அதற்குப் பரிகாரம் இந்த அமைப்புடைய ஜாதகர், யானையின் வால் முடியைக் கொண்டு மோதிரத்தைத் தங்கத்தில் செய்து வலக்கை மோதிரவிரலில் அணிந்தால் சகடை தோஷம் நிவர்த்தியாகும். மேலும், இந்த மோதிரத்தை வியாழக்கிழமையன்று குருஓரையில், வளர்பிறையில் அணிவது சிறப்பாகும். அதேபோல், வீதியில் உலா வரும் யானைக்குப் பச்சரிசி, வெல்லம் வைப்பதும், கரும்பு, வாழைப்பழம். தேங்காய் ஆகியன கொடுப்பதும் சிறந்த பரிகாரம் ஆகும். அதே போல், அதன் துதிக்கையால் தலையில் ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வதும் நல்லது.

## 413. எட்டில் குரு கெட்டவரா?

ஒருவரின் ஜாதகத்தில் குரு எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும்போது ஒரு அதிர்ஷ்டக்குறைவை ஏற்படுத்தும் என்றும், கஷ்டம் ஏற்படும் என்றும் பலர் அச்சப்படுகின்றனர். மறைவிடமான எட்டில் அமர்ந்திருக்கும் குருசப்தம பார்வையால் தனஸ்தானத்தைப் பார்த்தால் எதிர்பாராத தனவரவுகளைக்

கொடுப்பார். மேலும், இந்தக் குரு ‘அதியோகம்’ என்னும் இராஜயோகத்தையும் அளிப்பார். இந்த வீடுதான் சொந்த வீட்டை உண்டாக்கும். எனவே, எட்டாமிடத்துக் குருவைக் கண்டு பயம் கொள்ள வேண்டா!

## 414. எவர் தம் வாயால் பாதிப்படைவார்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு இரண்டாமிடத்தில் சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது ஆகிய பாவகிரகங்கள் அமர்வதோ, பார்வை செய்வதோ கூடாது. அப்படி இருந்தால், அந்த ஜாதகர் தமது வாயாலேயே தமக்கும், தம் குடும்பத்தாருக்கும் அழிவைத் தேடித் தருவார். மேலும் ஆறுக்குடையவர், எட்டுக்குடையவர், பன்னிரண்டுக்குடையவர்கள் பாவிகளாய் இருந்து வாக்குஸ்தானத்தில் வீற்றிருந்தால், வாய்த்தகராறு, சத்துருக்களால் தொல்லை, நீதிமன்ற அலைச்சல், சிறைத்தண்டனை, அவமானம் முதலியன ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இது போன்ற அமைப்புடையவர்கள் மனபலத்தால் தங்களைக் கட்டுப்படுத்தி தெய்வ வழிபாட்டால் மேன்மை அடையலாம்.

## 415. பார்த்தால் பசு, பாய்ந்தால் புலி யார்?

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய் வீட்டில் சூரியன் அமர்ந்துவிட்டால் அவர் பார்க்கச் சாதுவாய்த் தோன்றினாலும், கோபம் ஏற்பட்டுவிட்டால் புலியெனப் பாய்வார். நீதி நேர்மைக்காக எதையும் செய்வார் இவர்.

## 416. மாமனுக்குச் சுகம் ஏற்படாத ஜாதகம்!

ஒருவரின் ஜாதகத்தில் புதன் இருக்கும் இடத்தில் இருந்து ஆறாம் இடத்தில் பாவகிரகங்கள் சூரியன் செவ்வாய் சனி, ராகு கேது அவருடைய மாமனுக்குச் சுகம் ஏற்படாது!

## 417. கூடாத நாள்களின் ரகசியம்!

வாரத்தில் ஒவ்வொரு கிழமைக்கும் ஒவ்வொரு கூடாத நட்சத்திரம் உண்டு. அந்தக் கிழமையும், அந்த நட்சத்திரமும் சேர்ந்து வரும் நாள்கள் கூடாத நாட்கள் எனப்படும். அந்தக் கூடாத நாள்களில் நடந்த சில புராண சம்பவங்களை அறிவோம் பாருங்கள் 1. ஞாயிற்றுக்கிழமையன்று பரணி நட்சத்திரம் வந்து அமைந்த போது துரியோதனன் இந்திரபிரஸ்தத்தில் திரௌபதி முன் அவமானப்பட்டான். 2. திங்கள் கிழமையன்று சித்திரை நட்சத்திரம் வந்தபோது தட்சன் யாகம் அழிந்தது. யாகத்தில் பார்வதி அவமானமடைந்தாள். 3. செவ்வாய்க்கிழமை படை உத்திராட நட்சத்திரம் அமைந்தபோது இந்திரன் துர்வாச முனிவரின் சாபத்திற்குள்ளானான். 4. புதன் கிழமையன்று அவிட்டம் நட்சத்திரம் அமைந்த போது கம்சனால் ஏவப்பட்ட கேசி என்ற அரக்கன் கிருஷ்ணனால் கொல்லப்பட்டான் 5. வியாழக்கிழமையன்று கேட்டை நட்சத்திரம் அமைந்தபோது திரிபுரசம்ஹாரத்திற்குச் சிவபெருமான் செல்லும்போது, விநாயகரால் தேரின் அச்சு ஒடிக்கப்பட்டது. 6. வெள்ளிக்கிழமையன்று பூராட நட்சத்திரம் அமைந்தபோது மகாபலிச் சக்கரவர்த்தி வாமன மூர்த்தியால் பாதாளத்திற்குள் அழுத்தப்பட்டார். சுக்கிராச்சாரியார் கண்ணிழந்தார். 7. சனிக்கிழமையன்று ரேவதி நட்சத்திரம் அமைந்தபோது பார்வதி கட்டிய மாளிகை அழிந்தது. சனீஸ்வரன் கடமை தவறினார். இந்தக் கூடாத நாள்களில் அனைத்துச் சுபகாரியங்களையும் விலக்க வேண்டும். இந்தக் கூடாத நாள்களில் பிறந்தவர்களும், பூப்பு அடைந்தவர்களும், சுயம்புமூர்த்தி அமையப்பெற்ற திருக்கோயிலில் திருப்பணி செய்தும், ஏகசிந்தனையாய் விடாது விஷ்ணு சகஸ்ரநாமம், சக்தி போற்றிகள் ஆகியவற்றைப் பாராயணம் செய்தும் கூடாத நாள்களின் விளைவுகளை ஓரளவு தணிக்கலாம்.

## 418. லட்சாதிபதி யோகம் யாருக்கு வாய்க்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினாதிபதியும், செவ்வாயும் கூடி திரிகோணம், கேந்திரம் அடையவும், இரண்டுக்கு, பத்துக்கு உடையவர்களாகிய இருவரும் ஒன்பதில் நிற்கப்பெற்ற ஜாதகர் பல இலட்சங்களுக்கு அதிபதியாவார்.

## 419. இலக்கின பரிகாரம்!

எந்த இலக்கினத்தில் பிறந்திருந்தாலும் இலக்கினத்தில் குரு இருந்தால் அந்த ஜாதகர் ஆயுள் உள்ளவரை 'பிரதோஷகால' சிவபூஜை செய்ய வேண்டும்.

## 420. புத்திர பாக்கியம் கிட்ட!

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் இடமாகிய புத்திரஸ்தானம் பலமிழந்து காணப்பட்டாலும், இந்த ஐந்தில் இராகு, கேது, குரு போன்ற கிரகங்கள் இருந்தாலும், புத்திரகாரர் ஆகிய குரு பலமிழந்தாலும், புத்திரகாரர் ஆகிய குரு பலமிழந்து காணப்பட்டாலும், வமிசவிருத்தி ஏற்படாமல் இருக்கும். சிலருக்குத் திருமணம் ஆக ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருக்கும். இப்படிப்பட்டவர்கள், ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி அஷ்டகத்தை, வியாழக்கிழமைகளில், மாலை ஐந்து மணிமுதல் ஏழுமணிவரை, ஒன்பது தடவை பாராயணம் செய்யப் பலன் கிட்டும்.

## 421. அதிசய நாள்!

வெள்ளி ஆகிய சுக்கிரகிரகம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் 8. 6. 2004 மற்றும் 6. 6. 2012 ஆகும். வரும்

நாள்கள் இதுபோன்ற அமைப்பு இதற்குமுன் 1382 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்!

## 422. இராகு, கேதுவின் அமைப்பு!

ஒவ்வொருவரின் ஜாதகத்திலும் இராகுவிலிருந்து ஏழாமிடத்தில் கேதுவும், கேது இருக்கும் இடத்திலிருந்து ஏழாவது இடத்தில் இராகுவும் இருப்பார்கள். இருவரும் எந்தக் காலத்திலும் ஒன்றுசேர மாட்டார்கள். இருவரும் சப்தமமாகவே இருப்பார்கள். அதாவது இராகுவும், கேதுவும் இராசியில் எப்போதும் 180 டிகிரி அமைப்பிலேயே இருப்பார்கள்!

## 423. ஓடிப்போகும் கணவன்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாம் வீட்டில் சூரியன் இருந்துகொண்டு அவரைச் சனியோக இராகுவோ பார்த்தால் அந்தப் பெண்ணைத் தவிக்க விட்டுவிட்டுத் திரும்பிக்கூடப் பார்க்காமல் அவள் கணவன் ஓடிப்போய் விடுவான்.

## 424. கணவனைத் தொந்தரவு படுத்தும் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சுக்கிரன் அமர்ந்திருக்கும் வீட்டிலிருந்து இரண்டாம் வீட்டிலோ, ஆறாம் வீட்டிலோ சூரியன், இராகு, குரு, செவ்வாய் ஆகியோர் அமைந்தால் அப்பெண் கணவனைப் படாத பாடு படுத்துவாள்!

## 425. விதவையான பின்பு முன்னேற்றம்!

ஒரு பெண்ணின் ஜாதகத்தில் மூன்றாம் வீட்டிலோ, ஆறாம் வீட்டிலோ பாவக்கிரகங்கள் இருப்பின் அப்பெண்

விதவையான பின்பு வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பாள்!

## 426. தமிழ் வருடப்பிறப்பின் இரகசியம்!

ஒரு வருடத்தில் தெலுங்கு வருடப்பிறப்பு எந்தக் கிழமை அமைகின்றதோ, அந்தக் கிழமைக்குரிய கிரகமே பின்னர் வரக்கூடிய தமிழ் ஆண்டிற்கு ராஜா ஆகிறார் என்னும் இரகசியத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்!

## 427. துர்க்கை தரும் கிரக நிவர்த்தி!

ஒருவருக்குச் சூரிய திசையில் இராகு புத்தி நடக்கும் போது ஞாயிற்றுக்கிழமை இராகு காலத்தில் துர்க்கையை வழிபட வேண்டும். அதே போல், சந்திரன், செவ்வாய், புதன், குரு, வெள்ளி, சனி, கேது ஆகிய திசைகளில் இராகுபுத்தி நடக்கும்போது முறையே திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, திங்கள் ஆகிய கிழமைகளில் அமையும் இராகு காலத்தில் துர்க்கையை வழிபட்டால் அது சிறந்த பரிகாரமாகும். இராகுதிசை நடைபெறும் காலத்தில் செவ்வாய்க்கிழமை இராகுகாலத்தில் துர்க்கையை வழிபட வேண்டும்!

## 428. தேன் நிலவு இரகசியங்கள்!

புதுமணத் தம்பதியருக்கு முதன்முதலாய் முதல் இரவு ஏற்பாடு செய்யும்போது நல்ல நாள், நேரம் பார்த்தே அவசியம் செய்ய வேண்டும். அப்படி முதல் இரவுக்கு நாள் பார்க்கும் போது கீழ்க்கண்ட விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். 1. அமாவாசை, பௌர்ணமி கூடாது 2. தேய்பிறையில் வரக்கூடிய அஷ்டமி, சஷ்டி, சதுர்த்தசி, ஏகாதசி போன்ற திதிகளில்

செய்யக்கூடாது. 3. தம்பதிகளின் பிறந்த நட்சத்திரத்திலிருந்து ஏழாவது நட்சத்திரம் நடக்கக்கூடிய காலத்திலும் 4. இராசிக்கு எட்டாமிடத்தில் சந்திரன் சஞ்சாரம் செய்யும் சந்திராஷ்டம் தினத்திலும் கூடாது. அசுவினி, ஆயில்யம், கேட்டை, ரேவதி, மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம், பரணி, பூசம், புனர்பூசம் ஆகிய நட்சத்திரங்கள் உடைய நாளில் கூடாது 6. முதல் இரவுக்காலம் நல்ல இலக்கினமாகவும், ஹோரையில் குரு, புதன், சுக்கிரன், சந்திர ஹோரையாய் இருப்பது நல்லது. குறிப்பாய் சுக்கரஹோரை என்றால் மிகவும் விசேஷம் ஆகும். 7. மேலும், மணப்பெண்ணுக்கு மாதவிலக்கு ஏற்பட்ட பத்தாம் நாள் முதல் 20 ஆம் நாள்வரை உள்ள நாளாய்ப் பார்த்து முதலிரவிற்கு ஏற்பாடு செய்வது அவசியம்.

## 429. தலைச்சன் ஆகுமா?

திருமணம் செய்யும்பொழுது பிள்ளையும், பெண்ணும் தலைப்பிள்ளையாய் இருந்தால் திருமணம் செய்யக்கூடாது எனப் பலர் முடிவு செய்துவிடுகின்றனர். இது தவறு. சோதிட சாஸ்திரத்தில் உள்ள சில துல்லியமான விஷயங்களை ஆழ்ந்து பாராமல் சிலரால் பரப்பப்பட்ட விஷயமே இது. அதனால் பலர் குழப்பத்திற்கு உள்ளாகின்றனர். இது சம்பந்தமான ஒரு தெளிவான, தீர்க்கமான, நம்பகமான விஷயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். தலைப்பிள்ளைக்கோ தலைப்பெண்ணுக்கோ அமையும் வரன் தலைப்பிள்ளை என்றால் தயக்கமோ கலக்கமோ குழப்பமோ கொள்ள வேண்டா. திருமணமும் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். ஆனால் தலைச்சன் யாருக்கு ஆகாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்! 1. ஆனிமாதத்தில் பிறந்த தலைச்சன் பிள்ளைக்கும், ஆனிமாதத்தில் பிறந்த தலைச்சன்

பெண்ணுக்கும் மட்டுமே திருமணம் செய்யக்கூடாது. 2. ஆனிமாதத்தில் பிறந்த ஆணுக்கும் ஆனிமாதத்தில் பிறந்த பெண்ணுக்கும், ஆனிமாதத்தில் திருமணம் செய்யக்கூடாது!

## 430. கை குலுக்கும் ஜோதிடம்!

ஒருவர் கை கொடுப்பதைக் கொண்டே அவரது குணத்தைக் கூறிவிடலாம். 1. கைகொடுக்கும்போது மூன்று விரல்களை மட்டும் பிடித்துக் குலுக்குபவர்கள் மனம் விட்டுப் பேசமாட்டார்கள். 2. இரு கைகளாலும் பற்றிக் குலுக்குபவர்கள் அபரிதமான அன்பைப் பொழிபவர்களாய் இருப்பார்கள். 3. பட்டும் படாமலும் கைகுலுக்குபவர்கள் தங்கள் சுயநலத்திற்காக எதையும் செய்யத் துணிந்தவர்கள் ஆவார்கள். 4. கைகளை மிகவும் அழுத்திக் கை குலுக்குபவர்கள் உறுதியான நெஞ்சம் உடையவர்கள். அவர்களைப் பூரணமாய் நம்பலாம்.

## 431. கோபக்கார மனைவி!

ஆண் ஒருவரின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சூரியன் இருந்தால் அவரின் மனைவி எப்போதும் சிடுமூஞ்சியாகவும், சதா கோபித்துக்கொள்ளும் குணமுள்ளவளாகவும் இருப்பாள்!

## 432. படித்த மனைவி!

ஒருவரின் ஜாதகத்தில் களத்திரகாரகன் ஆகிய சுக்கிரன், புதனுடன் சேர்ந்து காணப்பட்டால், நன்கு படித்த பெண் மனைவியாய் வருவாள்!

## 433. சிக்கனக்காரப் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் பன்னிரண்டாம் வீட்டில் குருவோ, சுக்கிரனோ, இருந்தால், அந்தப் பெண், தான்

வாழ்க்கைப்படும் குடும்பத்தைச் சிக்கனமாகவும், நல்ல முறையிலும் நடத்திச் செல்வாள்! செல்வம் செழிக்கும்.

### 434. அதிர்ஷ்டக் குழந்தை!

ஒருத்தியின் பெண் ஜாதகத்தில் ஒன்பதாம் வீட்டின் அதிபதி பத்தாம் வீட்டில் அமர்ந்திருந்தால் அவளுக்கு நல்ல செயல், செல்வாக்கு ஆகியனவுள்ள குழந்தைகள் பிறக்கும். அந்த ஒன்பதாம் வீட்டுக்கு உடையவர் குருவாய் இருந்துவிட்டாலோ குழந்தைகள் அரசனுக்கு நிகரான பதவி அடைவார்கள்!

### 435. கணவனைத் தேர்ந்தெடுக்கும் மனைவி!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாம் இடத்து அதிபதி ஐந்தில் இருந்தால் அந்தப் பெண், தான் வேலை பார்க்கும் இடத்திலேயே மணமகனைத் தேர்ந்தெடுப்பாள். பின் தன் பெற்றோர்களின் அனுமதியுடன் திருமணம் செய்துகொள்வாள்.

### 436. காதலில் தோல்வியுறும் பெண்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாம் வீட்டு அதிபதி எட்டில் இருந்தால் அந்தப் பெண்ணின் காதல் வாழ்க்கை தோல்வி பெறும். உடல் மயக்கத்தில் மயங்கி, மணம்புரிவது இல்வாழ்க்கையில் சொல்ல முடியாத துன்பத்தை அடைவாள்!

### 437. அரசாளும் யோகம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் கும்பத்தில் குருவும், விருச்சிகத்தில் சனி, சுக்கிரன் ஆகியன இருந்தால் அவர் பூர்வ

ஜன்ம பலனுக்கேற்ப ஏதாவது ஒரு வழியில் பலருக்குத் தலைவராய் இருப்பார்!

## 438. நட்சத்திர மன்னர்கள்!

கேரள மாநிலத்துத் திருவாங்கூர் சமஸ்தான மன்னர்கள், அவர்கள் பிறந்த நட்சத்திரத்தின் பெயரைக் கொண்டே வழங்கப்பட்டார்கள். சுவாதித்திருநாள், அவிட்டத்திருநாள், மூலத்திருநாள், கார்த்திகைத் திருநாள், சித்திரைத் திருநாள் எனத் தங்கள் பெயரை அம்மன்னர்கள் வைத்துக் கொண்டார்கள்!

## 439. அதிக நேரம் பிடிக்கும் சூரிய கிரகணம்!

முழுச் சூரியகிரகணத்தின் நேரம் ஏழு நிமிடங்கள் ஆகும். ஆனால், 30. 6.1973 அன்று ஏற்பட்ட சூரிய கிரகணம் மதியம் 2.31 மணிக்குத் தொடங்கி இரவு 7.45 மணிக்கு முழுமையாய் முடிவு பெற்றது. இது போன்று ஏழு நிமிடங்களுக்கு மேல் நேரக்கூடிய சூரிய கிரகணம் இனி 2250ஆம் ஆண்டில் தான் வரும்!

## 440. குருபகவானின் அதிசயம்!

குருபகவான் ஓர் இராசியில் சுமார் ஒரு வருடம் சஞ்சாரம் செய்வார். ஆனால், 1999 ஆம் வருடம் மீன இராசியில் நான்கு மாதம் பதின்மூன்று நாள்களுக்குத் தான் சஞ்சாரம் செய்தார். அதாவது, 13. 1. 1999 முதல் 26. 5. 1999 வரை ஆகும். இது போன்று குருபகவான் சஞ்சாரம் செய்வது அதிசயமான ஒன்றாகும்! கடந்த 80 வருடங்களில் குருபகவான் இவ்வளவு குறைந்த காலம் எந்த ஓர் இராசியிலும் சஞ்சரித்தது இல்லை. அதே போல் அடுத்து வரக்கூடிய 50 ஆண்டுகளில் இவ்வளவு குறைந்த காலம் குரு சஞ்சரிக்கப்போவதும் இல்லை!

**441. அதிகமான கிரகணம் எப்போது நிகழும்?**

பொதுவாய், கிரகணங்கள் ஒரு வருடத்தில் அதிகபட்சமாய் நான்கு அல்லது மூன்று ஏற்படுவது உண்டு.. அவற்றுள், இரண்டு சூரிய கிரகணமாகவும் இரண்டு சந்திர கிரகணமாகவும் இருப்பதுண்டு. ஆனால், 1917 ஆம் ஆண்டும், 1935ஆம் ஆண்டும் ஏழு கிரகணங்கள் ஏற்பட்டன. அவற்றுள் சூரிய கிரகணமும், மூன்று சந்திர கிரகணமும் ஆகும்.

**442. இராசியும் கிரகணமும்!**

பொதுவிதிப்படி, ஓர் இராசியில் ஏற்பட்ட சூரிய கிரகணம், மறுபடியும் அந்த இராசியில் பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஏற்படும்!

**443. சூரியன் உதிக்கும் திசை எது?**

சூரியன் உதிக்கும் திசை, கிழக்கு என்று ஆரம்பப்பள்ளி முதல் படித்து வருகிறோம். ஆனால், சூரியன் சரியான கிழக்குத் திசையில் ஒவ்வாரு வருடமும் செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதியும் மார்ச்சு மாதம் 21 ஆம் தேதியன்றுந்தான் உதிக்கிறது. மற்ற நாள்களில் சூரியன் வடகிழக்காய் அதிகபட்சமாய் +23 பாகை - 26 கலை சென்று பிறகு கிழக்குத் திசையை நோக்கிச் சஞ்சரித்து, தென்கிழக்குத் திசையை நோக்கி 23 பாகை, 26 கலை வரை செல்கிறது!

**444. தடைகளை நீக்கும் தானங்கள்!**

1. சனீஸ்வரரால் பாதிக்கப்பட்டவர்கள், தீராத வியாதி உடையவர்கள், இரத்த சம்பந்தமான வியாதி உடையவர்கள்.

குஷ்ட ரோகிகளுக்கு எள்ளுருண்டையைத் தானம் செய்ய வேண்டும். 2. பிரயாணத்தில் தொல்லைகள் நீங்க முடமானவர்களுக்கு இரும்புத்தானம் செய்ய வேண்டும். 3. குடும்பத்தில் சண்டை, சச்சரவுகள் நீங்க நல்ல எண்ணெய், எள்ளு ஆகியவற்றைக் கருப்பு நிறப் பிராமணர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். 4. கால் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்குக் கருப்புநிறச் சந்தியாசிகளுக்குச் செருப்புத் தானம் செய்ய வேண்டும். 5. கடன் தொல்லைகள் நீங்கக் கருப்புநிற ஏழைகளுக்கு எருது தானம் செய்ய வேண்டும். 6. மரணத்தறுவாயில் உள்ளவர்களும், மாரகஅவஸ்தை உள்ளவர்களும் வேதம் படித்த அந்தணருக்குக் கருப்பு நிறப் பசுவைத் தானம் செய்ய வேண்டும். 7. திருமணத்தடை உடையவர்கள் ஸ்ரீராமர் ஜாதகத்தை விநியோகிக்க வேண்டும். பணக்காரர்கள் புதுமணத் தம்பதியருக்குத் திருமாங்கல்யச்சரட்டைத் தானம் செய்ய வேண்டும். 8. கணவன், மனைவி பிரச்சினைக்களுக்கு ஏழைகளுக்குப் பஞ்சைத் தானம் செய்ய வேண்டும். 9. புத்திர பாக்கியம் பெறக் கன்றுடன் கூடிய வெள்ளைநிறப் பசுவைத் தானம் செய்ய வேண்டும்.

## 445. ஆவணி மூலத்தின் தனிச்சிறப்பு!

ஆவணி மாதத்தில் அமைகின்ற மூல நட்சத்திரத்துக்கு வெகு சிறப்பு உண்டு மூலநட்சத்திரம் கேதுவின் நட்சத்திரம் என்பதால், ஆவணி மாதத்தில் பிதுர்ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால் 'பிதுர்தோஷ சாந்தி' அன்றைக்குச் செய்துகொள்வது வெகுசிறப்பு ஆகும்! மேலும், மூல நட்சத்திரத்தில் திருமணமாகாத பெண்களும், ஆண்களும் தோஷமுள்ளவர்கள் ஆவார்கள். அவர்கள் கும்பகோணத்திற்கு அருகே உள்ள திருவலஞ்சுழி வெள்ளை விநாயகரையும்,

திருப்பதிக்கு அருகே உள்ள காளஹஸ்தி பாதாள விநாயகரையும், கேதுஸ்தலமான மயிலாடுதுறைக்கு அருகே உள்ள கீழப்பெரும் பள்ளத்திற்கும் சென்று பரிகாரம் செய்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்!

### 446. நவக்கிரக தியானம்!

ஒன்பது கிரகங்களும் மனிதனை இயக்கும் மாபெரும் சக்திகள். இந்த ஒன்பது கிரகங்களையும் தியானம் செய்வதன் மூலம் அனைத்து நன்மைகளையும் பெற முடியும் எனக் கலியுகத்தின் ஞானி யோகி ராஜ்வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகிறார்கள். அவர் கூறும் தியான விவரம் வருமாறு: 1. சூரியனைத் தியானித்தால் செல்வம், கீர்த்தி, ஆயுள் ஆகியன உண்டாகும். 2. சந்திரனைத் தியானித்தால் உடல்நலம், நட்பு ஆகியவற்றைப் பலப்படுத்தும், 3. செவ்வாயைத் தியானித்தால் மனவலிமையையும், வெற்றியையும் அளிக்கும். 4. புதனைத் தியானித்தால் செல்வம், வெற்றியைக் கொடுக்கும். 5. வியாழனைத் தியானித்தால் புகழும், மேன்மையும், அறிவும் கொடுக்கும் 6. வெள்ளியை தியானித்தால் உடல் நலம், மன அமைதி ஆகியவற்றை அளிக்கும். 7. சனிக்கிரகத்தைத் தியானித்தால் நீண்ட ஆயுளும் உயர்புகழும் அளிக்கும் 8. இராகுவையும், கேதுவையும் தியானித்தால் எல்லா வளங்களையும் நாம் பெறலாம். மேற்கண்ட ஒவ்வொரு கிரகத்தையும் மூன்று நிமிடங்கள் தியானித்தால் போதும் என்கிறார், யோகிராஜ்வேதாத்திரிமகரிஷி அவர்கள்!

### 447. தொலையட்டும் செருப்பு!

திருமணம், கோயில் விழா ஆகியவற்றுக்குப் போன இடத்தில் செருப்பு காணாமல் போய்விட்டதா

கவலைப்படாக்கூடாது செருப்பு திருடப்பட்டுவிட்டால் நம்மைப் பிடித்த தரித்திரம் போய் விட்டது என நினைத்துக் கொள்ள வேண்டும். இதனை நமது முன்னோர்களின் சாஸ்திரம் தெரிவிக்கின்றது!

## 448. ஆபிரஹாம் லிங்கனும் நவக்கிரகங்களும்!

அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியான ஆபிரஹாம் லிங்கனது வாழ்க்கைக்கும் நவக்கிரகங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு! அவரின் வாழ்க்கையில் வாரத்தின் ஏழு நாள்களில் நிகழ்ந்தவை உணர்த்துகின்றன. இதோ அந்தப் பட்டியல் 1. ஞாயிற்றுக்கிழமையன்று அவர் பிறந்தார் 2. முதன் முதலில் திங்கள்கிழமையன்று தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். 3. செவ்வாய்க் கிழமையன்று ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றார். 4. புதன்கிழமையன்று பார்கவுன்ஸிலில் இடம் பெற்றார். 5. வியாழக்கிழமையன்று உலகப்புகழ் பெற்ற 'கெட்டிஸ்பர்க்' உரையை நிகழ்த்தினார். 6. வெள்ளிக்கிழமையன்று துப்பாக்கியால் சுடப்பட்டார். 7. சனிக்கிழமையன்று அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மரணம் அடைந்தார்.

## 449. மன்னர் வாழ்வில் குருபகவான்!

இங்கிலாந்தை அரசாண்ட எட்டாம் ஹென்றி வாழ்வில் குருபகவான் தமது நாளாகிய வியாழக்கிழமையாய் வந்து எப்படி அதிசயத்தை நிகழ்த்தி உள்ளார் என்பதை அறிவோம். எட்டாம் ஹென்றி இறந்தது, 1547 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதி வியாழக்கிழமை. அவர் மகன் ஆறாவது எட்வர்ட் இறந்தது, 1553 ஆம் ஆண்டு ஜுலை 6 ஆம் தேதி

வியாழக்கிழமை. அவர் மகள் இளவரசி மேரி இறந்தது 1558ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் தேதி வியாழக்கிழமை. இன்னொரு மகள் எலிசபெத் இறந்ததும் 1603ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் தேதி வியாழக்கிழமைதான்!

## 450. கும்பனோடு கூடாதே!

கும்ப இலக்கினத்தாரோடு கூட்டு வியாபாரம் செய்தால் கூட்டு சேர்ந்தவர் நஷ்டத்தை அடைவார். எனவே, கூட்டுத் தொழில் செய்ய விரும்புவர்கள் கும்ப இலக்கினகாரர்களோடு கூட்டுச் சேரக்கூடாது என்பதைத்தான் 'கும்பனோடு கூடாதே' என நமது ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது. காரணம் கும்ப இலக்கினக்காரர்கள் சுயநலவாதியாய் இருப்பார்கள் என்பதால்தான்!

## 451. எத்தகைய ஜாதகம் விழலுக்கிறைத்ததாய் அமையும்?

ஒருவரின் ஜாதகத்தில், மேஷ இலக்கினமாயிருந்து, செவ்வாய் உச்சம் பெற்று, சனி நீசமடைந்து இருந்தால், அவர் எவ்வளவுதான் சம்பாதித்தாலும் கணவரால் அல்லது மனைவியால் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்!

## 452. மனைவி சொல்லே மந்திரம் யாருக்கு?

ஒருவர் கும்ப இலக்கினமாய் இருந்தால் இலக்கினாதிபதி சனியாகும். ஏழாமிடத்து அதிபதி சூரியன் ஆகும். இவ்விருவரும் பகை உடையவர்கள். இருந்தாலும் திருமணத்திற்குப் பின் யோகம் அதிகமாகும்! ஆனால், இவர்கள், தம் மனைவி சொல்லே மந்திரம் என இருக்கவேண்டும்!

## 453. மரணத்தைக் கூறும் கண்ணாடி?

எக்காரணத்தைக் கொண்டும் வீட்டில் உள்ள முகம் பார்க்கும் கண்ணாடி உடையாதவாறு விழிப்பாய் இருக்க வேண்டும். அப்படி உடைந்தால் நெருங்கிய வகையில் மரணம் ஏற்படக்கூடும்!

## 454. அரசமரம் தரும் எச்சரிக்கை!

ஒருவர் அரச மரத்தை வெட்டினால், அவருக்குக் கெடுதல் ஏற்படும் எனச் சித்தர்கள் கூறியுள்ளார்கள். எனவே, எச்சரிக்கையாய் நடந்துகொள்ள வேண்டும்.

## 455. எதை முதலில் திறக்க வேண்டும்?

காலையில் எழுந்ததும் முதலில் கொல்லைக் கதவைத்தான் திறக்க வேண்டும்?

## 456. பெண்களின் கவனத்திற்கு!

பெண்கள் பலர் வெள்ளிக்கிழமையன்று விளக்கைச் சுத்தப்படுத்துகிறார்கள். அது தவறான விஷயம்! முதல் நாளே (வியாழக்கிழமை) விளக்கைச் சுத்தப்படுத்தி வைத்துவிட வேண்டும்.

## 457. நல்லது கூறும் பல்லி!

மாலை வேளைகளில் கிழக்குத் திசையிலிருந்து பல்லி குரல் கொடுப்பது நல்லதாகும்!

## 458. குடுகுடுப்பை தரும் எச்சரிக்கை!

நடுச்சாமத்திற்கு மேல் வரும் குடுகுடுப்பைக்காரனை நேருக்கு நேர் சந்திக்கக்கூடாது! அதனால் தீமையே விளையும்!

## 459. புதுப்பெண்கள் கவனிக்க!

திருமணமாகி முதன்முதலில் மாமியார் வீட்டுக்குச் செல்லும் புதுப்பெண் முதன்முதலாய் உப்பு, நெல் தவிடு ஆகியவற்றில் கை வைப்பது மிக மிக நல்லது ஆகும்!

## 460. பூ கூறும் சோதிடம்!

புது மருமகள் முதன்முதலாய்ப் பூச்சூடும் போது அந்தப் பூ வாடாமல் இருந்தால் மாமியார் நல்லவராய் இருப்பார்!

## 461. வேண்டா இலவசம்!

எள்ளை யாரிடமும் இலவசமாய்ப் பெறக்கூடாது! ஓசியில் கொடுக்கிறார்களே என வாங்கிவிடக்கூடாது. அது குடும்பத்திற்கு ஆகாது! சிறிதளவாவது காசு கொடுத்துத்தான் வாங்க வேண்டும்!

## 462. நிலாவைப் பார்க்காதே!

அமாவாசையிலிருந்து நான்காம் நாளில் தோன்றும் நிலாவைப் பார்க்கக்கூடாது! அப்படிப் பார்த்தால் கெடுதலைத் தரும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன!

## 463. ஆண்களுக்கு மட்டும்!

ஆண்களின் இடக்காலில் கல் தடுக்கினால் தடங்கல் ஏற்பட்டு, அவர்கள் செய்ய விரும்பும் காரியம் நிறைவேறாது என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன!

## 464. உலக்கையால் குடும்பம் அழியும்!

உலக்கையை வெட்டி அடுப்பில் வைத்தால், அதை வைத்தவர் குடும்பமே அழிந்து விடும்! இவ்வாறு நமது சாஸ்திரம் எச்சரிக்கை விடுக்கின்றது!

## 465. சாஸ்திரம் கூறும் எச்சரிக்கைகள்!

நமது சாஸ்திரங்கள் நமது வாழ்க்கைக்கான சில எச்சரிக்கைகளைக் கூறி உள்ளன. அவை 1. இரவு நேரங்களில் தலையிலிருந்து பேன் எடுக்கக்கூடாது. 2. வெற்றிலையை வெறும் தரையில் வைக்கக்கூடாது. 3. வெற்றிலையை மூன்றாய்ச் சேர்த்துப் போடக்கூடாது. 4. சுபகாரியம் பற்றி எழுதுகையில் பேனாவில் மை தீர்ந்து விடக்கூடாது. 5. தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கும் பூவை முகர்ந்து பார்த்தல் கூடாது. 6. நடந்து கொண்டே பல் தேய்க்கக்கூடாது. 7. சாப்பிடும்போது ஒற்றை விரலை நீக்கிச் சாப்பிடக்கூடாது. 8. குழந்தைகளின் தொட்டிலில் பெரியவர்கள் உட்காரக்கூடாது. 9. நெருப்பை வெந்நீரினால் அணைக்கக்கூடாது. 10. முழங்கையையும் முழங்காலையும் கட்டக்கூடாது. 12. கன்னத்தில் கைவைக்கக்கூடாது 13. காலை ஆட்டக்கூடாது. 14. தலையணை மேல் அமரக்கூடாது 15. பஞ்சு பறக்கக்கூடாது 16. நிலைப்படிகளில் அமரக்கூடாது 17. நகங்களை வீட்டில் போடக்கூடாது!

## 466. துடைப்பத்தால் ஏற்படும் தரித்திரம்!

துடைப்பத்தைத் தெருவில் விற்றால் விற்பவருக்குச் சோற்றுக்கே தரித்திரம் ஏற்பட்டுவிடும்! எனவே, துடைப்பத்தை ஒரே இடத்தில் வைத்தே விற்க வேண்டும் என நமது சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன!

## 467. மணமக்களுக்கு ஓர் எச்சரிக்கை!

மாங்கல்யதாரணம் ஆனவுடன் மணமகன், மணமகள் கைகளைக் குலுக்கி வாழ்த்துச் சொல்வது வழக்கம். ஆனால் சாஸ்திரப் பிரகாரம் திருமணம் முடிந்தபிறகு 'சப்தபதி' என்னும்

சடங்கு நடந்து முடியும்வரை மணமகனோ, மணமகளோ பிறர் கையைத் தொடக்கூடாது. மணமகனும் மணமகளும் திருமணமாகி ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி ஏழு அடி நடந்து, 'சப்தபதி'யை முடிக்க வேண்டும். அந்தச் சடங்குக்குப் பிறகுதான் கைகுலுக்குவதற்குப் பிறர் கையைத் தொடவேண்டும். இனியாவது மணமக்கள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## 468. இறைவனின் நட்சத்திரங்கள்!

விஷ்ணுவின் நட்சத்திரம் திருவோணம். ஆனால், ஒவ்வோர் அவதாரத்திலும் அவரது நட்சத்திரம் மாறும் அபூர்வத்தைப் பார்க்கலாம். இராம அவதாரத்தில் அவரது நட்சத்திரம் புனர்பூசம். கிருஷ்ண அவதாரத்தில் அவரது நட்சத்திரம் ரோகிணி. நரசிம்ம அவதாரத்தில் நட்சத்திரம் சுவாதி ஆகும்.

## 469. மாளாய பக்ஷம்!

சூரியன் கன்னியா இராசியில் புகும் புரட்டாசி மாதம் மாளாய அமாவாசை அன்று, எமதர்மராஜன் தம்மிடமிருக்கும் பித்ருக்களைப் பூமிக்குச் செல்லும்படி அனுப்புகிறார். எனவே, இறந்தவர்களின் திதி தெரியாதவர்கள் அன்று சிரார்த்தம் செய்தால் அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் நன்மை அடைவார்கள்!

## 470. நேருவின் வாழ்வில் இருபத்தெட்டு!

நேருவின் வாழ்க்கைக்கும் 28 என்னும் எண்ணுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது, ஆச்சரியமான விஷயம் ஆகும்! இதோ சில எடுத்துக்காட்டுகள் 1. நேரு பிறந்தபோது அவர் தந்தை மோதிலால் நேருவின் வயது 28. 2. இந்திரா

காந்தி பிறந்தபோது நேருவின் வயது 28. 3. நேருவின் மனைவி கமலா நேரு இறந்தது பிப்ரவரி 28. 4. நேரு தம் மனைவி கமலா இறந்த பிறகு வாழ்ந்தது 28 ஆண்டுகள். 5. நேருவின் உடல், தகனம் செய்யப்பட்ட நாள் மே 28 ஆகும்.

## 471. எழுத்தாளர் ஆக!

ஒருவருக்குக் கன்னியா இலக்கினம் இருந்து, இரண்டாம் இடத்து அதிபதியாகிய சுக்கிரன் சிம்மத்தில் அமர்ந்தால், கலைத்துறையில் சிறப்புடன் விளங்க வாய்ப்புண்டு; எழுத்துலகிலும் பிரபலம் ஆகலாம்.

## 472. நெய் காய்ச்ச வேண்டா!

வெள்ளி, செவ்வாய் ஆகிய நாள்கள் மகாலட்சுமிக்கு உகந்த நாள்கள். எனவே, அந்த நாள்களில் நெய் காய்ச்சக்கூடாது என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன!

## 473. சிறந்த சோதிடர் ஆக!

கன்னி இலக்கினமாய் இருந்து, இலக்கினத்தில் புதன் உச்சம் பெற்று, கடகத்தில் குருவும் இருந்தால் சிறந்த ஜோதிடராகும் வாய்ப்புண்டு!

## 474. எவர் வாக்குப் பலிதம் உடைய ஜோதிடர்?

கடக இலக்கினமாய் இருந்து, இலக்கினத்தில் சூரியன், ஐந்தில் கேது, ஒன்பதில் குரு இருந்தால் அவர் வாக்குப்பலிதம் உடைய ஜோதிடராய் இருப்பார்!

## 475. வலம்புரிச் சங்கு விடும் எச்சரிக்கை!

வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்திருந்தால் மட்டும் அதிர்ஷடம் ஏற்பட்டுவிடாது. தோஷந்தான் ஏற்படம். வலம்புரிச் சங்கை பூஜை அறையில் வைத்துப் பூஜித்தால்தான் நல்லது நடக்கும்!

## 476. அரச ஜாதகம் எது?

ஜென்ம இலக்கினம் ரிஷபமாக ஏழாமிடமான விருச்சிகத்தில் குருபகவான் நிற்க, கும்பத்தில் சனிபகவான் அமர, சந்திரன் ரிஷபத்தில் உச்ச பலத்துடன் இருக்க, சூரியன் சிம்மத்தில் ஆட்சிப் பலத்துடன் அமரப் பிறந்த அவர்கள் அரசனுக்கு நிகரான யோகத்தைப் பெற்று வாழ்வார்கள்.

## 477. சாபம் பெற்ற ஜாதகங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் சனி பலமின்றி இருந்தால், அவர் பசுவின் சாபம் பெற்றவர். சந்திரன் பலமின்றி இருந்தால், அவர் பெண்ணின் சாபம் பெற்றவர். குருபலம் இழந்து இருந்தால், அவர் தெய்வக்குற்றத்திற்கு ஆளானவர் ஆவார்.

## 478. செவ்வாய் தரும் பலன்!

பிறந்த ஜாதகத்தில் இருக்கும் செவ்வாய்க்கு நான்கில் கோசார செவ்வாய் வரும் காலத்தில் நிலம் தோட்டம் சம்பந்தமாய் வாங்க, விற்க வாய்ப்புக் கிட்டும். அந்த வாய்ப்பு அந்தச் செவ்வாய் ஐந்தாமிடம் செல்லும் வரை கிட்டும். இந்த இரகசியத்தைத் தெரிந்துகொண்டு இந்தக் காலகட்டத்தில் நிலம், தோட்டம் வாங்க, விற்க முயற்சி செய்ய வேண்டும்.

## 479. மாந்தி செய்யும் நன்மை!

மாந்தி கிரகம் இலக்கினத்திலிருந்து பத்து, பதினொன்று ஆகிய இரு இடங்களில் அமர்ந்தால் மட்டுமே நல்ல பலன்களை அளிப்பார்!

## 480. கிரகங்களின் பலம்!

ஒரு கிரகம் உச்சம் என்றால் இரு மடங்கும், ஆட்சி என்றால் ஒரு மடங்கும், நட்பு என்றால் முக்கால் மடங்கும், சமம் என்றால் அரை மடங்கும் பலம் பெற்று விளங்கும்.

## 481. ஷஷ்டாஷ்டக தோஷம்!

இராசிக்கு ஆறாவது இராசியாய் அமையும் இராசி பொருந்தாது. இதுவே 'ஷஷ்டாஷ்டக தோஷம்' ஆகும். உதாரணமாய் இராசி மிதுனமாய் இருந்தால் அதிலிருந்து ஆறாவது இராசியான விருச்சிகம் பொருந்தாத இராசி ஆகும். அதனைத் திருமணப் பொருத்தத்தில் அவசியம் பார்க்க வேண்டிய ஒன்று ஆகும்.

## 482. சந்திராஷ்டம் இரகசியம்!

இடமிருந்து வலமாய் இராசிக்கு எட்டாவது இராசிதான் அஷ்ட இராசி ஆகும். அந்த அஷ்டம் இராசியில் சந்திரன் சஞ்சாரம் செய்யும் காலந்தான் சந்திராஷ்டமம் ஆகும். இது அந்த இராசியில் இரண்டே கால் நாள்கள் சஞ்சாரம் செய்யும். அஷ்டமச் சனியைவிட அஷ்டம குருவின் கடுபலன் அதிகம். அதைவிடச் சந்திராஷ்டம காலம் மிகக் கொடியது ஆகும். எனவே, சந்திராஷ்டம காலம் மிக கொடியது ஆகும். எனவே, சந்திராஷ்டம காலங்களில் திருமண நிச்சயம்,

திருமணமுகூர்த்தம், சாந்திமுகூர்த்தம், பூமிபூஜை, கிரகப்பிரவேசம், தொழில் ஆரம்பம், கல்வி ஆரம்பம், மருத்துவச் சிகிச்சை, கடன் வாங்குதல், கடன் கொடுத்தல், பிரயாணம் போன்ற அனைத்து முயற்சிகளையும் தவிர்ப்பது நல்லது. சந்திரன் இராசியிலும், இராசிக்கு 3, 6, 7, 10, 11 ஆகிய இடங்களிலும் சஞ்சரிக்கும் காலம் அனுகூலமான காலம் ஆகும். அந்த நாள்களில் சுபகாரியங்கள் அல்லது புதிய முயற்சிகளில் ஈடுபடுவது நல்லது.

## 483. ஆண்களுக்கு ஓர் எச்சரிக்கை!

பெண்கள் சந்தனத்தைக் கழுத்தில் பூசிக்கொள்ளலாம். ஆனால், ஆண்கள் சந்தனத்தைக் கழுத்தில் பூசக்கூடாது என நமது சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன!

## 484. திசைகள் தரும் பலன்கள்!

சூரிய திசையும் செவ்வாய் திசையும் ஆரம்பப் பலன் தரும். சந்திர திசையும் புதன்திசையும் காலம் முழுதும் பலன் தரும். சுக்கிரதிசையும், குருதிசையும் மத்திமகாலத்தில் பலனைத் தரும். சனி, இராகு, கேது திசைகள் பிற்காலத்தில் பலன் தரும்.

## 485. திசை நாதனுக்கு ஆகாத திசைபுத்திகள்!

சூரிய திசையில், சுக்கிரபுத்தி, பகை; சந்திர திசையில் குரு புத்தி, பகை; இராகு திசையில் புதன் புத்தி, பகை; சனி திசையில் செவ்வாய் புத்தி, பகை; புதன் திசையில் இராகு புத்திபகை; கேது திசையில் சனி புத்திபகை; சுக்கிர திசையில் சூரிய புத்தி பகை!

## 486. கேந்திரத்தில் கிரகங்களின் பலன்கள்!

முதலாவது கேந்திரத்தில் புதன், குரு பூரணபலன் அளிப்பார்கள்; நான்காவது கேந்திரத்தில் சந்திரன், சுக்கிரன் ஆகியோர் பூரணபலன் அளிப்பார்கள்; ஏழாவது கேந்திரத்தில் சனி, இராகு, கேது ஆகியோர் பூரணபலன் அளிப்பார்கள்; பத்தாவது கேந்திரத்தில் சூரியன், செவ்வாய் ஆகியோர் பூரண பலன் அளிப்பார்கள்!

## 487. கடுமையான செவ்வாய் தோஷம்!

செவ்வாய் பகவான் ஒருவரின் ஜாதகத்தில் புதன் வீடுகளாகிய மிதுனத்திலோ, கன்னியிலோ இருந்தாலும் அதுவும் ஒருவகையான கடுமையான செவ்வாய் தோஷம் ஆகும்!

## 488. மரண காலம்!

ஒருவருக்கு மரணம் பெரும்பாலும் இராகுதிசையில் சனிபுத்தியிலும் சனி திசையில் இராகு புத்தியிலும், இராகு திசையில் கேது புத்தியிலும், கேது திசையில் இராகு புத்தியிலும், கேது திசையில் சனிபுத்தியிலும்; சனி திசையில் கேது புத்தியிலும் ஏற்படும்!

## 489. மரணத்திற்குப் பின் உள்ள இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் பன்னிரெண்டில் சூரியன் நிற்க, அவருக்கு மோட்சம் உண்டு; பன்னிரண்டில் சந்திரன் நிற்க மறுபிறவியில் மனிதனாய்ப் பிறப்பார். பன்னிரெண்டில் செவ்வாய் நிற்க மோட்சம் கிட்டும்; பன்னிரெண்டில் புதன் நிற்க அவர் வைணவனாய்ப் பிறப்பார்; பன்னிரண்டில் குரு நிற்க

அவர் பிராமணனாய்ப் பிறப்பார். பன்னிரெண்டில் சுக்கிரன் நிற்க அவர் தம் மகன் அல்லது மகள் வமிசத்தில் பிறப்பார்!

## 490. கொலம்பஸும் வெள்ளிக்கிழமையும்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்கப் புறப்பட்ட நாள் வெள்ளிக்கிழமை ஆகும்; அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டுபிடித்ததும் வெள்ளிக்கிழமை ஆகும்; பின் அமெரிக்காவை விட்டுக் கொலம்பஸ் புறப்பட்டதும் ஒரு வெள்ளிக்கிழமையில் ஆகும்!

## 491. எவர் வீட்டில் ஆமை புகும்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு நாலாமிடம் துலா இராசியாயிருந்து, அதில் சூரியன் ஆறு, எட்டு, பன்னிரண்டுக்கு உடையவருடன் கூடி நிற்க அவர்களது திசை, புத்தியில் ஆமை வீடுபுகும்!

## 492. அதிசய ஆண்டு!

1978 ஆம் ஆண்டுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அந்த ஆண்டின் முதல்நாள், ஞாயிற்றுக்கிழமையன்று தொடங்கி, இறுதிநாள், ஞாயிற்றுக்கிழமையன்று முடிந்தது! மொத்தம் அந்த ஆண்டில் 53 ஞாயிற்றுக்கிழமைகள் அமைந்தன. இது போன்று 400 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அமையும். அடுத்து, 2378 ஆம் ஆண்டில்தான் இது போன்ற அதிசயம் நிகழும்!

## 493. கிரிகுஜாம்பாள் இரகசியம்!

தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகே உள்ள திருநாகேஸ்வர இராகு தலத்தில் அமைந்துள்ளது

கிரிகுஜாம்பாள் சந்நிதி. அது தனிச்சிறப்பு மிக்கது. அது சுதையால் ஆன ஒன்று. அதற்கு அபிஷேகம் செய்வது இல்லை. தைமாதப் பொங்கல் அன்று மட்டும், வருடத்திற்கு ஒரு முறை, தயிர் பல்லயம் போட்டுச் சாம்பிராணி தைலம் பூசப்படும். அங்குத் திருமகள், மலைமகள், கலைமகள் என மூன்று சக்திகளும் ஒரே இடத்தில் உள்ளன. அது போன்று இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. அந்தக் கிரிகுஜாம்பாளின் தனிச்சிறப்பு என்னவென்றால், ரோகிணி, அஸ்தம், திருவோணம், திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திரகாரர்களுக்கு சந்திரதிசை, சந்திரபுத்தி, இராகுதிசை, இராகுபுத்தி ஆகியன தரும். தோஷங்களைப் போக்க இந்தக் கிரிகுஜாம்பாளை வழிபட்டுப் பரிகாரம் செய்தால் நன்மைகள் உண்டாகும்!

## 494. தோஷம் தரும் நெல்லிக்காய்!

ஞாயிறு, சப்தமி, பொங்கல், அமாவாசை, வெள்ளிக்கிழமை ஆகியவற்றில் அமையும் சஷ்டி ஆகிய நாள்களில் நெல்லிக்காயை உண்ணக்கூடாது! அதனால் தோஷம் உண்டாகும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## 495. கும்ப இராசியும் நவக்கிரகங்களும்!

கும்ப இராசிக்குச் செல்லும் எந்தக் கிரகமும் சனீஸ்வரரைத் தவிர, தனது குணாதிசயத்தை மாற்றிக்கொள்ளும் தன்மை உடையதன்று.

## 496. எவர் குள்ளமாய் இருப்பார்?

இலக்கினத்தில் சனி, செவ்வாய் ஆட்சி, மூன்றில் சந்திரன், சுக்கிரன் நீசம் என்னும் அமைப்பில் பிறந்தவர்கள் குள்ளமாய் இருப்பார்கள்.

## 497. தத்துப்பிள்ளை யாருக்கு?

கன்யா இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு மகரச்சனியாகவும், துலா இலக்கினத்தில், பிறந்தவர்களுக்குக் கும்பச்சனியாகவும் அமைந்து, சனியும், சந்திரனும் ஐந்தில் இருந்தால் அவருக்குத் தத்துப்பிள்ளைதான் அமையும். அதே போல், மிதுனமோ, கன்னியோ ஐந்தாமிடமாகி, ஐந்தில் புதன் தனித்து இருந்தால் தத்துப்பிள்ளைக்குப் பிறகு அடுத்த ஆண்டிலேயே மகன் பிறப்பான்!

## 498. ரிஷப இராசியின் சிறப்பு!

ரிஷப இராசிக்கு மட்டுமே தர்மகர் மாதியோகம் தருபவர் சனி மட்டுமே! மற்ற இராசிகளுக்கு இருவர் சேர வேண்டும்!

## 499. ஏழாமிடத்தின் இரகசியம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சனியும், இராகுவும் இருந்தால் அவள் தற்கொலை செய்துகொள்வாள். அதே அமைப்பில் கேட்டை நட்சத்திரமுடைய பெண் தன் மகனையே தூக்கிலிடுவாள்! அதே போல் பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழில் இராகு இருந்தால் அவள் பிறந்த ஓர் ஆண்டிலேயே பெற்றோர் இறப்பர்! அல்லது அவர்கள் ஆதரவு கிட்டாது! அல்லது பெற்றொருடன் வாழ இயலாமல் தாத்தா பாட்டியுடன் வாழ நேரும்!

## 500. உச்சம் தரும் இரகசியம்!

இலக்கினாதிபதி உச்சமானால் பெருத்த தனயோகமும், செல்வாக்கு, சொல்வாக்கு, புகழ், கௌரவம் ஆகிய அனைத்தும்

கிட்டும். அதே சமயத்தில் பத்தாமிடத்து அதிபதியும் நன்றாய் இருக்க வேண்டும் என்பதும் மிக மிக முக்கியம் ஆகும்.

## 501. சஷ்டியப்த பூர்த்தியின் இரகசியம்!

அறுபது வயது நிறைவுபெற்ற மணிவிழாவை எப்போது கொண்டாட வேண்டும்? அவரவர் பிறந்த நட்சத்திரம் ஒரே மாதத்தில் முன்னும் பின்னுமாய் இரு முறை வந்தால், இரண்டாவது நட்சத்திர நாள் அன்று தான் தங்களது சஷ்ஷடியப்த பூர்த்தியைக் கொண்டாட வேண்டும்!

## 502. வேண்டா மேஷ இலக்கினம்!

மேஷ இலக்கினத்தில் திருமணம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் கணவன், மனைவியரிடையே ஒற்றுமை இராது. எப்போதும் சண்டை சச்சரவுதான் ஏற்படும். பொருளாதாரம் சிறப்பாய் அமைந்தாலும் பாலியல் உறவு, உறவினர்கள் விஷயம் என ஏதாவது ஒன்றில் பிரச்சினை உருவ ்கும். அவர்களுக்குப் பெண் குழந்தைகள் தாம் பிறக்கும்!

## 503. பதவி இழப்பு யாருக்கு?

மீன இலக்கினம், சுக்கிரன் உச்சம், குரு உச்சம் உள்ளவர்கள் தம் முப்பத்திரண்டு வயதில் பதவியை இழந்து, நாற்பத்தெட்டு வயதிலிருந்து படிப்படியாய்ப் பல்வேறு துறைகளில் உயர்வடைவார்கள்!

## 504. மனவளர்ச்சி குன்றியவர் யார்?

இலக்கினத்தில் இராகு, இருபுறமும் சூரிய சந்திரர்கள், செவ்வாய் நீசமாய் இருக்கப் பிறந்தவர்கள் பிறவியிலேயே மனநலம் பாதிக்கப்பட்டவராய் இருப்பார்கள். இலக்கினத்தில்

கேது இருந்து மேற்கண்ட அமைப்பில் பிறந்தவர்களின் மனநிலை பதினெட்டு வயதில் பாதிப்பு அடையும். அதே அமைப்பில் இராகுவுடன் சனி சேர்ந்தால் 36 வயதிலும், அதே அமைப்பில் கேதுவுடன் சனி சேர்ந்தால் 54 வயதிலும் மனநலம் குன்றும். ஒரே இராசியில் சூரிய சந்திரர்களுக்கு இடையே இலக்கினத்தில் இராகு அல்லது கேது இருந்தால் அறுபது வயதுக்குப் பிறகும் மனநலம் குன்றும்!

## 505. தலைவரின் மனைவி ஆகும் யோகம் யாருக்கு?

கும்பம் இலக்கினமாகி, வளர்பிறைச் சந்திரன் நான்கிலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் அந்தப் பெண் மிகப்பெரிய தலைவரின் மனைவியாகும் பாக்கியத்தைப் பெறுவாள்.

## 506. புத்தாடை, புது ஆபரணங்கள் அணிய!

அசுவினி, ரோகிணி, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அவிட்டம்,ரேவதி ஆகிய நட்சத்திரத்தில் புது ஆடைகள், ஆபரணங்கள் அணிவது சிறப்பு. அதே போல் திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு கிழமைகளும் உகந்தவை. ஞாயிறு சுமாரான நாள். செவ்வாயும் சனியும் விலக்கப்பட வேண்டிய நாள்களாகும். சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை ஆகிய திதிகளும் பொருந்தா!

## 507. எவர் அப்பாவுடன் சண்டையிடுவார்?

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதாம் இடத்தில் செவ்வாய், சூரியன், சனி ஆகிய மூவரும் நின்றால் அவர் தம் தந்தையுடன்

அடிக்கடி சண்டையிடுவார். அதே போல், இலக்கினாதிபதியும் ஐந்துக்கு உடையவரும் பகைவராய் இருக்கப்பெற்ற ஜாதகர் அடிக்கடி தம் தந்தையோடு சண்டையிடுவார்!

## 508. பரிகாரத்துக்கு உரிய நட்சத்திரங்கள்!

இராகு, கேதுவுக்குப் பரிகாரம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் அஸ்வினி, மகம், மூலம், ஸ்வாதி, சதயம், திருவாதிரை ஆகியனவாகும்.

## 509. உலகம் எப்போது அழியும்?

உலகம் தோன்றிய நாள் முதலே உலகம் அழியப் போகிறது என்ற வதந்தி இருந்து கொண்டு தான் உள்ளது. என்று அழியும் எனப் பலமுறை ஆண்டு தேதி ஆகியன குறிக்கப்பட்டுப் பொய்யானதைச் சரித்திரம் கூறும். கி.பி. 2000 இல் உலகம் அழியும் என்ற ஆருடமும் பொய்யானது. உலகம் அழியப் போகிறது என முன்பே கூறிய சிலவற்றைப்பற்றி அறிவோம். கி.பி. 1000 ஆவது ஆண்டில் கெட்டவர்கள் ஆற்றில் வீசப்படுவார்கள் என்றும், நல்லவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்வார்கள் என்றும் கிறித்தவக் குருமார்கள் அறிவித்தனர். பல ஆயிரக்கணக்கான மக்கள் அன்றைய தினம் ஜெருசலேம் நகருக்குப் புனிதயாத்திரையை மேற்கொண்டனர். முன்னர் சொல்லப்பட்டது போன்று எதுவுமே நடைபெறவில்லை! மீண்டும் கி.பி. 1033 ஆம் ஆண்டில் பல ஆயிரம் மக்கள் ஜெருசலேமிற்குச் சென்றார்கள். அவர்கள் அன்றைய தினம் ஏசுநாதர் திரும்பி வரவிருப்பதாய் நம்பினர். அத்தகைய ஆருடங்கள் தொடர்ந்து கூறப்பட்டன.

1834 ஆம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த வில்லியம்மில்லர் என்னும் பிரசங்கி, இன்னும் இரு வருடங்களில் உலகம் அழியவிருப்பதாகவும், அது பைபிளில் குறிக்கப்பட்டிருப்பதாகவும் மக்களிடையே உரையாற்றினார். ஆனால் 1836ஆம் ஆண்டில் உலகத்தின் அழிவு பற்றிய அறிகுறி எதுவும் தெரியவில்லையே என்று மக்கள் முணுமுணுத்தனர். பின்னர் அவரே அந்தத் தேதி தள்ளி வைக்கப்பட்டிருப்பதாகவும், 1843ஆம் ஆண்டு மார்ச்சு 21ஆம் தேதியும், 1844ஆம் ஆண்டு மார்ச்சு 21ஆம் தேதியும் அழிவுக்கான நாள்கள் என்றும் அவர் தெரிவித்தார். அதிர்ஷ்ட வசமாய் 1844 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் வால் நட்சத்திரம் ஒன்று தோன்றியது. அதனால் மக்கள் யாவரும் அலறியடித்துக்கொண்டு அங்குமிங்குமாய் ஓடினர். ஐரோப்பிய நாடுகளே அல்லோலகல்லோலப்பட்டன. ஆனால் அந்தப் பதற்றமும் விரைவில் அடங்கியது. கலிபோர்னியப் பல்கலைக்கழகம் உலக முடிவுத் தொடர்பான கலைக்களஞ்சியம் ஒன்றை வெளியிட்டது. அதில், அதுவரை உலக முடிவுத் தொடர்பாக அவிழ்த்துவிடப்பட்ட சரடுகள் யாவும் விளக்கப்பட்டிருந்தன.

1874 ஆம் ஆண்டில் இன்னொரு ஜோதிடரான ரஸ்ஸல் என்பவர், உலகம் இன்னும் முப்பது வருடங்களில் அழிந்துவிடும் என்று மக்களிடையே பிரசங்கம் செய்தார். அவர் வாக்குப் பலிப்பது போல் அந்தக் காலகட்டத்தில் முதலாவது உலகயுத்தம் தோன்றியது. அதன் பின்னரும் உலக அழிவுபற்றி மக்கள் மத்தியில் பல புதிய தேதிகள் சொல்லப்பட்டன. அவை பலிக்காமல் போகும் போதெல்லாம் சில நம்பக்கூடிய காரணங்களுடன் பல புதிய தேதிகள் அறிவிக்கப்பட்டன. இத்தனை கெடுக்களையும் தாண்டி உலகம் இன்னும்

விரநடைபோட்டுக்கொண்டுதான் செல்கின்றது. ஸ்கைலாப் விழுந்தபோதும், பல கிரகங்கள் ஒன்றுசேர்ந்த போதும், வியாழக்கிரகத்துடன் வால் நட்சத்திரம் மோதிய போதும் இப்படியே பேசப்பட்டது! எல்லாவற்றுக்கும் உச்ச கட்டமாய் 2000 ஆம் ஆண்டில் உலகம் அழியும் எனவும் பேசப்பட்டது. ஆனால், அவை அனைத்தும் பொய்யாயின. இவை யாவும், சொல்ல, படிக்க பரபரப்பாய் இருக்கலாம்! ஆனால், என்றும் உலகம் அழியப்போவதில்லை. இது உறுதி!

## 510. பூமியோகம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் நாலுக்குடையவர் பத்தாம் வீட்டிலும், பத்துக்குடையவர் நான்காம் வீட்டிலும் பரிவர்த்தனையாய் இருந்து செவ்வாயும் பலமாய்க் காணப்பட்டால் திடீர் என அதிர்ஷ்ட வசத்தால் விசேஷ பூமியை அடைவார்கள்!

## 511. ஆகாத நட்சத்திரங்கள்!

ஜென்ம நட்சத்திரம், ஜென்ம நட்சத்திரம் முதல் பத்தாவது நட்சத்திரம், ஜென்ம நட்சத்திரம் முதல் பதினொறாவது நட்சத்திரம், ஜென்ம நட்சத்திரம் முதல் பதினெட்டாவது நட்சத்திரம், ஜென்ம நட்சத்திரம் முதல் இருபத்து மூன்றாவது நட்சத்திரம், ஜென்ம நட்சத்திரம் முதல் இருபத்து ஐந்தாவது நட்சத்திரம் ஆகியவற்றில் ஒருவர் எந்த நல்ல சுபகாரியத்தையும் செய்யக்கூடாது! இத்தகைய நட்சத்திரத்தில் கோசாரத்தில் பாக் கிரகங்கள் சஞ்சரித்தாலும், ஜெனனகாலத்தில் மேற்சொன்ன நட்சத்திரங்களின் சாரத்தில் உள்ள பாவக்கிரகங்களின் தசாபுத்திகள் நடக்கும் காலத்திலும் தீய பலன்கள் நடக்கும். எனவே இதற்குத் தக்க பரிகாரங்கள் செய்துகொள்ள வேண்டும்.

## 512. சுக்கிரபகவான் தரும் அதிர்ஷ்டம்!

அசுவினி, கிருத்திகை, பூசம், சுவாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் சுக்கிரன் சஞ்சாரம் செய்யும் காலத்தில் பிறந்த ஜாதகர் இலட்சுமி புத்திரர் என்று கூறவேண்டும். இது போல் சுக்கிரன் சஞ்சாரம் செய்யும் காலத்தில் பிறந்த ஜாதகர் பிரபு ஆவார். இவர் தசை நடந்தால் இன்னும் விசேஷமாகும்.

## 513. எந்த வயதில் செல்வத்தை அடையலாம்?

ஒருவரின் ஜாதகத்தில் பாக்கியதானமாகிய ஒன்பதாமிடத்து அதிபதி தனஸ்தானமாகிய இரண்டாமிடத்திலும், இரண்டாமிடத்து அதிபதி ஒன்பதாமிடத்திலும் இருந்து பரிவர்த்தனை பெற்றிருந்தால் அவர் 22 வயதுக்கு மேல் பேரும் புகழும், தம் முயற்சியில் எதிர்பாராத இலாபங்களும் ஏற்படும்!

## 514. பணம் தரும் யாத்திரை எது?

சூரியன் பதினொன்றில் அல்லது இரண்டில் அல்லது இலக்கினத்தில் சுபராய் இருக்க வேண்டும். செவ்வாய் மூன்றிலும், சனி ஆறிலும் அமரவேண்டும். இவ்வித நிலையில் சர இலக்கினமாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இலக்கினங்களில் பயணம் செய்யச் சரசரவென்று பணம் தினந்தோறும் ஏறி வரும்!

## 515. அழகான விடு யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில், நான்காம் வீட்டுக்கு உடையவர் நான்காம் வீட்டில் பாவக்கிரகங்களுடன் கூடாமல், பாவக்கிரகங்கள் பார்க்காமல் தனியாய் நின்றால், அத்தகைய

ஜாதகருக்கு முயற்சியினால் அழகான வீடு கிடைக்கும். நான்காம் வீட்டுக்குடையவன் ஆறு, எட்டு, பன்னிரெண்டு ஆகிய இடங்களில் அமர்ந்தால் வீடு கிடைக்காமல் கடனாளி ஆவான்!

## 516. திடீர் யோகம் எப்பொழுது?

சதய நட்சத்திரத்தில் பிறந்து துலா இலக்கினமாய் அமைந்து, ஒன்பதாம் வீடாகிய மிதுனத்தில் குரு இருந்து, குருதசை நடக்கும் காலத்திலும், புதன் தசை நடக்கும் காலத்திலும், திடீர் யோகம் ஏற்பட்டு விசேஷ தனத்தைச் சேகரிப்பான். ஆனால், புதன்தசை சுயபுத்தியில் பல தொல்லைகள் ஏற்படும்.

## 517. அதிகம் சம்பாதிக்கும் யோகம் யாருக்கு?

சிம்ம இலக்கினத்தில் பிறந்து, அஸ்வினி நட்சத்திரமாய் அமைந்து, சூரியன், புதன், குரு, சுக்கிரன் ஆகியவர்கள் மிதுனஇராசியில் காணப்பட்டால், இவர்கள் திசை நடந்தால் ஜாதகருக்குத் தினம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் கிடைக்கும். மேற்படி அமைப்பில் குரு, திருவாதிரை மூன்றாம் பாதத்தில் இருந்தால், அதிக புத்திர சம்பத்து உண்டு. சந்திர திசையில் தொல்லைகள் உண்டு.

## 518. மனைவி வகையில் பாக்கியம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் களத்திர ஸ்தானமாகிய ஏழாமிடத்தில் களத்திரகாரர் ஆகிய சுக்கிரன் இருந்து, அந்த ஏழாமிடத்து அதிபதி சுக்கிரன் வீட்டில் அமைந்தால், மனைவி வகையில் எதிர்பாராத இலாபங்கள் கிடைக்கும்.

## 519. முப்பது வயதுக்கு மேல் யோகம் யாருக்கு?

ஒருவர் தனுசு இலக்கினமாகி அதில் இராகுவும், சந்திரனும் இருந்தால் அவர் முப்பது வயது வரை யோகம் இல்லாமல் இருந்து, முப்பது வயதுக்கு மேல் திடீர் என வியாபாரம் செய்து தினமும் நல்ல இலாபத்தை அடைவார்!

## 520. நல்ல பாக்கியசாலி யார்?

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதுக்கு உடையவர் பதினொன்றிலும், பதினொன்றுக்கு உடையவர்கள் ஒன்பதிலும் பரிவர்த்தனை பெற்றிருந்தால் அந்த ஜாதகர் பிறந்தது முதல் கடைசிவரை நல்ல பாக்கியசாலியாய் வாழ்வார்!

## 521. எந்த வயதில் யோகம் கைகூடும்?

பூர நட்சத்திரம் நான்காம் பாதத்தில் சிம்ம இராசியில் சந்திரன் இருக்க, கார்த்திகை நட்சத்திரம் முதல் பாதம் மேஷ இராசியில் சுக்கிரன் இருந்தால், ஐந்தாம் திசையாகிய இராகு திசையில் 36 வது வயதில் திடீர் பாக்கியம் பெருகும். மேற்படி கிரக அமைப்புடன் கடக இலக்கினமாய் அமைந்து இராகு கன்னியில் இருந்தால், 25 வயதுவரை பொருளுக்காகக் கஷ்டப்பட்டு 35 வயதுக்கு மேல் வெகு தனத்தைச் சம்பாதித்து மஹாபாக்கியசாலி என்று புகழ் பெறுவார்!

## 522. இலட்சுமிகடாக்ஷம் யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதுக்கு உடையவர் 1, 4, 7, 10 இல் இருந்து அல்லது உச்ச வீட்டிலோ 5, 9 ஆம் வீட்டிலோ இருந்து, இலக்கினாதிபதி நல்ல பலமுள்ள இடத்தில் இருந்தால் அவருக்கு இலட்சுமி யோகம் எனப்படும்!

## 523. பகைவரை வெல்லும் இரகசியம்!

சுக்கிரனிலிருந்தும், செவ்வாயிலிருந்தும் மூன்றாவது வீட்டில் பாவியாய் இல்லாத புதன் இருக்கும் காலத்திலும், அல்லது சனியிருக்குமிடத்திலிருந்தோ, குரு இருக்குமிடத்திலிருந்தோ பாவி இல்லாத புதன் இருக்கும் பொழுது அவன் பகைவரை முழுதும் வென்று வருவான்.

## 524. மணியான ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் இலாபாதிபதியாகிய 11 ஆம் வீட்டுக்குடையவர் சுகஸ்தானமாகிய நான்கில் அமர வேண்டும். ஐந்தாம் வீட்டுக்குடையவராகிய புத்திர ஸ்தானாதிபதி பத்தில் இருக்க வேண்டும். இத்தகைய அமைப்புடைய ஜாதகமே மணியான ஜாதகம் எனப்படும். சகலயோகமும் பெற்று, தர்மவானாய், பக்திமானாய்ச் சிறந்து விளங்குவார்!

## 525. யோகமுள்ள ஜாதகம் எது?

கேட்டை நட்சத்திரத்தில் பிறந்து, குருவும் சுக்கிரனும் கடக இராசியில் கூடி, அவர்கள் தசாபுத்தி நடக்கும் காலத்தில் தினமும் அதிக இலாபத்தைப் பெறுவார்கள். இத்தகைய கிரக அமைப்புடையவர்களுக்குப் பூரட்டாதி நான்காம் பாதத்தில் மீன இராசியில் சனியும் இருந்தால், பழம் நழுவிப்பாலில் விழுந்தது போல தாயாதிகள் சொத்து அல்லது பெண் சகோதரி சொத்தாகிலும் கிடைக்கும்!

## 526. கஷ்டமில்லாத ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டுக்குடையவரும், ஒன்பதுக்குடையவரும் நான்காவது வீட்டில் இருந்து, அவர்களது

திசை நடந்தால் அத்தகைய ஜாதகருக்கு மாதவருமானத்திற்குக் குறைவிருக்காது!

## 527. உயர்ந்த பதவி கிடைக்கும் ஜாதகம்!

ஒருவருக்கு எந்த இலக்கினமாய் இருந்த போதிலும் அத்தனைக் கிரகங்களும் சர இராசியாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியவற்றில் அமைந்துவிட்டால் அவருக்கு உயர்ந்த பதவி கிடைக்கும்!

## 528. புதையல் தரும் ஜாதகம் எது?

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதாம் வீட்டுக்குரியவர் எட்டாமிடத்தில் இருந்து அவர் திசை நடந்தால் அவர் புதையல் யோகத்தை அடைவார். இதில் மற்றொரு கிரகச் சேர்க்கையோ, பார்வையோ கூடாது!

## 529. எப்போது ஏழை, பணக்காரர் ஆவார்?

ஜென்ம இலக்கினமானாலும், இராசியானாலும் வர்க்கோர்த்தமம் பெற்று, (வர்கோத்தமம் என்பது இராசிக் கட்டத்திலும், நவாம்சக் கட்டத்திலும் ஒரே இடத்தில் இருப்பது ஆகும்) நான்கு கிரகங்களுள் எதுவாகிலும் இலக்கினத்தையோ இராசியையோ ஏழாம் பார்வையாகப் பார்த்தால், ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் புகழும் பொருளும் உடையவராய் ஆவார்.

## 530. எவர் மன்னனுக்குச் சமமான யோகத்தைப் பெறுவார்?

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதாம் வீட்டுக்குடையவர் இருக்கும் வீட்டுக்கு அதிபதி உச்சவீட்டில் இருந்து மற்றொரு

சுபகிரகத்தால் பார்க்கப்பட்டால் அரசனுக்குச் சமமான யோகத்தைப் பெறுவார்.

## 531. மகான்களின் ஜாதகம் எது?

ஒருவர் மகர இலக்கினத்தில் பிறந்து, இலக்கினத்தில் செவ்வாய் இருந்து, சூரியன் இருக்கும் இராசி வீட்டுக்கு இடையில் மற்ற எல்லாக் கிரகங்களும் அமைந்து, குருபகவான் சந்திரனுடன் கூடி, மாலை ஆறு மணிக்குள் பிறந்திருந்தால் அவர்கள் மகான்கள் ஆவார்கள்!

## 532. இருபது வயதில் யோகம் தரும் ஜாதகம் எது?

ஒருவர் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்து, மீன இராசியில் சனியும் இருந்தால், அவர் இருபது வயது வரை கஷ்டம் அடைந்து, பின் இருபது வயதுக்கு மேல் விசேஷ தன இலாபத்தை அடைவார். ஆனால், 37 ஆவது வயதில் பண விஷயத்தில் மிக ஜாக்கிரதை தேவை.

## 533. போட்டிகளில் வெற்றி பெறும் ஜாதகம் எது?

ஒருவர் எந்த இலக்கினத்தில் பிறந்திருந்தாலும் பதினோராம் வீடு பாபஸ்தானமாகிறது. அந்தப் பதினொன்றுக்குடையவர் இலக்கினத்திலிருந்து, இலக்கினத்துக்குரியவர் இரண்டாம் வீட்டில் இருந்து, இரண்டுக்கு உடையவர் பதினோராம் வீட்டில் இருந்து, இவர்கள் தனியாக ஒருவர் சம்பந்தமின்றி இருந்தால், போட்டிகளில் வெற்றி பெறும் யோகத்தைத் தரும்!

## 534. எவர் பெண் பித்தர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் ஏழாம் வீட்டுக்குடையவருடன், பத்தாம் வீட்டுக்குடைய வரும் ஒன்று கூடி எங்கிருந்த போதிலும் அவர் எந்த நேரமும் பெண்களுடன் உறவு கொள்வதிலேயே நாட்டம் கொள்வார். அதே போல், ஏழுக்குடையவரும், பதினொன்றுக்குடையவரும் கூடி இருந்தாலும், ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டாலும் சதா பெண்களுடன் கூடியிருப்பார். ஆனால், இது போன்ற அமைப்புகளில் மற்ற கிரகங்களின் சேர்க்கையோ, பார்வையோ கூடாது!

## 535. அதிசய ஆண்டு!

1866 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பௌர்ணமியே இல்லை! ஆனால், அதற்கு முந்திய மாதத்திலும் அடுத்த மாதத்திலும், இரண்டிரண்டு பௌர்ணமிகள் வந்தன. இம்மாதிரியான கிரக நிலை, பத்து இலட்சம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் ஏற்படுமாம்!

## 536. தஞ்சாவூர்க் கல்வெட்டு கூறும் அதிசய சோதிடம்!

தஞ்சைப் பெரியகோயிலில் காணப்படும் ஒரு கல்வெட்டு கூறும் சுவையான விவரம் இது: சோழ வமிசத்து அரசர் ஐவர், நாயக்கர் அரசர் பதினெட்டுப்பேர், மகாராஷ்டிர வமிச அரசர் எட்டுப்பேர், ஆக 31 பேர் ஆண்ட பிறகு கம்பெனி யார் வர்க்கத்தில் 158 பேர் இந்த நாட்டை ஆள்வார்கள். பின்பு கலியுகாதி 5045 க்கு மேல் ஆங்கில ஆட்சி முடிவுறும். அப்போது ஐரோப்பாக் கண்டம் ஐந்து பிரிவாகிச் சண்டை ஏற்படும். இந்நாட்டில் சமரசக்கட்சி ஏற்பட்டு 18 ஆண்டுகள்

நடைபெறும். பிறகு, சாதி மதப் பூசல்கள் ஏற்பட்டு உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் அதிகமாகிச் சமூகம் மடியும். பிறகு ஜப்பானின் உதய சூரியன் கொடியை நாட்டும்.' இவ்வாறு அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு எப்போது பொறிக்கப்பட்டது என்பது தெரியாது. இதில் கூறியுள்ளபடி சோழர், நாயக்கர், மகாராஷ்டிரர், ஆங்கிலேயர் ஆட்சி நடந்தது; பிறகு, காங்கிரஸ் ஆட்சி நடந்தது; அதன்பிறகு உதயசூரியன் சின்னம் கொண்ட திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வந்தது. இவை யாவுமே கல்வெட்டில் கூறியுள்ளபடியே நடந்துள்ளன! இந்தத் தகவல் பெங்களூரிலிருந்து வெளிவரும் 'அஸ்ட்ராலாஜிகல் மேகசின்' (மே1996) இதழில் பிரசுரமாகி உள்ளது!

## 537. இருபது வருடச்சாபம்!

அமெரிக்கக் குடியரசுத் தலைவர்கள் வரலாற்றில் இருபது ஆண்டுகளுக்கு ஒரு முறை துயரச் சம்பவம் ஒன்று நடைபெற்று வருவது வழக்கமாய் இருக்கிறது. சரியாய் இருபது ஆண்டுகள் முடிந்தவுடன் அப்பொழுது அமெரிக்கக் குடியரசுத் தலைவராய் பதவியில் இருப்பவர் இறப்பார். இச்சம்பவம், தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 1840 ஆம் ஆண்டில் ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டார். 1880 ஆம் ஆண்டில் கார்ஃபீல்டும், 1900 ஆம் ஆண்டில் மெக்கின்லியும் கொல்லப்பட்டனர்.

1920 ஆம் ஆண்டு அதிபராய் இருந்த ஹார்டிஞ்சும், 1940 ஆம் ஆண்டில் அதிபராய் இருந்த ரூஸ்வெல்ட்டும் உடல்நலக் குறைவால் பதவியில் இருக்கும்போதே இறந்தார்கள். அதன்பிறகு 1960 அதிபராய் இருந்த ஜான்எஃப் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். அதன்பிறகு 1980 ஆம் ஆண்டு அதிபராய் இருந்த ரீகன் இறக்கவில்லை என்றாலும் அவரைக் கொல்லப் பலமுறை முயற்சி செய்யப்பட்டுத் தப்பித்துவிட்டார். அதே

போல், 2000இல் அதிபராய் இருக்கும் கிளிண்டன் அவர்களுக்கு எந்த ஆபத்தும் நேராதவண்ணம் இறைவனை வேண்டுவோமாக!

## 538. மேலை நாட்டினர் விலக்கும் பதின்மூன்றாம் எண்!

மேலை நாட்டினருக்குப் பதின்மூன்று என்றாலே அலர்ஜி. கூடுமானவரை அந்த எண்ணை உபயோகிப்பதையே அவர்கள் விலக்குவார்கள். 12 ஆம் எண் வீட்டுக்குப் பிறகு 14 ஆம் எண் உள்ள வீடுதான் இருக்கும். ஓட்டல் அறைகளிலும் இப்படித்தான். இதற்குக் காரணம், ஏசுநாதர் அருந்திய கடைசி விருந்தின் போது பதின்மூன்று பேர்களே இருந்தார்கள். அந்தப் பதின்மூன்று சீடர்களுள் பதின்மூன்றாவது நபரான ஜூடாஸ் என்பவன் தான் ஏசுநாதரைக் காட்டிக் கொடுத்தான். அதன் காரணமாகவே பதின்மூன்றாம் எண் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டு அதை விலக்கத் தொடங்கினார்கள்.

## 539. அதிசயத் தகவல்!

ஆஸ்திரிய நாட்டு வானியல் வல்லுநர் ஒப்போல்ஜர் என்பவர், 1887 ஆம் ஆண்டில் ஒரு வாணியல் ஆய்வு நூல் ஒன்றை வெளியிட்டார். அதில் அவர், கி.மு. 1207 ஆம் ஆண்டு முதல் கி.பி. 2161 ஆம் ஆண்டுக்குள் எட்டாயிரம் சூரிய கிரகணங்களும், ஐம்பத்திரண்டாயிரம் சந்திரகிரகணங்களும் உண்டாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்!

## 540. அதிசயப் பதினொன்று!

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிவடைந்த நாளன்று 'பதினொன்று' என்னும் எண் ஓர் அதிசயத்தை நிகழ்த்தியது!

அந்த அதிசயம் இதுதான். இரண்டாவது உலகமகாயுத்தம் முடிவடைந்த 1944ஆம் வருடம், 11ஆவது மாதத்தில் 11ஆம் நாளன்று, காலை 11.00 மணியளவில் ஆகும்.

## 541. அதிசய ஒற்றுமை!

அமெரிக்க நாட்டின் அதிபராய் இருந்தவர் ஆபிரகாம் லிங்கன் ஆவார். அவர் தம் குடும்பத்தில் கொலையுண்ட இரண்டாவது நபர் ஆவார். மற்றொருவர் அவர் பாட்டனார். அவரால் அவர் பெயரும் ஆபிரகாம் ஆகும். அவங்கள் இருவருக்கும் இடையே மேலும் இரு ஒற்றுமைகளும் உண்டு. அவ்விருவர் மனைவியர் பெயரும் மேரி ஆகும். அவ்விருவருக்குமே தாமஸ் என்ற பெயரில் மகன் இருந்தான். இவை அதிசயத்தக்க ஒற்றுமைகள் ஆகும்!

## 542. மஹாபரணி!

மாளயபட்சத்தில் அமையும் பரணி நட்சத்திரம் பிதுர்களுக்கு மிகவும் விசேஷமானது ஆகும். அதனை மஹாபரணி என்று வழங்குவார்கள்.

## 543. நன்மை தரும் யோகங்கள்!

பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்படும் 27 யோகங்களுள் சுபகாரியத்திற்கு உரிய யோகங்கள் 1. பிரீதி 2. ஆயுஷ்மான் 3. சௌபாக்கியம் 4. கோபனம் 5. சுகர்மம் 6. விருத்தி 7. ஹர்ஷணம் 8. வக்ரம் 9. சித்தி 10. பரீயான் 11. சிவம் 12. சித்தம் 13. சாத்தியம் 14. சுபம் 15. சுயம்பிரம் 16. பிரகாம்யம் 17. ஐத்திரம் ஆகிய பதினேழும் ஆகும்.

## 544. நன்மை தரும் கரணங்கள்!

பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்படும் கரணங்கள் சுபகாரியத்திற்கு உரிய கரணங்கள் 1. பவம் 2. பாலவம் 3. கௌலவம் 4. தைதுலாம் 5. கரசை ஆகிய ஐந்துமாகும்.

## 545. எவர் திருமணத்திற்கு முன் பெண் சேர்க்கை உடையவராய் இருப்பார்?

ஒருவரின் ஜாதகத்தில் எட்டில் இராகு அமர்ந்து செவ்வாயால் பார்க்கப்பட்டால், அந்த ஜாதகர் திருமணத்திற்கு முன்பே பெண்களோடு உடல் உறவு கொண்டவராய் இருப்பார்!

## 546. பதவி உயர்வு எவருக்கு கிட்டும்?

ஒருவரது இலக்கினம் கடகம், ஐந்தாமிடத்தில் குரு, ஒன்பதாமிடத்தில் செவ்வாயும் இருந்து பரிவர்த்தனை பெற்றிருந்தால் குருதிசை செவ்வாய் புத்தியிலோ, செவ்வாய் திசை குருபுத்தியிலோ பதவி உயர்வு ஏற்படும். செவ்வாய், உத்தியோகக்காரன். மேலும், செவ்வாய் ஒன்பதாம் இடத்தில் இருந்தாலே உயர்பதவி கிட்டும்!

## 547. எவர் நடிகர் ஆவார்?

கன்னி இலக்கினமாய் இருந்து 4, 7, 10 ஆகிய இடங்களில் முறையே குரு, சுக்கிரன், புதன் ஆகிய மூன்று இரகங்கள் ஜாதகத்தில் இருக்குமேயானால் அவர் நடிகர் ஆவார்!

## 548. சித்திரை நட்சத்திரம் கூறும் இரகசியம்!

சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சுயநலவாதிகள். அவர்களுக்கு நிரந்தர நண்பர்கள் இலர். ஆதாயத்திற்கு

ஏற்றாற்போல் நண்பர்களைத் தேடிக்கொள்வார்கள். உள்ளுக்குள் குரூரபுத்தி இருக்கும். செவ்வாய்க் கிரகத்தின் ஆதிக்கத்தில் பிறந்த அவர்களிடம் தாம்பத்திய ஈடுபாடு மிக அதிகமாகவே இருக்கும்.

## 549. மூன்றாம் இடத்து இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் மூன்றாம் இடத்தில் பாவக்கிரகம் இருந்தால், நல்ல பலனே உண்டாகும்; ஆனால் குரு, அக்கிரன் மூன்றாம் இடத்தில் இருப்பது சரியல்ல. குடும்பத்தில் மேம்பாடு இராது. காமஇச்சை மூலம் தனவிரயம் உண்டாகும்.

## 550. நீச்சபங்க இராஜயோகம் எவை?

ஒரு கிரகம் நீச்சம் பெற்று, அந்த நீச்ச கிரகம் வீற்றிருக்கும் இராசியின் அதிபதி ஆட்சி பலமாகவோ, உச்சபலமாகவோ, வக்கிரம் பெற்றோ, அம்சத்தில் அந்தக் கிரகம், இராசியில் வீற்றிருக்கும் அதே இராசியில் இருக்குமேயானால் அது நீச்சபங்க இராஜயோகம் ஆகும். அதே போல் நீசம் பெற்ற கிரகத்தின் இராசியின் அதிபதி இலக்கினத்திற்கோ இராசிக்கோ 1, 4, 7, 10 அல்லது 5, 9 ஆகிய இடங்களில் வீற்றிருந்தாலும் நீச்ச பங்கராஜயோகம் ஆகும். அதே போல், நீச்சம் பெற்ற இரகத்துடன் சேர்ந்திருக்கும் இரகம் சந்திரனுக்கு 4, 7, 10 இல் இருந்தாலும் நீச்ச பங்க இராஜயோகம் ஆகும். மேலும், நீச்சம் பெற்ற இரகத்துடன் சேர்ந்திருக்கும் இரகம் உச்சம், ஆட்சி பெற்று, சந்திரனால் பார்க்கப் பெற்றால் நீச்ச பங்க இராஜயோகம் ஆகும்.

## 551. கன்னி இலக்கினக்காரர்களுக்குச் சுக்கிரபலம் எப்படி?

கன்னி இலக்கினத்திற்கு இலாபஸ்தானம் கடகமாய் இருப்பதால், இராசிக்குரிய சந்திரன், சுக்கிரனுக்குப் பகை ஆதலால் மகத்தான யோகத்தைக் கொடுக்க மாட்டார். மற்றும், ஆட்சி பலத்துடன் 2, 9 ஆம் இடங்களில் இருந்தாலும் பரிபூர்ண பலனைக் கன்னி இலக்கினக்காரர்களுக்கு சுக்கிரன் அளிக்கமாட்டார். இது லக்கினமான கன்னியில் சுக்கீரன் நீச்சம் பெற்று இருந்தாலும் திருமணவகையில் ஏதாவதொரு பிரச்சனைகள் உண்டாகும். நான்கு, ஏழு, ஐந்தில் சுக்கிரன் இருந்தால் சுக்கிரனால் ஆதாயம் உண்டு. அதைத் தவிர மற்ற இடங்களில் சுக்கிரன் இருந்தால் கடின உழைப்பு இருந்தாலும், நிம்மதியும் சந்தோஷமும் உண்டாகாது! அத்துடன் சூதாட்டம் போன்றவற்றிலும் நாட்டம் செல்லும். அவர்களுக்குச் சுக்கிரனால் பிற்பலனே ஏற்படும். இலக்கினாதிபதி புதனுடன் சேர்ந்திருந்தால் நல்ல பலன் உண்டு. இலக்கினத்தையோ சுக்கிரன் இருக்கும் வீட்டையோ சூரியன் அல்லது சந்திரன் பார்த்தால், அவர்களுக்கு அபகீர்த்தி ஏற்பட்டு, அவர்களுடைய பெருமையும் கௌரவமும் குறையும்! வியாபாரத்தில் ஸ்திரத்தன்மையில்லாமல் உயர்வும் தாழ்வும் உண்டாகும்!

## 552. மணமேடையின் இரகசியம்!

திருமண மேடைக்குத் தென்கிழக்கில் அக்கினியை வணங்கும் முகமாய்க் குடவிளக்கும், தெற்கில் எமதர்மராஜனை வணங்கும் முகமாய்ப் புரோகிதரையும், தென்மேற்கில் நிருதியை வணங்கும் முகமாய்த் தோழியையும், வடமேற்கில் வாயுபகவானை வணங்கும் முகமாய் மாப்பிள்ளைத் தோழனையும், வடகிழக்கில் ஈசானமூர்த்தியை வணங்கும்

முகமாய் அம்மி குழவியையும், வடக்கில் குபேர பிரீதிக்காகப் பெண்ணின் தகப்பனாரையும் நிறுத்த வேண்டும் என்பது நமது சாஸ்திர நியதி ஆகும்!

## 553. திருவாதிரை நட்சத்திரத்தின் இரகசியம்!

திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எத்தகைய வேலையையும் சமர்த்தாய் முடிக்கும் ஆற்றல் உடையவர்கள். வெகு சுலபமாய் அனைவரையும் தம் நண்பர்களாக்கிக்கொள்ளும் திறமை அவர்களுக்கு உண்டு. அவர்களிடம் பேசி ஜெயிப்பது என்பது இயலாத காரியம். அத்தகைய பேச்சாற்றல் மிக்கவர்கள். அவர்களை எளிதில் ஏமாற்ற முடியாது. மற்றவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருப்பார்கள். ஆதலால் அவர்களைத் தாரளமாய் நம்பி எக்காரியத்திலும் இறங்கலாம்!

## 554. சிம்ம இலக்கினமும் சுக்கிரனும்!

ஸ்திர இலக்கினமாய்ச் சிம்மம் கருதப்படுவதால் அந்த இராசிக்குரிய அதிபதி சூரியன் இராஜகிரகமாய்க் கருதப்படுகிறது. சூரியன் சுக்கிரனின் பகை கிரகமாகும். மேலும் சூரியன், சந்திரன் இருவருக்குமே சனியும், சுக்கிரனும் பகையாகும். ஆதலால், கடக இலக்கினக்காரர்களுக்குச் சுக்கிரன் நாலாம் இடத்து அதிபதியாகவும், சிம்மத்திற்குப் பத்தாமிடத்து அதிபதியாகவும் வருவதால், அந்த இரு இலக்கினக்காரர்களுக்கும் சுக்கிரனால் களத்திரபாகம் திருப்தியாய் அமையாது. மேலும் சிம்ம இலக்கினத்திற்கு இரண்டாமிடமான தஸ்தானம் கன்னிவீடு. கன்னியில் சுக்கிரன் நீசம் ஆதலால் வருவாய் தேடும் வழிகள் இலாபகரமாயும், திருப்திகரமாயும் இல்லாத வகையில் அமையும்.

மற்றும் இந்த இலக்கினக்காரர்களுக்குத் தாம்பத்திய வாழ்க்கையைத் திருப்தியான வகையில் சுக்கிரன் அளிக்கமாட்டான். அதனால் அடிக்கடி இருவர் உறவில் பிரிவு ஏற்படலாம். சுக்கிரன் மறைவுஸ்தானம் அடையாமல் ஓரளவு பலமாய் இருந்தால் சிறிதளவு கெடுபலன் குறையும். சிம்ம இலக்கினக்காரர்களின் கெடுபலன் குறையும். சிம்ம இலக்கினக்காரர்களின் கௌரவம் பாதிக்கக்கூடிய வகையில் சுக்கிரன் இவர்களுடைய நடத்தையில் களங்கத்தை உண்டுபண்ணும். மேலும், இவர்களுக்குச் சுக்கிரன் பாவியாய் இருப்பதால், சுக்கிரனின் திசை வரும்போது தீய காரிங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவில்லை என்றால், கடைசி மூச்சு வரை இப்பழக்கம் நீடித்து, புத்தி செல்வம், கௌரவம் ஆகியவற்றைக் கெடுக்கும்.

## 555. சங்கடஹர சதுர்த்தி தரும் எச்சரிக்கை!

ஒவ்வொருமாதமும் தேய்பிறையில் வரும் சதுர்த்தி தினமே 'சங்கடஹர சதுர்த்தி' ஆகும். அன்று இரவு சந்திரதரிசனம் கண்டே விநாயகரை வழிபட்டு உணவு உண்ணவேண்டும் என்பது முறை ஆகும். ஆனால், எக்காரணத்தைக் கொண்டும் வளர்பிறையில் வரும் சதுர்த்தி அன்று சந்திர தரிசனம் காண்பது மிகப்பெரிய பாவம் ஆகும்.

## 556. இரண்டில் கேது என்ன செய்யும்?

ஒருவரின் ஜாதகத்தில் குடும்ப ஸ்தானமாகிய இரண்டாமிடத்தில் கேது இருந்தால், அவருக்குப் பின் பெண் வேறு இனத்தில் அமையும். சிலருக்கு இருதாரயோகமும் ஏற்படும்.

## 557. குருவும் கேதுவும் சேர்ந்தால் என்ன பலன்?

ஒருவரின் ஜாதகத்தில் குருவும், கேதுவும் சேர்ந்து இலக்கினத்திலோ 4, 7, 10 போன்ற கேந்திரஸ்தானங்களிலோ இருந்தால் ஜாதகருக்கு மகாலக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும். பணவசதியோடு இருப்பார். சீமானாய், செல்வராய் இருப்பார்!

## 558. லாட்டரிச்சீட்டு யோகம் யாருக்கு?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு 2, 5, 9, 11 ஆகிய இடங்களுக்குரிய அதிபதிகள் பரிவர்த்தனை பெற்றிருந்தால் இலாட்டரி சீட்டு யோகம் உண்டு. உதாரணமாய், இரண்டாம் வீட்டில் ஐந்துக்குடையவனும், ஐந்தாம் வீட்டில் இரண்டுக்குடையவனும், ஒன்பதாம் வீட்டில் பதினொன்றுக்குடையவனும், பதினொன்றாம் வீட்டில் ஒன்பதுக்குடையவனும் இருந்தால் ஒரு யோக அமிசமே. இத்தகையோர் இலாட்டரிச் சீட்டு வாங்கினால் அதிர்ஷ்ட பலன் கிட்டும்!

## 559. ஐஸ்வரியம் மிக்க ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் நான்காமிடத்துக்கு உரியவரும், ஒன்பதாமிடத்துக்கு உரியவரும் சேர்ந்து இலக்கினத்தில் அமர்ந்திருந்தால் அந்த ஜாதகர் அஷ்டலட்சுமியின் ஐஸ்வரியம் யாவும் பெற்று, வாகன சுகத்துடன் வாழ்வார்!

## 560. நல்ல பலனைக் கெடுக்கும் அமைப்பு

ஒருவரின் ஜாதகத்தில் பாக்யாதிபதியாகிய ஒன்பதாம் இடத்துக்குரியவரும், ஜீவனாதிபதியாக பத்துக்குரியவரும்

ஆக இருக்கும் 6, 8, 12ஆம் இடத்து அதிபதிகளுடன் சேராமலிருப்பது நல்லது! அப்படிச் சேர்ந்தால் நல்ல பலன்களைக் கெடுத்துவிடும்!

**561. பகைவனுடைய செல்வம் யாருக்குக் கிடைக்கும்?**

ஒருவர் ஜாதகத்தில் ஆறாமிடம் சத்துருஸ்தானம் ஆகும். அந்த இடத்துக்குரிய அதிபதி தனஸ்தானமான இரண்டில் இருந்தால் பகைவருடைய செல்வம் அவருக்குக் கிடைக்கும்!

**562. அதிகாரமும் செல்வாக்கும் உடைய ஜாதகம் எது?**

ஒருவர் ஜாதகத்தில் நான்காம் இடமும் ஒன்பதாம் இடமும் அபஸ்தானங்களாய் இருந்து, அதற்கான அதிபதிகள் ஒரே இராசியில் வீற்றிருந்தால், அவர் அதிகாரமும் செல்வாக்கும் கூடியவராய் இருப்பார்!

**563. வாகனயோக ஜாதகம்!**

ஒருவர் ஜாதகத்தில் நான்காமிடம் அகஸ்தானமாகும். ஆதலின், நான்கில் குரு அமர்ந்து, நாலாமிடத்தின் அதிபதி ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால், சிறப்பான வாகன யோகம் உண்டாகும். அதே போல், ஜாதகத்தில் சுக்கிரனுக்கு மூன்றிலோ அல்லது ஏழிலோ சந்திரன் இருந்தாலும் அல்லது சந்திரனுக்கு மூன்றிலோ, ஏழிலோ சுக்கிரன் இருந்தாலும் வாகனயோகம் உண்டு.

**564. தொல்லை தரும் ஜாதகம்!**

ஒருவரின் ஜாதகத்தில் நான்காமிடத்து அதிபதியோடு பாவக்கிரகங்களான செவ்வாயோ சூரியனோ சேர்ந்திருப்பது

நல்லதன்று. அதனால் தொல்லைகள், கஷ்டங்கள் ஆகியன உண்டாகும்.

## 565. எவர் மனைவியின் உடல்நலம் பாதிக்கும்?

ஒருவர் ஜாதகத்தில் களத்திர ஸ்தானாதிபதி நீச்சம் பெற்றாலும், பகை கிரகத்துடன் சேர்ந்தாலும், அவர் மனைவியின் உடல்நலம் திருப்திகரமாய் இருக்காது!

## 566. சுவாதி நட்சத்திர இரகசியம்!

சுவாதிசத்திரத்தில் பிறந்தவர்கள் தற்பெருமை உடையவர்கள். இந்த நட்சத்தித்தில் பிறந்த பெண்கள் திருமணத்திற்கு முன்னர் நடுத்தரமான உடல் அமைப்புடையவர்கள்; திருமணத்திற்குப் பின்னர் மிகுந்த சதைப்பற்று உடையவராய்க் காணப்படுவார்கள். எடுப்பான தோற்றமுடையவர்கள் சொல்லாலும், செயலாலும் பிறரைச் சுலபமாய்க் கவரக்கூடியவர்கள். பிறந்த வீட்டில் ஆரம்பகாலத்தில் சிரமங்களைச் சந்தித்திருக்க வாய்ப்புண்டு. பெரும்பாலும் இவர்கள் திருமணம் ஆகி, கணவன் வீட்டை அடைந்ததும் உன்னதமான வாழ்க்கையில் ஈடுபட வாய்ப்புண்டு. திருமணம் ஆனவுடன் இவர்களுக்கு மட்டுமன்று, இவர்கள் பிறந்த குடும்பத்திற்கும் மேன்மை உண்டாகும்!

## 567. வீடு கட்டக்கூடாத சூனிய மாதங்கள் எவை?

ஒவ்வோர் இராசிக்கும், ஒரு மாதம் சூனியமாய் அமைகிறது. அந்தச் சூனியமாதத்தில், அந்த இராசிக்குரியவர்கள் வீடு கட்டக்கூடாது! அதன் விவரம் வருமாறு: 1. மேஷம் - சித்திரை 2. ரிஷபம் - வைகாசி 3. மிதுனம் - ஆனி 4. கடகம்

- ஆடி 5. சிம்மம் - ஆவணி 6. கன்னி - புரட்டாசி 7. துலாம் - ஐப்பசி 8. விருச்சிகம் - கார்த்திகை 9. தனுசு - மார்கழி 10. மகரம் - தை 11. கும்பம் - மாசி 12. மீனம் - பங்குனி.

## 568. எவர் நீண்ட சரீரமுடையவராய் இருப்பார்?

சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் ஆகிய நான்கும் நீளமான இராசிகள் எனப்படும். ஒரு ஜாதகத்தில் இலக்கினாதிபதி நீண்ட இராசியில் பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் நீண்ட சரீரம் கொண்டிருப்பார்கள்.

## 569. வெள்ளை மனம் உள்ளவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் நான்காம் வீட்டில் சுபக்கிரகம் உச்சம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் வெள்ளை மனம் உள்ளவராய் இருப்பார்.

## 570. எவர் பயமுள்ளவராய் இருப்பார்?

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய் பலம் குறைந்திருந்தால் அவர் எப்பொழுதும் பயந்தவராய் இருப்பார்!

## 571. எவர் கலகத்தைத் தூண்டக்கூடியவராய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் மூன்றாம் இடத்தில் கேது இடம் பெற்றிருந்தால் கலகத்தைத் தூண்டிவிடக் கூடியவராய் இருப்பார்.

## 572. மனக்கவலை உடையவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் குருவானவர் நீசம் பெற்று, இலக்கினத்தில் இராகு இருந்தால் அந்த ஜாதகர் எப்பொழுதும்

கவலைப்படுபவராய் இருப்பார். அதே போல் 12 க்கு உடையவர் நீசம் பெற்றிருந்தாலும் அவர் கவலைப்படுபவராய் இருப்பார். மேலும், இலக்கினாதிபதி நீசம் பெற்றாலோ, பகைவர் வீட்டில் இருந்தாலோ அந்த ஜாதகர் மனத்தில் கவலை சூழ்ந்திருக்கும்.

## 573. எவர் அதிகம் சாப்பிடக்கூடியவராய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டாம் வீட்டுக்குடைய கிரகம் பாவக்கிரகத்துடன் கூடியிருந்தால் அந்த ஜாதகர் அதிகம் சாப்பிடக்கூடியவராய் இருப்பார்!

## 574. வீரிய சக்தி இழந்தவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் சனி, சுக்கிரன் ஆகிய இருவரும் பத்தாம் இடத்தில் இருந்தாலும் அல்லது சுக்கிரனும், சனியும் சஷ்டாஷ்டமமாய் (ஆறாமிடமாய்) இருந்தாலும் அந்த ஜாதகர் வீரியசக்தி இழந்தவராய் இருப்பார்!

## 575. அண்ணன் சொத்து தம்பிக்கு உடைய ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் மூன்றுக்கு உடையவர், ஒன்பதாம் வீட்டு அதிபதியோடு கூடி நட்புடன் இருந்தால், அண்ணனது செல்வம் தம்பிக்கு வந்து சேரும்.

## 576. மருமகன் மூலம் செல்வம் பெறுபவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் ஐந்துக்குடைய கிரகம் சுபகிரகமாய் ஒன்பதாம் இடத்தில் இருந்தால் அந்த ஜாதகர் தம் மருமகன் மூலம் செல்வம் பெறுவார்!

## 577. எவருக்குத் தகப்பன் சொத்து கிடைக்காது?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டுக்கு உடையவர் 6, 8, 12ஆம் வீடுகளுள் ஒன்றில் ஒன்பதாம் வீட்டோனுடன் இருந்தால் அந்த ஜாதகருக்குத் தகப்பன் செல்வம் கிட்டாது! அதே போல், நான்காம் வீட்டோனுக்குக் கேந்திரத்தில் சூரியன் இருந்தாலும், அந்த நான்கில் அவர்கள் இருந்தாலும் தந்தை செல்வம் மகனுக்கு வந்திடாது.

## 578. ஜாதகம் கூறும் செல்வத்தின் இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் இரண்டில் குரு இருந்தாலும் பொருளைக் கொடுத்தாலும் அதிக அளவு தருவதில்லை; இரண்டாம் வீடு தனுசாகவோ, மீனமாகவோ அமைந்து, அங்கே குரு இருந்தால், மிகுந்த செல்வம் சேரும்; இரண்டில் பலமான சுக்கிரன் இருந்தால் இலட்சுமி கடாட்சம் நிறைய உண்டாகும்; பலமுள்ள சனி இரண்டில் இருந்தால் செல்வ வசதி உண்டு; இரண்டில் இராகு பலமாய் இருந்தால்கூட இளமையில் அவ்வளவாய்ச் செல்வவசதி இராது. இரண்டில் கேது இருந்தால் படிப்புக்கோ, செல்வவசதிக்கோ குந்தகம் விளைவிப்பார். பலமான சுபக்கிரகம் பார்த்தால் அந்த நிலை ஓரளவுக்குச் சீராகும்!

## 579. எவர் உறுப்புகள் பலவீனப்பட்டிருக்கும்?

ஒருவர் ஜாதகத்தில் கேந்திரஸ்தானங்களில் சுபக்கிரகங்கள் இல்லாமல் பாவக்கிரகங்கள் மட்டுமே இருப்பார்களானால், பொதுவாக ஜாதகருக்குச் சரீரத்தில் சில உறுப்புகள் பலவீனப்பட்டிருக்கும். அதே போல் சனி, சந்திரன்

ஆகிய இருவரும் ஜாதகத்தில் நீசம் பெற்றுச் சூரியன் கும்பத்தில் இருந்தால் சரீரத்தில் சில உறுப்புகள் பலவீனப்பட்டிருக்கும்!

## 580. புராதனமான செல்வம் யாருக்குக் கிட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் பதினோராம் வீட்டோன், ஒன்பதாம் வீட்டோனோடு சேர்ந்து வலுப்பெற்றிருந்தால் அந்த ஜாதகருக்குப் புராதனமான செல்வம் வந்து சேரும்!

## 581. பதினோராம் இடத்துச் சூரியன் என்ன செய்யும்?

ஒருவரின் ஜாதகத்தில் பதினோராம் இடத்தில் சூரியன் இருந்தால் அவருக்குப் பலவழிகளில் பொருள் திரட்டும் யோகம் உண்டு. அரசாங்க உத்தியோகத்தால் யோகம் வரும். வாழ்க்கையில் உன்னதமான நிலையை வகிப்பார். நல்ல கொள்கைப்பிடிப்பு இருக்கும்.

## 582. எவர் தாழ்ந்த தொழிலைச் செய்வார்?

ஒருவரின் ஜாதகத்தில் எட்டாம் வீட்டு அதிபதி பத்தாம் வீட்டில் இருந்தால் அவர் தாழ்ந்த தொழிலைச் செய்வார்.

## 583. எவர் புல்தரையில் படுக்க நேரும்?

ஒருவரின் ஜாதகத்தில் 12 ஆம் வீட்டோன் ஆறு அல்லது எட்டாமிடத்தில் இருக்கச் சனியும், இராகுவும் 12 இல் இருந்து சுபகிரகப் பார்வையைப் பெறாவிட்டால் அந்த ஜாதகர் புல்தரையில் படுக்க நேரும்.

## 584. எவர் பணத்தை அரசாங்கம் பறித்துக் கொள்ளும்?

ஒருவரின் ஜாதகத்தில் 11 ஆம் வீட்டோன் 12ல் இருக்க, 12 ஆம் வீட்டோன் இரண்டில் இருக்க, இரண்டாம் வீட்டோன்

பலவீனமடைந்திருந்தால் அந்த ஜாதகருடைய பணத்தை அரசாங்கம் பறித்துக்கொள்ளும்!

## 585. பொருளை இழக்கும் ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் 12 ஆம் வீட்டோன் இலக்கினம் அல்லது ஏழாமிடத்தில் இருப்பாரானால் அவர் தம் பொன், ஆபரணங்கள், தானியங்கள் ஆகியவற்றை இழக்க நேரும். அதேபோல், பத்துக்குடையோன் பாடியாகி 12 இல் இருந்தால் 50 ஆம் வயதில் அவர் தனங்கள் அழியும்!

## 586. தருமம் செய்பவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் 12 இல் குரு, சுக்கிரன் வளர்பிறைச் சந்திரன் புதன் ஆகிய நால்வரும் கூடியிருந்தால் அந்த ஜாதகர் தருமப்பணிகளில் நிறையச் செலவு செய்வார்!

## 587. பொருளைப் புதைத்து வைப்பவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் 12 ஆம் வீட்டானோடு பாபிகள் சேர்ந்து சுபர் வீட்டில் இருந்தாலும், சுபருடன் கூடினாலும் அந்த ஜாதகர் பொருளைப் புதைத்து வைப்பார்!

## 588. எவர் செல்வத்தை இழப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டாம் வீட்டோன் சூரியனுடன் சேர்ந்திருக்க, 12 ஆம் வீட்டோன், இரண்டாம் வீட்டில் சுபருடன் இருக்க, 11 ஆம் வீட்டோன் எட்டில் இருந்தால் அந்த ஜாதகர் தம் செல்வத்தை இழப்பார்.

## 589. எவர், பொருளை வைத்த இடம் தெரியாமல் மறந்துவிடுவார்?

ஒருவர் ஜாதகத்தில் 12இல் செவ்வாய் தனித்திருந்தால் அல்லது 12 ஆம் வீட்டைத் தனித்துப் பார்த்தால் அந்த ஜாதகர், தாம் வைத்த பொருளை வைத்த இடம் தெரியாமல் மறந்து விடுவார்!

## 590. ஏழாமிடத்து இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் ஏழில் சுக்கிரன் இருந்தால் அவர் கர்ப்பமாய் உள்ள பெண்ணைப் புணர நேரும். அதே போல், இராகு அல்லது கேது ஏழில் இருந்தால், வீட்டுக்கு விலக்காய் இருக்கும் பெண்ணை ஜாதகன் புணர்வான். நீசம் அடைந்து பலவீனமான சுக்கிரன் ஏழில் இருக்கக் களத்திரபாவம் பழுதுபடும். மேற்கண்ட கெட்ட பலன்கள் யாவும் ஏழாம் வீட்டைப் பலமுள்ள சுபக்கிரகம் பார்க்கும் பட்சத்தில் எல்லாத் தோஷங்களும் விலகிவிடும்! அதேபோல், ஏழில் குரு இருக்க உயர்ந்த பெண்ணுடன் இணக்கம் உண்டாகும். ஏழாம் வீட்டில் சுக்கிரனும் புதனும் கூடியிருந்தால் மனத்திற்கினிய பெண்ணுடன் சேர்ந்து சுகம் அடைவான்!

## 591. தந்தையைப் பாதிக்கும் ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் ஒன்பதாமிடத்தில் பாவக்கிரகங்கள் கூடியிருந்தால் தந்தையின் நிலை பாதிக்கப்படும்!

## 592. சகோதரனுக்கு ஆகாத அமைப்பு எது?

ஒருவரின் ஜாதகத்தில் மூன்றில் செவ்வாய் இருந்தால் சகோதர நலத்தைக் கெடுப்பார் என்றாலும், இதர நிலைகளில் ஜாதகருக்குச் செழிப்பைத் தருவார்!

## 593. சூரியன் தரும் மாரகம்!

ஒருவர் ஜாதகத்தில் ஆறாம் வீட்டோன் சூரியனாய் இருந்தால், தந்தைக்கு மாரகம் விளைவிக்கும் அதிகாரம் சூரியனுக்கு உண்டு!

## 594. எப்பெண் மறுமணம் செய்வாள்?

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் பலம் குன்றிய ஏழாம் வீட்டில் சூரியன் நின்றால், அவள் கணவனால் விலக்கப்பட்டு வேறு ஒருவரை அடைவாள். அதே போல், சந்திரனும் சூரியனும் சேர்ந்து ஏழில் நிற்கப் பிறந்த பெண் கணவனைப் புறக்கணித்து விட்டு வேறு ஒருவனை மணப்பாள்! அதே போல் ஒருவனை 11ல் இரு கிரகங்களும், ஏழில் சனியும் புதனும் நிற்க மறுமணம் ஏற்படும்.

## 595. எவருக்குத் திருப்தி இல்லாத மணவாழ்க்கை அமையும்?

பெண் ஒருத்தியின் இலக்கினம் மகர இலக்கினமாகி, அந்த மகரத்தில் சனியும் கடகத்தில் சந்திரனும் இருந்தால் அவருக்குத் திருமணம் வாலிப வயதில் நடைபெற்றாலும் அவருக்கு மணவாழ்க்கை திருப்திகரமாய் அமையாது!

## 596. திருமணம் நடப்பது பெரும் பிரச்சனையாய் உள்ள பெண் ஜாதகம் எது?

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சுக்கிரனும், சுக்கிரன் நின்ற வீட்டுக்குடையவரும் சஷ்டாஷ்டகமானால் (ஆறாமிடம்) அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடப்பது பெரும்

பிரச்சனையாகும்! அதே போல், பெண் ஒருத்திக்குக் கன்னியில் இருக்கும் சூரியனைச் சனி எங்கிருந்து பார்த்தாலும் திருமணம் நடப்பது பெரும் பிரச்சினையாகும்! அதே போல், பெண் ஒருத்திக்கு இரண்டு அல்லது ஏழு அல்லது பன்னிரெண்டில் பாபிகள் இருக்க, தேய்பிறைச் சந்திரன் ஐந்து அல்லது ஒன்பதில் அமர்ந்து குருவால் பார்க்கப்படாவிட்டால் திருமணம் நடப்பது பெரும் பிரச்சனையாகும்!

## 597. மனைவியைப் போல் வாழும் ஜாதகம்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சந்திரனின் வீடான கடகம், செவ்வாயின் வீடான மேஷம், விருச்சிகம் ஆகிய மூன்றனுள் ஏதாவது ஒன்று, ஆறு அல்லது எட்டு அல்லது பன்னிரண்டாம் வீடாகி அந்த 6, 8, 12இல் சனி இருந்தால் அப்பெண்ணுக்குத் திருமணம் காலம் கடந்து நடக்கும் அல்லது அவள் திருமணம் செய்துகொள்ளாமலேயே ஒருவருடன் அவர் மனைவியைப் போல் வாழ்வாள்!

## 598. எந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடப்பது சந்தேகம்

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சனியும் செவ்வாயும் சேர்ந்து இராசியில் அல்லது ஏழில் அல்லது இலக்கினத்தில் இருந்தால் அல்லது நவாம்சத்தில் சஷ்டாஷ்டகமானால் (ஆறாமிடம்) திருமணம் நடப்பது சந்தேகமே. அதேபோல், பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழுக்குடையவர் ஆறாம் இடத்தில் நீசமாகவோ அஸ்தங்கமாகவோ இருந்தால் அவர்களுக்குத் திருமணம் நடப்பது சந்தேகமே! அதே போல், பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாம் இடத்திலுள்ள சனியைப்

பாபிகள் பார்க்கச் சுபர்கள் பார்க்கவில்லையானால் அவருக்குத் திருமணம் நடப்பது சந்தேகமே!

## 599. பெண்ணின் ஏழாமிடத்து இரகசியங்கள்!

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் சூரியன் இருந்தால் அவள் கணவன் காமம் மிகுந்தவனாகவும், ரோஷம் உள்ளவனாகவும், மனைவியிடம் பற்று உள்ளவனாகவும் இருப்பான். ஏழில் சந்திரன் இருந்தால் கணவன் அழகுள்ளவனாகவும், குணவானாகவும், மெலிந்த சரீரம் உள்ளவனாகவும், குறைந்த ஆரோக்கியம் உள்ளவனாகவும் இருப்பான். ஏழில் செவ்வாய் இருந்தால், கணவன் சோம்பேறியாய் இருப்பான். ஏழில் புதன் இருந்தால் கணவன் ஆண்மைசக்தி குறைந்தவனாய் இருப்பான். ஏழில் குரு இருந்தால், கணவன் குறைந்த ஆரோக்கியம் உள்ளவனாய் இருப்பான். ஏழில் சனி இருந்தால் கணவன் ஆண்மைச்சக்தி குறைந்தவனாய் இருப்பான்.

## 600. எவருக்கு வயது முதிர்ந்த கணவர் வாய்ப்பார்?

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சந்திரனும், சுக்கிரனும் ஏழில் இருந்தால் அவளுக்கு வயது முதிர்ந்த கணவனே வாய்ப்பான்.

## 601. எவருக்குக் கெட்ட கணவன் வாய்ப்பான்?

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் ஏழில் அசுபர்கள் இருந்து, சுபர்கள் பார்க்காவிட்டால் அவளுக்குக் கெட்ட கணவன் வாய்ப்பான்.

**602. எப்பெண்ணுக்குப் பணக்காரக் கணவன் வாய்ப்பான்?**

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சந்திரன், குரு, சுக்கிரன் ஆகியவர்களுள் யாரேனும் வலுத்தால் அவள் கணவன் பணக்காரனாய் இருப்பான். அதே போல் கன்னி, துலாம், மிதுனம் ஆகியவற்றுள் ஒன்று பெண்ணுக்கு ஏழாம் இடமானால் அவளுக்குப் பணக்காரக் கணவன் வாய்ப்பான்!

**603. எவருக்கு வியாதியுள்ள கணவன் வாய்ப்பான்?**

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் குருவும் சுக்கிரனும் ஆறில் இருந்தால் அவளுக்கு வியாதியுள்ள கணவன் வாய்ப்பான்!

**604. அரசனுக்கொத்த கணவன் யாருக்கு வாய்ப்பான்?**

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் இலக்கினத்தில் சுக்கிரன் இருந்து, நான்கில் குரு இருந்தால் அவளுக்கு அரசனுக்கொத்த கணவன் வாய்ப்பான். அதே போல் இலக்கினம் கன்னியாகி புதன் அதில் உச்சம் பெற 11 இல் குரு உச்சமானால் அரசனுக்கொத்த யோகமுள்ள கணவன் வாய்ப்பான். அதே போல் மிதுனம் இலக்கினமாகி அதில் சந்திரனும், பத்தில் புதனும், 11 இல் உச்ச சூரியனுமானால் அவளுக்கு அரசனுக்கொத்த கணவன் வாய்ப்பான்.

**605. மகாபாக்கியவதி யார்?**

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் வளர்பிறைச் சந்திரன் நான்கில் உச்சம் பெற்றுக் குருவால் பார்க்கப்பட்டால் அவள் மகாபாக்கியவதியாவாள். இது கும்ப இலக்கினத்திற்குப் பொருந்தும்!

**606. பலஸ்தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடும் வாய்ப்பு யாருக்குக் கிட்டும்?**

ஒருவரின் ஜாதகத்தில் சந்திரன் உச்சம் பெற்று, சுக்கிரன் பத்தில் இருக்க, குரு சுபர் வீட்டில் பலமுடன் இருக்க, அவருக்குப் பல ஸ்தலங்களுக்குச் சென்று தீர்த்தமாடும் வாய்ப்புக் கிட்டும்.

**607. எவர் சிவபூஜை செய்வார்?**

ஒருவரின் ஜாதகத்தில் பத்தாம் வீட்டோன் ஓரிரு கிரகங்களுடன் கூடியிருக்க, அவருக்கு முன்னும், பின்னும் சுபக்கிரங்கள் சூழ்ந்திருந்தால் அந்த ஜாதகர் சிவபூஜை செய்வார்!

**608. ஞானோபதேசம் செய்யும் தகுதி யார் பெற்றிருப்பார்?**

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதாம் வீட்டோனும் குருவும் வலுத்திருக்கப்பெற்றால் நிச்சயமாய் அந்த ஜாதகர் தாம் ஞானம் பெற்றிருப்பதுடன், பிறருக்கும் ஞானோபதேசம் செய்யும் தகுதியும் பெற்றிருப்பார்.

**609. யார் ஆன்மீகத் துறையில் வல்லவராய் இருப்பார்?**

ஒருவரின் ஜாதகத்தில் நான்காம் வீட்டில் பத்துக்குடையவன் அமர்ந்திருக்க, நான்காம் வீட்டோன் திரிகோணத்தில் இருக்க, பத்தாம் வீட்டில் நான்கு கிரகங்கள் சேர்ந்திருப்பார்களானால் அந்த ஜாதகர் ஆன்மீகத்துறையில் வல்லவராய் இருப்பார்!

**610. விவசாயத்துறையில் அதிர்ஷ்டசாலியாகத் திகழ்பவர் யார்?**

ஒருவரின் ஜாதகத்தில் சூரியன், சந்திரன், 11 ஆம் வீட்டோன், அவ்வீட்டில் இருப்போன் ஆகிய நால்வருக்கும்

சுப ஆதிக்கம் ஏற்படுமானால் அந்த ஜாதகர் விவசாயத்துறையில் அதிர்ஷ்டசாலியாய்த் திகழ்வார்!

## 611. மாபெரும் சாதனையாளர் யார்?

ஒருவர் சிம்ம இலக்கினத்தில் பிறந்து சூரியன் சிம்மத்திலும், குரு தனுசிலும், மேஷத்தில் செவ்வாயும் இருந்தால் அவர் மாபெரும் சாதனைகள் செய்து உலகத்தையே தங்களுக்குள் அடக்கிவிடக்கூடிய வன்மையைப் பெற்றிருப்பார்.

## 612. சமுதாய வழிகாட்டி யார்?

ஒருவர் விருச்சிக இலக்கினத்தில் பிறந்து இரண்டில் செவ்வாயும், ஐந்தில் குருவும், பத்தில் சூரியனும், 11 இல் புதனும் இருந்தாலும் பெரிய அரசியல் தலைவராயும், சமுதாய வழிகாட்டியாயும் திகழ்வார்!

## 613. நல்ல நடிகன் யார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதியும், பன்னிரண்டாம் இடத்து அதிபதியும் சேர்ந்து ஓர் இராசியிலிருக்க, அவர்களுடனே அந்த இராசியோன் ஏழிலே இருந்தால் அவர் ஒரு நல்ல நடிகனாய் இருப்பார்.

## 614. அரவிந்தரும் ஜோதிடமும்!

அரவிந்தர் 8.12.49 எழுதியது: "நாராயண ஜோதிஷி என்பவர் கல்கத்தாவைச் சேர்ந்த ஜோதிடர். அரசிலில் என் பெயர் பிரபலமாகும் முன்னரே, என்னை யார் என்று அறியாத அவர், நான் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராட்டத்தில்

ஈடுபடுவேன் என்றும், மூன்று வழக்குகள் எனக்கு எதிராய்த் தொடரப்பட்டு மூன்றிலும் விடுதலை அடைவேன் என்றும் கூறினார். ஜாதகப்படி எனக்கு ஆயுள் 63 வருடந்தான் எளறும், யோக சக்தியால் என் வாழ்நாளை நானே முதிர்பிராயம் வரை நீட்டிக்கொள்வேன் என்றும் கூறினார். என் ஜாதகத்தை முதலில் பார்த்த போது அவர் எனது பிறந்த நேரம் குறிக்கப்பட்டிருப்பதில் ஏதோ தவறு இருக்கிறது என்றார். அது திருத்தப்பட்டவுடன், ஆஹா! ஈயம் இப்போது தங்கமாகி விட்டது" என்று கூறினார். இவ்வாறு மகான் அரவிந்தர் ஜோதிட கலையின் அற்புதத்தை விளக்கி உள்ளார்!

## 615. யானைக்கு உணவு கொடுங்கள்!

குருபகவானின் வாகனம் யானை. எனவே, குரு சரியில்லாத இராசியினர் யானைக்குப் பிடித்த உணவை அதற்குக் கொடுத்துப் பரிகாரம் தேடலாம். அதுவும் குருவுக்கு உகந்த வியாழக்கிழமை கொடுப்பது நல்லது.

## 616. கிணற்றுக்குப் பரிகாரம்!

ஒருவரது வீட்டின் பின்புற வாயிலுக்கு நேர் எதிரே கிணறு இருக்கக்கூடாது. ஒரு வேளை யார் வீட்டிலாவது அப்படிக் கிணறு இருந்தால் அக்கிணற்றை இடித்துவிட வேண்டா. கிணற்றுக்கும் வாயிலுக்கும் இடையே துளசிமாடத்தை வைத்து விட்டால் போதும்.

## 617. பூரண ஆயுள் எது?

ஒருவரை வாழ்த்தும்போது பூரண ஆயுளுடன் வாழ வேண்டும் என வாழ்த்துகிறார்கள் அல்லவா? பூரண ஆயுள்

என்றால் எத்தனை வருஷம்? நூறு என்று பொதுவாய்க் கூறுவார்கள். அது தவறு. 120 வயதே பூரண ஆயுள் ஆகும். அப்போது தான் எல்லாக் கிரகத்தின் திசைகளையும் அனுபவிக்க முடியும்!

## 618. ஒரு தலைமுறை என்பது எவ்வளவு?

ஜோதிட சாஸ்திரத்தில் ஒரு தலைமுறை எனக் குறிப்பிடுவார்கள். ஒரு தலைமுறை என்பது 30 வருடத்தைக் குறிக்கும்.

## 619. முதல் இரவு அறையின் இரகசியம்!

முதல் இரவு அறையில் மணமகன் கிழக்கு நோக்கி இருக்க, மணமகள் அவனுக்குப் பால் பழம் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். அதே போல், கணவர் கொடுக்கும் பாலை மணமகள் மேற்கு அல்லது தெற்கு முகமாய் அமர்ந்து அதனைப் பெறவேண்டும். இப்படிச் செய்தால் தீர்க்க ஆயுளும், தம்பதியினரிடையே அன்பும் உண்டாகும்.

## 620. எந்நாளில் கல்விபயில வேண்டா!

பிரதமை, அஷ்டமி திதிக்கு உரிய நாள்களில் படிப்பைத் தொடங்க வேண்டா. மேலும், அந்த நாள்களில் கல்வித் தொடர்புடைய வேலைகளையும் செய்ய வேண்டா!

## 621. யாருக்குக் கண்பார்வைக் கோளாறு இருக்கும்?

ஒருவர் சிம்ம இலக்கினமாய் இருந்து அதில் சூரியன், சந்திரன் இருந்து, சனி, செவ்வாயால் பார்க்கப்பட்டால் அவர்

பார்வையில்லாதவர் ஆவார். ஆனால், சுபர் பார்வையும் இருந்தால் பார்வை குறையுள்ளதாக அமையும். அதே போல், சூரியனும் சந்திரனும் ஆறு, எட்டில் இருந்து பாவிகள் சம்பந்தப்பட்டாலும், செவ்வாயும் சனியும் இணைந்து ஆறு, எட்டில் இருந்தாலும் கண்பார்வை இராது. மேலும் சூரியன் எட்டில், சந்திரன் ஆறில், செவ்வாய் இரண்டில், சனி பன்னிரண்டில் இருந்தால் வியாதிகளின் காரணத்தால் பார்வை மங்கும் நிலை உண்டாகும்!

## 622. யாருக்குக் காதுகேளா நிலை உண்டாகும்?

ஒருவரின் ஜாதகத்தில் மூன்றாம் பாவம் வலக்காதையும், 11 ஆம் பாவம் இடக்காதையும் குறிக்கும். பாவிகள் 3, 5, 9, 11 இல் இருந்து சுபர் பாராமல் இருந்தால் காது கேளாத நிலை உண்டாகும்!

## 623. யாருக்குப் பல் பாதிப்பது ஏற்படும்?

ஒருவரின் ஜாதகத்தில் பாவிகள் ஏழில் இருந்து சுபர் பார்வை இல்லாமல் இருந்தால் இளமையிலேயே பல கோளாறு அல்லது பல் இழப்பு ஏற்படும். மேலும் ஐந்தாம் இடத்தில் பாவிகள் இருந்தாலும் பல் இழப்பு ஏற்படும்!

## 624. கோடி நன்மை பெறுபவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் தனஸ்தானாதிபதி (உ), பாக்கியாதிபதி (9), இலாபாதிபதி ஆகிய மூவரும் குருவுடன் கூடிப் பலம் பெற்றிருக்க, அவரவர் திசையில் கோடி நன்மைப் பலன்கள் நடைபெறும்!

## 625. நன்மை தரும் அமைப்பு!

ஒருவர் ஜாதகத்தில் தனஸ்தானாதிபதி (2), பாக்கியாதிபதி (9) ஆகிய இருவரும் உச்சம் பெறுவது அல்லது பரிவர்த்தனை பெறுவது மிகவும் நன்மை தருவதாகும்.

## 626. தனஸ்தானத்தின் இரகசியங்கள்!

ஒருவர் ஜாதகத்தில் தனஸ்தானாதிபதி (2) சூரியன் அல்லது சந்திரனாய் அமைந்தால் அவருக்குத் தாய், தந்தையர் சொத்து மூலமே ஜீவனம் அமையும். தனஸ்தானாதிபதி செவ்வாய் ஆக அமைந்தால் சகோதர, சகோதரிகளால் ஜீவனம் உண்டாகும். தனாதிபதி புதனாய் அமைந்தால் மாமன்வகையில் ஜீவனயோகம் உண்டாகும். தனாதிபதி குருவானால் மூதாதையர் சொத்துகளால் ஜீவனம் உண்டாகும். தனாதிபதி சுக்கிரனாய் அமைந்தால் கணவன் அல்லது மனைவியால் தனசம்பத்து உண்டாகும். தனாதிபதி சனியாய் இருந்தால் சுயமாய்க் கஷ்டப்பட்டுப் பொருள் தேடித் தனசம்பத்தைப் பெறுவார்கள். பிதுர் சொத்துகள் இருந்தாலும் அதனால் இவர்களுக்குப் போதிய பலன் இராது.

## 627. சொந்த ஊரில் இருப்பவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் தனஸ்தானாதிபதி, தனஸ்தானத்திலேயே ஆட்சி பெற்றிருந்தால் அவர் இறுதி வரையில் தாம் தேடிய செல்வத்தை வைத்துக்கொண்டு சொந்த ஊரிலேயே நிலையாய் இருந்து கொண்டு வாசம் செய்வார்!

## 628. குருபகவான் செய்யும் பாதகம்!

ஒருவர் ஜெனன இலக்கினம் எதுவாய் இருந்தாலும், தனஸ்தானமாகிய இரண்டாம் இடத்தில் குரு இருப்பது நல்லதன்று. அது அவர்களுடைய பிதுர்த்துகளை நிர்மூலமாக்கிவிடும்!

## 629. எவருக்கு மாடிவீடு, மெத்தை ஆகியன வாய்க்கும்?

ஒருவர் ஜாதகத்தில் தனஸ்தானாதிபதி (2) ஜெனன இலக்கினத்திற்கு 6, 9, 10 ஆகிய ஸ்தானங்களில் உச்சம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் மாடிவீடு, மெத்தை, மேடை உள்ள கட்டிடம் போன்றவற்றில் வாசம் செய்யக்கூடியராய் இருப்பார்.

## 630. பெற்றோர்களைப் பணக்காரர் ஆக்கும் ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதியும், சுகஸ்தானாதிபதியும் (4) தத்தம் இல்லங்களில் ஆட்சி பெற்றிருந்தாலும் அல்லது பரிவர்த்தனை பெற்றிருந்தாலும், அவ்வமைப்பு அந்த ஜாதகர் பிறந்தது முதல் எட்டு வயதிற்குள் அவர் பெற்றோர்களைப் பெருஞ்செல்வராக்கிவிடும்!

## 631. இராகு கிரகத்தின் இரகசியங்கள்!

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்தில் இராகு நின்றால் இளம் வயதில் கல்வி, திருமணம் போன்ற சுபகாரியங்களை எளிதில் பெற முடியாது. அப்படிப் பெற்றுவிட்டாலும் பல்வேறு இடையூறுகளைச் சந்திப்பார்கள். 32 வயதுக்கு மேல்தான் யோகம் ஏற்படும். அவர்கள் அமைக்கும் நிறுவனம் பிரும்மாண்டமான நிறுவனமாய் அமையும். இது தவிர பெரிய

குடும்ப அமைப்பும், மாடி வீடு போன்ற மனையோகமும் அமையும். அதே போல் நான்கில் இராகு நின்றால் எவ்வளவுக்கு எவ்வளவு வருமானம் வருகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பொருள் சேதம் நண்பர்கள், உறவினர் ஆகியோரால் ஏற்பட்டு விடும். இவர்களுக்கு வியாபாரம் அகப்படாது. ஏழாம் இல்லத்தில் இராகு நின்றால் வருவாயின் பெரும்பகுதி மனைவியின் மருத்துவச் செலவிற்கு அல்லது வழக்காடுவதற்குச் செலவாகிவிடும். இவர்களுக்குக் குடும்ப சுகவிருத்தி கிட்டாது. அதே போல், பத்தாம் வீட்டில் இராகு நின்றால் வருவாய்க்குப் பஞ்சம் இருக்காது; திக்கெட்டிலிருந்தும் வருவாய் வரும். பெரும்பதவி கிட்டும். சிலர் துப்பறியும் இலாக்காவிலும், தலைமை அலுவலகத்திலும் பணியாற்றுவார்கள். என்றாலும், இவர்கள் தமது பணிகளைத் தொடர்ந்து ஏற்று நடத்தாமல் அடிக்கடி மட்டம் போட்டு விடுவார்கள். அல்லது பல்வேறு மேடுபள்ளங்களைக் காண்பார்கள். எந்த நிலையிலும் உன்னதமான புகழினைப் பெறுவார்கள்.

இவர்களுக்கு இறுதி வரையில் உத்தியோகம் நிலைக்கும் என்ற உத்தரவாதம் மட்டும் தர இயலாது. எந்தச் சமயத்திலும் இவர்களுக்கு வீழ்ச்சி உண்டு என்று எண்ணி எச்சரிக்கையாய்ச் செயல்பட்டால் இவர்கள் தொடர்ந்து தனயோகத்தை அனுபவிக்கலாம்!

## 632. அபூர்வப் பிறவி ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்து ஆகிய கேந்திரங்களில் எங்காவது ஒரு ஸ்தானத்தில் அல்லது இலக்கினம் எதுவாய் இருப்பினும் மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய சர இராசிகளில் எங்காவது ஒரு

ஸ்தானத்தில் இராகு தனித்து இருக்க, அந்த இராகுவுக்கு ஒன்பதாம் இல்லத்திலோ சுக்கிரனும் புதனும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகர் பெருஞ்செல்வராகி, வறியவர்களுக்கு வாரி வழங்கும் கோடீஸ்வரராய் விளங்குவார்! இத்தகைய அமைப்பைப் பெற்ற ஜாதகர்கள் இந்த உலகில் பிறவி எடுப்பது அபூர்வமான ஒன்றாகும்!

## 633. திடீர் தனயோகம் யாருக்கு?

ஒருவர் ஜாதகத்தில் ஆறில் சனி இருந்து, பாக்கியாதிபதி (9) திசையில், சனி புக்தி நடைபெறும் சமயத்தில் திடீர் தனயோகம் கிட்டும்.

## 634. யாரிடம் கலைத்துறையில் பணம் புரளும்?

ஒருவர் ஜாதகத்தில் புதனும் சனியும் இலாபஸ்தானத்தில் (11) இருந்து புதன் திசை அல்லது சனி திசை நடைபெறும் சமயத்தில் இயல், இசை, நாடகம் போன்ற கலைத்துறையில் இலட்சம் இலட்சமாய்ப் பணம் புரளும்!

## 635. எவருக்கு வீடு கட்டும்போது புதையல் கிடைக்கும்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்திற்குப் பத்தாம் இல்லமான ஜீவனஸ்தானாதிபதியாராயினும், அக்கிரகம் சுகஸ்தானமான நான்காம் இல்லத்தில் இடம் பெற்றிருந்தால், அவருக்கு வீடு கட்டும் சமயத்தில் பூமியிலிருந்து புதையல் கிடைக்கும். இவ்வாறு அக்கிரகத்தின் திசை, புத்தி, அந்தரத்தில் கிடைக்கும்.

## 636. யாருக்கு அடுத்தவர் சொத்து கிடைக்கும்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினம் எதுவாயினும், அந்த ஜாதகத்தில் ரிஷபம், சிம்மம், கும்பம் போன்ற ஸ்திர இராசியில் சூரியன் இருக்கப் பிறந்தவர்களுக்கு, மற்றவர்களுடைய சொத்து உயில் மூலம் கிடைக்கக்கூடிய பாக்கியம் உண்டு. இந்த வகையில் அவர்களுக்குத் திடீர்த் தனயோகம் கிட்டும்.

## 637. எவர் சமுதாயத்திற்கு நன்மை செய்பவர்?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டு, பதினொன்று ஆகிய ஸ்தானங்களில் சந்திரன், சுக்கிரன், குரு ஆகிய சுபகிரகங்கள் இடம் பெற்றிருந்தால் அவர்கள் கூடிய மட்டும் வளரும் சமுதாயத்திற்கு ஏதாவது ஒரு நன்மையைச் செய்துவிட்டுச் செல்லுவார்கள்!

## 638. ஓரையின் இரகசியம்!

ஓரைகளுள் குரு ஓரை, சுக்கிரஓரை, சூரிய ஓரை ஆகிய ஓரைகள் மட்டும் பொருள் பெறுவதற்குச் சிறந்த காலங்களாய் அமைகின்றன. இந்த ஓரைகளில் பொருளாதாரம் கருதிப் புறப்படுகின்றவர்களுக்கு நிச்சயம் ஏதாவது ஓர் ஆதாயம் கிடைக்கவே செய்யும்!

## 639. எவர் ஒரு கோடி ஆஸ்தி உடையவர்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கின அதிபதி, பத்துக்குடையவர் ஆகிய இருவரும் ஒன்றுகூடி சுபராகிய குருவுடன் சம்பந்தமடைந்து, இலக்கினத்துக்கு ஒன்று, நான்கு, ஏழு, பத்து அல்லது ஐந்து, ஒன்பது ஆகிய இடத்தில் அமரப்

பெற்றிருந்தால் அவர் சுமார் ஒரு கோடி ஆஸ்தியைக் கண்டிப்பாய்ப் பெறுவார்!

## 640. எவர் எஸ்டேட் முதலாளியாய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி பத்தில் அமர்ந்து, பத்துக்குடையவர் நான்கில் இருக்க, நாலுக்குரிய அகாதிபதி உச்சமடைந்து திரிகோணம் பெற்றிருந்தால் அவர் பெரிய எஸ்டேட் உரிமையாளராய் இருப்பார்!

## 641. எவருக்கு இருநூறு வருஷ தனபாக்கியம் கிட்டும்?

ஒருவரின் ஜாதகத்தில் தனஅதிபதி (உ), பாக்யாதிபதி (9), லாபாதிபதி (11) ஆகிய மூவரும் நீசம் பெற்று, சந்திரனுக்கும், 1, 4, 7, 10 ஆகிய கேந்திரத்தில் அமையப்பெற்றவர்களுக்கு 200 வருஷகாலத் தேவைக்கு உண்டான தனபாக்கியம் கிட்டும்!

## 642. யாருக்குக் கற்ற வித்தை மூலம் பெரும் தனபாக்கியம் கிட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் ஐந்தாம் இடம் என்ற பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இராகு, கேது, சனி நீங்கலாக மற்ற ஆறு கிரகங்களும் பலமுடன் இருந்தால், கற்ற வித்தை மூலம் பெரும் தனபாக்கியம் உண்டாகும்.

## 643. எவருக்குத் திருமணத்திக்குப் பின்பு பெரும் பாக்கியம் கிட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் தனஅதிபதி என்னும் இரண்டுக்குடையவரும் ஏழுக்குடையவரும் ஒன்றுகூடி

பதினொன்றுக்குடையவருடன் கூடி பலமுடன் இருந்தால் திருமணத்துக்குப் பின்பு பெரும்பாக்கியம் உண்டாகும்.

## 644. வாகனம், கட்டிடம், பூமி ஆகியவற்றின் மூலம் செல்வத் தகுதி பெறக் கூடியவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் நாலுக்குடைய கிரகம் யாராயினும் அந்தக் கிரகம் இரண்டுக்குடையவருடன் கூடி இலாபாதி என்னும் 11க்குடையவரின் பார்வையைப் பெற்றால் அவர் எண்ணற்ற வாகனம், கட்டிடம், பூமி ஆகியவற்றின் மூலம் பெரும் செல்வத்தைப் பெறுவார்.

## 645. எவர் அரசாங்கத்தின் மூலம் பெரும் பணம் பெறுவார்?

ஒருவர் ஜாதகத்தில் பத்துக்கு உடையவர் சூரியனுடன் கூடி 9, 11க் குடையவரது நேர்பார்வையைப் பெற்றால் அவர் அரசாங்கத்தின் மூலம் பெரும் பணம் பெறுவார்.

## 646. எவருக்குக் குறுக்கு வழியில் பெரும்பணம் கிட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் ஆறுக்குடையவர் இரண்டில் உச்சம் பெற்று ஒன்பதுக்கு உடையவர் ஆறில் அமர்ந்து, பன்னிரெண்டுக்கு உடைய விரயாதிபதி எட்டில் பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகருக்குக் குறுக்கு வழியில் பெரும் பொருள் கிட்டும்.

## 647. எவருக்கு அரசாங்க வெகுமதி கிடைக்கும்?

ஒருவரது ஜாதகத்தில் நான்கு என்னும் சுகாதிபதியும், ஒன்பதாமிடத்துக்கு உரிய பாக்யாதிபதியும் ஒன்றாய்ச் சேர்ந்து

சுபகிரக வீட்டில் பலமுடன் இருந்தால் அந்த ஜாதகருக்கு அரசாங்க வெகுமதியுடன பெரும் பணம் கிடைக்கும்!

## 648. எவர் பெரும் வித்தையினால் செல்வம் பெறுவார்?

ஒருவர் ஜாதகத்தில் நாலுக்குடையவனும், குருவும் இலக்கின கேந்திரங்களில் இருக்க (1,4, 7, 10) அவர்களுடன் புதனும் வலுவுடன் இருந்தால் அவருக்குப் பெரும் வித்தையினால் அஷ்டஐசுவரியமும் உண்டாகும்!

## 649. லாட்டரி யோகம் யாருக்கு?

ஒருவர் ஜாதகத்தில் பதினொன்று என்னும் இலாபாதிபதி இலக்கினத்தில் பலம் பெற்று, அவருடன் பூரண சுபகிரகம் இருக்க வேண்டும். அவர்களது திசையில் லாட்டரி யோகம் ஏற்படும்!

## 650. எவர் ரேஸ், பந்தயம், சூதாட்டம், கடத்தல் ஆகியவற்றின்மூலம் கோடிக்கணக்கில் சம்பாதிப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்துக்கு இரண்டாம் அதிபதியாகிய தனஅதிபதி திரிகோணத்தில் (1, 5, 9) உச்சம் பெற்று, இலாபாதிபதி (11) அல்லது தனஅதிபதி (2) நட்சத்திர சாரபலம் பெற்றால் அவருக்கு ரேஸ், பந்தயம், சூதாட்டம், கடத்தல் ஆகியவற்றின் மூலம் கோடிக்கணக்கில் சொத்து சேரும்!

## 651. சூப்பர் பௌர்ணமி!

மார்கழி மாதம் ஏழாம் தேதி புதன்கிழமை (22-12-1999) வந்த பௌர்ணமி 'சூப்பர்பௌர்ணமி' ஆகும். அன்று சந்திரன்,

பூமியைச் சுற்றி வரும் பாதையில், சந்திரன் பூமிக்கு மிக நெருக்கத்தில் வரும் நாள். எப்போதும் பௌர்ணமியன்று இருக்கும் வெளிச்சத்தை விட இது 14 மடங்கு ஒளி வெள்ளத்தை அள்ளித் தந்த ஓர் அபூர்வப் பௌர்ணமி ஆகும்! இதற்குமுன் 133 ஆண்டுகளுக்குமுன் 21. 12. 1866 அன்று இது போன்று ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்!

## 652. எவருக்குச் சினிமாயோகம் உண்டு?

ஒருவர் ஜாதகத்தில் அவரது நட்சத்திர அதிபதி இலக்கினத்தில் பலம் பெற்று, அந்த இலக்கினாதிபதி, ஒன்பதுக்கு உடையவருடன் கூடிப் பலம் பெற்று 11 இல் அமர்ந்து 12க்குடையவரின் பார்வையைப் பெற்றிருக்க சினிமா, நாடகம், சங்கீதம் போன்ற கலை மூலம் அவருக்குப் பெரும் யோகம் கிட்டும்!

## 653. எவர் ஜோதிடத் தொழில் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்?

ஒருவருக்கு சர இலக்கினமாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியவற்றுள் ஒன்று இலக்கினமாகி, அதன் அதிபதி ஒன்பதாம் இடத்தில் பலம் பெற்று, தன அதிபதியான இரண்டுக்குடையவரின் பார்வையைப் பெற்று புதன் பத்தாம் இடத்தைப் பார்த்தால் அவர் ஜோதிடத் தொழில் மூலம் பெரும் பணம் சம்பாதிப்பார்.

## 654. முத்து தோன்றுவதன் ரகசியம்!

சந்திரன் சுவாதி நட்சத்திரத்தில் பிரவேசிக்கும்போது கடலில் மழை பெய்தால், கடலின் அடியிலுள்ள சிப்பிகள் மேலே வந்து ஆனந்தித்து மழை நீரைத் தமக்குள் பெற்று மூடிக்கொண்டு

உள்ளே சென்றுவிடும்! இந்த அமுதமான மழைத்துளிதான் சிப்பிக்குள் முத்தாய்ப் பரிணமிக்கிறது!

## 655. செவ்வாய், இராகு ஆகியன தரும் எச்சரிக்கை!

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய், இராகு ஆகியன சேர்ந்து மேஷத்தில் இருந்தால் தலையில், ரிஷபத்தில் இருந்தால் முகத்தில், மிதுனத்தில் இருந்தால் கையில், கடகத்தில் இருந்தால் இதயத்தில், சிம்மத்தில் இருந்தால் வயிற்றில், கன்னியில் இருந்தால் அடிவயிற்றில் அல்லது கிட்னியில், துலாத்தில் இருந்தால் குறியில், விருச்சிகத்தில் இருந்தால் அமரும் இடத்தில், தனுசுவில் இருந்தால் ஆசனவாயிலில் அல்லது தொடையில், மகரத்தில் இருந்தால் கால் முட்டியில், கும்பத்தில் இருந்தால் கால்களிலே, மீனத்தில் இருந்தால் உள்ளங்கால்களில் அறுவைச்சிகிச்சை செய்ய நேரிடும்!

## 656. எவருக்கு அரசு உத்தியோகம் கிட்டும்?

ஒருவருடைய ஜாதகத்தில் குருவும் சூரியரும் சம்பந்தப்பட்டால் அவருக்கு அரசுத் தொழில் கிட்டும்.

## 657. எவர் டாக்டர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய், கேதுவும் பத்தில் சேர்ந்தால் அவர் டாக்டர் ஆவார்!

## 658. எவருக்குச் சம்பாத்தியத் தடை ஏற்படும்?

ஒருவர் ஜாதகத்தில் பத்தாமிடத்தில் சூரியனும் இராகுவும் சேர்ந்தால் அவருக்கு சம்பாத்தியத்தில் தடை ஏற்படும்!

## 659. எவர் என்ஜினியர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் பத்தாமிடத்தில் சனியும் செவ்வாயும் சேர்ந்தால் அவர் என்ஜினியர் ஆவார்!

## 660. இலட்சுமி கடாட்சம் மிக்க பெண் யார்?

ஒருவர் ஜாதகத்தில் நான்கில் சுக்கிரன் இருந்தால் அவர் மனைவி இலட்சுமி கடாட்சம் பெற்ற கற்புக்கரசியாய்த் திகழ்வாள்!

## 661. எவர் மனைவி ஆதிக்கம் செய்வாள்?

ஒருவர் ஜாதகத்தில் ஏழாம் அதிபதி கேந்திரத்தில் (1, 4, 7, 10) நின்றால் அவர் வீட்டில் மனைவியின் ஆதிக்கம் இருக்கும்!

## 662. காமத்தின் இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் 12இல் சுக்கிரன் இருந்தால் அவர் நேர்மை தவறிய காமமுடையவராய் இருப்பார். அதே போல், ஒருவர் ஜாதகத்தில் கேதுவும், சுக்கிரனும் சேர்ந்திருந்தால் அவர் காம வெறி மிக்கவராய் இருப்பார்!

## 663. எவர் ஞானியாய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் கேது, சந்திரன், குரு ஆகியன அருகருகே இருந்தால், அவர் ஞானியாய் இருப்பார்!

## 664. எப்பெண்ணுக்கு மறுபிறவி இல்லை?

ஒரு பெண் பிறந்து பிரசவ காலத்தில் இறந்தால் அந்தப் பெண்ணுக்கு மறுபிறவி இல்லை!

## 665. எவர் என்றும் இளமையாய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்தில் செவ்வாய் இருந்தால், அவர் எப்போதும் இளமையாய்த் தெரிவார்.

## 666. எவருக்கு இரத்த அழுத்த நோய் ஏற்படும்?

ஒருவர் ஜாதகத்தில் கடகத்தைச் செவ்வாய் பார்த்தால் அவருக்கு இரத்த அழுத்த நோய் ஏற்படும்.

## 667. எவர் ஏழ்மை அடைவார்?

ஒருவர் ஜாதகத்தில் சிம்மத்தில் செவ்வாய், இராகு இருந்தால் அவர் ஏழ்மையானவராகவும், தந்தை சொத்தை நாசம் செய்யக்கூடியவராகவும் இருப்பார்!

## 668. எவருக்கு நண்பர்கள் பலர் வாய்ப்பர்?

ஒருவர் ஜாதகத்தில் 11 ஆம் வீடு பலம் பெற்று சுக்கிரனின் சம்பந்தம் ஏற்பட்டால் அவருக்கு நண்பர்கள் பலர் இருப்பார்கள். அவருக்கு நண்பர்கள் உதவுவார்கள்.

## 669. தெசாபுத்தியைக் காணச் சுலபவழி!

ஒரு தெசையின் புத்தி ஒன்றைச் சுலபவழியில் கண்டறிய மார்க்கமொன்று இருக்கிறது. உதாரணமாய் புதன்தெசையில், சனி புத்தியைக் கண்டறிய முற்படுவோம். புதன் தெசையின் வருஷம் 17 என்றால், அதை மூன்றால் பெருக்க வருவது 51 ஆகும். அதைச் சனிதெசையின் வருஷமான 19 ஆல் பெருக்க வருவது 969 நாள்களாகும். இதை வருஷம், மாதம், நாள் ஆக்கினால், புதன் தெசை சனி புத்திக்கான காலம் இரண்டு

வருஷம், ஆறு மாதம், ஒன்பது நாள் ஆகிறது. இப்படி ஒவ்வொரு தெசா புத்தியின் அளவையும் காணலாம்!

## 670. எவருக்குப் பட்டபடிப்பு வாய்க்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு ஒன்று, நான்கு, எட்டு ஆகிய ஸ்தானங்களில் சூரியனும் புதனும் கூடி இருந்தால் அந்த ஜாதகருக்குக் கூடிய மட்டும் பட்டப்படிப்பு கிட்டும்.

## 671. எவருக்கு டெக்னிகல் கல்வி கிட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாயும், சனியும் கூடி இருந்தாலும் அல்லது சப்தமாகப் பார்த்துக்கொண்டு இருந்தாலும் அந்த ஜாதகருக்கு டெக்னிகல் கல்வி அமைப்பு ஏற்படும். அதேபோல் சனி ஆட்சி, உச்சம் பெற்றிருந்தாலும் இரு(ம்)ம்பு, இயந்திர நுட்பம் கொண்ட கல்வி அமையும்.

## 672. எவருக்கு மருத்துவத்துறை கல்வி கிட்டும்?

சூரியனும் செவ்வாயும் கெடாமல் கூடி இருந்தாலும் அல்லது பரிவர்த்தனை பெற்றிருந்தாலும் அல்லது நட்சத்திர சாரபரிவர்த்தனை பெற்றிருந்தாலும் அந்த ஜாதகருக்கு மருத்துவத்துறைக் கல்வி கிட்டும். மேலும், மருத்துவக் கிரகமான கேது ஜெனன இலக்கினத்திற்கு 9, 10, 12 ஆகிய ஸ்தானங்களில் பெற்றிருந்தாலும் அந்த ஜாதகருக்கு மருத்துவத்துறையில் ஜீவனம் அமையும்.

## 673. எவருக்குச் சட்டப்படிப்பு வாய்க்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் இல்லத்தில் சுபகிரகங்கள் **ஒன்றோ** பலவோ ஆட்சி, உச்சம், நட்பு போன்ற அமைப்பு

பெற்றிருந்து, ஐந்தாம் இல்லத்து அதிபதி பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் வழக்குரைஞர் ஆகக் கூடிய சட்டக்கல்வியில் பட்டம் பெறுவார். மேற்கண்ட அமைப்போடு குரு பத்தில் இருந்தால் அந்த ஜாதகர் நீதிபதி ஆகக் கூடியவர் ஆவார்!

## 674. எவருக்கு சினிமாத் தொழில் வாய்க்கும்?

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாயும் இராகுவும் கூடி இருந்தால் அந்த ஜாதகர் சினிமாத் தொழிலில் ஈடுபடுவார்!

## 675. எவர் விவேகமுடையவராவார்?

ஒருவர் ஜாதகத்தில் சுக்கிரனும், புதனும் கூடி இருந்தால் அந்த ஜாதகர் விவேகமுடையவராய் இருப்பார்!

## 676. எவருக்குத் தடைபட்ட கல்வி தொடராது?

ஒருவர் ஜாதகத்திற்கு சூரியன், சுக்கிரன், புதன் கூடி இருந்து, குரு பார்வை இல்லை என்றால் அவருக்குத் தடைப்பட்ட கல்வியை மீண்டும் தொடர வாய்ப்பிராது!

## 677. உத்தியோகம், தொழில் மாற்றம் யாருக்கு?

ஒருவர் ஜாதகத்தில் சூரியனும், ஜீவனாதிபதியும் (11) இணைந்திருந்தால் அந்த ஜாதகருக்கு எந்த ஒரு ஜீவனத்திலும் சரியான பிடிப்பு ஏற்படாது. அடிக்கடி செய்கின்ற தொழில், வியாபாரம் போன்றவற்றில் மாற்றம் உண்டாகும். சீசன் பிஸினஸ் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். அரசாங்க உத்தியோகமாயின் அதில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

## 678. எச்சரிக்கை இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு எட்டாம் இடத்து அதிபதி எந்த இராசியில் இருக்கிறாரோ, அந்த இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் மாதத்தில் அந்த ஜாதகருக்கு ரணகாயங்களும், வியாதியும், அரசாங்கப்பகை போன்ற தீய பலன்களும் நடைபெறும்! மேலும், எட்டாம் இடத்து அதிபதி நின்ற நட்சத்திரம் நடைபெறும் சமயத்திலும், மேற்கண்ட துர்ப்பலன்கள் நடைபெறும்!

## 679. இறக்கும் ஊரின் இரகசியம்!

ஒருவரின் ஜாதகத்தில் எட்டாம் இடத்து அதிபதியும், நான்காம் இடத்து அதிபதியும் கூடி ஓர் இராசியில் இருந்தால் அந்த ஜாதகர் தம் தந்தை வாழ்ந்த சொந்த ஊரில் இறப்பார். மேலும், எட்டாம் வீட்டு அதிபதி ஆறு, பன்னிரெண்டாம் இல்லத்து அதிபதிகளுள் யாராவது ஒருவருடன் அல்லது இருவருடன் கூடி ஓர் ராசியில் இருந்தால் அந்த ஜாதகர் வெளியூரில் இறப்பார்.

## 680. அளவோடு பிள்ளை யாருக்கு?

ஒருவரின் ஜாதகத்தில் புத்திர ஸ்தானாதிபதி இரகம் எதுவாயினும், அக்கிரகம் மிதுனம், கன்னி ஆகிய புதன் வீட்டில் இடம் பெற்று இருந்தால் அந்த ஜாதகருக்கு ஒரிரு புத்திரபிராப்தியுடன் சரி. அதற்கு மேல் புத்திரர் இரார்.

## 681. எவருக்குத் திருமணத்திற்கு முன் பிள்ளை பிறக்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் புத்திர ஸ்தானம் ஆகிய ஐந்தாம் இல்லத்தில் சனி, செவ்வாய் கூடி இருந்து, அக்கிரகங்களை வேறு

எந்தச் சுபக்கிரங்களோ பாவக் கிரகங்களோ பாராதிருக்க, அந்த ஜாதகர் மனைவி திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே கருத்தரித்துப் புத்திரரைப் பெற்றிருப்பார்.

## 682. எவருக்குச் சொத்து அழியாததாகும்?

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாயைக் குரு பார்த்தாலும் அல்லது செவ்வாய் ஆட்சி, உச்சம் பெற்றிருந்தாலும், அப்படிப்பட்டவர்களுடைய சொத்தை, விற்கவோ வில்லங்கப்படுத்தவோ அவ்வளவு சுலபத்தில் முடியாது. விலைக்கு விற்றாலும் விலையாகாது. இனாமாய் கொடுக்கிறேன் என்றாலும் அதைப் பெறுவதற்கு யாரும் முன்வரவும் மாட்டார்கள். குருபார்வை பெற்ற செவ்வாய்க்கு அவ்வளவு வலிமை உண்டு!

## 683. எவருக்குக் கண்டங்களை ஏற்படுத்தும்?

ஒருவரின் ஜாதகத்தில் குரு, சுக்கிரன் மாரகஸ்தானங்களில் அமர்ந்து, அக்கிரகங்களின் தெசை அல்லது புத்தி நடைபெற்றால் மாரகத்திற்கு ஒப்பான கண்டங்களை எப்படியும் ஏற்படுத்தியே தீரும்.

## 684. எவர் தம் மனைவியையும் கெடும்படி செய்வார்?

ஒருவர் ஜாதகத்தில் குரு, இராகு ஆகியன சேர்ந்து இருந்தால் அந்த ஜாதகர் செக்ஸ் குணமே தனியானதாய் இருக்கும். இந்த அமைப்பு ஏழாம் இடத்தில் ஏற்பட்டால் அந்த ஜாதகர் தாம் கெடுவதும் அல்லாமல், தன் மனைவியையும் கெடுக்கும் படி செய்வார்!

## 685. எவர் ஞான சூன்யமாய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் சனி, சந்திரன் ஆகியன கூடி இருந்தால் அந்த ஜாதகர் உண்மையிலேயே ஞானசூன்யம் ஆவார். அவர் தெரிந்தே படு குழியில் வீழ்ந்து, வாழ்வைப் பாழ்படுத்திக் கொள்வார்!

## 686. எவருக்குச் சித்திரவதை செய்யும் மனைவி அமைவாள்

ஒருவர் ஜாதகத்தில் குரு, சுக்கிரன் கூடி இருந்தால் அவருக்கு நல்ல மனைவியே அமைவாள் என்றாலும், அவள் பொன் கத்தியைப் போலப் பயன்படுவாள். இரும்புக் கத்தியாய் இருந்தால் கணவன் உயிர் இலகுவில் பிரிந்துவிடும்! ஆனால் அவள் பொன்கத்தியாய் இருந்து கொண்டு சிறுகச் சிறுகக் கணவனைச் சித்திரவதை செய்பவளாய் இருப்பாள்! இந்த ஜாதகருக்கு எதுவுமே அகாலமாய்த்தான் கைகூடும்!

## 687. எவர் உத்தியோகத்தில் வில்லங்கம் இருக்கும்?

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாயும் சூரியனும் சேர்ந்து இருந்தால் அந்த ஜாதகருக்கு உத்தியோகத்தில் வில்லங்கம் இருக்கும்! அவர் எப்படியும் கெட்ட பெயர் சம்பாதித்துக்கொண்டுதான் உத்தியோகத்தை விட்டு வெளியேறி வர வேண்டியதிருக்கும்! பூர்விகச் சொத்து அமைப்பிற்கும் இச்சேர்க்கை யோகம் தருவதல்ல!

## 688. எவர் மனைவி பத்திரகாளி ஆவாள்?

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் கேது நின்றால் அந்த ஜாதகருக்கு நாணயமான மனைவி அமைவாள். அவள் கணவனை ஆட்டிப் படைக்கக்கூடிய பத்திரகாளியாய் இருப்பாள்

அல்லது விவாகரத்து, ஜீவனாம்சம் என்று வழக்குத்தாளிருக்கும் மனைவியாய் அமைவாள் அல்லது கணவன், மனைவி கூடியும், பிரிந்தும் பிறைச்சந்திரனைப் போன்ற வாழ்க்கையை மேற்கொள்வார்கள்.

## 689. எவர் முறையற்ற முறையில் உறவு கொள்வார்?

ஒருவர் ஜாதகத்தில் மூன்றில் சுக்கிரன் நின்றாலும் அல்லது நான்கில் சனி நின்றாலும் அந்த ஜாதகர் முறையற்ற புணர்ச்சிகளில் ஈடுபாடு கொண்டிருப்பார். தம் வயதிற்கு மூத்த பெண்களுடன் உறவுகொள்வார். சொந்த பந்தத்தில் பிறர் மனைவியுடன் உறவு கொள்வார். உயர்ந்த ஜாதிப் பெண்களோடு உறவு கொள்வார்.

## 690. எவருக்குத் தரம் குறைந்த மனைவி வாய்ப்பாள்?

ஒருவர் ஜாதகத்தில் களத்திர ஸ்தானாதிபதி கிரகமும், களத்திரக்காரகனான சுக்கிரனும் இலக்கினத்திற்கு ஆறில் மறைந்து இருந்தால், அந்த ஜாதகருக்கு யோக்மான களத்திரம் வந்து வாய்க்காது; தரங்குறைந்த களத்திரமாகவே அமையும். கூடியவரையில் சோரம் போகும் மனைவியாய் அமையும்!

## 691. எவர் சொந்தத்தில் திருமணம் செய்யக் கூடாது?

ஒருவரின் ஜாதகத்தில் ஏழில் சனி நின்றால் அந்த ஜாதகருக்குச் சொந்தத்தில் பெண் பார்த்துத் திருமணம் செய்யக்கூடாது! கூடியவரையில் தூரத்து உறவில் பெண் பார்ப்பதுதான் சாலச்சிறந்தது! இதை மீறிச் சொந்தத்தில் திருமணம் செய்து வைத்தால் இருதாரயோகம் ஏற்படும் அல்லது ஏகதாரமாயின் நோய் உள்ள மனைவியாய் இருப்பாள்!

## 692. பத்தில் குரு இருந்தால் என்ன செய்யும்?

ஒருவர் ஜாதகத்தில் பத்தில் குரு இருந்தால் அவர்கள் திருமண வாழ்க்கை சிறப்பாய் இருக்கும்; பிள்ளை குட்டிகள் இருக்கும். ஆனால், அந்த ஜாதகர் அடிக்கடி தேசாந்தரம் சென்றுவிடக் கூடியவராகவே இருப்பார்! படத்தில் இருக்கும் குரு அடிக்கடி கணவன், மனைவியரைப் பிரித்து வைத்துவிடும்!

## 693. எவர் இல்லறத்தில் துறவறம் காண்பார்?

ஒருவர் ஜாதகத்தில் அயன, சயன, போகஸ்தானமான 12 ஆம் இல்லத்தில் சூரியனோ செவ்வாயோ சந்திரனோ தனித்து இருந்தால் அந்த ஜாதகர் தமது குடும்பத்தில் ஒட்டியும், ஒட்டாமலும், இல்லறத்தில் துறவறம் காணக்கூடியவராய் இருப்பார்!

## 694. ஸாராஸ் என்றால் என்ன?

கிரகணங்கள் பதினெட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சரியாக நடைபெறும். அந்நிகழ்வை விஞ்ஞானிகள் 'ஸாராஸ்' (Saros) என்று வழங்குகின்றனர்!

## 695. திருவள்ளுவராண்டைக் கண்டு கொள்வது எப்படி?

இயேசு கிறிஸ்துவிற்கு 31 ஆண்டுகளுக்கு முற்பட்டவர், திருவள்ளுவர். எனவே நடப்பாண்டுடன் 31 ஐக் கூட்டினால் அது திருவள்ளுவராண்டு ஆகும்.

## 696. பெண்களுக்கு ஓர் எச்சரிக்கை!

பெண்கள் எக்காரணத்தைக் கொண்டும் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு இருக்கக்கூடாது. அது அழிவின்

சின்னம் ஆகும். இது ஓர் அபசகுணம் ஆகும். இதனைக் கோரக்கர் சித்தர் தமது சந்திரரேகை என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தலையை விரித்துப் போட்டுக் கொண்டிருந்த சீதை, பாஞ்சாலி, கண்ணகி ஆகியவர்களால் ஏற்பட்ட அழிவு யாவரும் அறிந்ததே. எனவே, பெண்கள் எக்காரணத்தைக் கொண்டும் தலையை விரித்துப் போட்டுக் கொண்டிருக்கக் கூடாது!

## 697. இது தெரியுமா?

வடதுருவத்தில் 30 பாகையிலும், தென் துருவத்தில் 30 பாகையிலும் உயிர் வாழ்கின்றவர்களுக்கு நட்சத்திர மண்டல ஆதிக்கமும், கிரகங்களின் ஆதிக்கமும் சரிவாய் ஏற்படுவதால் அவைகளின் நேரடித் தாக்குதல்களுக்கு அவர்கள் ஆளாவது இல்லை. ஆகவே, அங்கெல்லாம் ஜோதிட சாஸ்திரம் தக்க பலன் அளிப்பது இல்லை. இதன் காரணமாகத்தான் பூமத்தியரேகையை ஒட்டிய வட- தென் கோளப் பகுதியில் அமைந்துள்ள நாடுகளாகிய கிழக்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா, பர்மா, இலங்கை, இந்தியா, வடஅமெரிக்காவின் தென்பகுதி, தென் அமெரிக்காவின் வடபகுதி, ஆப்பரிக்காவின் மையப்பகுதி போன்ற நாடுகளில் எல்லாம் ஜோதிடக் கலை பரவலாகப் பயன் தருகின்றது. அங்கு ஜோதிடக்கலை சிறப்புற்று விளங்குகின்றது. ஆனால் மேலே சொன்ன எல்லைக்கு உட்படாத நாடுகளான வடஆசியா, ஐரோப்பா போன்ற கண்டங்களில் ஜோதிட சாஸ்திரங்கள் சரியான பலனளிப்பதில்லை! எனவே, அங்கெல்லாம் ஜோதிடக்கலை சிறப்புப் பெறவில்லை!

## 698. ஜோதிட இரகசியம்!

சூரியனுக்கு ஏழாம் இல்லத்தில் பூமி இடம்பெற்று அமைந்துகொண்டு, எப்போதும் சூரியனுக்கு ஏழாம் இல்லத்தில் பூமி சஞ்சரிப்பது ஒரு ஜோதிட இரகசியமாகும்!

## 699. ஒரு முக்கிய எச்சரிக்கை!

சூரியனும், சனியும் இலக்கினத்திற்கு ஆறு, ஒன்பது ஆகிய இரு ஸ்தானங்கள் தவிர மற்ற ஸ்தானங்களில் இணைந்து இருக்கக்கூடாது!

## 700. முக்கூட்டுக் கிரகங்கள்!

புதன், சுக்கிரன், சூரியன் ஆகிய மூன்று கிரகங்களும் முக்கூட்டுக் கிரகங்கள் என்று சொல்லப்படும். எப்போதும் மூன்று கிரகங்களும், மூன்று இராசிகளுக்குள்ளே, 90 பாகைகளுக்குள் இணைந்து நிற்குமாறு சஞ்சரிக்கும்!

## 701. இராசிக்குரிய சூன்ய திதிகள்!

கீழ்க்கண்ட இராசிக்காரர்கள் அவர்களுக்கான சூன்ய திதிகளில் எந்தச் சுபகாரியத்தையும் செய்யக்கூடாது. அதன் விவரம் வருமாறு 1. மேஷம் - சஷ்டி 2. ரிஷபம் - சதுர்த்தி, திரயோதசி 3. மிதுனம் - பஞ்சமி, அஷ்டமி, சதுர்த்தசி 4. கடகம் - சப்தமி 5. சிம்மம் - திருதியை, சஷ்டி, நவமி, திரயோதசி 6. கன்னி - பஞ்சமி, அஷ்டமி, சதுர்த்தசி 7. துலாம் - பிரதமை, துவாதசி 8. விருச்சிகம் - தசமி 9. தனுசு - துவிதியை, சப்தமி, ஏகாதசி, சதுர்த்தசி 10. மகரம் - பிரதமை, திருதியை - துவிதசி 11. கும்பம் - சதுர்த்தி 12. மீனம் - துவிதியை, ஏகாதசி, சதுர்த்தசி ஆகிய திதிகள் ஆகாது.

## 702. தலைமுடி, நகம், முகம் மழித்தல் (ஷேவிங்) ஆகியவற்றைச் செய்யக்கூடாத தினங்கள்!

ஒருவர் தலைமுடி வெட்டக் கூடாத மாதங்கள் மாசி, ஆடி, புரட்டாசி, மார்கழி ஆகிய மாதங்கள் ஆகும். கிழமைகள் செவ்வாய், வெள்ளி ஆகும்; நட்சத்திரங்கள் பரணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதி மற்றும் அவரவர் இராசிக்கான சூன்யதிதிகள். ஆனால், இறைவனுக்குக் காணிக்கை, பிரார்த்தனை செலுத்த எவ்விதக் கட்டுப்பாடும் இல்லை!

## 703. வைத்தியதத்திற்கு ஆகும் நாள்களும் ஆகா நாள்களும்!

ஒருவர் தேய்பிறையில் வரும் செவ்வாய், வியாழன் ஆகிய கிழமைகளில் வைத்தியங்களை, அறுவைச் சிகிச்சைகளைச் செய்யலாம். வளர்பிறைத் தினங்களில் வைத்தியம் செய்தே ஆகவேண்டும் என்னும் நிலை ஏற்பட்டால், அப்போது தஞ்சாவூருக்கு அருகே உள்ள திருக்கருகாவூரில் உள்ள ஸ்ரீமுல்லை வனநாதரையும், கர்ப்பரட்சகாம்பிகையையும் வேண்டிச் செய்தல் நலம். வளர்பிறைத் திதிகளில் எந்தெந்தத் திதிகளில், எந்தெந்த உறுப்புகளுக்குச் சிகிச்சை செய்யக்கூடாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். 1. பிரதமை - பெருவிரல் 2. துவிதியை - உள்ளங்கால் 3. திருதியை - முழங்கால் 4. சதுர்த்தி - தொடை 5. பஞ்சமி - மர்ம ஸ்தானம் 6. சஷ்டி - நாபி வயிறு 7. சப்தமி - மார்பு 8 அஷ்டமி - கை, கால் 9. நவமி- கழுத்து 10 தசமி - காது 11. ஏகாதசி - நெற்றி 12 துவாதசி - கண், முகம் 13. திரயோதசி - புருவம் 14. சதுர்த்தி- பிடரி 15. பௌர்ணமி -

உச்சந்தலை. மேற்கண்ட திதிகளில், மேற்கண்ட உறுப்புகளுக்கு வைத்தியமோ, அறுவைச் சிகிச்சையோ செய்யக்கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

## 704. எத்திசையில் நீராட வேண்டும்?

புண்ணியத் தலங்களுக்குச் சென்றால், நதியாய் இருந்தால் நீர் வரும் திசைக்கு எதிர்முகமாய் நின்றும், குளம் முதலான நீர்நிலைகளில் கிழக்கு அல்லது வடக்கு முகமாய் நின்றும் நீரோட வேண்டும்!

## 705. கிரியாஸ்நான இரகசியம்!

விசேஷமான நாள்களில் கடல் மற்றும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது 'கிரியாஸ்நானம்' எனப்படும்! ஆனால், புண்ணிய நாள்களில் கடலில் குளிப்பவர்கள் செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் குளிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் அந்த நாள்கள்தாம் நதிதேவதையும், கடலரசனும் சங்கமமாகும் நாள்களாம்!

## 706. யாமம் என்பது எவ்வளவு நேரம்?

ஒரு யாமம் என்பது மூன்று மணிநேரமாகும். யாமம் என்பதே வழக்கில் 'ஜாமம்' எனப்படுகிறது!

## 707. முகூர்த்த அளவு எவ்வளவு?

முகூர்த்த அளவு என்பது ஒன்றரை மணி நேரமாகும்!

## 708. உத்தராயணம், தக்ஷிணாயனம் என்றால் என்ன?

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய இந்த ஆறு மாதங்களும் சூரியன் வடக்குப் பக்கமாய்ச் சாய்ந்து சஞ்சரிக்கும் காலம் உத்தராயனம் எனப்படும். அதே போல் ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்திகை, மார்கழி ஆகிய இந்த ஆறுமாத காலத்திலும் சூரியன் தெற்குப் பக்கமாய்ச் சாய்ந்து சஞ்சரிக்கும் காலம் தக்ஷிணாயனம் எனப்படும்!

## 709. உஷத்காலம் என்றால் என்ன?

'உஷஸ்' என்னும் பெண் தேவதையைப்பற்றி ரிக்வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவளே விடியற்காலை நேரத்திற்கு உரியவள். அவள் தோன்றிய பின்பே சூரியன் உதயமாகிறான். இக்காரணத்தினால் தான் விடியற்காலை நேரம் 'உஷத்காலம்' எனப்படுகிறது. அந்தத் தேவதையின் செழிப்பான கிரணங்கள் விடியற்காலையில் பூமியை நோக்கிப் பாய்வதால் தான், அந்த வேளையில் நீரில் மூழ்கி நீராடுதல் விசேஷமாய்ச் சொல்லப்படுகிறது. மேலும் அந்த நேரத்தில் அந்த நீர் வெது வெதுப்பாய் இருக்கும் என்பதும் குறிப்பிடத் தக்கது ஆகும்!

## 710. பிரம்ம முகூர்த்தம் என்பது யாது?

இரவின் கடைசியாகிய, விடியும் முன் உள்ள ஐந்து நாழிகை பிரம்ம முகூர்த்தம் ஆகும். அதாவது, விடியற்காலம் நான்கு மணி முதல் ஆறு மணி வரை உள்ள காலமாகும். இந்த நேரத்தில் காலைக் கடன்களை முடித்துவிட்டு, குளித்து விட்டு இறைவனைத் தியானித்தல் மிக மிகச் சிறப்பாகும்!

## 711. இருபத்தொரு தலைமுறை என்றால் என்ன?

தந்தை முதல் முன் ஏழு பெயர்; தன் முதல் பின் ஏழுபெயர்; தாய் வமிசத்தில் பாட்டன் முதல் ஏழு பெயர். ஆக '3 x 7 = 21' தலைமுறைகள் ஆகும்!

## 712. சப்தரிஷிகள் யாவர்?

1. கௌதமர் 2. பரத்வாஜர் 3. விசுவாமித்திரர் 4. ஜமதக்னி 5. வசிஷ்டர் 6. காசிபர் 7. அத்திரி ஆகியோர் 'சப்தரிஷிகள்' எனப்படுவர்.

## 713. சித்திரை மாதத்துக் குழந்தை!

புதுமணத் தம்பதியரை ஆடி மாதம் பிரித்து வைப்பது உண்டு. காரணம் தலைச்சன் குழந்தை சித்திரை மாதம் பிறந்தால் குடும்பத்திற்கு ஆகாது என்பதால்தான். ஒரு வேளை சித்திரை மாதம் குழந்தை பிறந்துவிட்டால் பெற்றோர் ஞாயிற்றுக்கிழமை விரதம் இருந்து வரவேண்டும். வருடத்திற்கு ஒருமுறை கும்பகோணத்திற்கு அருகே உள்ள 'சூரியனூர்' கோவிலுக்குச் சென்று சூரியபகவானுக்குப் பரிகாரம் செய்து வர வேண்டும்.

## 714. கல்விக்கு ஆகாத இலக்கினம்!

புதிதாய்ப் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கும் சமயத்தில் மேஷ இலக்கினம், விருச்சிக இலக்கினம், தனுசு இலக்கினம், கும்ப இலக்கினம் ஆகிய நான்கு இலக்கினங்களும் நடைமுறையில் இருக்கக்கூடாது!

## 715. எப்போது திருமணம் செய்யலாம்?

1. பரணி 2. கிருத்திகை 3. திருவாதிரை 4. ஆயில்யம் 5. மகம் 6. பூரம் 7. உத்திரம் 8. கேட்டை 9. பூராடம் ஆகிய ஒன்பது நட்சத்திரங்களில் ருதுவான பெண்கள் ஒரு வருடம் கழித்துத் திருமணம் செய்துகொள்வது நல்லது!

## 716. சூரியனும் செவ்வாயும் சேர்ந்தால் என்ன ஆகும்?

பெண் ஒருத்தியின் ஜாதகத்தில் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருப்பது மிகப்பெரிய தோஷம் ஆகும். அது திருமணத்தடையை ஏற்படுத்தும்; இளமையில் விதவையாக்கிவிடும். அதற்குத் தக்க பரிகாரம் 'ருத்திகவச வழிபாடே' ஆகும். மேலும், திருப்பதி வெங்கடேசப் பெருமாளுக்குப் புதிய மாங்கல்யத்தைச் சில நாள் அணிவித்துப் பிறகு அதைத் திருப்பதி உண்டியலில் செலுத்தப் பரிகாரம் உண்டாகும்!

## 717. விருந்துக்கு ஏற்ற நாள்!

முதலில் மாமனார் வீட்டில் சாப்பிடுவதாய் இருந்தாலும், அவர்கள் நம் வீட்டில் சாப்பிடுவதாய் இருந்தாலும் அதற்கு ஏற்ற நாள்கள் வளர்பிறையில் திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய நாள்களே ஆகும். செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆகிய நாள்களில் எக்காரணத்தைக் கொண்டும் விருந்து உண்ணக்கூடாது. மேலும், தேய்பிறையில் எந்த நாளிலும் முதலில் சாப்பிடக்கூடாது. இதே விதிமுறையைத் தான் நாம் அளிக்கும் விருந்திலும் கடைப்பிடிக்க வேண்டும்!

## 718. காக்கை தட்டினால் என்ன செய்ய வேண்டும்?

சில சமயங்களில், நாம் வீட்டிற்கு வெளியே செல்லும் போது, காக்கை நமது தலைமீது தட்டிவிட்டுச் செல்லும் அல்லது அது நமது உடலைத் தொட்டுவிட்டுச் செல்லும். அதற்குப் பரிகாரமாய் உடனே குளித்துவிட்டு, அந்தச் சமயத்தில் அணிந்திருந்த ஆடைகளைத் தானம் செய்து விடவேண்டும்.

## 719. விஷ்ணு அவதாரமும் நவக்கிரகங்களும்!

விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கிரகத்தின் அம்சமாய் விளங்குகிறது 1. கேது - மத்ஸ்யம் 2. சனீஸ்வரர் - கூர்மம் 3. இராகு - வராகம் 4. செவ்வாய் - நரசிம்மர் 5. குரு - வாமனர் 6. சுக்கிரன் - பரசுராமர் 7. சூரியன் - இராமர் 8. குளிகன் - பலராமர் 9. சந்திரன் - கிருஷ்ணர் 10. கல்கி- புதன்

## 720. மனைவிக்கு ஆகாத ஜாதகம் எது?

ஒருவர் ஜாதகத்தில் சனிபகவான் 12 இல் நின்றால் அது மனைவிக்கு ஆகாது! மேலும், அந்த ஜாதகர் செய்ந்நன்றி மறப்பவராய் இருப்பார்!

## 721. எவர் கர்னாடக இசையின் மூலம் அதிகப் பணம் சம்பாதிப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் 11 ஆம் இடத்தில் சனியும் புதனும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகர் கர்னாடக இசையின் மூலம் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிப்பார்.

## 722. யோகத்தைத் தடுக்கும் அமைப்பு!

எந்த ஒரு ஜாதகத்திலும் சனியும் செவ்வாயும் சரிசமமான வலிமை பெற்று இருக்கக்கூடாது. அவ்வித அமைப்பு ஏற்பட்டிருந்தால் ஜாதகருக்குக் கிடைக்க வேண்டிய யோகப் பலன்கள் கெட்டுவிடும். எனவே, ஒருவரின் ஜாதகத்தில் மேற்குறித்து இருவருள் ஒருவரே பலம் பெற்று இருக்க வேண்டும். அப்போதுதான் யோகப் பலன்கள் கிட்டும்!

## 723. சசியோகத்தின் இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்திற்கு இரண்டிலோ, இராசிக்கு இரண்டிலோ சனி இருந்தால் அது சசியோகம் எனப்படும். அந்தச் சசி யோகத்தில் பிறந்த ஜாதகர் குடும்பம் மிகப்பெரியதாய் இருக்கும். அக்குடும்பத்தினர்கள் சூடிகையாகவும், விதரணையாகவும் இருக்க மாட்டார்கள். குடும்பத்து இரகசியங்கள் அம்பலமாகும். ஒவ்வொருவரும் குடும்பப்பொறுப்பைத் தட்டிக் கழிப்பார்கள். மிகுந்த வருவாய் ஏற்படும் என்றபோதிலும், அந்த வருவாய் வந்த சுவடு தெரியாமல் எப்படியோ செலவாகிவிடும். அதனால் அவர்களுக்கு சேமிப்பு நல்ல பலனைத் தராது. இறைக்கும் கிணறு சுரக்கும் என்பது போல, வரும் வருவாய் செலவழிந்த பிறகு தான், மீண்டும் வருவாய் ஏற்பட வழி உண்டாகும்!

## 724. சனியைப் பற்றிச் சில இரகசியங்கள்!

ஒருவரின் ஜாதகத்தில் சனிபகவான் ஐந்தில் இருந்தால் வைராக்கியம் உடையவர்கள், வலிய சண்டைக்குப் போகமாட்டார்கள், வந்த சண்டையை விடமாட்டார்கள். பத்தில்

சனி இருப்பவர்களுக்கு ஜீவனவகையில் கஷ்டம் இருக்கும். பொருளாதார உயர்வும், பதவி உயர்வும் மந்தமாகவே இருக்கும். 12 இல் சனி இருப்பவர்களின் நடை மிகவும் மந்தமாகவே இருக்கும். இவர்கள் வாக்குத் தவறுவதும், நாணயத்தில் பழுது ஏற்படுவதும் சகஜமே. இவர்களுக்கு அகாலபோஜனமும், அகால உறக்கமும் ஏற்படும் 12 ஆம் இடத்தைச் சனியும், செவ்வாயும் பார்த்தால் ஏககாலத்தில் அந்த ஜாதகர் இல்லறத்திற்கு இலாயக்கு அற்றவர் என்றே சொல்ல வேண்டும். முதலிரவிலேயே வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிடும். ஒரு ஜாதகத்தில் சனி உச்சமானால் அவர் அச்சுத்துறை, பத்திரிகைத்துறை, இயந்திரத்துறை ஆகியவற்றில் ஜீவனம் அமையும்.

## 725. சனி நீராடுவதின் இரகசியம்!

சனிக்கிழமையன்று நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தால், சனிக்கிரகத்திற்கும் நமக்கும் உள்ள நீண்ட தொடர்பு சில மணி நேரம் நல்லெண்ணெய் உடலில் இருக்கும் வரையில் கட்டுப்படுத்தப்படுகிறது. இதன் காரணமாகச் சனி கிரகத்திலிருந்து வெளிப்படுகின்ற 'மாரீஷ்' என்னும் விஷத்தன்மை வாய்ந்த ஒளிக்கதிர் நமது உடலைத் தொடர்ந்து பாதிக்காமல், இடையில் சிலகாலம் இடைவெளியை ஏற்படுத்துகிறது. இம்மாதிரி உண்டாகும் இடைவெளியினால் மனித உடலுக்குச் சனியினால் உண்டாகக்கூடிய இயக்கம் சமன்படுத்தப்படுகிறது. அதனால் சனிக்குச் சாந்தி ஏற்படுகிறது! இது விஞ்ஞான அடிப்படையில் அமைந்த ஒரு சனீஸ்வர சாந்தியாகும்!

**726. தாராள குணம் உடையவர் யார்?**

ஒருவர் ஜாதகத்தில் குருபகவான் புதனோடு சம்பந்தப்பட்டு புதன் வீட்டில் அமர்ந்தால் ஜாதகர் தாராள குணமுள்ளவராய் இருப்பார். சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவராயும் இருப்பார்.

**727. எவர் சகோதரி பணக்காரராய் இருப்பார்?**

ஒருவர் ஜாதகத்தில் உச்சம் பெற்ற செவ்வாயைக் குரு பார்வையிட்டால், அவருக்கு உடன்பிறந்த சகோதரி ஒருவர் பணக்காரராய்த் திகழ்வார்!

**728. எவருக்குப் பிரச்சனைக்குரிய சகோதரி அமைவார்?**

ஒருவர் ஜாதகத்தில் நீசம் பெற்ற செவ்வாய் சாயாக்கிரகங்களுடன் சம்பந்தம் பெற்றாலோ அந்த ஜாதகரின் உடன்பிறந்த சகோதரி விதவையாகவோ பிரச்சினைக்குரியவளாகவோ இருப்பாள்!

**729. எவருக்கு வாகனயோகம் உண்டு?**

ஒருவரின் ஜாதகத்தில் சனியும், சுக்கிரனும் சேர்ந்தாலோ ஏழாம் பார்வை பார்த்துக் கொண்டாலோ அவர்களுக்கு வாகனயோகம் உண்டு.

**730. எவர் மருத்துவ சம்பந்தமான கல்வி கற்பார்?**

ஒருவரின் ஜாதகத்தில் புதன், கன்னி, விருச்சிகம், மீனம் ஆகிய வீடுகளின் சம்பந்தம் பெற்றால் அந்த ஜாதகர் மருத்துவ சம்பந்தமான கல்வி கற்பார்.

## 731. வெள்ளிக்கிழமையின் இரகசியங்கள்!

வெள்ளிக்கிழமை அன்று வீட்டிற்கு உப்பு வாங்கினால் அது நல்ல அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும், வெள்ளிக்கிழமை அரிசி வாங்குவதும் நல்லது; வெள்ளிக்கிழமைச் சமையலில் கீரையைச் சேர்த்துக் கொண்டால் அது மிகவும் அதிர்ஷ்டம் ஆகும். நெல்லிக்காயைப் பெண்கள் வெள்ளிக்கிழமைகளில் உண்ணக்கூடாது! பணம் பட்டுவாடா வெள்ளிக் கிழமையில் செய்யக்கூடாது; வெள்ளிக்கிழமைகளில் அரிசி புடைக்கக்கூடாது. அரிசியை வறுக்கக்கூடாது.

## 732. சாஸ்திரம் கூறும் இரகசியங்கள்!

ஒருவருக்கு இலட்சுமி கடாட்சம் நிலைத்திருக்கக் குடும்பப் பெண்களுக்குச் சாஸ்திரம் கூறும் சில விஷயங்கள் 1. சூரியன் உதித்த பிறகும் படுக்கையில் தூங்கிக்கொண்டிருக்கக் கூடாது. 2. பால், தயிர், பச்சைக்கறிகாய்கள், சுண்ணாம்பு, உப்பு, தவிடு, நெருப்பு, தண்ணீர் ஆகியவற்றை இரவில் கடன் கொடுக்கவோ, வாங்கவோ கூடாது 3. பாலைப் பொங்கிவழியவிடக்கூடாது 4. இரவில் குப்பை கூளங்களை வீட்டிற்கு வெளியே கொட்டக்கூடாது 5. மாலையில் விளக்கு ஏற்றிய உடனே வெளியில் செல்லக்கூடாது, வம்பு பேசக்கூடாது. 6. விளக்கு ஏற்றிய பிறகு தலைவாரிக்கொள்ளுதல், முகம் கழுவுதல், தயிர் சிலுப்புதல், கறிகாய் நறுக்குதல், அரிசி களைதல், கூட்டுதல் முதலியவற்றைச் செய்யக்கூடாது. 7. கொடுக்கக் கூடாது!

## 733. எப்போது கோயில் மணியை அடிக்கக் கூடாது?

கோயிலிலிருந்து வெளியே வரும்போது மணியடிக்கக்கூடாது. கோயிலுக்குப் போன பலனே

போய்விடும். இறைவனை வணங்கும்போது மட்டுந்தான் மணி அடிக்க வேண்டும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## 734. துக்கம் விசாரிக்க ஏற்ற நாள்!

ஞாயிறு அல்லது வியாழக்கிழமைகளில் மட்டுமே யார் வீட்டிற்கும் துக்கம் விசாரிக்கப் போக வேண்டும்.

## 735. பூவைப்பற்றி அறிய வேண்டியவை!

குழந்தைக்கு ஒரு வயதாகும் வரையில் தலையில் பூ வைக்கக்கூடாது. அதே போல், ஒரு பெண் வைத்துக் கொண்ட பூவை, இன்னொரு பெண் வைத்துக்கொள்ளக்கூடாது!

## 736. பல் கூறும் இரகசியம்!

ஒருவருக்கு முன்பற்களிடையே இடைவெளி இருந்தால் அவர்கள் நிச்சயமாய்ப் பணக்காரர்கள் ஆவார்கள். குழந்தை பிறக்கும்போது பல்லுடன் பிறப்பது அவ்வளவு நல்லதல்ல; பரிகாரம் செய்க.

## 737. எவர் நர்சரிப் பள்ளி நடத்துவார்?

ஒருவரின் ஜாதகத்தில் பத்தாம் இடத்தில் குரு, புதன் ஆகியவை கூடி நின்றாலும், அல்லது பத்தாம் இடத்தவர் பார்வையோ, சேர்க்கையோ பெற்றிருந்தாலும் அவர்கள் நர்சரிப் பள்ளி நடத்தலாம்!

## 738. எவர் ரியல் எஸ்டேட் (வீட்டு மனை) தொழில் செய்வார்?

ஒருவரின் ஜாதகத்தில் பத்தாம் இடத்தில் சுக்கிரனும் செவ்வாயும் கூடி, பத்தாம் இடத்தின் அதிபதி செவ்வாய்

நவாம்சம் பெற்றிருந்தால், அந்த ஜாதகர் ரியல் எஸ்டேட் தொழிலைச் சுயமாய்த் தொடங்கலாம். மேலும், எல்லா அமைப்பிலும் புதன் இலக்கினத்தோடோ, பத்தாம் இடத்துடனோ தொடர்பு கொண்டு இருப்பது உத்தமம். குருவும் பத்தாம் இடத்தவரும் உறவு பெறுவது சிறப்பு.

## 739. எவர் மின்சார சாதன விநியோகம் செய்யலாம்?

ஒருவரின் ஜாதகத்தில் பத்தில் செவ்வாய் நின்று, பத்தாம் அதிபதி செவ்வாய் நவாம்சம் பெற்றால் அந்த ஜாதகர் மின்சார சாதன விநியோகம் செய்தால் உயர்வைத் தரும்.

## 740. எவர் எண்ணெய் உற்பத்தி செய்யலாம்?

பத்தாம் இடத்தில் சனி சஞ்சரித்து, பத்தாம் இடத்து அதிபதி சனி நவாம்சம் பெற்று, சந்திரன் தொடர்பு கொண்டுள்ள ஜாதகர்கள் எண்ணெய் உற்பத்தித் தொழில் தொடங்கலாம்!

## 741. மெடிக்கல் ஷாப் யார் நடத்தலாம்?

பத்தாம் இடத்து அதிபதி சூரியன் நவாம்சம் பெற்று, செவ்வாய் தொடர்பு கொண்ட ஜாதகரும், பத்தாம் இடத்து அதிபதி செவ்வாய் நவாம்சம் பெற்றுச் சூரியன் தொடர்பு கொண்ட ஜாதகரும் மெடிக்கல் ஷாப் நடத்தலாம்! குறிப்பாக, பத்தாம் இடத்தில் சூரியன், செவ்வாய் கூடி, பத்தாம் இடத்தவர் சேர்க்கையோ, பார்வையோ பெற்றவர் துணிந்து மெடிக்கல் ஷாப் நடத்தலாம்! எல்லா அமைப்பிலும் சனியும் புதனும் நல்ல நிலையில் இருக்க வேண்டும்.

## 742. ஏற்றுமதி, இறக்குமதி தொழிலை யார் செய்யலாம்?

பத்தாமிடத்தில் சுக்கிரனும், சனியும் சஞ்சரிக்க, பத்தாம் அதிபதி சந்திரன் நவாம்சம் பெற்றவர் ஜாதகத்தில் புதன் அனுகூலமான ஸ்தானத்தில் சஞ்சரிக்க இத்தொழில் செய்யலாம். மேலும் பத்தாம் இடத்தில் கேது சஞ்சரிக்க, பத்தாம் இடத்து அதிபதி சந்திரன் நவாம்சம் பெற்று, சந்திரனும் சுக்கிரனும் இலக்கினத்தில் சஞ்சரிக்கும் அமைப்புடைய ஜாதகரும் மேற்கூறிய தொழிலில் ஈடுபடலாம். மற்றும், பத்தாம் இடத்தில் சந்திரன், சுக்கிரன், சனி, கூடி பத்தாம் இடத்தவர் ஐந்தில் நின்றாலும் அந்நிய நாட்டு வணிகம் செய்தால் ஆக்கம் தரும்!

## 743. யார் ஜவுளிக்கடை நடத்தலாம்?

ஒருவருடைய ஜாதகத்தில் சுக்கிரனும், சந்திரனும் பத்தாம் இடத்தில் சஞ்சரிக்க, பத்தாம் இடத்து அதிபதி சுக்கிரனின் நவாம்சம் பெற்று இருந்தால் அவர் ஜவுளிக்கடை நடத்தலாம். சந்திர நவாம்சம் பெற்றிருந்தாலும் ஜவுளிக்கடை நடத்தலாம்!

## 744. எவர் செங்கல் சூளைத் தொழில் செய்யலாம்?

செவ்வாய், சுக்கிரன், புதன் பத்தாம் இடத்தோடு தொடர்பு கொண்ட ஜாதகர் செங்கல் சூளைத் தொழில் செய்யலாம்!

## 745. எவர் பேன்ஸி ஸ்டோர் நடத்தலாம்?

ஜாதகத்தில் பத்தாமிடத்து அதிபதி புதனுக்கு உரிய இராசியில் சஞ்சரித்து சுக்கிர நவாம்சம் பெற்றவரும், புதனும் சுக்கிரனும் இரண்டாம் இடத்தில் சஞ்சரித்துப் பத்தாம் இடத்து அதிபதி சுக்கிர நவாம்சம் பெற்றவரும், பத்தாம் இடத்தில்

சுக்கிரனும், புதனும் சஞ்சரிக்க, பத்தாம் இடத்தவர் புதன் அல்லது சுக்கிர நவாம்சம் பெற்றவரும் பேன்ஸி ஸ்டோர் தொடங்கலாம்!

## 746. எவர் ஸ்வீட் ஸ்டால் நடத்தலாம்?

ஜாதகத்தில் பத்தாம் இடத்தவர் குருவாகி, சுக்கிரனின் நவாம்சம் பெற்று புதன் தொடர்பு கொண்டவரும், பத்தாம் இடத்தில் குரு, சுக்கிரன் ஆகியன கூடி புதன் பார்வை அல்லது கூட்டுப் பெற்றவரும், புதன் வீடுகளான மிதுனமும், கன்னியும் பத்தாம் இடமாய் அமையும் கன்னி, தனுசு இலக்கினத்தில் பிறந்து, பத்தில் சுக்கிரனும், குருவும் கூடி இருக்கப்பெற்றவரும் ஸ்வீட் ஸ்டால் நடத்தலாம்!

## 747. எவர் மளிகைக் கடைத் தொழில் நடத்தலாம்?

பத்தாமிடத்தில் சுக்கிரன், சந்திரன் சஞ்சரித்துச் சனித் தொடர்பு பெற்றவரும், செவ்வாய்த் தொடர்பு பெற்றவரும் பத்தாம் இடத்து அதிபதி நவாம்சத்தில் புதன் அல்லது செவ்வாய் நவாம்சம் பெற்றவரும் மளிகைத் தொழில் செய்யலாம்.

## 748. தொழில் அமையும் இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் பத்தாம் இடத்திலுள்ள கிரகங்களுக்குரிய தொழிலோடு, பத்தாம் இடத்து அதிபதி நின்று நவாம்சாதிபதிக்கு உரிய தொழிலையும் சம்பந்தப்படுத்தி ஏற்கும் தொழிலே சிறப்பளிக்கும்!

## 749. எவர் வெற்றிலை பாக்குக் கடை நடத்தலாம்?

ஒருவர் ஜாதகத்தில் புதன் பத்தாம் இடத்து அதிபதியோடு பத்து அல்லது இரண்டில் சஞ்சரித்து, சுக்கிரன் அல்லது சந்திரனின் நவாம்சம் பெற்றவர்களும், பத்தாம்

இடத்தில் புதன் சஞ்சரித்து, சந்திரன், சுக்கிரன் தொடர்பு பெற்றவர்களும் வெற்றிலை பாக்குக் கடை நடத்தலாம். மேலும், குருவின் இல்லம் பத்தாம் இடமாகி, அங்குச் சந்திரன், சுக்கிரன் தங்கி குரு, புதனின் நவாம்சம் பெற்றவர்கள் தேங்காய், பழம், கற்பூரம் விற்கும் கடை நடத்தலாம்!

## 750. ரொட்டிக்கடை (பேக்கரி) யார் நடத்தலாம்?

ஒருவரின் ஜாதகத்தில் பத்தாம் இடத்தில் சுக்கிரன், செவ்வாய் சஞ்சரிக்க, பத்தாமிடத்து அதிபதி சுக்கிரனின் நவாம்சம் பெற்று, ஜாதகத்தில் சூரியன் பத்தாம் இடத்தைப் பார்த்தால் அவர் பேக்கரி (ரொட்டிக்கடை) தொடங்கலாம்!

## 751. முன்வாசலில் போடக்கூடாது!

சாப்பிடும்போது சோற்றில் முடி இருந்தால், அந்தச் சோற்றை அப்படியே கீழே வைத்துவிட்டு உள்ளதைச் சாப்பிட வேண்டும். தலைமயிரையும், நகத்தையும் வேஷ்டியில் பிரித்த நூலையும் வீட்டு முன் வாயிலில் போடுதல் கூடாது! பின்வாயில் போட வேண்டும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன!

## 752. நாசத்தை ஏற்படுத்தும் விஷயங்கள்!

ஒருவர் தம் இடது கையால் ஆசனம் போட்டுக்கொண்டால் ஆயுள் நாசம், தம் இடக்கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திரநாசம்; தம் இடக்கையினால் சாப்பாடு போட்டுக்கொண்டால் தனநாசம்; தம் இடக்கையினால் படுக்கை போட்டுக் கொண்டால் இருப்பிடம் நாசம் ஆகும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன!

## 753. அசுவமேதயாகப் பலனைப் பெறக்கூடியவர்கள் யார்?

கஜபூஜை, கோபூஜை, சுமங்கலிபூஜை, கலசபூஜை செய்பவரும், படிப்புக்கு உதவி செய்பவரும் ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு உதவுபவனும், அநாதைப் பிரேதத்தை எவர் உதவியும் இன்றித் தாமே செலவு செய்து அடக்கம் செய்பவரும், அசுவமேத யாகம் செய்த பலனை அடைவார்கள்!

## 754. முடி உணர்த்தும் முன் சகுனம்!

சாப்பிடும் போது வாயில் முடி அகப்படுவது கவலையை முன்கூட்டியே உணர்த்தும் அறிகுறியாகும். அதற்குப் பரிகாரமாய் ஒரு நெல் சாப்பிட்டுவிட்டால் எந்தக் கவலையும் ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் சிக்கல் இராது.

## 755. எவ்வாறு சாப்பிடக்கூடாது?

ஈரத்துணியுடனும், துண்டுடனும் சாப்பிடக்கூடாது. தெருக்கதவைச் சாத்தாமலும், சந்திரனின் நிழலிலும், கொள்ளிக்கட்டையின் வெளிச்சத்திலும், நடுநிசியிலும், பிரதோஷகாலத்திலும், இருட்டிலும், திறந்தமாடியிலும், சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்! ஆனால், பௌர்ணமியன்று நிலாச் சாப்பாடு தனியாகச் சாப்பிடாமல் பலருடன் கூடிச் சாப்பிடலாம்!

## 756. நோய் நொடி இன்றி வாழ!

குழந்தை பூமியில் ஜனனமானவுடன் நெய், தேன் ஆகியவற்றில் தங்கத்தைத் தேய்த்து அக்குழந்தையின் நாவில்

குலதெய்வத்தின் பெயரை வேண்டிக்கொண்டே மூன்று முறை தடவ வேண்டும். அதன்பின்பே தொப்பூழ் கொடியை அறுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் அக்குழந்தை நோய் நொடி இன்றி நீண்ட ஆயுளுடன் இருக்கும்.

## 757. ஆண்கள் செய்யக்கூடாத செயல்கள்!

ஆண்மகன் தன் மனைவி கர்ப்பமாய் இருக்கும் போது, பிரேதத்தின் பின் போகுதல், முடிவெட்டுதல், மலை ஏறுதல், சமுத்திரத்தில் குளித்தல், வீடுகட்டுதல் தூரதேசயாத்திரை செல்லுதல், வீட்டில் விவாகம் செய்தல், சிரார்த்த வீட்டில் புசித்தல் ஆகிய இந்த எட்டுக் காரியங்களையும் செய்யக்கூடாது. மேலும், கணவன், கர்ப்பிணியாய் இருக்கும் மனைவியை எந்த விதத்திலும் துன்புறுத்தவோ, அசிங்கமான வார்த்தை கூறவோ கூடாது. அப்பொழுதுதான் ஆரோக்கியமாய் சுகப்பிரசவமாகும்!

## 758. வலதுப் பக்கமாய்ச் செல்ல வேண்டும்!

நடந்து செல்லும்பொழுது, பசு, தெய்வசப்பரம், நெய்க்குடம், அரசமரம், வில்வமரம், நெல்லிமரம், அரசுடன் சேர்ந்த வேம்பு ஆகியவை குறுக்கிட்டால் வலப்பக்கமாய்ச் சுற்றிப் பிரதட்சணமாய்ப் போக வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## 759. சுபத்தடை ஏற்படும்!

நல்ல காரியங்களைப் பற்றி பேசும்போதும், சுபகாரியத்தை முடிப்பதுபற்றிய பேச்சில் ஈடுபட்டிருக்கும் போதும் எள் அல்லது எண்ணெயைப் பற்றிப் பேசுதல் கூடாது. அதனால் சுபத்தடை ஏற்படும்!

## 760. கூடாத சில விஷயங்கள்!

நமது நடைமுறை வாழ்க்கையில் செய்யக்கூடாத சில விஷயங்களைப் பற்றி நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை 1. கன்றுக்குட்டி, மாடு ஆகிய இவற்றைக் கட்டியிருக்கும் கயிற்றைத் தாண்டக் கூடாது 2. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக்கூடாது 3. நிலையில் அமரக்கூடாது. 4. மழை பெய்யும் பொழுது ஓடக்கூடாது 5. தரையில் கை ஊன்றிச் சாப்பிடக்கூடாது 6. துணி இல்லாமல் குளிக்கக் கூடாது 7. சூரியனுக்கு எதிரில் மலஜலம் கழிக்கக்கூடாது 8. நெருப்பை வாயினால் ஊதக்கூடாது 9. அசுத்தமான பொருள்களை நெருப்பில் போடக்கூடாது 10. துடிதுடிக்கப் புழுபூச்சிகளை நெருப்பில் போடுவது பிரம்மஅத்திதோஷம் ஆகும். 11. ஆலயத்தில் இரவுநேரத்தில் குளிக்கக்கூடாது. கங்கையில் மட்டும் எந்த நேரமும் குளிக்கலாம். 12. ஈரத்துணியைத் தண்ணீரில் பிழியக்கூடாது, உதறக்கூடாது 13. பெண்கள் மாதவிடாய் ஆன நான்கு நாள்கள்வரை கோவிலுக்குப் போகக்கூடாது.

## 761. எந்நாளில் முடி வெட்டக்கூடாது?

சதுர்த்தி, சதுர்த்தசி, சஷ்டி, பௌர்ணமி, நவமி ஆகிய திதிகளில் முடிவெட்டுதல் கூடாது. ஆனால், அந்தத் திதி அமையும் நாள் ஞாயிறு அல்லது வியாழனாயிருந்தால் மேற்படி திதி தோஷம் இல்லை.

## 762. ஆண்களுக்கு ஓர் எச்சரிக்கை!

வீட்டின் நிலைப்படி தேவிக்கு ஒப்பாவாள். அதனால் ஆண்கள் உள்ளாடையின்றி நிலைப்படியைத் தாண்டுதல் கூடாது என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## 763. சாப்பிடக் கூடாத நேரங்கள்!

எக்காளம், பேரிகை, சங்கு, இயந்திரம், வண்டி, உரல், உலக்கை, செக்கு, யானை சண்டை ஆகியவற்றின் சத்தம் கேட்கும்போது சாப்பிட உட்காரலாகாது! மேலும், சாப்பிடும்பொழுது விளக்கு அணைந்துவிட்டால், சூரியபகவானைத் தியானம் செய்து, மீண்டும் விளக்கு ஏற்றிவிட்டுச் சாப்பிட வேண்டும். இருட்டில் அமிர்தமே ஆனாலும் ஒரு பொழுதும் சாப்பிடக்கூடாது. அந்தி, சந்தி வேளைகளிலும், விளக்கு வைத்தவுடனும் சாப்பிடக்கூடாது.

## 764. ஹோமத்தின் முக்கியக் கடமை!

ஒரு வீட்டில் ஹோமம் செய்த பின்பு அருகு, பழம், சந்தனம், புஷ்பம், ஜலகும்பம், தயிர், கன்றுடன் கூடிய பசு, எருது, பொன், அட்சதை, தேன், கன்னிப்பெண், சுமங்கலி, மஞ்சள் ஆகிய மங்களத்திரவியங்களைத் தரிசனம் செய்தபிறகே வெளியில் செல்லவேண்டும்!

## 765. குழந்தைக்குத் தரிசனம் செய்விக்கும் நாள்!

குழந்தை பிறந்த நாலாவது மாதத்தில், ஒரு நல்ல தினத்தில் அக்குழந்தைக்குச் சூரியதரிசனம், சந்திரதரிசனம், பசு தரிசனம், ஆலயதரிசனம் செய்விக்க வேண்டும். செவ்வாய், சனி ஆகியவற்றைத் தவிர மற்ற கிழமைகளில் பௌர்ணமி வரும் சமயம் இவற்றைச் செய்வது நல்லது.

## 766. தோஷம் தரும் விஷயங்கள்!

கன்று ஈன்று பத்து நாள் ஆகாத பசுமாட்டின் பால், தேத்தாகொட்டை, நெய்கசண்டு, கன்று இல்லாத பசுவின் பால்

ஆகியவற்றை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். அப்படி உட்கொள்வது தோஷமாகும்.

## 767. காது குத்த ஏற்ற நாள்!

குழந்தை பிறந்த ஆறாவது மாதத்திலோ எட்டாவது மாதத்திலோ ஒரு நல்ல சுபதினத்தில், அஷ்டம சுத்தியுள்ள இலக்கினத்தில் பொன் ஊசியினால் காது குத்த வேண்டும். ஆண் குழந்தைக்கு முதலில் வலது காதும், பெண் குழந்தைக்கு முதலில் இடது காதும் குத்த வேண்டும். இது மாதிரி ஆறாவது, எட்டாவது மாதத்தில் காது குத்தினால் வைரம் அணியும் யோகம் வாய்க்கும்.

## 768. பல் துலக்கும் முறை!

பல் துலக்கியவுடன் பற்குச்சியை அலம்பித் தென்மேற்கு மூலையில் அல்லது ஓடும் தண்ணீரில் விட வேண்டும். பல்துலக்குக் குச்சி கிடைக்காத சமயம் வாயைப் பத்துமுறை கொப்புளித்தால், பல் துலக்கியதற்குச் சமமாகும். கோவில், கொட்டில், யாகம் அல்லது ஹோமம் செய்யுமிடம், ஜலம் ஆகிய இடங்களில் பல்துலக்கக் கூடாது!

## 769. கூடாத சில விஷயங்கள்!

பசு தன் கன்றுக்குப் பால் கொடுக்கும் சமயத்திலும், தண்ணீர் குடிக்கும் சமயத்திலும் அதற்கு எவ்விதத் தடையும் ஏற்படுத்துதல் கூடாது! அது பாவங்களுளெல்லாம் பெரியபாவம் ஆகும். மற்றும் அக்கினி, சூரியன், சந்திரன், வில்வமரம், பசு, தண்ணீர் ஆகியவற்றைப் பார்த்துக்கொண்டு மல ஜலம் கழிக்கக்கூடாது! மற்றும் பாம்புப்புற்றின் அருகிலும், எறும்புகள் கூட்டத்தின் மீதும் சிறுநீர் கழித்தல் கூடாது.

## 770. முக்கிய எச்சரிக்கை!

மாட்டை மேய்க்கும் கயிற்றைக் கட்டும் முளைக்குச்சியை எக்காரணம் கொண்டும் அடுப்பு எரிக்கக்கூடாது. அது மிகப்பெரிய தோஷமாகும்!

## 771. அன்னதானம் செய்பவர்கள் யாவர்?

ஒருவரின் ஜாதகத்தில் ஐந்தாம் இடத்து அதிபதி 11 இல் இருந்து 11 ஆம் இடத்து அதிபதியுடன் சந்திரன் கூடி இரண்டில் இருந்தால், அந்த ஜாதகர் விருந்தினர்களுக்கும், சாது, சந்நியாசிகளுக்கும் அன்னதானம் செய்வார்.

## 772. எவர் பயிர்த்தொழிலில் சிறப்புடன் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினம் முதற்கொண்டு தொடர்ந்தாற்போல் நான்கு இராசிகள் வரையில் இடைவிடாமல் இரகங்கள் இருந்தால், அந்த ஜாதகர் பயிர்த்தொழில் செய்து, அதன் மூலம் பெரும் பொருள் ஈட்டுவார். உறவினர்களிடம் அன்புடன் இருப்பார்; பெரிய மனிதர்கள் தொடர்பும் ஏற்படும்.

## 773. குதிரைகள் மூலம் எவருக்கு லாபம் கிட்டும்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினம் முதற்கொண்டு நான்கு இராசிகள் வரையில் இடைவிடாமல் கிரகங்கள் இருந்து, சந்திரனுக்கு ஒன்பதில் குரு இருந்தால் அவருக்குக் குதிரைகள் மூலம் பெருத்த இலாபம் உண்டு; இசைக்கருவிகளுள் ஏதாவது ஒன்றை வாசிக்கும் திறமை உண்டாகும்.

## 774. எவர் வாங்கி, விற்கும் தொழிலைச் செய்வார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினம் முதற்கொண்டு தொடர்ந்து மூன்று இராசிகள் வரையில் இடைவிடாமல் கிரகங்கள் இருந்தால் அவருக்கு வாங்கி, விற்கும் தொழிலில் அதிக இலாபம் உண்டு. பட்டக்கல்வி பயில்வார். வயது அதிகமாக ஆகப் பணவசதி பெருகும். திறமையான வியாபாரி என்னும் பெயர் ஏற்படும். அவர் பெரியோர்களிடம் மதிப்பு உடையவர்.

## 775. எவர் சிற்பி ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் ஏழு கிரகங்கள் சேர்ந்து இருந்தால் அந்த ஜாதகர் சிற்ப வேலையில் கைதேர்ந்தவராய் இருப்பார். அவர் இக்கலையைத் தொழிலாய்க் கொண்டால் முன்னுக்கு வர முடியும்!

## 776. கடவுள் நம்பிக்கை இல்லாதவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் குருவுடன் இராகுவோ கேதுவோ சேர்ந்திருந்தால் அந்த ஜாதகர் சாதி, மதத்தில் பற்று இல்லாதவராயும், கடவுள் நம்பிக்கை இல்லாதவராயும் இருப்பார்!

## 777. எவர் உலகம் போற்றும் மனிதராய்த் திகழ்வார்?

ஒருவர் ஜாதகத்தில் சிம்மத்தில் சூரியனும், குருவும் சேர்ந்து இருந்தால் அந்த ஜாதகர் உலகம் போற்றும் மனிதராகவும், பலர் வழிபடும் தெய்வமாகவும் விளங்குவார்!

## 778. எவர் நிபுணனராய் விளங்குவார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்திற்கோ, இராசிக்கோ, 1, 4, 8 இல் புதனும், சூரியனும் சேர்ந்திருந்தால் அந்த ஜாதகர் காவியம், கதை, கல்வி ஆகியவற்றில் நிபுணனராய் விளங்குவார். சாஸ்திர ஞானம் உண்டாகும். பல பட்டங்களைப் பெறுவார். பணவசதியும் பெருகும்.

## 779. எவர் உண்மை பேசுவார்?

ஒருவர் ஜாதகத்தில் சனி உச்சம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் எப்போதும் உண்மையே பேசுவார். மேலும், அவர் பல கிராமங்களுக்கு அதிபதியாய் அல்லது அதிகாரியாய் இருப்பார்!

## 780. எவர் ஜகத் குரு ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் ஐந்து கிரகங்கள் உச்சமடைந்திருந்தால் அந்த ஜாதகர் உலகத்திற்கே குருவாய் விளங்குவார்! ஆனால், இலக்கினாதிபதி நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம் ஆகும்!

## 781. எவருக்கு இராணுவத்தில் உயர்ந்த பதவி வாய்க்கும்?

ஒருவர் ஜாதகத்தில் ஐந்து, பதினொன்று இடத்து அதிபதிகள் சேர்ந்து ஒன்பதில் இருக்க, பத்தாம் இடத்து அதிபதி ஐந்தில் இருந்தால் அந்த ஜாதகர் இராணுவத்தில் உயர்ந்த பதவிகளை வகிப்பார். அவர் நாட்டை ஆளும் திறமை பெற்றவர்; அமைச்சராகும் தகுதி உடையவர்.

## 782. எவர் பெரிய இடத்தில் வேலை செய்வார்?

ஒருவர் ஜாதகத்தில் பத்தாமிடத்து அதிபதி, ஒன்பதாம் இடத்து அதிபதியின் அம்சத்திலிருக்க, அந்த அதிபதி இலக்கினத்திற்கு இரண்டிலோ ஒன்பதிலோ இருந்தால் அந்த ஜாதகர் பிரதமமந்திரி, முதல் மந்திரி, ஜனாதிபதி முதலான உயர்ந்த பதவியில் உள்ளவர்களிடம் வேலை செய்வார்; இவர் பின்னால் ஒரு கூட்டமே இருக்கும்.

## 783. எவர் பெண் போகத்தை விரும்புவார்?

ஒருவர் ஜாதகத்தில் 1, 5, 9 ஆம் இடத்து அதிபதிகளுள் யாரேனும் ஒருவருடன் நான்காம் இடத்து அதிபதி சேர்ந்தாலோ பார்த்தாலோ அந்த ஜாதகர் பெண்போகத்தை அதிகம் விரும்புவார்!

## 784. தந்திரசாலி யார்?

ஒருவர் ஜாதகத்தில் 3, 12 ஆம் இடத்து அதிபதிகள் சேர்ந்து ஏழில் இருக்க, ஏழாம் இடத்து அதிபதி 12 இல் இருக்க, குரு ஒன்பதில் இருக்க அந்த ஜாதகர் தந்திரசாலியாய் இருப்பார். மேலும், செல்வம், செல்வாக்கு ஆகியன உடையவராயும் இருப்பார்.

## 785. எவர் சகலபாக்கியங்களையும் உடையவர்?

ஒருவர் இலக்கினம் சர இராசியாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் ஆக இருந்து ஒன்பதாம் இடத்து அதிபதி ஒன்றில் இருக்க, நான்காம் இடத்து அதிபதி குருவுடன் சேர்ந்து ஐந்தில் இருக்க, பத்தாம் இடத்து அதிபதி 11 இல் இருக்க, பத்தாம்

இடத்து அதிபதி 11இர் இருக்க, அந்த ஜாதகர் பலவிதமான பாக்கியங்களையும் பெற்றிருப்பார்.

## 786. இந்திரனைப்போல் வாழ்பவர் யார்.

ஒருவரின் ஜாதகத்தில் 1, 11 ஆம் இடத்து அதிபதிகளும், 2, 10 ஆம் இடத்து அதிபதிகளும் பரிவர்த்தனை பெற்று, அவர்கள் இலக்கினம் ஸ்திர இராசியாகிய ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பமாய் இருந்தால் அந்த ஜாதகர் இந்திரனைப் போல் சுகபோக வாழ்க்கை வாழ்வார்!

## 787. எவர் பெண்கள் பலரை அனுபவிப்பார்?

விருச்சிக இலக்கினமாய் இருந்து அதில் குருவும் சுக்கிரனும் சேர்ந்திருக்க 11 இல் புதன் உச்சம் அடைந்திருந்தால், அந்த ஜாதகர் பெண்களை அனுபவிப்பார். அவர் காம எண்ணங்கள் மிகுந்தவராய் இருப்பார்.

## 788. எவருக்கு உலகஅளவில் உயர்ந்த பதவி வாய்க்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் ஒன்பதாம் இடத்து அதிபதி, அமிசத்தில் எந்த இராசியில் இருக்கின்றதோ, அந்த இராசியாதிபதி, இராசிச்சக்கரத்தில் உச்சமடைந்து, அதனுடன் இலக்கினாதிபதியும் தொடர்பு கொண்டிருந்தால் அந்த ஜாதகர் உலக அளவில் உயர்ந்த பதவி வகிப்பார். அவருக்குப் பெரியோர்களிடத்து மதிப்புண்டாகும்; சுகபோகமான வாழ்க்கை அமையும்; மேலும் பெண்களுக்கு இன்பமளிப்பதில் திறமை உடையவராய் இருப்பார்!

## 789. எவர் பழமொழி பேசுபவர்

ஒருவர் ஜாதகத்தில் பத்தாம் இடத்து அதிபதி அமிசத்தில் இலக்கினாதிபதி எந்த அமிசத்தில் இருந்ததோ அதிலிருக்க, இராசிச் சக்கரத்தில் பத்தாம் இடத்தில் இலக்கினாதிபதியுடன் குரு இருந்தாலோ பார்த்தாலோ அல்லது இலக்கினாதிபதி குருவைப் பார்த்தாலோ அவர் பல மொழிகளைக் கற்றுப் பேசுவதில் வல்லவராய் இருப்பார். அவருக்குச் சந்நியாசி ஆவதற்கும் அமைப்புண்டு. தூய்மையான மனம் கொண்டவராயும் இருப்பார்!

## 790. எவருக்கு மந்திரியாகும் யோகம் உண்டு?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி அமிசத்தில் எந்த இராசியில் இருந்ததோ அந்த இராசியாதிபதி, இராசிச்சக்கரத்தில் திரிகோணஸ்தானத்தில் (1, 5, 9) இருந்து, அதனுடன் குருவும் சுக்கிரனும் சேர, பத்தில் உச்சமாகி இருந்தால் அவருக்கு மந்திரியாகும் யோகம் உண்டு!

## 791. எவர் உயர்ந்தவர்களால் கௌரவிக்கப்படுவார்?

ஒருவர் ஜாதகத்தில் ஒன்பதாம் இடத்து அதிபதி அமிசத்தில் எந்த இராசியில் இருந்ததோ, அந்த இராசியாதிபதி, இராசிச் சக்கரத்தில் நான்கில் இருக்க, நான்காம் இடத்து அதிபதி கேந்திரத்திலோ, (1, 4, 7, 10) உச்சத்திலே இருந்தால் அந்த ஜாதகர் ஜனாதிபதி, கவர்னர், மந்திரி முதலானவர்களால் கௌரவிக்கப்படுவார்!

## 792. எவர் மாயாஜால வித்தைகள் செய்வார்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினாதிபதியும், 12 ஆம் இடத்து அதிபதியும் சேர்ந்து ஓர் இராசியில் இருக்க, அதனுடன்

அந்த ஜாதகரின் பிறந்த நட்சத்திரத்திற்கு இரண்டாவதாய் வரும் நட்சத்திரத்தின் அதிபதியும் சேர்ந்து இருந்தால் அந்த ஜாதகர் மாயாஜால வித்தைகள் பல செய்பவராய் இருப்பார்.

## 793. நாட்டியம் தெரிந்தவர் யார்?

ஒருவர் ஜாதகத்தில் எட்டுக் கிரகங்கள், ஏழு ராசிகளில் இருந்தால் அந்த ஜாதகர் நாட்டியம், சங்கீதம் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றவராய் இருப்பார். எல்லோரும் அறிந்த மனிதராய் இருப்பார்.

## 794. எவர் சிவபக்தர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி, சூரியன் சந்திரன் ஆகிய கிரகங்கள் கேந்திரத்திலோ (1, 4, 7, 10) திரிகோணத்திலோ (1, 5, 9) பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் ஒரு சிவபக்தராவார்; உருத்திராக்ஷம் அணிந்திருப்பார்; சதா ஈஸ்வரனையே தியானிக்கும் தன்மையைக் கொண்டிருப்பார்.

## 795. எவர் வைஷ்ணவ பக்தர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் ஒன்பதாம் இடத்து அதிபதியும் புதனும் சுக்கிரனும் கேந்திரத்திலோ (1, 4, 7, 10) திரிகோணத்திலோ (1, 5, 9) பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் வைஷ்ணவத்தில் அதிகப்பற்று உள்ளவராய் இருப்பார்!

## 796. எவர் அரசியலில் பொருள் சம்பாதிப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் நான்காம் இடத்து அதிபதி செவ்வாயாக இருந்து, ஆட்சி பெற்றிருந்தால் அந்த ஜாதகர் அரசியலில் ஈடுபட்டு நிரம்பப் பொருளீட்டுவார்!

## 797. எவர் வெளிநாடு சென்று படிப்பவர்?

ஒருவர் ஜாதகத்தில் நான்காம் இடத்து அதிபதி புதனாய் இருந்து, ஆட்சி பெற்றிருந்தால் அந்த ஜாதகர் வெளிநாடு சென்று கல்வி பயில்வார்!

## 798. எவர் திறமையான வழக்குரைஞர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் நான்காம் இடத்து அதிபதி குருவாய் இருந்து, ஆட்சி பெற்றிருந்தால் அந்த ஜாதகர் திறமையான வழக்குரைஞராய் இருப்பார். அரசாங்க வழக்குரைஞர் ஆவதற்கும் இவருக்கு வாய்ப்புண்டு.

## 799. எவர் அதிகாரம் செய்யக்கூடியவர்?

ஒருவர் ஜாதகத்தில் சந்திரனுக்குப் பத்தில் குரு இருந்தால், அவர் அதிகாரம் செய்வதில் மிகத் திறமை உடையவராய் இருப்பார். இராணுவத்தில் உயர்ந்த பதவி கிட்டுவதற்கும் வாய்ப்புண்டு.

## 800. எவர் கோள் சொல்லும் இயல்பினர்?

ஒருவரின் ஜாதகத்தில் 4, 10 ஆம் இடங்களில் சந்திரன், புதன், சுக்கிரன் சேர்ந்தோ தனித்தோ இருந்தால், அந்த ஜாதகர் கோள் சொல்லும் இயல்பினைப் பெற்றிருப்பார்.

## 801. எவர் பொய் சொல்லும் இயல்பினர்?

ஒருவரின் ஜாதகத்தில் இலக்கினத்தில் சூரியன், இராகு அல்லது கேது, சனி இருந்து மற்ற சுபக்கிரகங்கள் ஏழில்

இருந்தால், அந்த ஜாதகர் எப்போதும் பொய் பேசுபவராய் இருப்பார். உண்மை அவர் வாயில் வராது. சிறைவாசம் செல்லக்கூடிய வாய்ப்புக் கூட ஏற்படும்!

## 802. எவருக்குக் காவல்துறை பணி வாய்க்கும்?

ஒருவரின் ஜாதகத்தில் 2, 11 ஆம் இடத்து அதிபதிகள் உச்சம் பெற்று ஐந்தாம் இடத்து அதிபதி இரண்டாம் இடத்தைப் பார்த்தால், அந்த ஜாதகருக்குக் காவல்துறை அல்லது இராணுவத்தில் பணி கிட்டுவதற்கு வாய்ப்புண்டு.

## 803. எவர் ரசவாதம் தெரிந்தவராய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி, இராசியாதிபதி கிரகங்கள் உச்சம் பெற்றிருக்க, சந்திரன் நான்கிலோ ஏழிலோ உச்சம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் இரசவாதத்தில் நிபுணராய் இருப்பார்!

## 804. எவர் எம்.எல்.ஏ., எம்.பி. ஆகக் கூடியவர்?

ஒருவர் ஜாதகத்தில் 7, 9 ஆம் இடத்து அதிபதிகள் ஆட்சி பெற்றிருந்தால் அந்த ஜாதகர் 28 வயதுக்கு மேல் எம்.எல்.ஏ., எம்.பி. ஆக வாய்ப்புள்ளது.

## 805. எவர் பிரம்ம ஞானியாவார்?

ஒருவர் ஜாதகத்தில் ஒன்றாம், இரண்டாம் இடத்து அதிபதிகள், சனீஸ்வரர் ஆகிய இம்மூவரும் கேந்திரத்திலோ (1, 4, 7, 10) திரிகோணத்திலோ (1, 5, 9) பலம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் பிரம்மஞானி ஆவார்; பூரண அறிவு

பெற்றிருப்பார். வேதங்களை உணர்ந்தவராவார். எல்லோருக்கும் குருவாய் விளங்குவார். சிஷ்யர் பலரை உடையவர். இந்த அமைப்பை உடையவர்களை அனைவரும் வணங்கி வழிபடுவார்கள்.

## 806. ஷேக்ஸ்பியர் வாழ்வின் அதிசயம்!

ஷேக்ஸ்பியர் பிறப்பிலும் இறப்பிலும் ஓர் அதிசய ஒற்றுமை உண்டு. அவர் தாம் பிறந்த மாதம், தேதியிலேயே இறந்ததுதான் அந்த அதிசயம். அவர் பிறந்தது 23.4.1564 அன்று; இறந்தது 23.4.1616 அன்று. ஒரு நாள்கூட குறைவாகவோ, அதிகமாகவோ இல்லாமல் சரியாக 52 வயதில் இறந்துவிட்டார். அது போல், தமிழ்நாட்டில் வாழ்ந்த அரசியல் ஞானி பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் பிறந்தது அக்டோபர் 30 ஆம் தேதி, அவர் இறந்ததும் அக்டோபர் 30 ஆம் தேதி தான் என்பது அதிசயமான ஒன்றாகும்!

## 807. ஜோதிடரின் சாதுர்த்தியம்!

பிரான்ஸ் நாட்டு மன்னர் பதினான்காம் லூயியின் மனைவி இராணி சோதிடர் ஒருவர் கூறிய தினத்தன்றே இறந்தாள். சோதிடர் கூறியது தான் ராணியின் மரணத்துக்குக் காரணம் என்று எண்ணி அவரைக் கொன்றுவிடக் கருதி, கூப்பிட்டு அனுப்பினார், அரசர். சோதிடர் வந்தவுடன், அரசர் அவரிடம், "நீங்கள் சோதிடர் தானே, நீங்கள் எப்பொழுது இறப்பீர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார். சோதிடர் அரசர் எண்ணத்தைப் புரிந்துகொண்டு "அரசே! தாங்கள் இறப்பதற்கு மூன்று நாள்களுக்கு முன் நான் இறப்பேன்" என்று கூறினார். அரசர் அது முதல் சோதிடர் உயிரைப் பாதுகாப்பதில் அதிகக் கவனம் செலுத்தினார்!

## 808. எதிர் ரோமத்துடன் பிறந்தால்...!

ஒருவர் எதிர் ரோமத்துடன் பிறந்தால் அவர் உலகத்தில் செயற்கரிய செயல்களைச் செய்து புகழ்பெற்றுத் திகழ்வார்! மனவியல் பேரறிஞராய்த் திகழ்ந்த சிக்மண் பிராய்டு எதிர் ரோமத்துடன் பிறந்தவர்தாம்!

## 809. காந்தியின் வாழ்வில் தீர்க்கதரிசனங்கள்!

1934 ஆம் ஆண்டு காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது, திறந்த காரில் பவனி வந்தார். அப்போது திரு. அவிநாசிலிங்கம் அவர்கள் காந்தியடிகளிடம், "இப்படி வருகிறீர்களே! உங்களுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் என்ன செய்வது?" என்று கேட்டார். அதற்குக் காந்தியடிகள், "அவினாசிலிங்கம்! எனக்கு மரணம் எப்படி வரும் தெரியுமா? சுட்டுக் கொல்லப்படுவேன் அல்லது தூக்குத் தண்டனை பெறுவேன்!" என்றார். அவர் சொன்னபடி தான் நடந்தது!" அதேபோல், உலகப்புகழ் பெற்ற கேலிச் சித்திரக்காரர் டேவிட்லோ, தமது கார்ட்டூன் மூலம் சில விஷயங்களைத் தீர்க்க தரிசனமாய்ச் சொல்லுவார். ஒரு சமயம், அவர் வரைந்த கார்ட்டூனில் காந்தியடிகள் உபவாசம் இருப்பது போலவும், வகுப்பு வெறி என்ற புலி அவரை முறைத்துப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது போலவும் தீட்டியிருந்தார். அந்தக் கார்ட்டூன் வெளியாகிச் சிலதினங்களில், வகுப்பு வெறி கொண்ட கோட்சே அவரைச் சுட்டுவிட்டான்.

## 810. விட்டகுறை, தொட்டகுறை!

ஜாதகரீதியாய் அறிஞர் சிலர் விட்டகுறை தொட்டகுறையாய்ப் பிறந்து, இந்தப் பூவுலகில் தாங்கள் செய்ய

வேண்டிய கடமைகளைச் செய்து முடித்துவிட்டுக் குறைந்த வயதில் மரணம் அடைந்துவிட்டார்கள். அப்படி மறைந்தவர்கள் தாம் கணக்கு மேதை இராமானுசம், கவிஞர் பாரதி, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் முதலானோர். ஒரு சமயம் திருவாரூரில் வள்ளி நாடகம் நடந்தது. அதில் கந்தனாய் நடித்த எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள், பைரவிராகத்தில் ஒரு விருத்தம் பாடினார். அவர் இளமையில் இத்தனை சிறப்புடன் பாடுவது மேதைத் தன்மை உடையது என உணர்ந்தார். பிரபல நாதஸ்வரக்காரர் ஒருவர். அந்த நாதஸ்வரக்காரர் அவரைப் பார்த்து, "இறைவனது வரப்பிரசாதம் பெற்றவர் ஐயா நீங்கள்! நீண்ட ஆயுளோடு நீங்கள் இருக்க வேண்டும்" என்றார். அதைக் கேட்ட பக்கத்தில் இருந்த மற்றொரு சங்கீத நிபுணரோ ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, விட்ட குறையாய் இருந்த மேதை இப்படிப் பூமியில் பிறந்திருக்கிறது. வந்த காரியத்தை முடித்துக்கொண்டு விரைவில் மறைந்துவிடும்" என்றார். அவர் சொன்ன வாக்குப்படியே தமது இருபத்தெட்டாவது வயதில் காலமாகிவிட்டார், இசை மேதை எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள்.

## 811. கனவில் கிடைத்த உண்மைகள்!

கனவு தானே என்று நாம் சமானியமாய் கருதிவிடுகிறோம். இந்தக் கனவுமூலந்தான் பல கதை, கவிதை, கணக்குகள் விஞ்ஞான முடிவுகள் கிடைத்தன என்பதைப் பலர் அறியமாட்டார்கள். இதோ சில எடுத்துக்காட்டுகள் 1. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து எத்தகைய போராட்டம் நடத்துவது என்று சிந்தித்த மகாத்மாவுக்குச் சாத்வீக சத்தியாக்கி கிரகத்தையே நடத்தும்படி வழி காட்டியது, அவர் கண்ட கனவு தான். 2. 'பெரடரிக் பாண்டிங்' என்ற அறுவைச்சிகிச்சை நிபுணர்

நீரிழிவு நோயைப் பற்றியும், அதற்கான சிகிச்சை முறைகளைப் பற்றியும் சிந்தித்தவாறு படுக்கையில் படுத்திருந்தார். அப்படியே உறங்கிவிட்டார். கனவுகளைக் கண்டார். அக்கனவில் அவர் தம் பிரச்சனைக்கு முடிவைக் கண்டார். உடனே விழித்து எழுந்து, கனவில் கண்ட அமைப்பை, மருந்து தயாரிக்கும் முறையை எழுதிக்கொண்டார். அவர் கண்ட கனவின் பலனாய்ப் புது மருந்தினை உருவாக்கினார். அதுதான் இன்சுலின் 3. சர் ஐசக் நியூட்டன் எப்பொழுதும் ஆழ்ந்து சிந்திக்கக்கூடியவர். தீவிரமாய்ச் சிந்திக்கும்பொழுதே உறங்கியும் விடுவார். அப்படி உறங்கும் நேரத்தில் தம் கணிதப் பிரச்சனைகளுக்கும், இயற்கை அமைப்பின் பார்முலாவுக்கும் விடை காண்பது பெரும்பாலும் கனவுகளின் மூலந்தான். பிரபல நாவல் ஆசிரியர் ஆர். எல். ஸ்டீவென்சனுக்கு பெரும்பாலான நாவல்களுக்கு உட்கருவாய் கிடைத்த விடியங்களெல்லாம் அவரது கனவுகளின் மூலந்தான். முக்கியமாய் அவர் எழுதிய அழியாப் புகழ்கொண்ட, 'டாக்டர் ஜெகில் அண்டு மிஸ்டர் ஹைட்' என்னும் கதைக்கரு உருவானது அவர் கண்ட கனவு மூலந்தான் 5. கவிஞரான கோலிரிட்ஜ் என்பவர் தாம் கனவில் கண்ட சம்பவங்களைக் கொண்டு தான் கவிதைகளை இயற்றினார். அவர் இயற்றிய சிறப்பான கவிதை 'குப்ளேகான்' ஆகும். அவர் தாம் கண்ட கனவை அப்படியே குப்பேளகான் கவிதையாய் வடித்தார். 6. 'செஸ்டர்டான்' என்ற கவிஞர் ஒரு நாள் தம் கனவில் வெள்ளைக்குதிரையையும் அதன் சாகசச் செயல்களையும் கண்டார். அவ்றறைக் கொண்டு எழுதப்பட்ட பிரபலமான கவிதைதான், 'திபாலார்ட் ஆப்தி ஒயிட் ஹார்ஸ்' என்ற பிரபல கவிதை ஆகும். 7/'பாரோ' என்ற எழுத்தாளர் சில சமயங்களில் கெட்ட கனவு கண்டு விழித்துக்கொள்வார். கனவைப்பற்றி விடாமல் சிந்தித்தார்./ தாம் கண்ட கனவை எப்படிப் பணமாக்குவது என்பது பற்றி தீவிரமாய்ச் சிந்தித்தார்.

தாம் கண்ட கனவை மையமாய்க் கொண்டு ஒரு கதை எழுதுவது என முடிவு செய்தார். அவ்வாறே அதனை 'டார்ஜான் கதை' எனத் தொடர்ந்து பத்திரிகையில் எழுதினார். அவர் கண்ட கனவின் மூலம் பிறந்ததுதான் புகழ்பெற்ற 'டார்ஜான் கதை' ஆகும். 8. புகழ்பெற்ற விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசனின் பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளுக்கான முடிவுகள், அவரது கனவின் மூலமே கிடைத்தன.

## 812. கென்னடியின் தீர்க்க தரிசனம்!

அமெரிக்காவின் அதிபராய் இருந்த ஜான்கென்னடி தாம் இறப்பதற்கு மூன்று நாள்களுக்கு முன்பு மயானம் வழியாகச் சென்றார். மயானத்தில் சில நிமிட நேரம் நின்று, "இந்த இடம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இந்த இடத்தில் நிரந்தரமாய்த் தங்கி இருக்க என் மனம் விரும்புகிறது" என்றார். சரியாக மூன்று நாள்கள் கழிந்ததும் விரோதியால் சுட்டுக்கொல்லப்பட்டு, அதே மயானத்தில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டது. உலகப்புகழ் பெற்ற கென்னடி குடும்பத்தினர் பலருக்குச் சாபக்கேடுபோல் துர்மரணமே ஏற்பட்டது. கென்னடியின் சகோதரர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். கென்னடியின் மனைவி ஜாக்குலின் ஓனாஸிஸ் என்னும் வயதான பணக்காரரை மணந்து பின்பு புற்றுநோயால் பீடிக்கப்பட்டு மரணம் அடைந்தார். கென்னடியின் ஒரே மகன், குடும்பத்தோடு விமானத்தில் சென்றபோது, விமானம் கடலில் விழுந்தது. அதனால் அவர் மரணம் அடைந்தார்!

## 813. மனைவி சொன்னது நடந்தது!

அமெரிக்காவில் நீக்ரோக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட மார்டின் லூதர் கிங்கின் மனைவி

பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் என் கணவர் பிறர்கையால் மரணம் அடைவார் என்பதை நாங்கள் அறிவோம். அதனை அறிந்து எதையும் ஏற்கும் துணிவோடு தான் பணிசெய்கிறோம்" என்றார். அவர் சொன்னபடியே, சொன்ன சில நாள்களில் எல்லாம் மார்டின் லூதர் கிங் சுட்டுக்கொல்லப்பட்டார்!

## 814. விவேகானந்தரின் தீர்க்க தரிசனம்!

ஒரு சமயம் விவேகானந்தர், "இன்னும் நான்கு ஆண்டுகள் தாம் உலகில் நான் வாழ்வேன்! நான்கு ஆண்டுகள் கழிந்த பின்பு ஜூலை நாலாந்தேதி நான் இவ்வுலகை விட்டு விடைபெறுவேன்!" என்று கூறினார். விவேகானந்தர் சொல்லியதைப் போலவே, அவர் ஜூலை மாதம் நான்காம் தேதி இறந்தார்!

## 815. கூடவே கூடாது!

நமது சாஸ்திரம் கூறும் சில முக்கிய எச்சரிக்கைகள் 1. குளிக்கும்போது நீரில் அலைமோதாமல் குளிக்க வேண்டும். 2. தலைக்கு வைக்கும் தலையணையைக் காலுக்கு வைக்கக்கூடாது, தலையணை மீது உட்காரவும் கூடாது 3. நம் நிழல் சாதத்தில் விழும்படி சாப்பிடக்கூடாது. 4. கைவிரலை நீக்கியும், கையை உதறியும் சாப்பிடக்கூடாது. 5. சாப்பிடும் போது உருட்டிச் சாப்பிடக்கூடாது 6. எதையும் எச்சில் பண்ணிச் சாப்பிடக்கூடாது. குடிக்கக்கூடாது 7. சாப்பிட்டு முடித்ததும் தட்டையோ, கையையோ நக்கக்கூடாது 8. இரவில் அடுப்பில் நெருப்பை மிச்சமின்றி அணைத்துவிடவேண்டும். 9. வாய்கொப்புளித்தோ, எச்சிலையோ வலதுப்பக்கம்

துப்பக்கூடாது. 10. அன்னம், நெய், உப்பு ஆகிய மூன்றையும் கையால் பரிமாறக்கூடாது. 11. தாமிரப்பாத்திரத்திலும், வெண்கலப் பாத்திரத்திலும் இளநீரை வைக்கக்கூடாது 12. ஆமணக்கு இலையிலும், பனை ஓலைக்கூடையிலும் வைத்த பூ, பூஜைக்கு ஆகாது 13. கடும்வெயில், மயானப்புகை, தன்னைவிட அதிக வயதுள்ள பெண்ணோடு உறவுகொள்ளுதல், தேங்கிய குட்டைநீர், இரவில் தயிர் அன்னம் சாப்பிடுதல் ஆகியவை ஒரு மனிதனின் ஆயுளைக் குறைக்கும் 14. இருகைகளாலும் தண்ணீர் குடிக்கக்கூடாது. 15. இஞ்சி, பாகற்காய், கஞ்சி, கட்டித்தயிர், கீரைகள், நெல்லிக்காய், வெங்காயம் ஆகியவற்றை இரவில் சாப்பிடக்கூடாது. இவ்வாறு நமது சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

## 816. ஆயுளை வளர்க்கும் ஐந்து!

மாலைவெயில், ஓமப்புகை, இளம் மனைவி, அருவிநீர், இரவில்பால் அன்னம் சாப்பிடுதல் ஆகிய இந்த ஐந்தும் நமது ஆயுளை வளர்க்கும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன!

## 817. பெண்கள் கவனத்திற்கு!

நமது சாஸ்திரம் பெண்களுக்குக் கூறும் சில முக்கியகுறிப்புகள் 1. கணவரோடு மனைவி இருக்கும் போது மல்லிகை, முல்லைப் பூக்களைத் தாம் சூட வேண்டும். கனகாம்பரம், நீலாம்பரம் போன்ற பூக்களைச் சூடக்கூடாது. பெண்கள் குளிக்கும் போது முகத்திற்கு அவசியம் மஞ்சள் பூச வேண்டும். 3. ஒவ்வொரு பெண்ணும் அவசியம் மூக்குத்தி அணிந்து கொள்ள வேண்டும். குறிப்பாய் கல் வாழை விசிறி போன்ற மூக்குத்தி அணிவது விசேஷ சக்தி வாய்ந்ததாகும்.

4. ஒவ்வொரு பெண்ணும் காலில் பெருவிரலுக்கு அடுத்த விரலில் வெள்ளியால் மெட்டி அணிய வேண்டும். 5. ஒவ்வொரு பெண்ணும் மாதவிலக்கின் போது தலையில் பூ வைக்கக்கூடாது; சமையல் அறைக்குள் போகக்கூடாது; யாருக்கும் உணவு படைக்கவும் கூடாது. 6. திருமணம் ஆன பெண்கள் இரவு நேரத்தில் கருப்பு, இரத்த சிவப்பு, கடல் நீலம் ஆகிய நிறம் கொண்ட சேலைகளை உடுத்தக்கூடாது. வெளிறிய வண்ணம் கொண்ட சேலைகளையே உடுத்தவேண்டும். 7. திருமணம் ஆன பெண் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் குளித்து விட்டுக் கணவன் தூங்கிக்கொண்டிரும் போதே, அவன் முகத்தருகில் முகத்தைக் கொண்டு சென்று இதோ பாருங்கள் என்று கூறி எழுப்பித் தன் முகத்தில் விழிக்கும்படி செய்ய வேண்டும்.

## 818. உப்பு போடுங்கள்!

ஒவ்வொரு குடும்பத்திலும் வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணி அளவில் விளக்கேற்றி, உப்புப் பாத்திரத்தை வைத்து, அதன் அடியில் பழைய செப்புக்காசு ஒன்றை வைத்து, கடையிலிருந்து உப்பு வாங்கி வந்து அதில் கொட்டி வழிபட்டால் குடும்பத்தில் இலட்சுமி கடாட்சம் உண்டாகும். இவ்வாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செய்ய வேண்டும்.

## 819. மூன்றாம் பிறை தரிசனம்!

ஒவ்வோர் அமாவாசைக்கும் மூன்றாவது நாள் சந்திரனைத் தரிசிப்பதே மூன்றாம் பிறை தரிசனம் ஆகும். மூன்றாம் பிறை தரிசனத்தின் போது கையில் காசை வைத்து மூடிக்கொண்டு, வலமாய் மூன்று முறை சுற்றித் தரிசிக்க

வேண்டும். இவ்வாறு தம்பதிகள் சகிதமாய்ச் சுற்றுவது சாலச்சிறந்தது ஆகும். பெண்கள் தங்கள் மாங்கல்யத்தை மூன்றாம் பிறையில் காட்டி வழிபடுவது சிறப்பாகும்! ஒவ்வொரு வரும் தம் ஆயுளில் செய்ய வேண்டிய முக்கியக் கடமைகளுள் இதுவும் ஒன்றாகும்!

## 820. வாஸ்து தேவனை வழிபடுவோம்!

ஒவ்வொருவரும், தங்களின் வீட்டுத் தலைவாயிலுக்கு, வருடத்திற்கு இருமுறை, மனைக்கு அதிபதியாகிய வாஸ்து தேவனுக்கு அவசியம் பூஜை செய்திடல் வேண்டும். தலை வாயிலை நீரால் சுத்தம் செய்து, இருபக்கமும் தர்ப்பை மாவிலை ஆகியவற்றைக் கட்டி, விபூதியைப் பூசி குங்குமிட்டுச் சந்தனப் பொட்டிட்டு, சர்க்கரை பொங்கல் இட்டு, தாப, தீபம் காட்டி, உடல், மனத்தூய்மையுடன் அந்த இல்லத்துத் தம்பதிகள் செய்தால் சகல நன்மைகளும் உண்டாகும்!

## 821. விசேஷ தரிசனம்!

காலையில் கண்விழித்ததும் முதன்முதலாக வீணையைப் பார்த்தால் அதைவிடச் சிறப்பு வேறு எதுவும் இல்லை!

## 822. பொருத்தம் வேண்டாத நட்சத்திரங்கள்!

1. மிருகசீரிடம் 2. சுவாதி 3. மகம் 4. அனுஷம் ஆகிய இந்த நான்கு நட்சத்திரம் உடைய ஆண் அல்லது பெண் யாராயினும் பொருத்தம் பார்க்காமலேயே திருமணம் செய்யலாம் என நமது சாஸ்திரம் கூறுகிறது. ஆனால், ஜாதகப் பொருத்தம் அவசியம் பார்க்க வேண்டும். செவ்வாய்தோஷம், ஏழாமிடம், எட்டாமிடம் முதலியவற்றைக் கவனிக்கவேண்டும்.

## 823. கிரகப்பிரவேசம் எப்போது செய்யலாம்?

திருமணம் செய்துகொண்ட தம்பதியர் முகூர்த்தநாளில் இருந்து 16 நாள்களுள் இரட்டைப் படை நாள்களில் கிரகப் பிரவேசம் செய்ய வேண்டும். இந்தக் காலத்தைத் தவறவிட்டுவிட்டால் திருமணமான மூன்று அல்லது ஐந்தாவது வருஷத்தில் ஏற்றபடை தினத்தில் கிரகப்பிரவேசம் செய்ய வேண்டும்.

## 824. கிரகப்பிரவேச எச்சரிக்கை!

மேற்கூரை கட்டப்படாமலும், கதவு போடப்படாமலும், சுவரும் தரையும் பூசப்படாமலும், யாகம் செய்யப்படாமலும் சாப்பாடு போடப்படாமலும் இருக்கும் நிலையில் கிரகப்பிரவேசம் செய்யக்கூடாது. மேலும் கிரகபிரவேசம் செய்யும் அன்று வீட்டில் ஒரு சிறுவிண்ணம் பலர் பார்வையில் படும்படி இருக்கவேண்டும். கிரகபிரவேசம் முடிந்து மறுநாளில் அதைப் பூசிக் கொள்ளலாம்!

## 825. வீட்டிற்கு யாகம்!

வீட்டிற்கு ஒவ்வொரு வருடமும் நல்ல நாள் பார்த்துக் கணபதி ஓமம், நவக்கிரக ஓமம், லட்சுமி, குபேரன் பூஜை செய்ய வேண்டும். அப்போதுதான் அந்தக் குடும்பம் விருத்தி பெறும்! சிலர் கிரக பிரவேசத்தன்று செய்வதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். சிலர், கணபதி ஓமம் மட்டும் செய்வதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். இவ்வாறு செய்வது தவறு ஆகும். மேலே சொன்ன முறையிலே செய்ய வேண்டும். அதுவும், பிரம்ம முகூர்த்தமாகிய காலை 4 மணி முதல் சூரியன் உதயம் ஆவதற்குள் செய்வது சாலச்சிறந்தது ஆகும்!

## 826. வீட்டில் நெல்லிக்காய்!

ஒவ்வொரு வீட்டிலும் வருஷம் முழுவதும் நெல்லிக்காய் இருப்பது மிகச் சிறப்பாகும். அது ஊறுகாயாகவோ, வற்றலாகவோ இருந்தாலும் சரி, வீட்டில் நெல்லிக்காய் எப்போதும் இருந்தால் இலட்சுமி கடாட்சம் ஆகும்!

## 827. வெந்நீர்க்குளியல் கூடாது!

அமாவாசை, ஞாயிற்றுக்கிழமை, பொங்கல், பிறப்பு இறப்புகளால் ஏற்படும் தீட்டுக் காலங்கள் ஆகியவற்றின் போது வெந்நீரில் குளிக்கக்கூடாது என நமது சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன!

## 828. தோஷநிவர்த்தி கிரகம்!

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்தில் குரு அல்லது சுக்கிரன் இருந்தால், அந்த ஜாதகத்தில் உள்ள தோஷங்களும் நிவர்த்தி ஆகும் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

## 829. தோஷமில்லை!

உதயகாலத்தில் திதிதோஷம் இல்லை; உச்சிவேளையில் நட்சத்திரதோஷம் இல்லை; அஸ்தமன வேளையில் இலக்கினதோஷமில்லை; இரவுக்கு வார தோஷமில்லை!

## 830. மாதப் பிறப்பின் இரகசியம்

சித்திரை, ஆடி, தை ஆகிய மாதப் பிறப்புகளுக்கு முன்னும் பின்னும் மூன்று நாள்களிலும், ஐப்பசி மாதப்

பிறப்பிற்கு முன்னும் பின்னும் ஒரு நாளிலும், மற்ற மாதப் பிறப்புகளுக்கு முன்னும் பின்னும் முப்பது நாழிகையிலும் எந்த நல்ல காரியமும் செய்யக்கூடாது!

## 831. ஐந்தாம் தேதியின் இரகசியம்!

ஒரு தமிழ் மாதத்தில் ஐந்தாம் தேதியன்று திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகள் அமைந்தால் அந்த மாதத்தில் செழிப்பும், நன்மையும் உண்டு; அந்த ஐந்தாம் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை அமைந்தால் அந்த மாதத்தில் நாட்டில் நோய்கள் அதிகரித்துக் காணப்படும். அந்த ஐந்தாம் தேதியன்று செவ்வாய்க் கிழமை அமைந்தால் அந்த மாதத்தில் பயங்கரச் செய்தி வரும்; அந்த ஐந்தாம் தேதியன்று சனிக்கிழமை அமைந்தால் அது பஞ்சத்தின் அறிகுறி ஆகும்!

## 832. திங்கள் கிழமையின் சிறப்பு!

திங்கள்கிழமை அன்று அமையும் அமாவாசையும் பௌர்ணமியும் மிகவும் விசேஷமானவை ஆகும்!

## 833. பெரும் துக்கத்திற்கான சகுனம்!

நடுப்பகலில் தும்பி பறத்தலும், கூகை தன் குழறு குரலில் ஒலித்தாலும் பெரும் துக்கத்திற்கான சகுனம் ஆகும்.

## 834. மந்திரத்திற்கு ஏற்ற நட்சத்திரம்!

அனுஷ நட்சத்திரம் சகல மந்திரங்கள் வெற்றி பெறவும், தேவதைகளைக் கைக்கொள்ளவும் ஏற்ற நட்சத்திரம் என நமது சாஸ்திரம் கூறுகிறது.

## 835. வானம் கூறும் சோதிடம்!

அடிவானத்தில் நிறம் மஞ்சளானால் மந்திரிகளுக்கும், சிவப்பு நிறமானால் மக்களுக்கும், நிறம் சிவப்பாய் இருந்து, காற்று வல இடமாய் வீசினால் பியர்களுக்கும் பலத்த தீமையை விளைவிக்கும்! மழை பெய்யும் போது வானவில் தோன்றினால் மழை பெய்யாது! ஆனால், மழை பெய்யாத போதுமான வில்தோன்றினால் மழை பெய்யும்!

## 836. மாதங்களின் தமிழ்ப்பெயர்!

தமிழ்மாதங்கள் 12 க்கும் தூய தமிழில் இராசி அடிப்படையில் அமைந்த தமிழ்ப் பெயர்கள் வருமாறு: சித்திரை - மேழம், வைகாசி - விடை, ஆனி - ஆடவை, ஆடி - கடகம் ஆவணி - மடங்கல், புரட்டாசி - கன்னி, ஐப்பசி - துலை, கார்த்திகை - ஒளி, மார்கழி - சிலை, தை - சுறவம், மாசி - கும்பம், பங்குனி - மீனம்.

## 837. வீட்டில் கிரகங்களின் ஆட்சி!

நமது வீட்டில் ஒவ்வோர் இடத்தையும் கிரகங்கள் ஆட்கொண்டு ஆட்சி செய்கின்றன. சூரியன் பூஜை முதலியவை செய்யும் இடத்தையும், சந்திரன் - கிணறு, தண்ணீர் சமீபம் உள்ள இடங்களையும், செவ்வாய் சமையல் அறைகளையும் புதன் - விளையாட்டிற்கென்று உள்ள இடத்தையும், குரு - உக்கிரான அறை எனும் பாருள் உள்ள இடத்தையும், சுக்கிரன் - படுக்கை அறையையும், சனி -குப்பை கொட்டப்பட்டிருக்கும் இடத்தையும் ஆட்சி செய்கின்றன.

## 838. பருவ காலங்களும் கிரகங்களும்!

ஒவ்வொரு பருவகாலங்களையும், ஒவ்வொரு கிரகங்கள் ஆட்சி செய்கின்றன. அவை இளவேனில் காலம் - சுக்கிரன், முதுவேனில் காலம் - சூரியன், கார் காலம் - சந்திரன் இலை உதிர்காலம் - புதன், முன்பனிக்காலம் - குரு, பின்பனிக்காலம் - சனி.

## 839. சகுனத் தடைக்குப் பரிகாரம்!

அவசர, அவசரமாய் வெளியே செல்லும்போது நிலை தட்டலாம்; பூனை குறுக்கே போகலாம். இப்படிப் பல சகுனத் தடைகள் ஏற்படலாம். அதனால் மனம் உடைந்து விடவேண்டா. அப்படியே வீட்டுக்குள் திரும்ப வேண்டும். பிள்ளையாரை வணங்கி ஒரு தம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். பின்னர் வாயிலுக்கு வந்து, சகுனத் தடை ஏதும் இல்லாததை உறுதி செய்தபின்னர் புறப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் காரியம் தடைப்படாது.

## 840. திருமணத்துக்குப் பின் செய்யக்கூடாதவை!

ஒரு வீட்டில் திருமணம் நடந்தபின் ஆறு மாதம்வரை அந்தக் குடும்பத்தில் காதுகுத்தல், புதுமனை புகுவிழா, தீர்த்தயாத்திரை - செல்லுதல் போன்ற காரியங்களைச் செய்யக்கூடாது.

## 841. ஆவணி மழையின் இரகசியம்!

ஆவணி மாதம் 6 ஆம் தேதிக்கு மேல் மழை பெய்தால், அந்த ஆண்டு முழுவதும் சிறந்த மழை பெய்யும். ஆவணி

மாதம் மூலம் நட்சத்திரம் அமையும் நாளில் காலையில் சூரியன் மேகத்தால் சூழ்ந்திருந்தாலும் அந்த ஆண்டு நல்ல சிறப்பைத் தரும். அன்று வெயில் கடுமையாய் இருந்தால் அந்த ஆண்டு சுமாராய்த்தான் இருக்கும்!

## 842. காக்கைக்கு முதல் பொங்கல்!

தைப்பொங்கல் அன்று பொங்கல் செய்து முதன் முதலில் காக்கைக்குப் படைக்கின்றோம். இதில் ஒரு ஜோதிட இரகசியம் உள்ளது. தைமாதம் முதல் தேதி சூரியன் மகர இராசிக்கு வருகிறார். அடுத்த மாசிமாதம் கும்பஇராசிக்குப் போவார். மகரமும், கும்பமும் சனிபகவானின் வீடுகள். சனியின் வாகனம், காக்கை. சனீஸ்வர பகவானுக்கு நன்றி தெரிவிக்கவே அவரது வாகனமான காக்கைக்குப் பொங்கல் படைக்கிறோம்.

## 843. முதலிரவுக்குச் செல்லும் முன்!

மணப்பெண் முதலிரவு அறைக்குள் முதன்முதலில் செல்லும் போது எந்தக் காலை அடி எடுத்து வைத்து உள்ளே செல்ல வேண்டும் தெரியுமா? மணமகள் தனது மூக்கின் அருகே விரலை வைக்க வேண்டும். எந்தப் பக்க மூக்கிலிருந்து அதிக அழுத்தத்துடன் காற்று வருகிறதோ அந்தப் பக்கக் காலை முதலில் எடுத்து வைத்துப் பள்ளியறைக்குள் செல்ல வேண்டும்.

## 844. சுண்டுவிரல் கூறும் அதிர்ஷடம்!

ஒருவரின் சுண்டுவிரலின் நுனி மோதிர விரலின் மூன்றாவதுகணுவைவிட உயர்ந்திருந்தால் , செல்வம் படைத்தவர்களாய் இருப்பார்கள். சாகச நிகழ்ச்சிகள் புரிபவர்களாயும் இருப்பார்கள்.

## 845. வீடு இருக்கும் திசை!

வீடு கட்டும் போது மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய இராசிக்காரர்கள் மேற்கு நோக்கியும், ரிஷபம், விருச்சிகம், சிம்மம, கும்பம் ஆகிய இராசிக்குரியவர்கள் தெற்கு அல்லது வடக்கு நோக்கியும் மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய இராசிக்காரர்கள் கிழக்கு நோக்கியும் வாசல் இருக்கும் படி அமைக்க வேண்டும்.

## 846. ஆன்மீகத்தின் அதிசயக் கண்டுபிடிப்பு!

சூரியன் எப்போதுமே ஏழு குதிரை பூட்டித் தேரில் தான் பவனி வருவார். அந்த ஏழும் சூரிய ஒளியின் ஏழு கதிர்களைக் குறிக்கும். சூரியனில் ஏழு நிறக்கதிர்கள் இருப்பதை அறிவியல் மூலம் பின்னர்தான் கண்டுபிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்!

## 847. புதுமணத்தம்பதியர் உணவு ஊட்டி விடும்போது அமரும் திசை!

திருமணம் முடிந்ததும் மணமக்கள் ஒருவருக்கொருவர் உணவு ஊட்டுவார்கள். இதில் ஓர் உண்மை மறைந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சியின் போது மணமக்கள் கிழக்கு நோக்கி அமர்ந்திருந்தால் தம்பதியினர் நீண்ட நாள் வாழ்வர்; தெற்கு நோக்கி அமர்ந்திருந்தால் புகழோடு இருப்பர்; மேற்கு நோக்கி அமர்ந்திருந்தால், செல்வச் செழிப்போடு இருப்பார்கள்; ஆனால், வடக்கு நோக்கி மட்டும் அமரக்கூடாது!

## 848. நீர் சுரக்கும் இரகசியம்!

எப்போது கிணறு வெட்டினாலும் தண்ணீர் கிடைத்துவிடும் என நினைக்கக் கூடாது. இதைப் பற்றியும்

நமது சாஸ்திரம் தெரிவிக்கின்றது. சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்களில் கிணறு வெட்டினால் அது வளமான நீர் தரக்கூடியதாய் அமையும்.

## 849. எவர் இளவயதில் துறவி ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் பத்தாம் இடத்தில் இராகு தங்க அவரைச் சனிபகவான் பார்த்தால் அந்த ஜாதகர் இளவயதிலேயே துறவறத்தை மேற்கொள்வார்!

## 850. எவர் சூப்பர் ஸ்டார் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினம் அல்லது இராசியில் இருந்து பத்தாம் வீட்டுக்குரிய கிரகம் நவாம்சத்தில் சுக்கிரனது 'வீடாகிய ரிபஷம் அல்லது துலா இராசியில் இருந்தால், அந்த ஜாதகருக்குக் கலைத்துறையில் தொழில் அமையும். மேலும் இராசிச் சக்கரத்தில் சுக்கிரன் பலமுடன் இருந்துவிட்டால் சினிமாத்துறையில், நடிப்புத்துறையில் பெயர், புகழ் செல்வம் ஆகிய அனைத்தும் பெறும் யோகம் அவருக்கு ஏற்படும்.

## 851. கருவின் இரகசியம்!

கருவில் குழந்தை உருவாகும் முதல் மாதம் சுக்கிரனும், இரண்டாம் மாதம் செவ்வாயும், மூன்றாம் மாதம் குருவும், நான்காம் மாதம் சூரியனும் ஐந்தாம் மாதம் சந்திரனும், ஆறாம் மாதம் சனீஸ்வரரும், ஏழாம் மாதம் புதனும், எட்டாம் மாதம் அக்குழந்தையின் இலக்கினாதிபதியும், ஒன்பதாம் மாதம் சந்திரனும், பத்தாம் மாதம் சூரியனும் அதிபதியாய் இருந்து செயல்படுகிறார்கள். இவ்வாறு நவக்கிரகங்கள் கருவின்

இரகசியமாய்ச் செயல்படுகின்றன. இவ்வாறு அந்தந்த மாதத்துக்குரிய நவகிரகத்தை வழிபட்டால் குழந்தையும், தாயும் நலமாய் இருப்பார்கள். எட்டாவது மாதத்தில் இலக்கினாதிபதி தெரியாததால் நவக்கிரகத்தையும் வழிபடலாம்!

## 852. குழந்தை எப்படிப் பிறக்கும்?

குழந்தை ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தால் குழந்தை மல்லாந்து மேலே பார்த்துக்கொண்டு பிறக்கும். குழந்தை பூமியைப் பார்த்தபடியே, கவிழ்ந்து கொண்டு பிறக்கும்; அசுவினி, மிருகசீரிஷம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறக்கும் குழந்தை ஒருக்களித்துக் கொண்டு பிறக்கும். அதே போல், மிதுனம், கன்னி, கும்பம், மீனம் ஆகிய நான்கு இராசிகளில் குழந்தை பிறந்தால் அதன் தலையே முதலில் வெளியில் வரும். சிம்மம், துலாம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் குழந்தை பிறந்தால் அதன் கை, கால் கூடி சிரசுடன் வெளிவரும்; மேஷம், ரிஷபம், கடகம், தனுசு, மகரம் ஆகிய இராசிகளில் குழந்தை அதனாலே முதலில் வெளிவரும்!

## 853. யாருக்கு விரோதமான குழந்தை பிறக்கும்?

ஒருவர் ஜாதகத்தில் புத்திரஸ்தானாதிபதியும், புத்திரக்காரகரான திருவும் இலக்கினாதிபதிக்கு ஆகாத கிரகங்களாக இருந்து, அவை பத்தாமிடத்தில் இருந்தால், அந்த ஜாதகருக்கு விரோதமான குழந்தையே பிறக்கும்.

## 854. எவர் கரு அழியும்?

ஒருவர் ஜாதகத்தில் பஞ்சமஸ்தானத்தையும், பஞ்சமஸ்தானாதிபதியையும், புத்திரகாரகனான குருவையும் செவ்வாய் பார்த்தாலும், சேர்ந்தாலும் அந்த ஜாதகருக்குக் கரு அழியும் (பெண்ணுக்கு புத்திரஸ்தானம் ஒன்பதாமிடம் ஆகும்)

## 855. புத்திர உற்பத்தி எப்போது ஏற்படும்?

ஒருவர் ஜாதகத்தில் பஞ்சமஸ்தானாதிபதியும், புத்திரகாரகனான குருவும் நின்ற நட்சத்திரங்களில், குரு கோச்சார முறையில், சஞ்சரிக்கும் காலங்களில், அந்த ஜாதகருக்குப் புத்திர உற்பத்தி உண்டாகும்!

## 856. மலடு யார்?

ஒருவரின் ஜாதகத்தில் புத்திரஸ்தானத்தில் பகைபெற்ற சூரியன் இடம் பெற்றிருந்தால், அந்த ஜாதகர் மலடாவார்! இது ஆண், பெண் இருபாலருக்கும் பொருந்தும். (ஆணுக்கு 5ஆம் இடமும், பெண்ணுக்கு 9 ஆம் இடமும் புத்திரஸ்தானம் ஆகும்)

## 857. எக்குழந்தை தந்தையிடம் விரோதம் காட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் புத்திரஸ்தானத்தில் சந்திரன் இருந்து, சுபர்கள் பார்க்காமலிருந்தால், அந்த ஜாதகருக்குப் பிறக்கும் குழந்தைகள் கடைசிவரையில் தம் தந்தையிடம் விரோதமும் பகையும் கொள்வார்கள்!

## 858. எவர் பெருவயிறர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் இலகினாதிபதி யாராயினும் அவர் 6, 8, 12 இல் மறைந்திருந்தால், சுபர் பார்வை இல்லாமல் இருந்தால், அந்த ஜாதகருக்கு அடிக்கடி வறுமை ஏற்பட்டு, பசிப்பிணி காரணமாய் உடல்வாடி, மெலிந்துவிடும். அப்படிப்பட்டவர்கள் பொருள் கிடைக்கும் போது, உண்பதற்காக மிகுதியாய் செலவு செய்வார்கள். இதன் காரணமாகவே இவர்களைப் 'பெருவயிறர்' என்று சொல்லலாம்.

## 859. எவர் கூனர் ஆவார்?

ஒருவர் ஜாதகத்தில் இராகுவும், புதனும் அல்லது சனியும், புதனும் இலக்கினத்தில் இணைந்திருந்தால் அந்த ஜாதகர் கூடிய மட்டும் கூன் அமைப்பைப் பெற்றிருப்பார்!

## 860. எவர் பெரிய கொப்பூழ் பெற்றிருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினத்தில் இராகு அல்லது சனி இருந்தால் அந்த ஜாதகருக்குக் கொப்பூழ் பெரியதாய் அமைந்திருக்கும்.

## 861. எவருக்கு விபத்து நேரும்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி இராகு அல்லது கேதுவுடன் கூடி எட்டு அல்லது 12 இல் இடம்பெற்று, அவர்களுடைய திசை, புத்தியில் அந்த ஜாதகருக்கு உடல் ஊனம் உண்டாகும். இப்படிப்பட்ட காலங்களில் இந்த ஜாதகர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஆனால் நட்பு, ஆட்சி, உச்சம் பெற்ற ஏதாவது ஒரு கிரகம் மேற்கண்ட இராகு அல்லது

கேதுவுடன் கூடியுள்ள இலக்கினாதிபதியைப் பார்த்தால் இத்தகைய தீய பலனுக்கு விதிவிலக்கு உண்டு.

## 862. எவருக்கு உடல் ஊனம் ஏற்படும்?

ஒருவர் ஜாதகத்தில் ஏழில் செவ்வாயும், இரண்டில் சூரியனும், பத்தில் சந்திரனும் பலம் பெற்றிருந்தால், அந்த ஜாதகருக்கு அங்கப் பழுது உண்டாகும். மேலும், ஜெனனம் கடக இலக்கினம் அல்லாத ஜாதகர்களுக்கு, இலக்கினம் அல்லாத ஜாதகர்களுக்கு இலக்கினத்திற்குப் பத்தில் சந்திரன் நின்று, அச்சந்திரனைச் சனி பார்த்தால் அந்த ஜாதகருக்கு ஒரு காலில் எப்படியும் ஊனம் உண்டாகும்.

அதே போல், ஜெனன இலக்கினம் எதுவாயினும் அந்த இலக்கினத்திற்கு 1, 5, 9 ஆம் இராசிகளில் கொடிய தீய கிரகங்கள் இடம் பெற்றிருந்ததால் அந்த ஜாதகருக்கு அங்கக்குறைவு உண்டாகி, அங்கப்பழுது உள்ளவராய் இருப்பார்! இல்லை என்றால், புத்திரப் பேற்றுக்குண்டான சுக்கிரத்தில் மலட்டுத்தன்மை உடையவராய் இருப்பார்.

## 863. எவர் பிறவிக் குருடராய் இருப்பார்?

ஒருவர் இலக்கினம் மகரமாயிருந்து சனியும், சந்திரனும் சூரியனை நோக்க, அந்த ஜாதகர் பிறவிக் குருடராய் இருப்பார்.

## 864. எவர் சப்பாணி ஆவார்?

ஒருவர் இலக்கினம் மேஷம், ரிஷபம், மிதுனமாய் இருந்து 1, 5, 9 ஆம் இடத்தில் தீய கிரகங்கள் அமர்ந்திருக்க, விரயஸ்தானாதிபதி பலஹீனம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் சப்பாணியாய் இருப்பார்!

## 865. எவர் பல்லுடன் பிறப்பார்?

ஒருவருக்கு இலக்கினம் எதுவாயினும், அந்த இலக்கினத்தில் செவ்வாயும் சனியும் கூடி இருக்க ஜெனனம் புதன் அங்கிசையில் ஏற்பட்டிருந்தால் அந்த ஜாதகர் பிறக்கும் பொழுதே பல்லுடன் பிறந்திருப்பார்!

## 866. எவர் செவிடர் ஆவார்?

ஒருவர் ஜெனன இலக்கினம் கடகம், விருச்சிகம், மீனமாயிருந்து சந்திரனுடன் கொடிய கிரகங்கள் சம்பந்தப்பட்டிருந்தால், அந்த ஜாதகர் செவிடராய் இருப்பார். மேலும் இலக்கினத்திற்கு ஐந்தில் சனி நின்றாலும், அந்த ஜாதகர் சில காலம் செவிடராய் இருப்பார்.

## 867. எவர் ஊமையாய் இருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இரண்டாம் குடத்து வாக்குஸ்தானதிபதியும், புதனும் கூடி 6, 8, 12 இல் மறைந்து நின்றால், அந்த ஜாதகருக்கும் ஆறுவயதிலிருந்து, 12 வயதிற்குள்தான் பேசுவதற்குச் சக்தி உண்டாகும். அதே போல், ஜெனன இலக்கினம் விருச்சிகமாகி, சந்திரன் நின்ற இராசி துலாராசியாகி, இத்துலா இராசியைப் பாவகிரகங்கள் பார்த்தால், அந்த ஜாதகருக்கு மத்தியவயதில் பேசுந்திறன் அற்றுப்போய் ஊமையாகிவிடுவார். மேலும் மீனமும் மேஷமும் ஜெனன இலக்ன சந்தியாய் இருந்து அதாவது, ஜெனன இலக்கினம் ரேவதி நான்காம் பாதம் அல்லது அசுவினி ஒன்றாம் பாதமாய் இருந்து இலக்கினத்தில் ஏதாவது ஒரு கொடிய கிரகம் இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் பிறந்து ஐந்து வயதிற்குள் ஊமையாகி விடுவார்!

## 868. எவர் மாலையுடன் பிறப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி சனியுடன் சேர அல்லது இலக்கினாதிபதி சனியாய் அமைந்து சந்திரன், இராகு சேர்ந்து எங்கு இருந்தாலும், ஜெனன இலக்கினத்தைச் செவ்வாய் பார்த்தால், அந்த ஜாதகர் பிறக்கும் பொழுது மாலையுடன் பிறப்பார்.

## 869. எவர் கொடி சுற்றிக்கொண்டு பிறப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் இலக்கினாதிபதி, தூஷ்டமாதிபதியுடன் கூடி இருக்க, ஜெனன இலக்கினத்தில் சனி நிற்க, சந்திரனை இராகு அல்லது கேது பார்க்கப் பிறந்த ஜாதகர் கொடி சுற்றிப் பிறப்பார். அதே போல், செவ்வாய் இலக்கினத்தில் நிற்க அல்லது இலக்கினாதிபதியுடன் கூடி இருக்க, இராகு அல்லது கேது இலக்கினத்தில் இடம் பெற்றிருக்கும் அமைப்புடைய அந்த ஜாதகர் கொடி சுற்றிக்கொண்டே பிறப்பார். மேலும் இலக்கினம் மகரம், கும்பம், ரிஷபமாய் இருந்து இலக்கினத்திலாவது இலக்கினாதிபதியுடனாவது சனியும், செவ்வாயும் கூடி இருக்க அல்லது பார்க்கும் அமைப்புடைய அந்த ஜாதகர் கொடியுடன் பிறப்பார். அதே போல், ஜெனன இலக்கினம் மேஷம், ரிஷபம், சிம்மமாய் இருந்து அதைச் சனியும் செவ்வாயும் பார்க்கப் பிறந்த குழந்தை கொடியுடன் பிறக்கும்.

## 870. எவர் பாட்டினைப் பாடிக் கொண்டிருப்பார்?

ஒருவர் ஜாதகத்தில் புதன் வக்கிரமடைந்திருந்தால், அந்த ஜாதகர் ஏதாவது பாட்டைப் பாடிக்கொண்டே இருப்பார்.

## 871. பகையாகும் கிரகங்கள்!

சர இலக்கினமாகிய மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகியவற்றை இலக்கினமாய் உடையவர்களுக்கு 11 ஆம் இடமாகிய இலாபஸ்தானம் இலாபங்களைக் கொடுப்பது இல்லை. அந்த 11 ஆம் வீட்டு அதிபதியும் பகையாகிவிடுவார். அதே போல், ஸ்திர இலக்கினங்கள் ஆகிய ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியது இலக்கினங்களுக்கு ஒன்பதாமிடமாகிய பாக்கியஸ்தானம் பாக்கியம் கொடுப்பதில்லை. ஒன்பதாம் வீட்டு அதிபதியும் பகையாகிவிடுவார். அதே போல், உபய இலக்கினமாகிய மிதுனம், கன்னி, தனுசு, மீனம் முதலிய இலக்கினங்களுக்கு ஏழாமிடமாகிய களத்திரஸ்தானத்தால் நன்மை இல்லை. இவர்களுக்கு ஏழாம் வீட்டு அதிபதியுடன் பகை ஆகிவிடுவார்!

## 872. அஷ்டமாதிபதி தோஷம் இல்லை!

மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய ஏழு இராசிகளுக்கும் அஷ்டமாதிபதி தோஷம் இல்லை!

## 873. சிறந்த இராசி, நட்சத்திரம் எது?

பன்னிரண்டு இராசிகளுள் ரிஷப இராசியே உயர்வானது ஆகும். அதே போல், 27 நட்சத்திரங்களுள் ரோகிணி நட்சத்திரமே மிக உயர்வானது ஆகும். குறிப்பாய், ரோகிணி நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் பிறப்பது பூர்வ ஜென்ம புண்ணியமே ஆகும். அதைவிடக் கொஞ்சம் குறைவான அதிர்ஷ்டமுள்ளவர் ரோகிணி நான்காம் பாதத்தில் பிறந்தவர்கள் ஆவர்.

## 874. ஜாதகம் பார்க்கச் சரியான வழி!

ஒரு ஜாதகத்தில் இலக்கினம், இராசி முதலியவற்றிலிருந்து எண்ணிப் பார்த்துப் பலன் கொள்வதோடு, திசை நாதன், திசை புத்திநாதன், திசை அந்தரத்தின் நாதன் இருக்கும் இடத்தில் இருந்து எண்ணிப் பார்த்துப் பலன் சொல்ல நூற்றுக்கு நூறு சரியாய் இருக்கும்.

## 875. எவருக்குப் பெருத்த இராஜயோகம் கிட்டும்?

ஒருவர் ஜாதகத்தில் 6, 8, 12 ஆம் இடத்தில் பாவம் பெற்ற கிரகங்கள் நீசம் பெற்றிருந்தால் அந்தக் கிரகத்தின் திசையில் பெரும் இராஜயோகத்தைத் தரும்.

## 876. தெரிந்துகொள்ளுங்கள்!

27 நட்சத்திரத்தில் பாதி 15 திதியாகும். 15 திதியில் பாதி 27 யோகம் ஆகும். 27 யோகத்தில் பாதி 11 கரணம் ஆகும்.

ஒரு கிரகத்துக்கு அதன்பகை வீட்டைக் காட்டிலும், சமம் வீட்டில் பலம் அதிகம்; சமம் வீட்டைக்காட்டிலும் நட்பு வீட்டில் பலம் அதிகம்; நட்பு வீட்டைக்காட்டிலும் ஆட்சி வீட்டில் பலம் அதிகம்; ஆட்சி வீட்டைக் காட்டிலும் மூலதிரிகோண வீட்டில் பலம் அதிகம்; மூல திரிகோண வீட்டைக் காட்டிலும் உச்ச வீட்டில் பலம் அதிகம். சூரியனுக்கு மூல திரிகோண வீடு, சிம்மம் சந்திரனுக்கு மூல திரிகோண வீடு, ரிஷபம் ஆகும்; செவ்வாய்க்கு மூலதிரிகோணவீடு மேஷம் ஆகும்; புதனுக்கு மூல திரிகோணவீடு, கன்னி ஆகும்; குருவுக்கு மூல திரிகோண வீடு, தனுசு ஆகும்; சுக்கிரனுக்கு மூலதிரிகோண வீடு துலாம் ஆகும்; சனிக்கு மூலதிரிகோண வீடு கும்பம் ஆகும்; இராகு கேதுவுக்கு மூலம் திரிகோண வீடு இல்லை!

## 877. பார்வையின் இரகசியங்கள்!

ரிஷபம், துலாம், மகரம் ஆகிய இராசிகளுக்கும், இலக்கினங்களுக்கும் குருபார்வை அவ்வளவு விசேஷம் இல்லை; மிதுனம், கன்னி, கும்பம் ஆகியவற்றுக்குக் குருபார்வை சுமாரானது; விருச்சிகம், தனுசு, மீனம், மேஷம், கடகம், சிம்மம் ஆகியவற்றுக்குக் குருபார்வை மிகவும் விசேஷமானது ஆகும்.

மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, மீனம் ஆகிய இராசி, இலக்கினங்களுக்குச் சனியின் பார்வை ஆகாது. மிதுனம், துலாம், மகரம், கும்பம் ஆகிய இராசி இலக்கினங்களுக்குச் சனியின் பார்வை மிகவும் நல்லது ஆகும்.

மிதுனம், கன்னி, மகரம், துலாம் ஆகிய இராசி இலக்கினங்களுக்குச் செவ்வாயின் பார்வை ஆகாது; மேஷம், ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய இராசிகளுக்குச் செவ்வாயின் பார்வை சுமாரானது ஆகும்; கடகம், தனுசு, மீனம் ஆகிய இராசி, இலக்கினங்களுக்குச் செவ்வாயின் பார்வை மிகவும் நல்லது.

மேஷம், விருச்சிகம், கடகம், தனுசு, மீனம் ஆகிய இராசி, இலக்கினங்களுக்குப் புதனின் பார்வை ஆகாது; ரிஷபம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், மகரம், கும்பம் ஆகிய இராசி, இலக்கினங்களுக்குப் புதனின் பார்வை மிகவும் நல்லது.

மேஷம், ரிஷபம், மிதுனம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம், கும்பம் ஆகிய இராசி இலக்கினங்களுக்குச் சுக்கிரன் பார்வை நல்லது; கடகம், சிம்மம், தனுசு, மீனம் ஆகிய இராசி, இலக்கினங்களுக்குச் சுக்கிரனின் பார்வை ஆகாது.

சந்திரனின் பார்வை 12 இராசி, இலக்கினங்களுக்கும் நல்லது.

சூரியன், இராகு, கேது ஆகிய இவர்களின் பார்வை 12 இராசி, இலக்கினங்களுக்கும் கெடுதல் தரும்.

அதே போல், குரு இருக்கும் இடம் கெடுதல், பார்க்கும் இடம் நல்லது; மேலும் சனிபார்க்கும் இடம் கெடுதல், இருக்கும் இடம் நல்லது.

## 878. திசையின் பலன்!

திசைநாதனை அஷ்டமாதிபதி பார்த்தாலும், சேர்ந்தாலும், தன்சாரம் கொடுத்தாலும் பெரும் கெடுதல் செய்யும் நிலையைத் திசைநாதன் அடைகிறான். அதே சமயம், திசைநாதனைச் சுபர்கள் பார்த்தாலும், சேர்ந்தாலும், சாரம் பெற்றாலும் திசைநாதன் தன் திசையில் நல்லதே செய்வார்!

## 879. திசையின் இரகசியங்கள்!

ஒருவருக்கு ஆறுக்குடையவன் திசை ஆறாவதாய் வந்தால் கெடுதலைச் செய்யும்; குருதிசை ஆறாவதாய் வந்தால் கெடுதலைச் செய்யும்; குருதிசை நாலாவதாகவோ, ஐந்தாவதாகவோ வந்தால் நல்லது; சனிதிசை நாலாவதாய் வந்தால் மிகவும் கெடுதலைச் செய்யும்; சனிதிசை மூன்றாவதாகவோ, ஆறாவதாகவோ வந்தால் நல்லது; சூரிய திசை மூன்றாவதாகவோ, ஆறாவதாகவோ வந்தால் மிகவும் நல்லது.

ரிஷபம், துலாம், கன்னி, மிதுனம், மகரம் ஆகிய இந்த ஐந்து லக்கினங்களுக்கும் சனி திசை மிகவும் நல்லது. குருதிசை மிகவும் கெடுதல் ஆகும்.

## 880. இளமையில் சுக்கிர திசை என்ன செய்யும்?

ஒருவருக்கு இளமையில் சுக்கிர திசை நடந்தால் பெரும்பாலும் கெடுதலையே செய்கிறது. படிப்பையும், ஒழுங்கையும் கெடுக்கிறது. அதிலும் மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம், மீனம் ஆகிய இலக்கினங்களுக்கு இளமையில் நடக்கும் சுக்கிர திசையானது ஆசைகாட்டி மோசம் செய்கிறது.

## 881. இளமையில் நடக்கும் திசையின் இரகசியங்கள்!

ஒருவருக்கு இளமையில் இராகுதிசை நடந்தால், அவருக்குப் பலவிதமான அனுபவங்களைக் கொடுக்கும். எல்லாவிதமான கெட்ட வழிகளிலும், வம்பு, வழக்குகளிலும் ஈடுபடுத்தும். வீண் தொல்லைகளைக் கொடுக்கும். கொடுக்கல், வாங்கலில் அவப்பெயரை ஏற்படுத்தும். நண்பர்களோடு பகையையும், விபச்சாரிகளின் தொடர்பையும் ஏற்படுத்தும். சினிமா மோகத்தை உண்டாக்கும். கால விரயத்தை ஏற்படுத்தும் கல்வி இன்மையினையும், உலக அனுபவத்தையும் கெடுக்கும்.

இளமையில் நடக்கும் சனி திசை ஒருவனை நீதிமானாக்கும்.

இளமையில் நடக்கும் குருதிசை ஒருவனைப் பெரிய மனிதனைப் போல் வெற்றுப் பந்தாவால் அழியச் செய்துவிடும்!

## 882. இல்லற இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் ஏழுக்குடைய கிரகம் எட்டில் சஞ்சாரம் செய்தபோது பிறந்திருந்தால் அவருக்கு, இல்லற

வாழ்க்கையின் முக்கியமான இன்பங்களை இழந்துவிடுவார்! அதே போல், கோசார ரீதியாய் ஏழுக்குடையர் எட்டில் இருக்கும் நேரத்தில் திருமணம் செய்தால் அவர் திருமண வாழ்க்கையும் மேற்கண்டபடிதான் இருக்கும்!

## 883. திருமணப் பொருத்த இரகசியங்கள்!

ரோகிணியில் பிறந்தவர்கள் அஸ்தம், திருவோணத்தில் பிறந்தவர்களைத் திருமணம் செய்து கொண்டால் விவகாரத்தில் முடியும்.

சித்திரை, அவிட்டம், மிருகசீரிஷம், மூலம், அசுவினி மகம் ஆகிய நட்சத்திரங்களுள் ஒன்று ஆண் பெண் இருவருக்கும் ஒன்றாய் அமையுமானால் அவர்கள் திருமணம் செய்யக்கூடாது!

மூலத்தில் பிறந்தவர் ரோகிணியில் பிறந்தவரைத் திருமணம் செய்தால் நல்லது.

## 884. குருபகவான் செய்யும் பாதகம்!

ரிஷபம், சிம்மம் ஆகிய இலக்கினம் உடையவர்களுக்கு எட்டில் குரு இருந்தால் அவர்களுக்குக் குருதிசை நடக்கும் போது, குருதிசையின் முதல் பாதி மிகக்கொடுமையான பலனைக் கொடுக்கும்! தக்க பரிகாரம் செய்து கொள்வது அவசியம்.

## 885. தாய்மாமனுக்குக் கண்டம்!

ஒருவர் ஜாதகத்தில் சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் செவ்வாய் அமர்ந்து, குருவின் பார்வை இல்லை என்றால் அவர் தாய்மாமனுக்குக் கண்டத்தை ஏற்படுத்தும்.

## 886. ஜோதிடத்துளிகள்!

ராசிச் சக்கரத்தில் இருக்கும் ஒரு கிரகம் நவாம்சத்திலும் அதே இடத்தில் இருந்தால் அதற்கு 'வர்கோத்தமம்' என்று பெயர்.

இராசிச் சக்கரத்தில் முன்னோக்கிச் செல்லும் கிரகம் பின்நோக்கி வருவதே 'எவக்ரம்' ஆகும்.

சூரியனுடன் எந்தக் கிரகம் சேர்ந்து தங்கினாலும் அதன் வலிமை குன்றிவிடும். அதனையே அஸ்தங்கம் என்பார்கள்.

சந்திரனுடன் எந்த ஒரு கிரகமும் சேர்ந்து ஓர் இராசியில் தங்கினால் அது மிகவும் நல்லது. அந்தக் கிரகம் மிக வலிமை அடைவதுடன் ஜாதகருக்கு நன்மையும் செய்யும். அதனை சங்கமம் என்று சொல்வார்கள்.

குரு, சூரியன், சந்திரன் - சாத்வீகக்குணமுடையவர்கள், புதன், சுக்கிரன் - ராஸசகுணமுடையவர்கள்; செவ்வாய், சனி - தாமசகுணமுடையவர்கள்.

கிரகங்களுள் சூரியனே மிகவலிமை உடையவர், அடுத்து சந்திரன், அடுத்து, சுக்கிரன் அடுத்து குரு, அடுத்து செவ்வாய், அடுத்து புதன், அடுத்து சனி ஆகும். சனிதான் மிகவும் வலிமை குன்றியவர் ஆகும்.

உச்சம், நீசம் ஆகிய கிரகங்கள் ஒரே இராசியில் இருப்பது நல்லது. இரு கிரகங்களும் நல்ல பலனையே தரும்.

சூரியன், குரு, சுக்கிரன் ஆகியன பகல்வேளையில் வலிமை உடைய கிரகங்கள், சந்திரன், செவ்வாய், சனி ஆடி

ஆகியன இரவில் வலிமை உடைய கிரகங்கள், புதன் இராகு, கேது ஆகிய கிரகங்கள் இரவு, பகல் எந்த நேரமும் வலிமை உடைய கிரகங்கள் ஆகும்.

நல்ல கிரகங்கள் வளர்பிறையில் வலிமை அடைகின்றன. தீய கிரகங்கள் தேய்பிறையில் வலிமை பெறுகின்றன!

## 887. மாரகம்பற்றிய இரகசியங்கள்!

ஒருவர் ஜாதகத்தில் 4,7,5 ஆம் இடங்கள் தாய்க்கும், 6, 8ஆம் இடங்கள் தந்தைக்கும் 5, 11 ஆம் இடங்கள் சகோதரருக்கும், 2, 7, ஜாதகருக்கும் மாரகத்தை ஏற்படுத்தக்கூடியவை. மேற்கண்ட ஸ்தானத்தின் அதிபதிகள் தங்களது திசை, புத்தி, அந்தரம் காலத்தில் மாரகத்தை ஏற்படுத்துவார்கள் அல்லது மாரகத்துக்கு ஒப்பான கண்டத்தைக் கொடுப்பார்கள்.

அதே போல் செவ்வாய் திசையில் பிறந்தவர்களுக்குச் சனி திசை நான்காவதாய் வரும் போதும், கேது திசையில் பிறந்தவர்களுக்குச் செவ்வாய் திசை ஐந்தாவதாய் வரும்போதும், சுக்கிர திசையில் பிறந்தவர்களுக்குக் குருதிசை ஆறாவதாய் வரும் போதும், புதன்திசையில் பிறந்தவர்களுக்கு இராகுதிசை ஏழாவதாய் வரும்போதும் மாரக திசை ஆகும்.

ஒருவருக்கு 6, 8, 12 ஆம் அதிபர்களாலும் மாரகம் உண்டு.

மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய சர இலக்கினங்களுக்கு இரண்டும், ஏழும் மாரகஸ்தானங்கள் ஆகும்; ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகிய ஸ்திர

இலக்கினங்களுக்கு 3, 8 ம் மாரகஸ்தானங்கள் ஆகும்; மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய உபய இலக்கினங்களுக்கு 7, 11 ம் மாரகஸ்தானங்கள் ஆகும்.

ஒருவருக்கு எட்டாமிடம் சரமாகில், பூரண வயது; எட்டாமிடம் ஸ்திரமாகில், மத்திம வயது; எட்டாமிடம் உபயமாகில் அற்பவயதும் ஆகும்.

## 888. அதிசயம், ஆனால் உண்மை!

கிரகங்கள் இராசி நிலையில் மாத்திரம் ஒரு காலத்தில் இருந்தபடி மறுபடியும் வருகின்றனவே தவிர, அமிச நிலையில் அதாவது அவை நிற்கும் நட்சத்திர நிலையில் ஒன்றுக்கொன்று ஒரு நாள் இருந்ததைப் போல் மறுநாள் அமைவதில்லை! அப்படி அமைவது பதினோயிரம் ஆண்டுக்கு ஒரு முறையே ஆகும்!

## 889. ஜோதிடர்க் கணக்கு!

1. நாழிகை - 6 பாகை; 30 விநாடி 1/2 நாழிகை - 3 பாகை; 15 விநாடி - 1/4 நாழிகை - 11/2 பாகை 60 விகலை ஒரு கலை; 60 கலை - 1 பாகை; 30 பாகைக்கு - 120 நிமிஷம்; ஒரு பாகைக்கு நான்கு நிமிஷம்; 1/2 பாகை அல்லத 30 கலை - இரண்டு நிமிடம்; 15 விகலை - ஒரு நிமிஷம் ஆகும்.

## 890. சந்திரன் தரும் திருமணம்!

ஒருவரது ஜென்ம இராசியில் சந்திரனுடன் குரு சம்பந்தப்படும் போது திருமணத்தை ஏற்படுத்தி வைக்கும். இதனைத்தான் "வீரியவியாழன் அணைந்திட்டாலும் விவாகம் திண்ணம்" என்ற பழமொழி உணர்த்துகிறது. இது மாதிரியான

ஒரு நிலை ஒரு ஜாதகத்தில் பன்னிரண்டு வருட காலத்தில் ஐந்து முறை வரும்.

### 891. ரிஷப இராசியின் சிறப்பு!

ரிஷப இராசியில் சந்திரனின் சக்திக்கு மீறிய இராகு, கேது, குரு, சூரியன் ஆகிய கிரகங்கள் பிரவேசித்தால், அவர்கள் சந்திரனுக்கு அடங்கி இருப்பார்கள்!

### 892. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கை!

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் இருக்கும் இடத்தில் சூரியன் வரும் காலத்தில் உத்தியோகத்தில் ஏதாவது குறைபாடோ., இடரோ உண்டாகும். எச்சரிக்கை!

### 893. எவர் சிறந்த கவிஞராவார்?

ஒருவர் ஜாதகத்தில் புதன், குரு, சுக்கிரன் ஆகிய மூவரும் 1, 5, 9 இல் கூடியிருந்தாலோ, அல்லது அவ்விடங்களில் பரவலாய் அமர்ந்திருந்திருந்தால் அவர் ஒரு சிறந்த கவிஞராய் விளங்குவார்!

### 894. குருவும், சுக்கிரனும் சேர்ந்தால் என்ன செய்யும்?

ஒருவர் ஜாதகத்தில் குரு, சுக்கிரன் ஆகியன சேர்ந்திருந்தால், அந்த ஜாதகருக்கு மனைவியால் பலவிதக் கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்படும். மேலும், மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டி இருக்கும். சுகபோகங்களை நிறைய பெற்றிருந்தாலும், கைமேல் பலனாய் அனுபவிக்க முடியாத நிலை ஏற்படும். இவ்வித

அமைப்புடையவர்களுக்குப் பல தடவை தடைப்பட்டோ, காலங்கடந்தோ திருமணம் அமையும்.

## 895. கௌரவ பாதிப்பு யாருக்கு?

ஒருவர் ஜாதகத்தில் சுக்கிரன், சனியுடன் சேர்ந்திருந்தால் அல்லது சுக்கிரனைச் சனி பார்த்தாலும் அந்த ஜாதகருக்குக் கௌரவபாதிப்பு ஏற்படும். அவர் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாவார். குடும்ப வாழ்க்கையும் சிறப்படையாது!

## 896. பொது விதி!

பொருத்தம் பார்க்காமல், கேது சாரம்பெற்ற மக நட்சத்திரத்தில் பிறந்த ஆண் அல்லது பெண்ணுக்கு இராகு சாரம்பெற்ற சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குத் திருமணம் செய்யலாம் என்பது பொதுவிதி.

## 897. இராகு காலத்தின் இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் ஆகிய ஸ்தானங்களில் இராகு இருந்தால் அவர்களுக்கு இராகு காலம் எந்தப் பாதிப்பையும் செய்வதில்லை.

## 898. 12இல் கேதுவின் இரகசியம்!

ஒருவர் ஜாதகத்தில் 12 இல் கேது அமர்ந்து, அந்தக் கேதுவை ஆட்சி அல்லது உச்சம் பெற்ற சுக்கிரனின் பார்வை கிடைத்தால் அது அவருக்குக் கடைசி பிறவி ஆகும்; மறுபிறவி இல்லை. தற்போதுள்ள பிறவியிலேயே பல விதமான

மங்களகாரியங்களையும், உலக நலத்திற்கான காரியங்களையும், செய்து சிறந்து விளங்கிட வகை செய்வார், கேது பகவான்.

## 899. மூலத்திற்கு மற்றும் ஒரு விளக்கம்!

'ஆண்மூலம் அரசாளும், பெண்மூலம் நிர்மூலமாக்கும்' என்பார்கள். ஆனால், 'ஆனிமூலம் அரசாளும், கன்னி மூலம் நிர்மூலம்', என்பதுதான் உண்மையான பழமொழி ஆகும். இதன் பொருள் ஆனிமாதத்து மூலம் நட்சத்திரம் பௌர்ணமி திதியில் வரும். கன்னிமூலம் எனப்படும் புரட்டாசி மாதத்தில் வரும் மூல நட்சத்திரம் அஷ்டமி திதியில் வரும். அதன்படி ஆனிமாதத்து மூலம் வரும் நாள் சிறப்பானது என்பதையும், புரட்டாசி மாதத்தில் வரும் மூலநட்சத்திர நாள் சிறப்பானதன்று என்பதையும் உணர்த்தத்தான் இந்தப் பழமொழி ஏற்பட்டது. ஆனால், இப்பழமொழிக்குக் காலப்போக்கில் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டது.

## 900. பூச நட்சத்திரத்தின் சிறப்பு!

பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எந்த தோஷத்தையும் வெற்றி கொள்வார்கள். இவர்களைச் செவ்வாய் தோஷம் அவ்வளவு கடுமையாய்ப் பாதிக்காது. திருமணம் ஒன்றைத்தவிர வேறு எந்தச் செயலையும் பூசத்தில் செய்யலாம்!

## 901. ஆங்கிலமாத திருமண இரகசியம்!

சூலை மாதத்தில் பிறந்தபெண்கள் மார்ச்சுமாதத்தில் பிறந்த ஆண்களை மணக்கக்கூடாது. பிப்ரவரி மாதத்தில் பிறந்த ஆண்கள் மே மாதத்தில் பிறந்த பெணணை மணக்கக்கூடாது. ஜூலை மற்றும் அக்டோபர் மாதத்தில் பிறந்த ஆண்கள்,

பிப்ரவரி அல்லது ஜூன்மாதம் பிறந்தபெண்களை மணக்ககூடாது! ஆனால், நவம்பர் மாத இறுதியில் பிறந்த ஆண்கள் எந்த மாதத்தில் பிறந்த பெண்களை மணந்தாலும் நிம்மதியான வாழ்க்கை அமைவதில்லை.

## 902. சர்க்கரை வியாதி ஏற்படும் - எவருக்கு?

ஒருவர் ஜாதகத்தில் குரு நீசம் பெற்று 6, 8, 12, இல் மறைவு பெற்றால், அல்லது குரு 12 இல் அமையப்பெற்று சுக்கிரன் 6 இல் இருக்க, சுக்கிரனைக் குருபார்த்தால, அல்லது குரு, சனி ஆகியன இணைந்தால், அல்லது 6ஆம் வீட்டு அதிபதி 12 இல் அமையப்பெற்று 12 ஆம் வீட்டு அதிபதி 6 இல் அமையப்பெற்றால் அவர்களுக்குச் சர்க்கரை வியாதி ஏற்படும்.

## 903. கடலும் வற்றும்!

கிரகங்களுள் செவ்வாய் ஓர் இராசியில் ஒன்றரை மாதம் தங்கும். ஆனால், சிலசமயங்களில் எப்போதாவது அதிக நாள்கள் தங்க நேரிடும். ஆறுமாதங்கூடத் தங்கும். தங்கும் இராசியைப் பொறுத்து அந்த ஆண்டு உலகில் பல அதிசயங்களோ, தீமைகளோ நேரிடும். கன்னிஇராசியில் அதிகக் காலம் தங்கினால் பஞ்சமும் பட்டினியும் ஏற்படும். மழைபொழியாது. குடிதண்ணீர் தட்டுப்பாடு உண்டாகும். கன்னியில் செவ்வாய் தங்கினால் கடலும் வற்றும் என்று சொல்வார்கள்.

## 904. சனி நீராடு என்றால் என்ன?

சனி நீராடு என்றால், அதிகாலையில் குளிர்ந்த நீரில் நீராடு என்பதே அர்த்தமாகும். அதற்கான காரணம், இரவில்

சந்திரன் மற்றும் கிரகங்களின் நுண்ணிய அணுக்கள் நீரில் கலப்பதால், அது காலை நேரத்தில் அமிர்தத்தன்மையைப் பெறுகின்றது. இப்படிப்பட்ட நீரில் நீராடினால் உஷ்ணம் குறைந்து உடல் சுறுசுறுப்புடன் இருக்கும். அறிவும் கூர்மையாய் இருக்கும்.

## 905. நட்சத்திரங்கள் கூறும் இரகசியங்கள்!

அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் விநாயகப் பெருமானை விரும்பி வணங்குவார்கள்.

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்த ஆண்கள் மூக்குப் பொடி போடும் பழக்கம் உடையவர்களாய் இருப்பார்கள்.

மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வெள்ளை நிற ஆடைகளை விரும்பி அணிவார்கள்.

பூச நட்சத்திரத்தில் பிறந்த பலருக்கு மூக்கிலிருந்து இரத்தம் வடியும்.

திருவோண நட்சத்திரத்தில் பிறந்த பலர், கைக்கடிகாரம் அணியும் பழக்கமில்லாமல் இருப்பார்கள்.

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பெரும்பாலும் வலது கையில் கைக்கடிகாரம் அணிவார்கள்.

பூரம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எதற்கெடுத்தாலும் தலையைச் சொறிவார்கள்.

சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குத் தோல் பாதிப்புகள் ஏற்படலாம்.

பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பார்கள்.

கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பங்கு மார்க்கெட்டில் நல்ல பலனடைவார்கள்.

அஸ்த நட்சத்திரத்தினர் பிரபலமான கதாசிரியராகவும், பத்திரிகையாளராகவும் விளங்குவார்கள்.

பூராட நட்சத்திரத்தில் பிறந்த பலர் கட்டிடக் கலையில் சிறப்படைவார்கள்.

கன்னிஇராசியைச் சேர்ந்தவர்கள் கனவு காண்பவர்களாகவும் கற்பனை மிகுந்தவர்களாகவும் இருப்பார்கள்.

புனர் பூசம், ஆயில்யம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு அதிகமாய் இரட்டைக் குழந்தைகள் பிறக்கும்.

அனுஷ நட்சத்திரத்தில் பிறந்த பலருக்குச் சிறுவயதில் தொண்டை சம்பந்தப்பட்ட அறுவைச்சிகிச்சை நடக்கும்.

மூல நட்சத்திரத்தில் பிறந்த பலர் தங்கள் பலமே தெரியாமல் வாழ்வார்கள்.

துலா இராசியைச் சேர்ந்தவர்கள் கலைகளில் புகழ் பெற்று விளங்குவார்கள்.

விருச்சிக இராசியைச் சேர்ந்தவர்கள் எளிதில் கோபமடைபவர்களாகவும், மறக்கின்ற, மன்னிக்கின்ற சுபாவம் உடையவர்களாகவும் இருப்பார்கள்.

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சேவை மனப்பான்மையுடன் இருப்பார்கள்.

உத்தரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இரத்ததானம் செய்பவர்களாய் இருப்பார்கள்.

ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் கல்வித்துறையில் கொடிகட்டிப் பறப்பார்கள்.

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த பெண்கள் பரதநாட்டியக் கலையில் சிறந்து விளங்குவார்கள்.

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் சகல கலைகளிலும் சிறந்து விளங்குவார்கள்.

உத்திர நட்சத்திரத்தில் பிறந்த ஆண்களுள் பலர் தாடி வைத்துக்கொள்வார்கள்.

அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களுள் பலர் நட்சத்திர ஓட்டலுக்குச் சொந்தக்காரர்களாய் இருப்பார்கள்.

சத்திரத்திற்குக் கிழக்கே உள்ள குடியும், சிவன்கோவிலுக்கு மேற்கே உள்ள குடியும் சுகப்படாது!

## 906. புகழ்பெற்றவர்களின் நட்சத்திரங்கள்!

நமது நாட்டின் புகழ் பெற்ற தலைவர்கள் சிலரின் நட்சத்திரங்களைத் தெரிந்துகொள்வோம். 1. மகாத்மா காந்தி - மகம்; 2. ஜவஹர்லால் நேரு - ஆயில்யம் இராஜாஜி - ரோஹிணி 4. நரசிம்மராவ் - உத்திரட்டாதி 5. இந்திராகாந்தி - உத்திராடம் 6. ராஜீவ் காந்தி - பூரம் 7. தேவகவுடா - பூரட்டாதி 8. அறிஞர்

அண்ணா - பூசம் 9. கலைஞர் கருணாநிதி - மிருகசிரீஷம் 10. புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். - ரேவதி 11. செல்வி ஜெயலலிதா - மகம் 12. வாஜ்பாய் - கேட்டை 13. காமராஜ் - பூரட்டாதி.

## 907. வசுந்தரா என்றால் என்ன?

செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிரகங்கள் ஒரே பார்வையில் இராசியில் வரும் நிலை வசுந்தரா என்பார்கள். இது எப்போதாவது ஒரு முறைதான் வருவதுண்டு. அதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் கெடுதல் நேரும். இது பல அழிவுகளை ஏற்படுத்தும். இந்தக் கிரகநிலையின் போது உத்திரட்டாதி, திருவாதிரை, புனர்பூசம், உத்திரம், அஸ்தம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், ரேவதி ஆகிய பத்து நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

## 908. உலகத் தலைவர்களும் சோதிடரும்!

உலகைப் பெரும் போரில் ஆழ்த்திக் கதிகலங்கச் செய்த ஹிட்லர் சோதிடத்தில் மிகவும் பற்றுடையவர். இரண்டாவது உலகயுத்தத்தில் அவர் எடுத்த எல்லா இராணுவ நடவடிக்கைகளிலும் குறைந்தது ஐந்து சோதிடர்களாவது அவருக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்கள். ஹிட்லரின் பிரதான சோதிடர் பெயர் வில்லியம் கிராஃப்ட்' ஆகும். அச்சோதிடரின் ஆலோசனைப்படியே ஹிட்லர் செயல்படுவதைத் தமது துப்பறியும் இலாகா மூலம் அறிந்த சர்ச்சிலும் 'லுயிடிவோல்'என்னும் ஹங்கேரிய சோதிடரை இராணுவ பெருந்தலைவர்களுக்கு ஆலோசனை கூற மிகவும் இரகசியமாய் அமர்த்திக்கொண்டார். சர்சிலின் அந்த சோதிடர், ஹிட்லரின் சோதிடரான, வில்லியம் இராஃப்ட்டுடன் சேர்ந்து

பல ஆண்டு பணி செய்து அறிவும், அனுபவமும் பெற்றவர். மேலும் அவர் ஹிட்லர், முசோலினி, சர்ச்சில், சேம்பர்லீன் போன்ற பெருந்தலைவர்களின் ஜாதகத்தையெல்லாம் இவர் ஏற்கனவே கணித்துவைத்திருந்தார். அதே போல், சோவியத்நாட்டு (ரஷியா) சர்வாதியாரியாக இருந்தஸ்டாலினும், 'யூரியாமாக்இன்'என்பவரை ராஜாங்க சோதிடராய் அமர்த்திக்கொண்டிருந்தார். ஸ்டாலினுக்குப்பின் ரஷிய நாட்டு அதிபர்களாய் இருந்த புல் கானினும், குருசேவும் அந்தச்சோதிடரின் ஆலோசனை கேட்டுத்தான் நடந்தார்களாம்! நமது நாட்டில் கூடப் பிரதமர்களாயும் ஜனாதிபதிகள்ாயும் இருந்தவர்கள் தங்கள் ஆஸ்தான் சோதிடர்களின் ஆலோசனைப்படிதான் நடந்தார்கள் என்பதை அறிவீர்களா ?

## 909. கிர்லியன் புகைப்படம் தரும் அதிசயத்தகவல்!

'கிர்லியன்முறை'என்ற ஆராய்ச்சி, உயிருள்ள வற்றினின்று வெளிப்படும் கதிர்களின் அமைப்பினைக் கவனித்தும், நிழற்படம் எடுத்தும் அதிசயமான செய்திகளைத் தந்துள்ளது, இதுவரை மனிதனைக் குழப்பிக்கொண்டிருந்தபல புதிர்களுக்கு இது விடை தந்துள்ளது . உயிருள்ள எதையும் மனிதஉடல் உட்பட அதிகச்சக்தி வாய்ந்த சூழ்நிலையில் நிழற்படம் எடுத்தால் நம்மை வியப்பில் மூழ்கடிக்கும் உண்மைகள் கிடைக்கின்றன. விந்தையாகச் சுழலும் புள்ளிகளும் பல வண்ண ஒளிக்கதிர்களும், நம் உடலில் இருந்து வெளிப்படுவது புலனாகும். இதைத்தான் மனத்தத்துவ நிபுணர்களும், "மனித உடலிலிருந்து வண்ணக் கதிர்கள் வீசுவதை எங்களால் காண முடிகிறது" எனக்கூறுகிறார்கள். மனிதனின் கையைக் கிரிலியன் நிழற்படம் எடுத்தபோது, மனிதனின் கண்ணுக்குப் புலனாகும் நீலம், ஊதா, கருநீலம்,

பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு ஆகிய ஏழு நிறங்களும் கைகளலிருந்து வெளிப்படும் அதிசயத்தைக் கண்டார்கள்.

அதன்படி ஆள்காட்டிவிரல் ஆகிய குருவிரலிருந்து நீலக் கதிரும், மோதிரவிரல் ஆகிய சூரிய விரலிருந்து சிவப்பு நிறக்கதிரும், பாம்பு விரல் எனப்படும் நடுவிரல் ஆகிய சனி விரலிருந்து ஊதாநிறக்கதிரும், கட்டைவிரல் ஆகிய சுக்கிரன் விரலிருந்து இண்டிகோ எனப்படும் கருநீலக் கதிர்களும், சுண்டுவிரலின் கீழ்ப்பகுதியான சந்திரமேட்டிலிருந்து ஆரஞ்சு நிறக்கதிர்களும், ஆள்காட்டிவிரலுக்கு இடைப்பட்ட பதியாகிய செவ்வாய் மேட்டிலிருந்து மஞ்சள் நிறக்கதிர்களும் வெளிவருவதைக் கண்டார்கள். வானமண்டலத்தில், நவக்கிரகங்களை ஆராய்ந்தபோது அதே வண்ணக்கதிர்கள் வெளியிடும் அதிசயத்தைக் கண்டார்கள்.

மேலும் அந்த நவக்கிரகங்களுக்கு உரிய நட்சத்திரங்களிலிருந்து வெளிவரும் வண்ணக்கதிர்களும் அவற்றைப் போல இருப்பதைக் கண்டு ஆராய்ச்சியாளர்கள் ஆச்சரியப்பட்டுள்ளார்கள். இதை நம் முன்னோர்கள், சித்தர்கள், ஞானிகள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியுள்ளது இன்றைக்கும் ஆச்சரியத்திலும், ஆச்சரியத்தைத் தருகிறது.

## 910. ஹிட்லரை வீழ்த்திய ஸ்வஸ்திக்கா சின்னம்! 卐

நம் சமஸ்கிருத மொழியிலிருந்து தான் ஸ்வஸ்திக்கா சின்னம் ஹிட்லரை சென்றடைந்தது. புத்த மதத்தினர் அந்தச் சின்னத்தைப் புனிதமாய்க் கருதிக் கொண்டிருந்தார்கள். பழம்பெரும் ஜெர்மானிய ஆரிய வம்சத்தைக் குறிக்கும்

சின்னமும் ஸ்வஸ்திக்காதான் என்று ஜெர்மானிய தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஹிட்லருக்காக அந்தச் சின்னத்தை முதன் முதலில் வரைந்து கொடுத்தவர் அவின் பல்டாக்டர் ஆகிய பிரெடரிக் குரோன் என்பவர் ஆவர். அது ஒரு புனிதமான சின்னம் என்பதால்தான் அதை அவர் சிபாரிசு செய்தார். அவர் வரைந்து கொடுத்தது, இடப்பக்கம் பார்க்கும் ஸ்வஸ்திக்கா சின்னம் ஆகும். அதுவே இந்தியமக்களால் வழிபடுகின்ற சின்னம் ஆகும். அந்த அமைப்பு இறைவனையும் மேன்மையையும், அதிர்ஷ்டத்தையும் குறிக்கும். பெரும்பாலான நாஜித் தலைவர்கள் பல் டாக்டர் சொன்னதையே ஏற்றுக்கொண்டனர். ஆனால், ஹிட்லரோ வீம்புக்காக வலப்பக்கம் பார்க்கும் ஸ்வஸ்திக்கா சின்னந்தான் தமக்குப் பிடித்துள்ளது என்று சொல்ல, வேறு வழியின்றி அவரின் ஆதரவாளர்கள் அதையே ஏற்றுக் கொண்டனர். ஆனால் அந்த அமைப்பு ஒருவரை வீழ்த்தக்கூடியது ஆகும். விதி யாரைவிட்டது! ஹிட்லரை வீழ்த்த இறைவன் அளித்த சின்னந்தான் அது!

## 911. வேற்றுக் கிரகத்தில் உயிரினங்கள்!

வேற்றுக் கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன. தற்போதைய ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. வியாழக்கிரகத்துக்கு அமெரிக்கா அனுப்பிய விண்கலம் அனுப்பிய தகவலிலிருந்து, வியாழக்கிரகத்தின் நிலாவாகிய யுரோப்பாவில் பனி உறைந்திருப்பதாகவும், அதன் கீழ் ஆறு ஓடுவதாகவும் தெரிய வந்துள்ளது. இதன் மூலம் அக்கிரகத்தில் உயிரினம் உள்ளதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. அதே போல் அண்டார்டிகா பகுதியில் ஆராய்ச்சி செய்த விஞ்ஞான குழு அங்கு ஒரு பனிமலைக்

குன்றைக் கண்டுள்ளது. அது பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன் செவ்வாய்க் கிரகத்திலிருந்து வந்தது எனவும், அதில் உயிரினத்தின் பாசில் உள்ளதாகவும் கண்டுள்ளார்கள். அதற்கு முன் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட விண்கலம் அனுப்பிய நிழற்படத்தில் மனித முக அமைப்பிருந்தது யாவரும் அறிந்ததே. எனவே, நம்மை ஆட்டிப்படைக்கும் நவக்கிரகங்களிலும் உயிரினங்கள் உள்ளன என்னும் இரகசியத்தை, இன்றைய கண்டுபிடிப்புகள் நமக்கு நிரூபணம் செய்கின்றன!

## 912. ரோகிணி நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால்...!

ரோகிணி நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் அது தாய்மாமனுக்கு ஆகாது. எனவே, அக்குழந்தையைத் தாய்மாமன் நேரடியாகப் பார்க்கக்கூடாது. அதற்கான பரிகாரம் பின்வருமாறு; நெய், நல்ல எண்ணெய், விளக்கெண்ணெய் ஆகிய மூன்றையும் கூட்டி, ஒரு மண்மடக்கில் ஊற்ற வேண்டும். அதில் குழந்தையைக் காட்ட வேண்டும். அந்த மண்மடக்கில் தெரியும் குழந்தை உருவத்தை முதலில் தரிசிக்க வேண்டும்; பிறகே குழந்தையைப் பார்க்க வேண்டும். தாய்மாமன் அதே போல் கொடி, சுற்றி மாலை சுற்றிப் பிறக்கும் குழந்தையைத் தந்தையானவர் மேற்கண்ட முறையில் தரிசித்த பிறகே குழந்தையைப் பார்க்க வேண்டும். மேலும், ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்த குழந்தை தாய்மாமனுக்கு தோஷம் தருமாதலால், ஆயுள் முழுவதும் ஒவ்வொரு மாதமும் அமையும் ரோகிணி நட்சத்திரத்தன்று விரதம் கடைப்பிடிக்க வேண்டும். காரணம், குழந்தைக்கு 12 வயது ஆகும்போது அது தாய்மாமனுக்குக் கண்டத்தை ஏற்படுத்தும், எச்சரிக்கை. மேலும் ரோகிணி நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் தாய்மாமனுக்கு

மறைக்காமல் விவரத்தைச் சொல்லி., விரதம் இருக்கச் சொல்ல வேண்டும். இது மிக, மிக முக்கியம்.

## 913. எக்குழந்தை நீண்டநாள் வாழாது!

1. ஞாயிற்றுக்கிழமையில் அமையும் பரணி நட்சத்திரம் 2. திங்கள் கிழமையில் சித்திரை நட்சத்திரம் 3. செவ்வாய்க்கிழமையில் உத்திராட நட்சத்திரம் 4.புதன் கிழமையில் அவிட்ட நட்சத்திரம் 5. வியாழக்கிழமையில் கேட்டை அமையும் நட்சத்திரம் 6. வெள்ளிக்கிழமையில் பூராடம் நட்சத்திரமும் 7. சனிக்கிழமையில் அமையும் ரேவதி நட்சத்திரம் ஆகிய அமைப்பில் பிறக்கும் குழந்தைகள் நீண்டநாள் உயிரோடு இருக்க மாட்டா என ஜோதிட சாஸ்திரம் தெரிவிக்கின்றது.

## 914. திருமணப் பொருத்தம் பார்க்கும் இரகசியம்!

திருமணப் பொருத்தம் பார்ப்பதில் தசவிதத் திருமண பொருத்தம் உள்பட பல்வேறு தேர்வுகள் உள்ளன. அவை எல்லாவற்றையும்விடச் சுலபமான முறையில் அதிபதிகளின் பொருத்தம் பார்க்கும் முறை ஒன்று உள்ளது. அது பின்வருமாறு ஆண் அல்லது பெண்ணின் ஜெனன நட்சத்திரம் முதல் எண்ணி, அவர் மணக்கவிருப்பவர் நட்சத்திரம் வரை எண்ணி வரும் தொகையைப் பன்னிரெண்டால் பெருக்கி, ஒன்பதால் வகுத்து, வரும் மீதித்தொகை ஒன்பதானால் அவ்விருவருக்கும் திருமணப் பொருத்தம் உத்தமம் ஆகும். மீதித்தொகை ஆறு என்றால் மத்திம பலனாகும். மீதித்தொகை மூன்று என்றால் அது பொருந்தாத திருமணமாய் அமையும்.

## 915. ஆடிச் செவ்வாய் தேடிக்குளி!

ஆடிமாதம் மனிதர்களை நோய்கள் நெருங்கும் மாதம் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதற்குப் பரிகாரமாய் ஆடிமாதம் செவ்வாய்கிழமை அன்று கடலில் நீராடித்துர்க்கையை வழிபடுவது சிறப்பாகும். அதனால் தான் "ஆடிச்செவ்வாய் தேடிக்குளி" என்னும் பழமொழி ஏற்பட்டது. அந்த அமைப்பு வேதாரண்யத்தில் உள்ளது. மேலும், வாராஹிதேவியைப் பஞ்சமி திதியில் வழிபடுவதும் சிறப்பாகும். வாராஹிசந்நிதிதஞ்சைப் பெரிய கோவிலும், சென்னை தாம்பரத்திருந்து காஞ்சிபுரம் செல்லும் பாதையில் உள்ள 'கண்டி' என்னும் ஊரில் உள்ள துர்க்கைப் பீடத்திலும் உள்ளது.

## 916. பிரதோ வழிபாட்டின் இரகசியம்!

சகலவிதமான தோஷங்களும் நிவர்த்தியாக மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விரதம் பிரதோஷவிரதம் ஆகும். அது மாந்தோறும் பௌர்ணமிக்குப் பின் தேய்பிறையில் அமையும். திரயோதசி அன்று மாலை 4.30 முதல் 6 மணி வரை ஆகும். அந்தக்கால கட்டத்தில் சிவபெருமானை நந்தியின் இரு கொம்புகளுக்கு இடையே தரிசித்து, சோமசூத்திர பிரதட்சணம் செய்து வழிபட வேண்டும். குறிப்பாய், சனிக்கிழமை அமையும் பிரதோஷம் மிகவும் சிறப்பாகும். தொடாநதாற்போல் 12 பிரதோஷ உபவாசத்தை மேற்கொண்டால் 13 வது பிரதோஷத்தன்று நினைத்தது நிறைவேறும்.

## 917. சங்கடஹ சதுர்த்தி விரதத்தின் மகிமை

ஒவ்வொரு மாதமும் தேய்பிறையில் அமையும் சங்கடஹ சதுர்த்தி அன்று மாலை ஆறுமணிக்கு

ஸ்ரீவிநாயகருக்குப் பூஜை, அபிஷேகம், அர்ச்சனை செய்து வழிபட்டால் அனைத்துச் சங்கடங்களும் நீங்கும்; எதிர்பார்க்கும் நன்மை கிட்டும். ஆறு சங்கடஹர சதுர்த்தி தொடர்ந்து விரதம் இருந்து வழிபட வேண்டும்.

## 918. பெண்களுக்கான பூஜையின் இரகசியம்!

அம்மன் கோவில்களில் பௌர்ணமி தினத்தன்று நடைபெறும் குங்கும அர்ச்சனையில் கலந்துகொண்டு பூஜை செய்ய வேண்டும். மேலும் விளக்குப் பூஜையில் கலந்து சுமங்கலிபலம் பெறவும், குடும்ப மேன்மைக்காக விரதமிருந்து பூஜை செய்தால் நல்ல பலன் உண்டு. இவ்வாறு குங்கும அர்ச்சனை செய்து, அந்தக் குங்குமத்தை எடுத்துதாலியிலும், வடுகிலும்வைத்தால் கணவர் நலமுடன் இருப்பார்.

## 919. சிவாலய வழிபாட்டின் இரகசியம்!

தினமும் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்தால் இரத்தக்கொதிப்பு, மூத்திர வியாதி போன்றவை நீங்கும். மேலும், சிவாலயம் சென்று மேற்கு முகமாய் உள்ள சிவலிங்கத்தைத் தரிசனம் செய்தால் அனைத்து தோஷங்களும் பாவங்களும் நீங்கும்.

## 920. நோய் தீர்க்கும் பரிகாரத்தின் இரகசியம்!

தீராதநோய் தீரு மயிலாடு துறைக்கு அருகில் உள்ள வைத்தீஸ்வரன் கோவிலுக்கு 13 கார்த்திகைத்தினத்தன்று சென்று மஹான்யாஸ - ருத்ரா அபிஷேகமும் அர்ச்சனையும் செய்ய வேண்டும். பின் அக்கோவிலில் உள்ள வேப்பமரத்திலிருந்து வேப்பங்கொழுந்தைப் பறித்துச் சாப்பிடவேண்டும். அதோடு,

கோவில் விற்பனை ஆகும் மூலிகை கலந்த மாத்திரையைத் தினமும் குளித்துவிட்டு, நம்பிக்கையுடன் உட்கொண்டால் தீராத் நோயும் தீரும். அதோடு, காஞ்சிபுரத்திலிருக்கும் 'சித்திரகுப்தர்' ஆலயத்திற்குச் சென்று நோய்வாய்ப்பட்டவர் தன் பெயரில் அர்ச்சனை செய்தால் நோயின் கண்டத்திலிருந்து தப்பிக்கலாம்!

## 921. நாடி ஜோதிடத்தால் உலகப் புகழ் பெற்ற ஏ. ஆர். ரகுமான்!

ஈரோட்டிலிருப்பவர், உலகபுகழ் பெற்று விளங்கும் ஜோதிட ஞானி டாக்டர் ஓம் உலகநாதன் ஆவார். அவர் நாடி ஜோதிடம் சொல்பவர். ஒரு முறை அவரை இசை மூலம் உலகப்புகழ் பெற்ற ஏ. ஆர். ரகுமான் சந்தித்தார் திலீப்குமார் என்னும் பெயரில் திலிப்குமார், ஆரம்பத்தில் முன்னேறத்துடித்து, முயற்சிகள் பலவும் செய்தார்; எதுவும் நடக்காததால் மனச்சோர்வுடன் அவர், உலகநாதரிடம் வந்து, நாடி ஜோதிடம் கேட்டுத் தம் பெயரை மாற்றிக்கொண்டு இசை உலகில் தனிப்புகழ் பெற்றார். நாடி ஜோதிடப்படி வைத்துக்கொண்ட பெயர்தான் ஏ.ஆர். ரகுமான் என்பதாகும். இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா போன்றவர்களுக்குப் பாத்திரமாகி ஜோதிடக்கலைக்குப் பெருமை சேர்த்தவர், இந்த ஓம் உலகநாதன் என்பவர்.

## 922. அர்த்தோதயம் - மகோதயம்

புண்ணிய காலங்களில் மிகவும் விசேஷமானது அர்த்தோதயம் மகோதயம் என்று கூறப்படும் அகபூர்வ சேர்க்கை நாள்கள் ஆகும். 'வியதிபாதம்' என்ற யோகத்தின் முடிவும், அமாவாசையின் முற்பகுதியும், திருவோண

நட்சத்திரத்தின் நடுப்பகுதியும், சூரிய உதயமும், தைமாதம் ஞாயிற்றுக்கிழமையும் சேர்ந்தால் அது 'அர்த்தோதயம்' எனப்படும். அதே அமைப்போடு திங்கட்கிழமை சேர்ந்தால் அது 'மகோதயம்' எனப்படும். இது போன்ற அமைப்பு பல ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் அமையும். அந்தக்காலத்தில் வேதாரண்யம் கடலில் நீராடி, இறைவனையும் அம்பாளையும் வழிபடுவது மிகப்பெரும் புண்ணியமாகும்.

## 923. பவிஷ்ய புராணத்தின் இரகசியம்!

இந்தியநாட்டின் 'நாஸ்டர்டாமஸின்' நூல் எதுவென்றால் அது 'பவிஷ்யபுராணமே' ஆகும். அது, நமது நாட்டின் எதிர்காலம் பற்றிய சோதிடத்தை முன்கூட்டியே எழுதப்பட்ட ஓர் அற்புத நூலாகும். அந்த நூலில் கூறப்பட்டுள்ள சில செய்திகள்: கோ(பசு) மாமிசம் சாப்பிடும் மிலேச்சர்கள் (ஆங்கிலேயர்கள்) சாஸ்திரத்தில் கூறப்பட்ட உண்மைகளை மீறி மக்களை வேறுபாதையில் இழுத்துச் செல்வார்கள்; பாரதத்திற்கு வந்து ஆட்சி செய்வார்கள். அவர்களுக்கு ராணி ஒருவர் உண்டு அவரது பெயர் விக்டோரியாமகாராணி. எட்டுப்பேர் கொண்ட சபை அமைத்து ராஜ்ய பரிபாலனம் செய்வார்கள். (ஆங்கிலேயர்கள் எட்டுப்பேர்க் கொண்ட வைஸ்ராய் எக்ஸிகியூட்டிவ் கவுன்சில் அமைத்து ஆட்சி செய்த வரலாற்றை இது குறிக்கின்றது.) 'மொகலாயர்கள் ஆட்சிபற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது. அக்பர், பாபர், உமாயூன் என்ற பெயர்கள் எப்படி வைக்கப்பட்டது என்பதைப் பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. நாடு சுதந்திரத்திற்குப் பின்னர் மக்கள் வரிப்பளுவால் மிகவும் கஷ்டப்படுவார்கள் ராஜ்ஜியத்தை ஆள்பவர்கள் நம்பிக்கை கொள்ள முடியாத மனிதர்களாய் திருடர்களாய் மாறி ஆட்சியை

அலங்கோலம் செய்வார்கள் என்றும் அதில் குறிக்கப்பட்டுள்ளது. அடிக்கடி கலகம் நடக்கும். ஜனங்கள் செய்வது அறியாது கலங்கிக் கண்ணீர்விடுவார்கள். எல்லா அரசியல்கட்சிகள்மீதும் வெறுப்புத் தோன்றி, எல்லாக் கட்சிகளும் அழிந்துவிடும். மகாவிஷ்ணுவின் பெயர்கொண்ட தெற்கே உள்ள ஒருவர் வடக்கே போய் இராணுவ ஆட்சி நடத்துவார். சர்வாதிகாரிஆவார். அவர் மிகவும் தர்மவானாய் நடந்து கொள்வார். அப்போது வெளிநாட்டார் படையெடுப்பு ஒன்றும் நடக்கும் என்றும் பவிஷ்ய புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அவசியம் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய அற்புத நூல் அது. அதனை எழுதியவர் வியாசர் ஆகும்!

## 924. முன்னோர்களின் அதிசயக் கண்டுபிடிப்பு

நிரட்சர ரேகையைச் சூரியன் கடக்கும் காலத்தை உலகில் முதன்முதலில் கண்டுபிடித்தவர்கள் நம்நாட்டில் வாழ்ந்த ஞானிகளே. அத்தகைய காலம் 25827 ஆண்டுகளுக்கு ஒரு முறை நேர்கிறது என்பதையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். தற்கால விஞ்ஞான சாஸ்திரமும், பல நூற்றாண்டுகளின் அருமையான ஆராய்ச்சியும் சேர்ந்து அந்தக் கணக்கு மிகச் சரியானது என்று முடிவு செய்துள்ளன. எந்த விதக்கருவியின் உதவியும் இன்றி நம் முன்னோர் எப்படி இவ்வுண்மையை அறிந்தார்கள் என்பது நமக்கு மிகவும் ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் உள்ளது.

## 925. ஏழு உலகத்தின் இரகசியம்!

நமது சாஸ்திரத்தில் ஏழுவகை உலகத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உலகத்தில் வாழ்பவர்கள் யார்

தெரியுமா? 1. பூலோகத்தில் மனிதரும், விலங்குகளும் வாழ்கின்றன. 2. புவர்லோகத்தில் வாயு தேவர்களும் 3. சுவர்லோகத்தில் இந்திரனும், தேவர்களும் 3. சுவர்லோகத்தில் இந்திரனும், தேவர்களும் 4. மகலோகத்தில் மார்க்கண்டேயர் முதலிய முனிவர்களும் 6. தவலோகத்தில் சனகர் முதலிய மகான்களும் 7. சத்தியலோகத்தில் பல பிரமதேவர்களும் வாழ்கின்றார்கள்.

## 926. கோரக்ரின் தீர்க்க தரிசனம்!

சித்தர்களுள் ஒருவராகிய கோரக்கசித்தர் தாம் எழுதிய 'சந்திரரேகை' என்ற நூலில் பல தீர்க்க தரிசனங்களைக் கூறியுள்ளார். அதில், நம் நாட்டில் வெள்ளையர் ஆள்வார்கள் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக வியாழக்கிரகத்தோடு வால்நட்சத்திரம் மோதும், என்பது பற்றியும் அதனால் பலபாதிப்புகள் ஏற்படும் என்பது பற்றியும் குறிப்பிட்டார். அவர்குறிப்பிட்டது போல், வடநாட்டில் பிளேக் நோயும், தமிழ்நாட்டில் மழை இல்லாததால் பஞ்சமும் ஏற்பட்டன. இந்தச் சம்பவங்கள் நடந்தது 1996 ஆம் வருடத்தில் கேளக்கர்மாகி நாகப்பட்டினத்திற்கு அருகே வடக்குப் பொய்யூரில் உள்ளது.

## 927. பிருகுமுனிவரின் தீர்க்கதரிசனம்!

பிருகுமுனிவர் தாம் எழுதிய, 'பிருகுமுன்மாந்த்ரீகம் நூறு' என்னும் நூலில் தீர்க்கதரிசனமாய் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார். மேலும், வடநாட்டில் நரசிம்மாவும், தெற்கே ஜெயலலிதாவும் ஆட்சிசெய்யும் போது அந்த நூல் வெளியாகும் என்பதைத் தம் பாடலில் சூசகமாய்த் தொவித்துள்ளார். அதன்படியே 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அந்த நூல் வெளியானது இந்நூலில் ஓசோன் மண்டலம்

அழியும் என்றும், போலிச்சாமியார்கள் தோன்றுவார்கள் என்றும், பெண்குழந்தைகள் அதிகம் பிறக்கும் என்றும்; காமம் அதிகரிக்கும் என்றும், பாவச்செயல் அதிகரிக்கும் என்றும் தீர்க்கதரிசனமாய் அன்றே பிருகுமுனிவர் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

## 928. சித்திரை மாதத்தில் பிறக்கும் குழந்தை எப்படி இருக்கும்?

ஆடிமாதம் உடல் உறவு கொண்டால் சித்திரை மாதம் பிள்ளை பிறக்கும். அதனால் பயப்படுகிறார்கள். பயப்படத்தேவையில்லை. காரணம், சித்திரை மாதத்தில், மேஷத்தில் சூரியன் உச்சமாய் இருக்கும் போது பிறக்கும் குழந்தை புத்திசாலியாகவும், ஆத்மபலம் மிக்கதாகவும், புகழ், கௌரவம், அந்தஸ்து ஆகியன உடையதாகவும் இருக்கும். தலைமைப்பதவியை அடையும் வாய்ப்பும் ஏற்படும்; அரசியலில் வெற்றியும் அரசாங்க ஆதரவும் கிடைக்கும். அது உடல் உழைப்பைவிடப் புத்திசாலித் தனத்தால் பணத்தைச் சம்பாதிக்கும். அதனால் பெரிய பதவிகளுக்கு வரமுடியும். அதற்கு அரசன் போன்ற வாழ்வு அமையும். இப்போதும் சில முன்னேறிய வகுப்பைச் சார்ந்த மக்கள் ஆடிமாதம் திருமணம் செய்துகொண்டு சித்திரை மாதத்தில் குழந்தை பெற்றுக்கொள்கிறார்கள்!

## 929. உடல் உறவு பற்றிய ஜாதக இரகசியங்கள்!

1. காம உல்லாச மனத்துக்கு அதிபதியாகிய சுக்கிரனும், உடலுக்கு அதிபதியாகிய குருவும் 'அஸ்தங்கம்' அடைந்துள்ள நாள்களில் உடல் உறவு கொள்வதைத் தவிர்க்கவும். 2. இலக்கினத்திற்கு ஐந்தாமிடத்து அதிபதி அஸ்தங்கம்

அடையாமல் வலுவாய் இருக்கும் காலங்களில் உடல் உறவு கொள்ள வேண்டும். 3. ஐந்தாமிடத்தை வளர்பிறைச் சந்திரன், குரு, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் பார்க்கும் நாள்களில் உடல் உறவுகொள்வது நல்லது. 4. ஐந்தாமிடத்து அதிபதி 6, 8, 12 இல் மறைந்திருக்கும் நாள்களில் உடல் உறவு கொள்ளக்கூடாது. 5. குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன் ஆகிய ஓரையில் உடல் உறவு கொள்ள வேண்டும். 6. பகலில் உடல் உறவு கூடாது 7. வயிற்றில், மலம், சிறுநீர் ஆகியவற்றை அடக்கிக்கொண்டு தம்பதியர் உடல் உறவுகொள்ளக்கூடாது 8. விரதம் இருக்கும் நாள்களில் உடல் உறவு கொள்ளக்கூடாது. 9. மாதவிலக்கான முதல் ஐந்து நாள்களிலும், மாதவிலக்கு ஆவதற்கு முன்புள்ள ஐந்து நாள்களிலும் உடல் உறவு கொள்ளக்கூடாது. 10. உடல் உறவு கொள்ளும் போது தம்பதியர் இருவரின் உடல் நலமும் மனநலமும் திருப்தியாய் இருக்க வேண்டும்.

## 930. சனிதோஷம் பற்றிய இரகசியங்கள்!

1. மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம் ஆகிய இராசிகளுக்கு ஏழரைச் சனி மிகவும் கொடிய பலன்களைத் தரும். குறிப்பாக மேஷம், கடகம், சிம்மம் ஆகிய இராசிகளுக்கு மட்டும் ஏழரைச் சனியின் காலம் மிகமிகக் கொடியதாய் இருக்கும். 2. துலாம், தனுசு, மகரம், கும்பம், மீனம் ஆகிய மூன்று இராசிகளுக்கும் கண்டச்சனி மிகவும் கொடிய பலனைத் தரும். அஷ்டமச் சனியோகமான பலனைத் தரும். 5. சிம்மம், கன்னி ஆகிய இரு இராசிக்கும் கண்டச் சனியும் அஷ்டச்சனியும் மிகக்கொடிய பலனையே தரும். 6. அதேபோல், தனுசு இராசி, கும்ப இராசி, மகர இராசி ஆகியவற்றுக்கும் கண்டச்சனியும் அஷ்டமச் சனியும் கொடிய பலனைத் தரும். கண்டச்சனி யோகமான பலனைத் தரும்.

8. ஜென்ம இலக்கினத்திற்கு 4, 8 இல் சனி ஆட்சி உச்சம் பெற்றால் நல்லது. 9. ஜென்ம இலக்கினத்துக்கு 6, 8, 12ல் சனி உச்சம், நீசம் அடைந்தால் நல்லது.

## 931. ஸ்ரீராமரிடம் கைகேயி பதினான்கு வருடம் வனவாசம் செய்யவேண்டும் எனச்சொன்னது ஏன்?

இராமர் பதினான்கு வருடம் வனவாசம் செய்ய வேண்டும் எனக் கைகேயி தசரதனிடம் வரம் கேட்டதன் காரணம் என்ன? யுகங்கள் நான்கு வகைப்படும். அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பவை ஆகும். இந்தக் கலியுகத்தில் தந்தையும் மகனும் 12 ஆண்டுகளில் ஒரு வரை ஒருவர் சந்திக்காமல் பிரிந்திருந்தால் அவர்கள் உறவு முரிந்துவிடும் என்கிறது இந்து மத சாஸ்திரம். அவ்வாறே தந்தையும் மகனும் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் துவாபரயுகத்தில் 13 ஆண்டு பிரிந்திருந்தால் த்ரேதாயுகத்தில் 14 ஆண்டுகள் பிரிந்திருந்தால் இருத யுகத்தில் 15 ஆண்டுகள் பிரிந்திருந்தால் அவர்கள் உறவு பிரிந்துவிடும். இராமாயணம் நடந்தகாலம், திரேதாயுகம் ஆகும். ஆகவே தசரதனும், இராமனும் 14 ஆண்டுகள் சந்திக்காமல் இருந்தால், அவர்கள் உறவு முரிந்துவிடும். இதைக் கருத்தில் கொண்டே இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டும் என்றும், அப்போது பரதன் முடிசூடி அரசாளவேண்டும் என்றும் கைகேயி வரம் கேட்டாள்.

## 932. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது!

"பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது" என்னும் பழமொழியின் உண்மை பொருள் யாது? பொன் என்பது

வெள்ளிக் கிரகத்தைக் குறிக்கும். நவக்கிரகங்களுள் புதனும், சுக்கிரனும் சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கிரகங்கள் ஆகும். குறிப்பாகப் புதன் கிரகம் சூரியனுக்கு மிகமிக அருகில் இருக்கும் கிரகம் ஆகும். ஆகையால், புதன்கிரகம் நம் கண்களுக்குப் புலப்படாது. ஆனால், சுக்கிர கிரகம் 48 டிகிரி பாகையில் இருக்கும் போது சூரியனின் அஸ்தமனத்திற்குப் பின் சுமார் மூன்று மணி நேரத்திற்குக் கண்களுக்கு இரவில் புலப்படும். இதைத்தான் “பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது” என்று சொல்கிறார்கள்.

## 933. முனிவர்கள் சொன்ன தீர்க்க தரிசனம்?

வியாசர் முனிவர் தமது ‘பவிஷ்யபுராணத்தில்’ கூறியது போல் சினேந்திரமாமுனி என்பவரும் பின்வருமாறு கூறியுள்ளார். துவாபரயுகம் முடிந்து, கலியுகம் தொடங்கும் நாளில் சோதிடர் பரிசித்து ஐநூறு ஆண்டுகள் ஆளுவார். பிறகு, ஜென்மாஜென்மே ஜெயன் மூன்று ஆண்டுகளும், நரேந்திரன் 298 ஆண்டுகளும், சாரங்கன் 85 ஆண்டுகளும், விக்கிரமாதித்தன் 2000 ஆண்டுகளும் அரசாளுவார்கள். அடுத்து சாலிவாகனன் 349 ஆண்டுகளும், போஜன் 500 ஆண்டுகளும், பேணியன் 695 ஆண்டுகளும், கர்த்தர்கள் 85 ஆண்டுகளும், இஸ்லாம் வகுப்பினர் 62 ஆண்டுகளும், நேர்மையானர்வர்கள் நாம்தாம் என்று வருபவர்கள் 12 வருடங்களும் ஆளுவார்கள்” வியாசர் பின்பு, மகாவிஷ்ணுவின் பெயரைக் கொண்ட தென்னிந்தியர் ஒருவர் தெற்கே இருந்து வடக்கே போய் இராணுவ ஆட்சி நடத்துவார் என்று குறிப்பிட்டிருந்தார் அல்லவா?

அந்த மகாவிஷ்ணுவின் பெயரைக் கொண்ட அந்தத் தென்னிந்தியர் யார் என்று சினேந்திரமாமுனிவர் கூறுகிறார்.

மாற்றே இல்லாத நாமக்காரர் இப்பெரிய உலகையே அரசாளுவார் என்று சினேந்திரமாமுனிவர் மட்டுமல்லாது ஜலந்திரமாமுனிவர் என்பவரும் தீர்க்கதரிசனமாய்க் கூறியுள்ளார் என்பது அதிசயத்தக்க ஒன்றாகும்.

## 934. இராமாயணமும் ஏழும்!

ஏழு என்னும் எண், கேதுவின் ஆதிக்கம் பெற்ற எண், கேது ஞானக்கிரகம் ஆகும். கேதுவின் எண்ணாகிய ஏழு, இராமாயணகாவியத்திலும், இராமர் வாழ்விலும் எப்படிப் பின்னிப் பிணைந்து அமைந்துள்ளது என்னும் அதிசயத்தைப் பாருங்கள். ஸ்ரீஇராமர் வனவாசம் ஏற்றுக்கொண்ட ஆண்டுகள் 7x2 ஆண்டுகள் ஆகும். 2. சுக்கிரிவனுக்கு வலிமையைக் காட்ட இராமர் வில் வளைத்து அம்பினை மராமங்களைத்தான் துளைத்தான் 3. ஸ்ரீஇராமர் விபீஷணனைப்பார்த்து, "உன்னோடு நாங்கள்" என்று உரைத்தார். 4. சுந்தரகாண்டபாராயணம் ஏழுஸர்க்கங்களைக் கொண்டது. 5. ஸப்தரிஷி இராமாயணம் ஏழுரிஷிகளால் தொகுக்கபட்டதாகும். 6. இராமாயணத்தை ஏழுசுத்த ஜாதி இசை அமைப்பாக பாலகாண்டம் நான்காவது ஸர்க்கத்தில் அமைந்துள்ளது. 7. லவகுச இவர்கள் இராமாயணத்தை ஸ்பதஸ்வரங்களால் திருமால் ஏழாவது அவதாரமாக பாடினார்கள் 8. இக்காப்பியத்தில் வரும் கதாநாயகன் ஸ்ரீ இராமபிரானாய் அவதாரமாக 9. ஸ்ரீஇராமகாதை ஏழுகாண்டங்களாய் அமைக்கப்பட்டுள்ளது. 10. ஸ்ரீஇராமபிரான் இராவணனோடு போர் புரிந்த நாள் ஏழு ஆகும். 11. ஸ்ரீஇராமபிரானின் ஜன்ம நட்சத்திரமான 'புனர்பூசம்' ஏழாவது நட்சத்திரமாகும்! எத்தனை அதிசயம் பார்த்தீர்களா! இயற்கை வகுத்த வழியை!

## 935. வளையமில்லாச் சனிக்கிரகம்!

14 மற்றும் 15 ஆண்டுகளுக்கு ஒரு முறை, வளையத்துடன் காணப்படும் சனிக்கிரகம், வளையமில்லாமல் சுற்றும். இந்த அதிசயம் 1995 ஆம் ஆண்டு மேமாதம் 25 ஆம் தேதியும், 1996 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 12 ஆம் தேதியும் நடைபெற்றது! இதற்கு முன் 1979 -1980 இல் நடைபெற்றது. அடுத்த வளையமில்லாச் சனிக்கிரகத்தை 2009இல் காணலாம்! இந்நாள்களில் இக்கிரகத்தின் வளையம் சுற்றும் நேர்க்கோட்டுக்கு எதிராகப் பூமி அமைகிறது!

## 936. குருவக்கிர பலனின் இரகசியம்!

எல்லாக் கிரகங்களும் வக்கிரம் பெற்றால் முன் இராசியின் பலன்களைத்தாம் தரும். ஆனால், குருபகவான் மாத்திரம் வக்கிரம் அடைந்து எந்த இராசிக்குச் செல்லுகின்றாரோ அந்த இராசியின் பலனைத்தருவார் என்பது அதிசயமான ஒன்றாகும்!

## 937. நித்யா தேவதைகள்!

பதினைந்து திதிகளுக்கும், பதினைந்து அதிதேவதைகள் உள்ளன. அந்தத் தேவதைகளை அந்த அந்தத் திதிநாள்களில் வழிபட்டால் சகல நன்மைகளையும் பெறலாம். அந்தப் பதினைந்து தேவதைகளின் விவரம் வருமாறு:

1. காமே சுவரி 2. பகமாலினி 3. நித்யகலின்னா 4. பேகுண்டா 5. வன்னி 6. வாகினி 7. வஜ்ரே சுவரி 8. சிவதூதி 9. திவரிதா 10. குலசுந்தரி 11. நித்யா 12. நீலபதாகா 13. விஜயா 14. ஸர்வமங்களா 15. ஜுவாலாமாலினி 16. சித்ரா

**938. எவர் கொள்ளுப்பேரன், எள்ளுப்பேரன் ஆவார்?**

பிள்ளையின் மகன் பேரன், பேரனின் பிள்ளை கொள்ளுப்பேரன்; கொள்ளுப்பேரனின் பிள்ளை எள்ளுப் பேரன் ஆகும்!

**939. விஷு என்பது யாது?**

சூரியன் மேஷ இராசியில் புகும் சித்திரை ஆரம்பமும்; துலாஇராசியில் புகும் ஐப்பசி ஆரம்பமும் விஷு எனப்படும்

**940. பரிவேடம் என்றால் என்ன?**

சந்திரனைச் சுற்றிச் சில சமயங்களில் அமையும் ஒளிவட்டமே, 'பரிவேடம்' எனப்படும். அதனை "கோட்டை கட்டியிருக்கிறது" என்று சொல்வார்கள். அது போன்ற அமைப்புக் காணப்பட்டால் மழை பெய்யும் என்றும் சொல்வார்கள்!

**941. சூன்யதிதியின் இரகசியங்கள்!**

ஒருவர் ஒரு குறிப்பிட்ட திதியில் பிறக்கும் பொழுது அந்தத் திதியில் குறிப்பிட்ட சில இராசிகள், சில கிரகங்கள் சூன்யம் அடைகின்றன. அதனால் சூன்யம் அடைந்த இராசிகளுள் எந்தக் கிரகம் அமர்ந்தாலும் அது சூன்ய கிரகமாகிப் பலனற்றதாகிவிடும். அதே போல், சூன்யம் பெற்ற கிரகமும் நல்ல பலன் அளிக்காது. அதன் திசை, புத்தி அந்தரத்திலும் பலன் அளிக்காது! ஆனால் அமாவாசை, பௌர்ணமி திதிகளில் எந்த ஓர் இராசியும் சூன்யமடைவதில்லை. இதனால், அமாவாசையன்றும் பௌர்ணமியன்றும்

பிறந்தவர்களுக்குத் திதிசூன்யம் ஆவது இல்லை. மீதமுள்ள 14 திதிகளில் சூன்யம் பெறும் இராசிகளையும் கிரகத்தையும் இனி அறிவோம். 1. பிரதமை - மகரம், துலாம்; சனி, சுக்கிரன் 2. துவிதியை - தனுசு, மீனம் - குரு 3. திரிதியை - மகரம், சிம்மம் - சனி, சுக்கிரன் 4. சதுர்த்தி - கும்பம், ரிஷபம் - புதன். 5. பஞ்சமி - மிதுனம், கன்னி - செவ்வாய், சூரியன் 6. சஷ்டி - மேமஷம், சிம்மம் - குரு, சந்திரன், 7 சப்தமி - தனுசு, கடகம் - புதன் 8. அஷ்டமி - மிதுனம், கன்னி - சூரியன், செவ்வாய் 9. நவமி - சிம்மம், விருச்சிகம் - சூரியன், செவ்வாய் 10 தசமி - தனுசு, மீனம்- குரு 11 ஏகாதசி - மகரம், துலாம் - சனி, சுக்கிரம் 12. துவாதசி - ரிஷபம், சிம்மம் - சுக்கிரன், சூரியன் 13. திரயோதசிமிதுனம், கன்னி - புதன் 14. சதுர்த்தசி தனுசு, மீனம்- புதன், குரு முதலியனவாகும்.

## 942. இராகுகாலத்தை அறிய எளிய வழி!

அன்றைய இராகு காலத்தை எப்படிக் கணக்கிடுவது? அதற்கு ஓர் எளியவழி உள்ளது. இங்குள்ள சிறியவாக்கியத்தை மனத்தில் நிறுத்திக்கொள்ள வேண்டும். "திருநாள், சந்த்டி, வெயிலில், புகுந்து, விளையாடச் செல்வது ஞாயமா?" என்ற வாக்கியத்தைக் கவிதை நடையில் படித்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையின் முதல் எழுத்தும் ஒவ்வொருகிழமையை ஞாபகப்படுத்தும். காலை ஆறு மணி முதல் ஏழு முப்பது வரையிலும் உள்ள ஒன்றரை மணி நேரத்திற்கு இராகுகாலம் இல்லை. அதன் பின் ஒவ்வொரு நாளிலும், வெவ்வேறு நேரத்தில் இராகுகாலம் வருகிறது. பகல்நேரத்தில் தினமும் இராகு காலம் ஒன்றரை பகல் மணி நேரமும் மட்டுமே வரும். மேற்சொன்ன கவிதை

நடைவாக்கியத்தின் முதல் சொல் திருநாள் தன் முதல் எழுத்துதே அது திங்கட்கிழமையைக் குறிக்கும். அன்று 7.30முதல்9.00 மணி வரை இராகுகாலம் அடுத்து சந்தடி என்னும் சொல்லின் முதல் எழுத்து ச அது சனிக்கிழமையைக் குறிக்கும் என்று 9.00 முதல் 10.30 வரை இராகு காலம். அடுத்து வெய்யிலில் என்பதன் முதல் எழுத்து வெ அது வெள்ளிக்கிழமையை குறிக்கும். அன்று 10.30 முதல் 12.00 மணி வரை இராகு காலம். அடுத்து புகுந்து என்பதன் முதல் எழுத்து புதன் 12.00 முதல் 1.30 வரையிலும் இராகுகாலம். அடுத்து விளையாட வியாழனைக் குறிக்கும் என்று 1.30முதல் 3.00 மணி வரை இராகு காலம் அடுத்து செல்வது செவ்வாயைக்குறிக்கும் அன்று. 3.00முதல் 4.30 மணி வரையிலும் இராகுகாலம் அடுத்து ஞாயமா ஞாயிறு என்பதன் முதல் ஞா அது ஞாயிறு என்பதனைக் குறிக்கும் 4.30 முதல் 6.00 மணி வரையிலும் இராகுகாலம் இவ்வாறு வரிசையாக ஞாபகப்படுத்திக் கொள்ள இது ஓர் எளிய வழி ஆகும்!

## 943. எமகண்டத்தை அறிய எளிய வழி!

"வியாழனைத் தொட்டுப் பின்நோக்கிச் சென்றால் எமகண்ட காலம் தெரியவரும்!" என்ற வாக்கியத்தை ஞாபகப்படுத்திக் கொண்டால் அன்றன்று பகல் நேரத்தின் எமகண்ட நேரத்தை அறிந்துகொள்ள முடியும். "வியாழனைத் தொட்டுப்பின் நோக்கிச் சென்றால் என்னும் வாக்கியத்திற்கு என்ன அர்த்தம்? வியாழனுக்கு பின் உள்ள கிழமைகள் புதன், செவ்வாய், திங்கள், ஞாயிறு, சனி, வெள்ளி ஆகும். எனவே, 1. வியாழன் 6.00 முதல் 7.30 2. புதன் 7.30 முதல் 9.00 3. செவ்வாய் 9.00 முதல் 10.30 4. திங்கள் 10.30 முதல் 12.00 5. ஞாயிறு 12.00 முதல் 1.30 6. சனி 1.30 முதல் 3.00 7. வெள்ளி

3.00 முதல் 4.30 எமகண்டத்தை வரிசையாக மணிப்படி ஞாபகத்தில் வைத்துக்கொள்ள ஓர் எளிய வழி ஆகும்.

## 944. குளிகைக் காலத்தை அறிய எளிய வழி!

"சனியைத் தொட்டுப்பின் நோக்கிச் சென்றால் குளிகைக் காலத்தை அறியலாம்" என்னும் வாக்கியத்தை ஞாபகப்படுத்திக்கொண்டால் அன்றன்று உள்ள பகல் நேரத்தின் குளிகைக்காலத்தை அறிந்து கொள்ளமுடியும். "சனியைத்தொட்டுப் பின்நோக்கிச் சென்றால்" என்பதன் பொருள் சனிக்கிழமையிலிருந்து பின்னோக்கி வெள்ளி, வியாழன், புதன், செவ்வாய், திங்கள், ஞாயிறு என வரிசைப்படுத்திக் கொள்ள 1. சனி 6.00 முதல் 7.30 வரை 2. வெள்ளி 7.30 முதல் 9.00 வரை 3. வியாழன் 9.00 முதல் 10.30 4. புதன் 10.30 முதல் 12.00 வரை 5. செவ்வாய் 12.00 முதல் 1.30 வரை 6. திங்கள் 1.30 முதல் 3.00வரை 7. ஞாயிறு 3.00 முதல் 4.30 வரை எனக் குளிகையை மணியடிப்படையில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

## 945. ஜோதிடக் கலையின் இரகசியம்!

ஜோதிட சாஸ்திரம் ஒரு சமுத்திரம் ஆகும். அந்த ஜோதிடசாஸ்திரம் பரஹிதம், வாக்கியம், திருக்கணிதம் என மூன்று வகைப்படும். பரஹிதமும், வாக்கியமும் மஹரிஷிகளாலே கூறப்பட்டவை ஆகும். உலகம் பிறந்த நேரத்தைத் திதி, வார, நட்சத்திர, யோககரணங்களாகப்பிரித்து, அமுதமயமான ஸ்லோகங்களாகக் கூறப்பட்டது. அந்த மகரிஷிகளின் நேரத்தையே ஸ்திரமாய்க் கொண்டு ஜோதிடர்கள் கணிதம் செய்தார்கள். மஹரிஷிகளின் வாக்கியத்தைக்கொண்டு கணிக்கப்படுவதால் இதுவாக்கியம் எனப்பட்டது. கலிலியோ,

தூரதிருஷ்டிக் கருவி மூலமாய் ஆகாய வீதியின் விஸ்தீரணத்தை அளந்தார். அதில் உலாவுகின்ற கிரகங்களின் பரிமாணத்தைக் கணக்கிட்டார். இவ்வாறு அவர் கண்டதை ஆதாரமாய் கொண்டு கணிக்கப்பட்டதே திருக்கணிதம் ஆகும். திருக்கணிதம் என்பதற்குப் பார்த்துக் கணிதம் செய்வது என்பது பொருள் ஆகும். சிலர் வாக்கியமே சிறந்தது என்றும், சிலர் திருக்கணிதமே சிறந்தது என்றும் கூறுகின்றனர். இந்த வேளையில்தான் மறைந்த காஞ்சிகாம கோடிஸ்ரீசந்திரமௌலி சங்கராச்சாரியர் சுவாமிகள் ஒரு ஜோதிட மாநாடு நடத்தினார். அம்மா நாட்டில் இந்தியா முழுமையும் உள்ள மாபெரும் ஜோதிடர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் வாக்கியம் சிறந்ததா 'திருக்கணிதம்' சிறந்ததா என்று ஆராய்ச்சி நடத்தினார்கள். அதில் வாக்கியத்திற்கும், திருக்கணிதத்திற்கும் 17 நாழிகை வித்தியாசம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

வால்மீகி, வேதவியாசர் ஆகிய இருவரும் திதி, வாரம், நட்சத்திரம், யோகம் கரணம் ஆகியவைகளைக் கணிக்கும் விதத்தைக் கற்காலத்திற்குப்பிறகு வேதகாலத்திலேயே தெரிந்துகொண்டார்கள். சந்திரன் ஊர்ந்து வரும் வழியைக்கொண்டே 27 நட்சத்திரப்பெயர்கள் தொடுக்கப்பட்டுள்ளன. அவற்றையே பஞ்சாங்கத்திலும் கூறுகிறார்கள். எனவே, வானசாஸ்திரத்திற்கு மூலம், வேதமே. வானத்தில் அசைவளவற்று கிரகங்கள் எனப்பெயர் உண்டாயிற்று. ஜோதிடக்கணிதப்படி மேஷ இராசியிலிருந்து மறுபடி மேஷ இராசிக்குச் சூரியன் வருவதற்கு 365 நாள்கள் 15 நாழிகை 22 விநாடி ஆகிறது. 12 ராசிகள், 12 மாதங்கள் ஆகும். ஒரு நாளில் 12 இலக்கினங்கள் ஷயமாவது போலக் கணிக்கின்றோம். இலக்கினம் ஐந்து நாழிகை நீளமானது. ஒரு நாளைக்கு 60 நாழிகை என்றும் கணிக்கிறோம் கலியுகம்

வெள்ளிக்கிழமையன்றுதான் பிறந்தது என்று ஆன்றோர்கள் கூறிய ஸ்லோகத்தினால் ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்கள். இதனையே பாஸ்கராச்சாரியார் அவர்களும் கூறியுள்ளார்கள். தற்காலம் நாம் பஞ்சாங்கம் மூலம் திதி, வாரம், நட்சத்திரங்களையும், யோகம், கரணம், இலக்கினம் ஆகியவற்றையும் தெரிந்து கொள்கிறோம். இது பாஸ்கராச்சாரியாரின் கணிதத்தினாலேயே ஆகும். பாஸ்கராச்சாரியாரின் காலம் கி.பி.1062 ஆகும். வால்மீகி மகரிஷியும், வேதவியாசரும் தங்களது கணிதத்தையே ஆதாரமாய்க்கொண்டு இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றை எழுதினார்கள். இவர்கள் காலத்தில் கிழமைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. வேதத்தினைப் போல் அத்தியயனம் செய்ய 'வாக்கியமே' சுலபமானது எனப்பலரும் கருதுகின்றனர். ஆகமம், வைகானசம், பாஞ்சராத்ரம், சைவம், சிற்பம் ஆகியவை இந்த ஜோதிட கணிதத்தை ஆதாரமாய்க் கொண்டே மிளிர்கின்றன. சூரிய, சந்திர கிரகணங்களின் ஆரம்ப, மத்திய, முடிவுகாலங்களைக் கணிதம் செய்து சரியான முறையில் கிரகணத்தை எந்தப் பஞ்சாங்கம் குறிக்கின்றதோ, அந்தப் பஞ்சாங்கமே சிறந்தது என நூல் வல்லோர் கூறுவார்கள். அன்று ஞானிகள், மகரிஷிகள் தங்களது திருஷ்டியின் மூலம் கிரகணங்கள் ஏற்படும் காலங்களைக் கணித்துள்ளார்கள். அதனையே இன்றைய விஞ்ஞானம் ஆராய்ச்சி செய்து கூறுகிறது. ஞானிகளின் திருஷ்டியின் சக்திக்கு ஈடு இணையில்லை என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்!

### 946. போதக - வேதக - பாசக - காரக கிரக நிலை!

ஒருவரின் ஜாதகத்தில் நல்ல பலனைக் கொடுப்பவர் போதகன். நல்ல பலன்களைத் தடுப்பவன், வேதகன். உத்தமப்பலனைச் சேர்த்துக் கொடுப்பவன் பாசகன். அந்தந்

கிரகங்களின் மகாதிசையில் விசேஷமான இலாபத்தைத் தருபவன், காரகன். இனி ஒவ்வொரு திசைக்கும் போதகன், வேதகன், பாசகன், காரகன் யார் என்று தெரிந்துகொள்வோம். 1. சூரியதிசையில் சனிபகவான், பாசகன்; சுக்கிரன், வேதகன்; குருகாரகன்; செவ்வாய், போதகன் 2. சந்திர திசையில் சுக்கிரன், பாசகன், புதன் வேதகன்; சனிபகவான்; காரகன்; செவ்வாய் போதகன் 3. செவ்வாய் திசையில் சூரியன், பாசகன்; சந்திரன், போதகன்; புதன், வேதகன்; சனிபகவான், காரகன், 4. புதன் திசையில் குரு போதகன்; சந்திரன் பாசகன்; செவ்வாய், வேதகன்; சுக்கிரன், காரகன்; சனிபகவான், பாசகன். 6. சுக்கிரன் திசையில் குருபோதகன்; புதன், பாசகன்; சூரியன் காரகன்; சனி வேதகன் 7. சனிதிசையில் சந்திரன் போதகன்; செவ்வாய், வேதகன்; சுக்கிரன், பாசகன், குருகாரகன் ஆகும். இதன்படி கிரகங்களின் விவரங்களை மனத்தில் கொண்டே திசாபுத்தி பலன்களைக் கூறவேண்டும்.

## 947. சுபகாரியத்தின் இரகசியம்!

முக்கிய சுபகாரியங்கள் செய்யும் போது பஞ்சகம், தாராபலன், சந்திரபலன் ஆகியவற்றைப் பார்த்தே செய்ய வேண்டும். அதன்படி செயல்பட்டால் உத்தம பலன் கிட்டும். அதன் விவரம் பின் வருமாறு.

**1. பஞ்சகம் :** அசுவினி நட்சத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம் வரையிலும், பிரதமை திதிமுதல் அன்றைய திதிவரையிலும், ஞாயிறு முதல் அன்றைய கிழமை வரையிலும்; மேஷம் முதல் அப்போதைய இலக்கினம் வரையிலும் எண்ணிக்கையைக் கூட்டி ஒன்பதால் வகுக்க, மிச்சம் 3, 5, 7, 9 வந்தால் உத்தம பலனைக் கொடுக்கும். மற்றவை ஆகா.

2. தாராபலன் : எவர் சுபகாரியம் செய்ய விரும்புகிறாரோ அவர் ஜென்ம நட்சத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணி வந்ததொகையை ஒன்பதால் வகுத்து மீதியை ஒன்பதால் கழித்தால் மீதி 2, 4, 6, 8 வந்தால் அது மிகவும் உத்தமம் ஆகும். மற்றவை ஆகா.

3. சந்திரபலன் : சுபகாரியம் செய்ய விரும்புகிறவரின் ஜெனன இராசி முதல், சுபகாரியம் செய்யக்கூடிய தினத்தன்று சந்திரன் நின்ற இராசிவரைக்கும் எண்ணி வந்த தொகை 1, 3, 6, 7, 10, 11 என இருந்தால் அது உத்தமம் ஆகும். மற்றவை ஆகா.

## 948. மூஞ்சுறு குரலின் நன்மை தீமை?

மூஞ்சுறு வடமேற்குத் திசையை தவிர, வேறு எந்தத் திசையிலிருந்து ஒலி எழுப்பினாலும் அதனால் நன்மையே ஏற்படும்.

## 949. மார்கழி மாத வழிபாட்டின் இரகசியம்!

நமது நாட்டில் மார்கழி மாதத்தில் காலை வேளையில் கடவுளைத் தொழும் வழக்கம் உள்ளது. இதன் இரகசியம் என்ன தெரியுமா? நமது நாட்டில் இந்த மாதத்தில் அதிகாலையில் அடர்த்தியுள்ள பிராணவாயு நிறைந்த குளிர்ந்த காற்று வீசும்! அது, நம் உடலில் பட்டு ஆரோக்கியம் பெறவே, நமது முன்னோர்கள் காலைவேளையில் இறைவழிபாட்டையும் பஜனையையும் ஏற்படுத்தினார்கள். அதே போல், அந்த மாதத்தில் அதிகாலையில் குளிர்ந்த நீரில் குளித்தால் அது ஆரோக்கியம் தரும். அது பெண்களுக்கு மிகவும் உகந்தது என்பதால்தான் பெண்கள் அம்மாதத்தில் அதிக ஈடுபாட்டுடன்

செயல்படுவார்கள். இங்கு குறிப்பிடத்தக்கது, அந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் வெட்டவெளியில் உடல் வளைந்து கோலம் இடுவதாகும். இது நம் முன்னோர்கள் பெண்களின் ஆரோக்கியத்திற்காகச் செய்த ஓர் அற்புத வழியாகும்!

## 950. இந்தியா நள்ளிரவில் சுதந்திரம் பெற்றதன் இரகசியம்!

இந்தியாவிற்கு 15.8.1947 அன்று சுதந்திரம் வழங்குவதாய் ஆங்கில அரசு முன்கூட்டியே அறிவித்திருந்தது. சக்தி வாய்ந்த ஆங்கிலேயரை எதிர்த்து அஹிம்சை முறையில் போராடிச் சுதந்திரம் பெற்றோம் என இந்தியத்தலைவர்களும், சுதந்திரப் போராட்டவீரர்களும் மனம் மகிழ்ந்தனர். ஆனால், அதே சமயம் 15.8.1947 அன்று வெள்ளிக்கிழமை அஷ்டமியாய் இருப்பதால், அரும்பாடுபட்டுப் பெற்ற சுதந்தரத்தை நல்ல நாளில்தான் பெறவேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடு நம் தலைவர்கள் ஒன்றுகூடிக் கலந்து ஆலோசித்து, ஆங்கிலேயரை அணுகினர், ஒன்று, சுதந்திரத்தை 14 ஆம் தேதி கொடுங்கள் அல்லது 17 ஆம் தேதி நல்ல நாளன்று கொடுங்கள் எனக் கேட்டனர். ஆங்கிலேயர்கள் அதற்குத் திட்டவட்டமாய் மறுத்துவிட்டனர். அறிவித்த தேதியை மாற்ற இயலாது. வேண்டுமானால் விடிந்து கொடுக்கிறோம் என்று சொன்னதை மாற்றி எங்கள் கணக்குப்படி இரவு 12 மணிக்குத் தேதி மாறுவதால் 12 மணிக்கே கொடுத்துவிடுகிறோம் என்றனர். 14ஆம் தேதி இரவு ஸப்தமி விடிந்தால் அஷ்டமிவந்துவிடும் என்னும் அச்சத்தினால் முக்கிய தலைவர்கள் அனைவரும் மீண்டும் கலந்து ஆலோசித்து, இரவு 12 மணிக்குப் பெற்றுக்கொள்கிறோம் எனக் கூறிப்பெற்றனர். பின் டில்லி செங்கோட்டையில் இரவு 12 மணிக்கு நேரு நம் தேசியக் கொடியை ஏற்றினார்.

## 951. பெண்கள் அறிய வேண்டிய உண்மைகள்!

வாழ்வில் தரித்திரம் இல்லாது வளமுடன் வாழ பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய சிலவற்றை நமது சாஸ்திரங்கள் கூறியுள்ளன

1. முன்றானையைத் தொங்க விட்டு நடக்கக்கூடாது; இழுத்துச் செருக வேண்டும். முன்றானை ஆடினால் குடும்பமும் ஆடிவிடும்.

2. கோயிலில் சாமி கும்பிடும் போது பின்னங்கால்கள் இரண்டையும் சேர்த்துக்கொண்டு முன் நெற்றி தரையில் படுமாறு கும்பிட வேண்டும்.

3. கோயிலில் தீர்த்தம் வாங்கும் போது இடக்கைக்கும், வலக்கைக்கும் நடுவில் முன்றானை நுனியைவைத்துத் தீர்த்தம் வாங்க வேண்டும்.

4. சுமங்கலிப் பெண்கள் குளிக்கும் போது சிறிது மஞ்சளை உறைத்து முகத்தில் பூசிக்கொண்டு தான் தலை முழுக வேண்டும்.

5. குத்து விளக்கு ஏற்றும் போது ஒரு திரிமட்டும் இடக்கூடாது. இரு திரி இட்டு ஒரு முகம் ஏற்ற வேண்டும்.

6. காலையில் வாயிலில் சாணி தெளிக்க வேண்டும். அச்சாணி பழைய சாணியாய் இருந்தாலும் பரவாயில்லை; ஆனால், தண்ணீர் மட்டும் புதிதாய் எடுத்துச் சேர்த்துக் கலக்கித் தெளிக்க வேண்டும்.

7. கோலமிடும் போது தெற்கே பார்த்து நின்றுகொண்டு கோலமிடக்கூடாது. இடுகிற கோடும் தெற்குப்பக்கமாய்

முடியக்கூடாது. இரட்டை இழைக்கோலங்கள்தான் இட வேண்டும்.

## 952. தெரிந்து கொள்ள வேண்டிய சில ஜோதிட உண்மைகள்!

கிலாடியஸ் தாலமியின் கருத்துப்படி இந்தியாவின் ஜென்மஇராசி, மகரம், ஜென்ம இலக்கினம், கன்னியாகும்.

மேஷ இலக்கினம், விருச்சிக இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கும் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு; இராகு ஆதிக்கம் பெற்ற திருவாதிரை, சுவாதி, சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், மேஷ இராசியில் அடங்கிய அஸ்வினி, பரணி, கார்த்திகை முதல் பாததத்திலும் விருச்சிக இராசியில் அடங்கிய விசாகம் 4 ஆம் பாதம் அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரத்தில் தோன்றிவர்களுக்கும் செவ்வாய் தோஷம் இல்லை என்றாலும் இவர்களுக்குச் செவ்வாய்தோஷம் இருந்தால், அதற்குப் பொருத்தமான செவ்வாய்தோஷம் உள்ளவரை திருமணம் செய்து வைப்பதே சிறப்பு ஆகும்.

பிறந்த நட்சத்திரம் என்று அமைகிறதோ அன்றுதான் பிறந்த நாள் கொண்டாட வேண்டும்.

ஒரே கிழமையில் மூன்று திதி, மூன்று நட்சத்திரம், மூன்று யோகம் ஆகியன அமைந்தால் அந்நாள் யோகமான நாளாகும்.

ஒருவருக்கு மூன்று ஆண் பிறந்து நான்காவதாய்ப் பெண்பிறந்தாலும், அல்லது மூன்று பெண் பிறந்து நான்காவதாய் ஆண் பிறந்தாலும் தோஷம் ஆகும்.

சகடைதோஷத்திற்குப் பரிகாரமாய் பௌர்ணமி விரதம் இருப்பதும், யானைக்கு வெல்லம், பச்சரிசி ஆகியன கொடுப்பதும், சதுர்த்தி அன்று விரதம் இருப்பதும் நன்மை தருவனவாகும்.

சனியும் சுக்கிரனும் கூடி நின்றால் அவர் காமுகராய் இருப்பார். அதே போல், சுக்கிரன் நின்றஸ்தானத்தில் இருந்து ஏழில் சனி இருந்தாலும் அவர் காமுகரே.

ரிஷபஇலக்கினக்காரர்களுள் பெரும்பாலோர் எதற்கும் அஞ்சாமல் தமது சொந்தக் காலிலேயே நிற்கக் கூடியவர்களாய் இருப்பார்கள், எப்படியும் பிரபலமான வாழ்க்கையை வாழக்கூடியவர்களாகவே இருப்பார்கள்.

ஒரு குடும்பத்தில் மூத்தபிள்ளையாய் பெண் பிறப்பதே நல்லது என்று நமது சாஸ்திரம் கூறுகிறது.

சித்திரை, ஆடி ஆகிய மாதங்களில் ருதுவான பெண்ணின் வாழ்க்கை அவ்வளவு சிறப்பாய் இராது என நமது சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன.

குரு, கேது ஆகியன கூடி இருந்தாலும், கேதுவைக் குரு பார்த்தாலும் விசேஷம் ஆகும். இந்த அமைப்பு நேருவுக்கும் காமராஜ் அவர்களுக்கும் அமைந்திருந்தது.

ஒருவர் ஜாதகத்தில் சூரியனும் சந்திரனும் கூடி ஒரே இராசியில் இடம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் எழுத்துத்துறையில் சிறப்புற்று விளங்குவார். இந்த அமைப்பு அறிஞர் அண்ணாவுக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் உள்ளது.

ஒருவருக்கு ஜென்ன இலக்கினம் சிம்மமாய் இருந்தால், அந்த ஜாதகருக்கு அதுவே கடைசிப் பிறவி ஆகும். மறுபிறவி என்பது இல்லை.

ஒருவர் சகல அனுபவங்களும் பெற்று, அனுபவித்து விட்ட வயது எனக் குறிப்பிடப்படுவது எண்பது ஆகும்! இப்படிப்பட்ட எண்பது வயதுக்கு மேல் ஒருவர் இறந்தால் அச்சாவினை கல்யாணச்சாவு என்றும் 'மங்கலமரணம்' என்றும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஜென்ன காலத்தில் சுக்கிரன் நின்ற இராசியில் கோசாரப்படி குரு வந்தாலும், பார்த்தாலும் திருமணம் நடைபெறும்; ஆனால் திருமண வாழ்வு சுகம் அளிக்காது.

ஒருவர் ஜாதகத்தில் சுக்கிரனைச் சனி பார்த்தால் தம்பதிகளுக்குள் ஒற்றுமை இராது. அதே போல், சுக்கிரனும் குருவும் இணைந்து எட்டில் இருந்தால் கணவன் மனைவியரிடையே ஒற்றுமை குறையும். இருவருக்குள் பிரிவும் ஏற்படும்.

ஒரு கிரகம் தன்னுடைய வீட்டைப் பார்த்தால் உச்சபலனில் முக்கால் பங்குப் பலன் உண்டு. அதே போல் ஒரு கிரகம் தன் வீட்டுக்கு எத்தனையாவது இடத்தில் இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். 11 ஆம் இடமாகிய ஆதாயஸ்தானத்தில் இருந்தால் பலன் அதிகமாகவும், 12 ஆம் இடமாகிய விரயஸ்தானத்தில் இருந்தால் அந்தக் கிரகத்தின் பலன் குறைவாகவும் இருக்கும்.

## 953. பகல், இரவு இராசி வீடுகளைப் பற்றிய உண்மை

பன்னிரெண்டு இராசிவீடுகளுள் சில இராசி வீடுகளுக்குப் பகலில் அதிகப்பலம் ஏற்படுகிறது. சில இராசி வீடுகளுக்கு இரவில் அதிகப்பலம் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம் ஆகிய இலக்கினங்கள் பகலில் பிறந்தால் அவர்கள் வாழ்க்கை மிகவும் சிறப்பாய் அமையும். அதே போல், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் ஆகிய இலக்கினங்கள் இரவில் பலமுடையனவகும். இந்த இலக்கினங்கள் உடையவர்கள் இரவில் பிறந்தால் அவர்கள் வாழ்க்கை மிகவும் சிறப்பாய் அமையும். மீன இலக்கினத்தில் ஜாதகர்கள் பகலிலோ இரவிலோ மீன இலக்கினத்தில் ஜெனனமாகி இருந்தால் அவர்கள் வாழ்க்கை மிகவும் சிறப்பாகவே அமையும்.

## 954. குறள் கூறும் ஜோதிடம்!

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (குறள்-5) இந்தக் குறளுக்குக் கடவுளின் உண்மைப்புகழை விரும்பி, அன்பு செலுத்துகின்றவரிடம் அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை என்பது பொருள். ஆனால், இக்குறள் இறைபணி செய்து புகழ்பெறக் கூடிய வாய்ப்பு யாருக்கு உள்ளது என்பதை விளக்கும் ஜோதிட வாக்கியமாகும். இக்குறளை 1. இருள் 2. சேர் 3. இருவினையும் 4. சேரா 5. இறைவன் பொருள் சேர் 6. புகழ் புரிந்தார் 7. மாட்டு

1. **இருள்:** உண்மையில் இருள் என ஒன்று இல்லை. ஒளி இல்லையென்பதையே இருள் என்கிறோம். ஒளிமறைக்கப்படுமானால் அது இருளாகும்.

2. இருள்சேர் தினமும் ஒளி (பகல்) மறைந்து, இருள் (இரவு) வருகிறதே அதுவா? பூமியின் ஒரு பக்கத்தில் சூரிய ஒளிபடுவதால், மறுபாதியில் ஒளியின்றி இருளாய் இருக்கும். தினமும் பூமியின் சுழற்சியால் பகலும், இரவும் மாறி, மாறி அமைந்துகொண்டிருக்கும். இவ்வினையில் ஒளிமறைக்கப்பட்டு, இருள்சேரவில்லை. எனவே, இவ்வினையை இருள்சேர் வினை என்று கொள்ளமுடியாது. இருள்சேர் இருவினைகள் (ஃபினாமினா - Phenomena) அதாவது, ஒளியை மறைத்து, இருளைச் சேர்க்கக்கூடிய செயல்கள் யாவை?

3. இருள்சேர் இருவினை; ஒன்று கதிரவனில் (சூரியனில் இருள் சேர்க்கக்கூடியது. மற்றொன்று, முழுமதியில் (சந்திரனில்) இருள் சேர்க்கக்கூடியது.

சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் சந்திரன் வரும் போது பகலில் சூரியினில் இருள் சேரும் இதனைச் சூரிய கிரகணம் என்கிறோம். அன்று சூரியன் ஒளிவீசிக்கொண்டிருக்கும் போது சிறிது, சிறிதாய் சூரியனின் ஒளிமறைக்கப்பட்டு இருள் சேரத் தொடங்கும். சிறிது நேரத்தில் சூரியன் முழுமையும் மறைக்கப்பட்டு விடும். பின்னர், இருள் சிறிது, சிறிதாய் விலகி முழுச்சூரியனும் நன்கு ஒளிவிட்டுத்தெரியும். கதிரவனில் இருள் சேர்க்கும் இவ்வினையைச் ஜோதிடத்தில் இராகு என்கின்றனர். கதிரவனில் இருள் (இராகு) சேராதிருந்தால் ஜாதகன் நற்கதி அடைவான். சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமிவரும் போது, இரவில் பௌர்ணமி முழுமதியும் மறைக்கப்பட்டு இருள் சேரும். சந்திர கிரகணம் பௌர்ணமி அன்று தான் நடைபெறும். அன்று சந்திரன் முழுநிலவாய் நன்கு பிரகாசித்துக்கொண்டிருக்கும் போது சிறிது சிறிதாய்ச் சந்திரனின் ஒளிமறைக்கப்பட்டு, இருள்

சேரத்தொடங்கும். சிறிது நேரத்தில் சந்திரன் முழுமையாய் மறைக்கப்பட்டு இருள் சேரத் தொடங்கும். சிறிது நேரத்தில் சந்திரன் முழுமையாய் மறைக்கப்பட்டு இருள் சேர்ந்திருக்கும். பின்னர் இருள் சிறிதாய் விலகி, முழுச்சந்திரனுக்கும் நன்கு ஒளிவிட்டுத் தெரியும்.

முழுமதியில் இருள்சேர்க்கும் இவ்வினையைச் ஜோதிடத்தில் கேது என்கின்றனர். மனத்துக்குக் காரகனாகிய சந்திரனோடு கேது சேராதிருந்தால், ஜாதகன் மதியூகம் பெற்றிருப்பான். இவையிரண்டும் இருள்சேர்க்கும் இருவினைகளாகும். கதிரவனில் இருள்சேர்வதை,

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற்பட்டன்று இருள்" (குறள் - 999)

என்னும் குறளிலும், முழுமதியினில் இருள்சேர்வதை,

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண்ட டற்று" (குறள் - 146)

என்னும் குறளிலும் வள்ளுவர் எடுத்தாண்டுள்ளார்.

4. இருள்சேர் இருவினையும் சேரா. 'சேரா' என்றால் அருகில் இல்லாமல், தொலைதூரத்தில் அமையும் என்று பொருள். இருள்சேர் இருவினையும் சேரா என்றால் இராகுவோ, கேதுவோ நம்முடன் சேராமல் தொலைவில் இருக்கும் என்று பொருள். அதாவது, ஒருவர் இலக்கினத்திலிருந்து, இவை இரண்டும் அதிகபட்சமாய் விலகி அமைந்திருக்கும் என்று பொருள். ஜோதிடத்தில் மொத்த அமைப்பே பன்னிரு இராசிக்கட்டங்கள் தாம். எனவே, இலக்கினத்திலிருந்து

பன்னிரண்டாம் இராசியில், இருள்சேர்வினை அமையும் என்று பொருள். ராகுவும், கேதுவும் ஒன்றிற்கு ஒன்று எதிர்எதிராய் ஒன்றிற்கு ஏழாம் இராசியில் மற்றது அமையும். எனவே, இருள்சேர் இருவினையும் சேரா என்றால், ஒருவர் இலக்கினத்திற்கு ஆறாம் இடத்தில் இராகுவும், பன்னிரண்டாம் இடத்தில் கேதுவும் அமையும் என்று பொருள்.

5. இறைவன் பொருள் சேர். இறைவனிடம் பொருளைச் (அருளை) சேர்க்கும் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) போன்ற திருப்பணிகள் செய்தலே, ஆலயத்தில் உள்ள விக்கிரங்களை இறைப்பொருளாய் இறைத்தன்மையுடையதாய் மாற்றக் கூடிய செயல்களாகும்.

6. புகழ்புரிந்தார் இறைவனுக்குத்தொண்டு செய்வதனால் மக்களிடம் கிடைக்கக்கூடியது புகழாகும். அது கிடைக்குமளவிற்குப் பணியை விரும்பிச்சிறப்புடன் செய்திருத்தல் வேண்டும். ‘புரிதல்’ என்றால் விரும்பிச் செய்தல் என்று பொருள்.

7. மாட்டு : ‘மாட்டு’ என்றால் புகழ்புரிந்தவரிடம் அல்லது புகழ் புரிந்தார் பக்கம் என்று பொருள்.

இந்தக் குறளின் பொருள் என்னவென்றால், இறைவனுக்குப் பொருள் சேர்கின்ற பணிகளை, செயல்களைச் செய்து புகழ்புரிவோரிடம், இருளைச் சேர்க்கும் இருவினைகளான இராகுவும், கேதுவும் சேராமல் விலகியிருந்து, அவர் கதியிலும், மதியிலும் இருள் சேராது ஒளி வீசும் என்பதாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருக்குறளில் வெளிப்படுத்திய திருவள்ளுவருக்கு ஜோதிடம் பற்றியதாக்கமும், விஞ்ஞான ரீதியான பார்வையும் இருந்திருக்கிறது என்பதை

எண்ணிப் பார்க்கையில் வியப்பும், பெருமிதமும் ஒரு சேர ஏற்படுகின்றனவல்லவா?

## 954. லீப் வருட இரகசியம்!

ஒரு வருடம் என்பது 365¼ நாள்களைக் கொண்டது. ஆனால் நாம் 365 நாள்கள் என ஒரு வருடத்திற்கு கணக்கிடுகிறோம். மீதி உள்ள ¼ பகுதியை மொத்தமாயக் கணக்கிடும் வகையில், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை 366 நாள்கள் அடங்கிய 'லீப்' ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த வருடத்தில் மட்டும் பிப்ரவரி மாதத்துக்கு 29 நாள்கள் ஆகும். ஒரு வருடத்தின் எண் நான்கால் வகுக்கப்பட்டால் அது லீப் ஆண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஆனால், அந்தக் கணக்கீட்டிலும் ஒரு சிக்கல் இருப்பது பலருக்கும் தெரியாத ஒன்றாகும். 1700 என்பது நான்கால் வகுபடும் எண்தான். ஆனால் அந்த வருடம் லீப் ஆண்டு அன்று. ஏன் தெரியுமா? அடுத்தடுத்து வரும் நான்கு நூறாவது ஆண்டுகளில் (உதாரணமாய் 1600, 1700, 1800, 1900) முதலாவது நூறாம் ஆண்டு (1600) லீப் ஆண்டாய் இருந்தால் அதை அடுத்துவரும் மற்ற மூன்று நூறாவது ஆண்டுகளும் (1700, 1800, 1900) சாதாரண ஆண்டுகள் தாம். அவை நான்கால் வகுபடக்கூடியவை தாம். ஆனாலும், அவை லீப் ஆண்டுகள் அல்ல 1600க்கு பிறகு 400 ஆண்டுகள் கழித்து வந்துள்ள இந்த நூறாவது (2000) ஆண்டுதான் லீப்வருடம். இனிமேல், அடுத்த லீப் நூறாவது ஆண்டு இன்னும் 400 ஆண்டுகள் கழித்து 2400 இல் தான் வரும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். அந்த வகையில் 2000 ஆம் ஆண்டுக்குக் கூடுதல் சிறப்பு கிடைத்துள்ளது. ஆண்டுக்கணக்கு அடிப்படையில் ஒவ்வொரு 400 ஆண்டுகள் முடிவிலும் மூன்று நாள்கள் (72 மணி நேரம் கூடுதலாய்ச் சேர்ந்துவிடுவதால் அதைக்

கழிப்பதற்காக இந்த முறை (மூன்று லீப் ஆண்டு ரத்து) கடைப் பிடிக்கப்படுகிறது.

## 955. உலகின் வயது பற்றிச் சொன்ன நம் முன்னோர்கள்!

நமது உலகமும், அதனுடன் சேர்ந்த சூரியக்குடும்பம் என்று வழங்கப்படும் மற்ற கிரகங்களும் எப்போது எப்படித் தோன்றின என்னும் மர்மமுடிச்சு இந்த 2000 ஆம் ஆண்டில் மெதுவாய் அவிழத் தொடங்கியிருக்கிறது. மிக அடர்த்தியான, மிகச்சிறிய அணுப்பொருள் 800 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வெடித்துச் சிதறியது. அதிலிருந்து ஹைட்ரஜன், ஹீலியம், லிதியம் ஆகியவை உருவாகின. அவை ஒருங்கிணைந்து படிப்படியாய்க் குளிர்ச்சி அடைந்தன. பின்பு ஏறத்தாழ 500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உலகமும் மற்றக் கிரகங்களும் உருவாகி இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது, உலகின் இன்றைய வயது 450 கோடி ஆண்டு முதல் 500 கோடி ஆண்டுகளாய் இருக்கலாம் என்பது விஞ்ஞானிகள் கணிப்பு. ஆனால் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவான நமது இந்து மத சாஸ்திரம் இதனை அப்போதே கண்டுபிடித்தது அதிசயமான ஒன்றாகும்! நமது சாஸ்திரம் கூறுவது என்னவென்றால், "அனைத்துக் கிரகங்களையும் கொண்ட நமது பிரபஞ்சத்தின் ஆயுள் கால கல்பம் எனப்படும். அது கலியுகம், துவாபரயுகம், திரேதாயுகம், கிருதயுகம் ஆகிய நான்கு யுகங்களைக்கொண்டது. சதுர்யுகம் அல்லது மகாயுகம் என்ற ஆயிரம் மகாயுகங்கள் கொண்டதுதான் ஒரு கல்பம் ஆகும். கலியுகத்தின் ஆயுள் நான்கு இலட்சத்து 32 ஆயிரம் ஆண்டுகள். துவாபரயுகம் இதைப்போல இருமடங்குமாகும். அதாவது, எட்டு இலட்சத்து 64 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். திரேதாயுகம் என்பது

கலியுகத்தைப் போல மூன்று மடங்கு. அதாவது, ஆயுள் காலத்தைக் கொண்டது. தேன் ஆயுள் காலம் 12 இலட்சத்து 96 ஆயிரம் ஆண்டுகள். இருதயுகம் என்பது கலியுகத்தைப்போல நான்கு மடங்கு ஆயுள் காலத்தைக் கொண்டதால் அதாவது 17 லட்சத்து 28 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். எனவே, இந்த நான்கு யுகங்களின் ஆயுள்காலம் அதாவது ஒருமகாயுகத்தின் ஆயுள் காலம் 43 இலட்சத்து 20 ஆயிரம் காலம். 43 இலட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகள் கல்பம் என்பது ஆயிரம் மகாயுகங்கள் என்பதால், இப்போதைய பிரபஞ்சத்தின் வயது 432 கோடி ஆண்டுகள். நமது முன்னோர்களின் கண்டுபிடிப்பும் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பும் ஒத்துவருவது, ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்!

## 956. நவக்கிரகத்தின் பிள்ளைகள்!

1. சூரியன் பிள்ளை, காலன் 2. சந்திரனின் பிள்ளை, தூமம் 3, செவ்வாயின் பிள்ளை, பரிதி 4. புதனின் பிள்ளை, அர்த்த பிரகரன் 5. குருவின் பிள்ளை, எமகண்டம் 6. சுக்கிரனின் பிள்ளை, வயதீபாதாம் 7. சனியின் பிள்ளை, குளிகன் (மாந்தி) 8. இராகுவின் பிள்ளை, இந்திசாபம் 9. கேதுவின் பிள்ளை, தூமகேது

## 957. பலமடங்கு புண்ணியம் நிறைந்த காலம்?

ஞாயிற்றுக்கிழமையில் ஏற்படும் சூரிய கிரகணமும், திங்கட்கிழமையில் ஏற்படும் சந்திர கிரகணமும் அதிகச் சக்தி உள்ள நாள்கள் ஆகும். இதற்குச் சூடாமணி கிரஹணம் என்று பெயர். மற்ற நாள்களில் ஏற்படும் சூரிய, சந்திர கிரகணங்களால் எவ்வளவு புண்ணியம் ஏற்படுமோ, அதைவிடப் பல மடங்குப் புண்ணியம் நிறைந்த காலம் ஆகும் இது.

## 958. அமாவாசை நோன்பின் இரகசியம்!

தாய், தந்தை இல்லாதவர்கள் அமாவாசையன்று தங்கள் முன்னோர்களை நினைக்க வேண்டும். இரவில் உணவு உண்ணக்கூடாது. மரக்கரி உணவுதான் சாப்பிட வேண்டும். பசு, காக்கை, தானம் வாங்குவோர், பிச்சைக்காரர் ஆகியவர்களுக்கு உணவுதர வேண்டும். சந்நியாசிகளை அழைத்து இந்த நாளில் சிலர் உணவிடுவர். அதைவிட குடும்பத்தவர்களுக்கு அமுதூட்டுவது தான் சிறப்பு. இறந்தவர் சந்நியாசியாய் இருந்தால் அப்போது சந்நியாசிகளுக்குச் சாப்பாடு இடலாம். அகத்திக்கீரை, கல்நீக்கிய பச்சரிசி, பாசிப்பருப்பு, எள், வெல்லம் ஆகியவற்றை ஒன்றாய்க் கலந்து பசு மாட்டிற்கு வைத்தால், பசுவின் மூலம் பிதுர்கள் சந்தோஷமடைவார்கள். எதுவும் இயலாத ஏழைகள் காக்கைக்கு முடிந்ததை இட்டால் போதும். பிதுர்தோஷம் உள்ளவர்கள் அமாவாசை நோன்பு இருப்பதும், பசுவிற்கு உணவு தருவதும் அவசியம். மேலும் அவர்கள் அமாவாசையன்று பகல் பதினொறு மணிக்குமேல் தான் சாப்பிட வேண்டும். அதுவும் கண்டிப்பாய்க் காகத்திற்கு உணவு வைத்த பிறகு தான் சாப்பிட வேண்டும். என்று கலியுக மகான் ‘துர்க்கைச் சித்தர்’ அவர்கள் கூறியுள்ளார்கள்.

## 959. பொருள்களை வாங்க ஏற்ற காலம் எது?

அசுவதி, சித்திரை, சுவாதி, திருவோணம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் உள்ள நாள்கள் பொருள்கள் வாங்க ஏற்ற காலமாகும். ஞாயிற்றுக்கிழமையும் புதனும் பொருள்கள் வாங்க ஏற்ற நாள்கள் ஆகும்.

## 960. பொருள்களை விற்க ஏற்ற காலம்!

திங்கள்கிழமையும், வியாழக்கிழமையும் பொருள்களை விற்க ஏற்றநாள்கள் ஆகும். சிறப்பாகப் பரணி, கிருத்திகை, ஆயில்யம், பூரம், விசாகம், பூராடம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் ஏற்றன. நல்ல விதமாய் விற்பனை ஆகும்.

## 961. கடன் வாங்கக்கூடாத நாள்கள்!

மாதப் பிறப்பு, அஸ்தநட்சத்திரம் அமையும் ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகிய நாள்களில் கடன் வாங்கக்கூடாது. வாங்கினால் தீராத கடனாய் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

ஆனால், செவ்வாய்க் கிழமையன்று கடனைத் திருப்பிக் கொடுத்தால் சீக்கிரம் கடன் அடையும். எக்காரணம் கொண்டும் புதன் கிழமையன்று கடனைத் திருப்பித்தரக்கூடாது.

## 962. வழக்குகளில் வெற்றி தரும் நாள்கள்!

அசுவதி, பரணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், விசாகம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் ஆகிய நட்சத்திரங்களும் சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி ஆகிய திதிகளும் செவ்வாய், சனிக்கிழமை ஆகிய கிழமைகளும் இணைந்து வரும் நாள்கள் வழக்குகளில் வெற்றியைத் தரும்.

## 963. பிறந்த நட்சத்திரத்தில் செய்யக்கூடியவை!

அவரவர் பிறந்த நட்சத்திரத்தை ஜென்ம நட்சத்திரம் என்று சொல்லுவோம். அந்த நட்சத்திரம் அமையும் நாளில்

கல்வி கற்கத் தொடங்கலாம்; நிலம், நீச்சுகள் வாங்கலாம்; குழந்தைகளுக்கு முதல்சோறு கொடுக்கலாம். பூனூல் அணிந்து கொள்பவர்கள் அணிந்து கொள்ளலாம். சாந்தி முகூர்த்தம், யாகம் போன்றவற்றைச் செய்யலாம்.

## 964. பிறந்த நட்சத்திரத்தில் செய்யக்கூடாதவை!

வளைகாப்பு, சீமந்தம், ஆகியவற்றைப் பிறந்த நட்சத்திரத்தில் செய்யக்கூடாது; சண்டைக்குப் போனால் தோல்வி வரும்; நீண்ட நாள் வளர்த்த முடிகளை எடுக்கக்கூடாது; நோய்க்கு மருந்து சாப்பிட ஆரம்பிக்கக்கூடாது. அன்று வெளியூர்ப்பயணங்கள், கடல் கடந்த வியாபாரப் பயணங்கள் வெற்றித்தராது. ஆண்கள் தங்கள் பிறந்த நட்சத்திரத்தில் திருமணம் செய்துகொள்ளக்கூடாது. பெண்கள் திருமணம் செய்துகொள்ளலாம்.

## 965. திருமணத்திற்குப் பிறகு செய்யக்கூடாதவை!

திருமணம் நடந்தபிறகு அந்த வீட்டில் ஆறுமாதத்திற்குள் குழந்தைகளுக்குக் காதுகுத்தக்கூடாது. பூணூல் அணியக்கூடாது, நதிகளைக் கடந்து செல்லும் தீர்த்தயாத்திரையை மேற்கொள்ளக் கூடாது. புதுவீட்டிற்குக் குடிபோகக்கூடாது.

## 966. யாக்ஞவல்கிய மகரிஷி காட்டிய வழி!

ஒரு குடும்பத்தில் நல்ல காரியங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கும் போது இறப்புத் தோஷத்தால் காரியம் தடங்கலாகிவிடும். அந்தக் காலங்களில் ஸ்ரீமகாகணபதியான விக்கின விநாயகரை முறைப்படி பூஜை செய்து, அதன் பிறகு சாந்திக்கருமங்களைச் செய்ய வேண்டும். பின்பு, அன்னதானம்

செய்துவிட்டு, சுபகாரியங்களை ஏற்ற முகூர்த்தங்களில் செய்யலாம் என யாக்ஞல்கிய மகரிஷி கூறியுள்ளார்.

## 967. சந்தி பழுக்கும் நேரம்!

சந்தியா காலத்தில் வீட்டில் யாரும் தூங்கக்கூடாது. அதுவும் வாசலுக்கு நேரே தூங்கக்கூடாது. சீட்டு தாயம், பல்லாங்குழி போன்ற விளையாட்டுகளை ஆடக்கூடாது. அவ்வாறு செய்வது அளவற்ற செல்வத்தின் அழிவிற்குக் காரணம் ஆகிவிடும். பெண்கள் தலையை விரித்துக்கொண்டு வாசலில் நிற்பதும், வாசலுக்கு நேர் அமர்ந்திருப்பதும் கூடாது. பெண்கள் தலைவாரிப் பூச்சூடி, திலகம் தரித்து, சந்தோஷமாய் மாலை நேரத்தில் விளங்கினால் வராத திருமகளும் வந்து சேர்வாள். இதைப்போலவே, சாயரக்ஷகளில் சாப்பிடக்கூடாது. உணவு ஒழுங்காய் ஜீரணம் ஆகாது. மேலும், இரவு பூஜை செய்வதாய் இருந்தாலும், சந்தியாகால விளக்கை ஏற்றாமல் இருக்கக்கூடாது. விளக்கின் பாதத்தில் பூவைப்பது, பூஜைப் படங்களுக்கு பூக்கள் வைப்பது சிறப்பு. மாலையில் ஏதாவது நிவேதனம் செய்ய வேண்டும். வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமைகளில் சுண்டல் செய்து, நிவேதித்து, வெளியில் உள்ளவர்களுக்குத் தந்துவிட்டுத் தாங்களும் சாப்பிடலாம். இயலாத நிலையில் பால் அல்லது கல்கண்டையாவது நிவேதனம் செய்ய வேண்டும். வெள்ளி, செவ்வாய் ஆகிய நாள்களில் மாலையில் தாம்பூலம் நிவேதனம் செய்வது சிறப்பாகும் என்று 'கலியுககான்' துர்க்கைச் சித்தர் தெரிவிக்கிறார்!

## 968. நவக்கிரக அஞ்சல் தலைகள் ஸ்டாம்புகள்!

இராசி மண்டலம், கிரகங்கள் என்னும் தலைப்பில் இஸ்ரேல் என்னும் நாடு 1961 ஆம் வருடம் பன்னிரண்டு

அஞ்சல்தலைகளை வெளியிட்டது. மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம் எனத் தொடங்கி எல்லா இராசிகளுக்கும் தனித்தனியே அஞ்சல் தலைகளை வெளியிட்டுள்ளது. உலகத்தில், முதன்முதலாய் இராசிகளுக்கென வெளியிட்ட நாடு இஸ்ரேல் தான்!

## 969. வடக்கே தலைவைத்துப் படுக்கக்கூடாது- ஏன்?

சூரியனிலிருந்து புறப்படும் ஈர்ப்புச் சக்தியானது, தன்னைச் சுற்றியுள்ள கோள்களை முறைப்படுத்தி வைத்திருக்கிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். சூரியனின் உஷ்ண சக்தியால் பூமி ஒரு புறம் சூடேற்றப்பட்டுக் கொண்டு மறுபுறம் குளிரடைந்து கொண்டும் இருப்பதை நாம் அறிவோம். பூமத்தியரேகை அருகில் காந்த ஊசியை வைத்தோமேயானால், அந்த ஊசி சமநிலையில் வடக்கு தெற்கைக் காட்டும் விந்தையைக் காண்கிறோம். ஆனால் அந்த ஊசியை வடதுருவத்திற்கு அருகில் கொண்டுபோனால் காந்தஊசி செங்குத்தாய் நிற்பதைக் காணலாம். நம் உடல் முழுவதிலும் இரும்பின் அமைப்பு இல்லாவிட்டாலும், நமது இரத்தத்தில் மிகுந்த இரும்புச் சத்துள்ள அணுக்கள் இருப்பது கண்கூடு. நம் கால்கள் பூமியைச் சதா சர்வகாலம் தொட்டுக்கொண்டே இருப்பதாலும், நமது இரத்தத்தில் சிறிதளவு இரும்பு கலந்திருப்பதாலும், இந்தக் காந்த சக்தி நம் உடம்பில் கொஞ்சம், கொஞ்சமாய் ஏற்றப்படுகின்றது. கால்கள் தென்துருவத்தின் தன்மையையும், தலை வடதுருவத்தின் சக்தியையும் தாமே பெற்றுவிடுகின்றன. எனவே, நமது உடல் ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் இருக்க வேண்டுமானால் நம் உடலில் ஏற்பட்டுள்ள காந்த சக்திக்குக் கேடின்றிப் பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா? எனவே, நம்

கால்களை வடக்கு நோக்கியும், தலையைத் தெற்கு நோக்கியும் வைத்துப் படுத்துறங்க வேண்டும் என்பது இதிலிருந்து புலனாகிறது அல்லவா? அதனால்தான் நம் முன்னோர்கள், "தெற்கே தலைவைத்துப்படு ." என்று சொல்லியிருக்கிறார்கள். இதனையே இன்றைய விஞ்ஞானமும் ஆராய்ச்சியின் மூலம் வடக்கே தலைவைத்துப் படுக்க வேண்டா என்றும் படுத்தால் உடல்சோர்வு பெறும் என்றும் கூறியுள்ள நமது சாஸ்திரம் சொன்ன ஒவ்வொன்றும் இன்று விஞ்ஞான பூர்வமாய் நிருபிக்கப்பட்டுக் கொண்டிருப்பது நமக்குப் பெருமை தரத்தக்க விஷயம் ஆகும்.

## 970. எப்படி அன்னை, தந்தைக்குப் பலன் சொல்ல வேண்டும்?

இரவில் குழந்தை பிறந்தால் சந்திரனைக் கொண்டும், பகலில் குழந்தை பிறந்தால் சுக்கிரனைக் கொண்டும் அன்னைக்குப் பலன் சொல்ல வேண்டும்.

தந்தைக்கு, இரவில் குழந்தை பிறந்தால் சனியைக்கொண்டும், பகலில் குழந்தை பிறந்தால் சூரியனைக் கொண்டும் பலன் சொல்ல வேண்டும்.

## 971. மகாபாரதமும் ஜோதிடமும்!

பஞ்சபாண்டவர்களுள் ஒருவர் சகாதேவர். அவர் அதர்வணவேதத்தை நன்கு கற்றுணர்ந்திருந்தார். அவர் தாம் மகாபாரதயுத்தத்தைத் தொடங்குவதற்கான முகூர்த்த நாளைத் தெரிவித்தார் என்பதற்கான சான்றுகள் மகாபாரதத்தில் உள்ளன. மகாபாரத யுத்தமானது துவாபரயுக முடிவில், சாலிவாகன

சகாப்தம் ஆரம்பிப்பதற்குச் சுமார் 4122 வருஷங்களுக்கு முன்பு அதாவது கி.மு. 4045 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததாய் ஊகிதறிய முடிகிறது. அப்படியானால், இன்றைக்குச் சற்றேறக் குறைய ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சோதிட ஆராய்ச்சி நம் நாட்டில் இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது.

## 972. ஜூலியஸ் ஸீசரும் சோதிடமும்!

ஜூலியஸ் ஸீசர் சக்கரவர்த்தி எப்போதும் ஜோஸ்யம் பார்த்தே போரிட்டார், வெற்றிகளும் பெற்றார்! ஆனால் அவருக்கு ஜோஸ்ய கணித நிபுணராய் இருந்த ஸ்புரினா என்பவர், "நீங்கள் மார்ச் ஏழாந்தேதிக்குப் பிந்திய எட்டாவது நாள் மரணம் அடைவீர்கள்" என்று எச்சரித்ததை ஸீஸர் அலட்சியம் செய்தார். சோதிடர் குறிப்பிட்ட நாள் வந்தது. அப்போது அரசவைக்குப் புறப்பட்ட ஸீசர் சோதிடரைப் பார்த்து, "இன்று நான் இறந்துவிடுவேன் என்று கூறினீர்களே அப்படி நடக்கவில்லையே" என்று கூறி நகைத்தான். அதற்கு ஜோதிடர் ஸ்புரினா "இன்றைய நாள் தொடங்கியுள்ளது உண்மையே; ஆனால் அது இன்னும் முற்றுப் பெற வில்லையே" என்றார். அதை அலட்சியம் செய்துவிட்டுச் சென்ற ஸீசர் அன்றே கத்தியால் குத்துண்டு இறந்தான்! ஜோதிடம் பொய்ப்பதில்லை என்பதற்கு உலக வரலாற்றில் இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

## 973. மகா அலெக்ஸாண்டரும் சோதிடமும்!

மகா அலெக்ஸாண்டர் அரசவையில் சோதிடர் பலர் இருந்தார்கள். அப்போது அலெக்சாண்டர் பாபிலோன் நகரிலிருந்து திரும்பி வந்து இருந்த சமயம். அப்போது இருந்த

ஜோதிடர்கள் அலெக்ஸாண்டரிடம், "அந்த ஊரிலேயே விஷமிடப் பெற்று நீங்கள் மரணம் அடைவீர்கள்" என்று கூறினார்கள். அதுபோலவே, அலெக்ஸாண்டர் காந்தம் இழுத்த இரும்புபோல் சில நாளில் அதே நகருக்குப் போய் அப்படியே மாண்டார்! ஜோதிடம் உண்மையானது!

## 974. நெப்போலியனும் ஜோதிடமும்!

மிலிலெனார் மாண்ட் என்ற பிரபல குறிகாரி எப்போதும் நெப்போலியனுக்குக் குறிசொல்லுவாள். "மாஸ்கோ மீது படையெடுக்க வேண்டா" என்று அவள் சொன்னாள். அந்த எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் படையெடுத்துத் தமது மகத்தான சேனைக்குப் பேரழிவைத் தேடிக் கொண்டார், மாவீரர் நெப்போலியன். இதுவும் ஜோதிடத்தை உண்மையாக்கிய ஒரு சம்பவம்.

## 975. சரித்திரத்தை உண்மை ஆக்கிய ஜோதிடம்!

வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைப் பார்த்து, "நீ விஜயநகர சாம்ராஜ்ஜியத்தில் பெரும் பதவி பெறுவாய்" என்று சோதிடர் ஒருவர் கூறியபடியே அரியநாதர் என்ற அச்சிறுவன் தளவாய் அரியநாதர் ஆனான். அதே போல் நவநந்தர்களால் மனம் நொந்து வெளியேறிய கௌடல்யர் என்ற சாணக்கியர், ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த முரா வமிசத்துச் சிறுவனின் முகக்குறி கண்டு, அவனைத் தம்முடன் அழைத்துச் சென்று, அவனையே மௌரிய சாம்ராஜ்ஜியத்தின் அதிபதியாக்கினார். அம்மன்னன்தான் சந்திரகுப்தன் ஆவான். இது சாமுத்திரிகா லட்சணம் என்னும் ஜோதிடக்கலைப்படி கூறப்பட்டதாகும்.

## 976. ஆருடம் வென்றது!

கி.பி 1066 இல் வில்லியம்ஸ் என்ற மன்னன் இங்கிலாந்து நாட்டின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிவிடத் திட்டமிட்டான். தன் அரண்மனை ஜோதிடரை அழைத்து அது பற்றி ஆலோசனை கேட்டான். மன்னரின் ஜாதகம் மற்றும் அன்றைய கிரகநிலை ஆகியவற்றினையெல்லாம் அலசி ஆராய்ந்து கணக்கிட்டுப் பார்த்த ஜோதிடர், "900 போர்க்கப்பல்களைக் கொண்டு போர்புரிந்தால் வெற்றி நமக்கே கிட்டும். அப்போரில் நம்படையில் வீரர்கள் காயமடைவார்கள். ஆனால், ஒருவர் மட்டுமே இறப்பார்" என்றார். மன்னர் வில்லியம்ஸ் அந்த ஜோதிடர் சொன்னபடியே நல்ல நாள் பார்த்து, அன்று 900 போர்கப்பல்களைக் கொண்டு இங்கிலாந்து நாட்டின் மீது போர்தொடுத்து வெற்றி பெற்றார்; இங்கிலாந்தையும் எளிதில் கைப்பற்றினார். ஜோதிடர் சொன்னபடியே அந்தப் போரில் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் காயமடைந்தனர். ஒருவர் மட்டும் வீர மரணம் அடைந்தார்.

## 977. அமெரிக்க ஜனாதிபதிகளும் சோதிடமும்!

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான வாஷிங்டன், அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்த ஜனாதிபதியான தாமஸ் ஜெஃபர்ஸன் ஆகியோர் சிறந்த சோதிடர்களே. மேலும் அமெரிக்க ஜனாதிபதியான தியொடோர் ரூஸ்வெல்ட்டும் சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கைகொண்டிருந்தார். அவர் ஒரு சதுரங்கப் பலகை ஒன்றின்மீது தமது ஜாதகத்தை வரைந்து வைத்திருந்தார். அதனை ஆய்ந்து பலன் அறிந்தே எந்தக் காரியத்தையும் செய்வார். மேலும், அமெரிக்க விஞ்ஞானியும்,

சிறந்த இராஜ தந்திரியும், தத்துவசாஸ்திரியுமான பெஞ்சமின் பிராங்க்ளின் சிறந்த சோதிடரும் ஆவார். அவர் தமது நண்பரின் மரணத்தை முன் கூட்டியே கணித்துச் சொன்னார். அதன்படி அவரது நண்பரும் மரணம் அடைந்தார். அதே போல், அமெரிக்கநாட்டின் கொடியையும், 'கோட்-அவ்-ஆர்ம்ஸ்' சின்னத்தையும் சோதிட ரீதியாய் சுபவேளை பார்த்தே தயாரித்தார்கள்.

## 978. தெரியுமா இந்தச் செய்தி!

15 ஆம் நூற்றாண்டில், பிரான்ஸில் வாழ்ந்த ஜோன் - ஆப்- ஆர்க் என்று சொல்லப்படும் ஆர்லியன்ஸ் பெண்மணி, வெற்றி பற்றி குறி சொல்வதற்காகப் படைத்தலைவர்களால் அழைத்துச் செல்லப்பட்டவள்தான்.

போப்பாண்டவராயிருந்த பலர் சோதிடர்களே. இரண்டாவது ஜூலியஸ் என்ற போப்பாண்டவர், தாம் பட்டத்துக்கு வரப்போகிற நாளை முன் கூட்டியே சோதிடத்தின் மூலம் அறிந்து சொன்னவர். "நாலாவது ஸிக்ஸ்ட்ஸ்" என்ற போப்பாண்டவர், சோதிடப்படி நேரம் பார்த்தே யாருக்கும் பேட்டி அளிப்பார்.

ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்ட நாள் 'சனிக்கிழமை' ஆகும்.

யாரையும் 'சனியனே' என்று திட்டாதீர்கள். அதனால் உங்களுக்குப் பல கெடுதல்கள் ஏற்படும். எச்சரிக்கை!

இராகு, கேது பரிகாரத்துக்கு உரிய தலம் திருப்பதிக்கு அருகே உள்ள காளஹஸ்தி ஆகும். அங்கு பரிகார பூஜை

செய்வதற்கு ஏற்ற மிகச்சிறப்பான நாள், அமாவாசையன்று அமையும் திங்கள் கிழமை ஆகும்.

துக்க காரியங்களுக்குக் குளிசம் ஆகாது. அதைப் பார்த்தே செய்ய வேண்டும்.

பிரம்ம முகூர்த்தத்தை 'பஞ்ச உஷக்காலம்' என்று சொல்லுவார்கள்.

## 979. அரச மரம் சுற்றுவதன் அர்த்தம் என்ன?

"அரச மரத்தைச் சுற்றிவிட்டு அடிவயிற்றைத் தடவிய கதை" என்று சொல்வார்கள். அதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. உலகம் மூன்று கூறாய் உள்ளது. அக்கூறுகள் திடம், திரவம் நீராவியாகும். இவற்றுள் திடப்பொருள் ஒரு மடங்காகவும் திரவப்பொருள் இருமடங்காகவும் நீராவிப்பொருள் நான்கு மடங்காகவும் உள்ளன. இது உலகத்தின் உட்கூறு. இதே உட்கூறுதான் மனித உடம்பிலும் அடங்கியுள்ளது. அதாவது திடப் பொருள் கபமாகவும், திரவப்பொருள் இரத்தமாகவும் பித்தமாகவும், நீராவிப்பொருள் வாதமாகவும் உள்ளன. இவ்வறை நாடிபிடித்து அறிந்து வாதம் ஒரு மாத்திரை இருக்கிறது எனவும் பித்தம் அரை மாத்திரை இருக்கிறது எனவும் கபம் கால் மாத்திரை எனவும் சொல்லப்படுகிறது. இம்மூன்றும் இந்த அமைப்பில் இருந்தால்தான் ஓர் உடலை நோயில்லா உடல் என்கிறோம். அதில் மாறுபாடு அதாவது ஏற்றத்தாழ்வு இருந்தால் உடல் நோயுற்றது என்றோம். அந்நோயைத் தீர்க்க மூலிகைகளோ, கடைச்சரக்குகளோ, பாசானங்களோ தருகிறோம். அவற்றாலும் குணமாகாத நிலையில் தான் இயற்கை வழியில்

குணமாக்குகிறோம். அந்த இயற்கை முறைகளுள் ஒன்றுதான் மூத்தோர் சொன்ன அரசுமரம் சுற்றுதல்.

நம்மை ஆளக்கூடிய தன்மை அரசமரத்திற்கு உண்டு. பிராணவாயுவும், வியாணவாயுவும் சேர்ந்திருக்கக்கூடிய ஒரே மரம் அரசமரந்தான். அதனால்தான் ஆண்பெண் இருபாலருக்கும் அரசமரம் உகந்தது. இந்தத்தன்மை வேறு மரத்தில் இல்லை. ஆண்கள் அரச மரத்தை வலம் நோக்கிலும், பெண்கள் இடம் நோக்கிலும் சுற்ற வேண்டும். காரணம், அரசமரத்தை வலநோக்கில் வியாணனும் இடம் நோக்கில் பிராணனும் சுற்றி வருகின்றன. எனவே ஆணும் பெண்ணும் எதிர் நோக்கில் சுற்றினால் இரு வாயுவும் கிடைத்து உடல் சமநிலைப்படும். அதனால் உடலில் உள்ள எந்த நோயும் தீர்கிறது. பெண்ணுக்குக் கரு உண்டாக வாய்ப்புண்டாகிறது. ஆணுக்கு உயிரணு கூடுகிறது. மரத்தைச் சுற்றி அதன் சிறு விதைகள் இலட்சக்கணக்கில் பரவி இருக்கும். அதனால் அவற்றின் மீது நடக்கும்போது பிராண சத்தினையும், வியாண சத்தினையும் உறிஞ்சும் தன்மை அந்த விதைக்கு உண்டு. உடலில் உள்ள நாளமில்லாச் சுரப்பிகளும், உறுப்புகளும் பாதத்தில் கூடுகின்றன. அந்தப் பாதம் வழியாகப் பிராணன், வியாணன் வாயுவை உறிஞ்சி வைத்துள்ள அரசவிதைகள் படுவதால், உடலில் உள்ள அடைப்புகள் நீங்கி உடல் இயல்பான நிலையில் இயக்குகிறது. இவ்வாறு நோயற்ற தன்மையை உருவாக்குகிறது.

அரச மரத்தைப் பலர் சுற்றுவதால் அவர்களின் நோய்க் கிருமிகள் மற்றவர்களுக்குத் தொற்றாமல் இருக்கும். மஞ்சளால் நனைக்கப்பட்ட துணியை மரத்தில் ஆள் உயரத்திற்குச் சுற்றி வைப்பார்கள். இப்பழக்கம் நாளடைவில் மஞ்சள் பூசுவதோடு

நின்று விட்டது. மேலும், மரத்தின் கீழே இரண்டடி சுற்றளவில் சானியைத் தெளித்து வைப்பார்கள். இவை இரண்டும் கிருமி நாசினிகள் என்பது குறிப்பிடத்தக்கவை. எனவே தான், நாம் வீட்டை மெழுகி, மஞ்சள் தண்ணீர் தெளிக்கிறோம். மேலும், சாணி சூரிய சக்தினை அதிகமாய் இழுக்கும். அதனால் பிராணன் அதிகரிக்கும். குழந்தை இல்லாதவர்கள் காலையும், மாலையும் குறிப்பிட்டநேரத்தில் அரசமரத்தைச் சுற்றி வரவேண்டும் என்பதற்குக் காரணமும் உள்ளது. காலை ஏழு மணி முதல் பத்து மணி வரையிலும், மாலை ஏழு மணி முதல் இரவு பத்து மணி வரையிலும் உள்ள காலம் வாதகாலமாகும். எனவே., அதிகாலை 4.30 மணி முதல் ஏழு மணிவரையிலும், மாலை 4.30மணி முதல் இரவு ஏழுமணி வரையிலும் நீராவியின் நேரம். இந்த நேரத்தில் திரவவத்தின் சக்தியும், திடத்தின் சக்தியும் நேர்க்கோட்டிற்கு வரும். இது நீராவியின் ஆட்சிக்காலம். இந்த நேரம் ஆண்களும் பெண்களும் மட்டுமல்ல உலகமே உயிர்பெறும் நேரம். எனவே காலை மூன்று மணி முதல் ஆறு மணிவரையான காலத்தை பிரம்ம முகூர்த்தம் என்று சொல்கிறோம். பிரம்மர் என்றால் உயிர். இந்த நேரத்தில் தலையில் தண்ணீரை ஊற்றிக் கொண்டு, துணிகாயும் முன் அரச மரத்தைச் சுற்றத் தொடங்கவேண்டும். அப்போதுதான் சுற்றுபவர்களுக்குத் தேவையான பிராணனும், வியாணனும் கிட்டும். அதனால் ஆண், பெண் இருபாலரும் நோய் தீர்ந்து, உடல் ஆரோக்கியம் பெறுவார்கள். பெண்களுக்குக் கருப்பை சம்பந்தமான நோய்கள் நீங்கும். ஆண்களுக்கு உயிரணுக்கள் பலப்படும். அதனால்தான் அரச மரத்தைச் சுற்றினால் குழந்தை பிறக்கும் என்று நம் முன்னோர்கள் இந்த முறையை ஏற்படுத்தினார்கள். இந்தத் தத்துவத்தை உணர்ந்து தான் அரசமரத்தில் இரு பாம்புகள் எதிரெதிகர் பிணைந்து உள்ளது

போல் கல் நடப்பட்டிருக்கிறது. உடலுக்குத் தேவையான பிராணன், வியாணன் இரண்டையும் பெற, இம்மரத்தை ஆணும் பெண்ணும் எதிரெதிராய்ச் சுற்றிவர வேண்டும் என்பது தான் இதன் தத்துவம். நாளடைவில் இதையே நாம் வணங்கத் தலைப்பட்டோம்.

மேலும், இந்த இரு வாயுக்களின் அடிப்படையைக் கொண்டு தான் நம் உடலின் நோயும், நலனும் தீர்மானிக்கப்படுகின்றன. இதை உணர்த்தும் வகையில்தான் நம் பூர்வீகக் குறியீடான இரு பாம்புகள் பின்னியிருத்தல் நமது இந்திய மருத்துவக்கழகத்தின் சின்னமாய் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 980. கிரகணங்களால் ஏற்படும் ஆபத்து!

சூரிய கிரகணமும், சந்திரகிரகணமும் 13 அல்லது 14 நாள்களுக்குள் அடுத்தடுத்து ஏற்பட்டதால் உலகில் ஏற்படும் விளைவுகள் மிகப் பயங்கரமாய் இருக்கும். இரண்டாம் உலகயுத்தம் தொடங்கியது செப்டம்பர் 1939 ஆம் ஆண்டில் அப்போது ஜெர்மனி போலந்து நாட்டின் மீது படையெடுத்தது. 19.4.1939 அன்று சூரியகிரகணமும் நேர்ந்தன. அதன் பிறகு 13.10.1939 அன்று ஒரு சூரிய கிரகணமும் அதன்பிறகு 28.10.1939அன்று ஒரு சந்திர கிரகணமும் ஏற்பட்டன. அதன் பிறகு 13.3.1941 அன்று சந்திர கிரகணமும் 27.3.1941 அன்று சூரிய கிரகணமும் ஏற்பட்டன. இந்தக் காலகட்டந்தான் இரண்டாம் உலக யுத்தத்தின் போக்கு நிச்சயிக்கப்பட்ட உச்சகட்டமாகும். மகாபாரதயுத்தம் நடந்த போதும் இந்த வகைச் சூரிய, சந்திர கிரகணங்கள் ஏற்பட்டனவாம். அதே போல் 8.8.1998 அன்று சந்திரகிரகணமும் 22.8.1998 அன்று சூரிய

கிரகணமும் ஏற்பட்டன. இவற்றை அடுத்து 28.7.1999 சந்திரகிரகணமும் 11.8.99 அன்று சூரிய கிரகணமும் ஏற்பட்டன. இவ்வாறு 1998, 1999 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இருவார, இருகிரகணச் சேர்க்கையும் உலகில் நடந்து கொண்டிருக்கும் அழிவிற்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.

## 981. அதிசய மனிதர் நாஸ்டர்டாம்ஸ்!

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க சோதிடர் நாஸ்டர்டாம்ஸ் அதிசய மனிதர். அவர் எழுதிய சோதிட ஏடுகளால் அடுத்து என்ன நடக்கும் என்பதைத் தெளிவாய் எழுதியுள்ளார். அவர், 1502 ஆம் ஆண்டு தெற்கு பிரான்சில் அமைந்த புனிதரெமி என்னும் இடத்தில் பிறந்தார்; அவர் கவிதை நடையில் இரண்டு அடி அல்லது நான்கு அடி எண்ணற்ற சோதிடத் தகவல்களைச் சொல்லியுள்ளார். அந்நூலை 1555 ஆம் ஆண்டு உலகம் அறியச் செய்தார். நாஸ்டர்டாம்ஸ் உலகம் முழுவதும் பிரபலம் அடைந்தது, மூன்றாவது ஹென்றி மூலந்தான். ஒரு முறை இவர் மன்னர் மூன்றாவது ஹென்றிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் குதிரைச் சவாரி செய்யும் போது உங்களுக்கு எதிர்பாராத வண்ணம் மரணம் உண்டாகும்' என்று குறிப்பிட்டிருந்தார். அதனை மன்னர் பலருக்குத் தெரிவித்தார். அவர்களெல்லாம் நாஸ்டர்டாம்ஸைப் பைத்தியக்காரன் என்றனர். இந்த விவரம உலகம் முழுவதும் பரவியது. அதன்பிறகு, இரு வருடம் கழித்து ஹென்றி மன்னர், வழக்கம்போல் குதிரைச் சவாரி முடிந்ததும், வீரவிளையாட்டு விளையாடத் தொடங்கினார். அப்போது குதிரை வீரர்களும் விளையாட்டில் ஈடுபட்டனர். அவர்களுள் குதிரை வீரன், ஒருவன் குதிரையின் கால் இடறவே கீழே வீழ்ந்தான். அப்போது அவன் கையிலிருந்த ஈட்டி ஹென்றி மன்னர் நெஞ்சில் பாய்ந்தது.

பலவிதச் சிகிச்சை அளித்தும் பயனின்றி மன்னர் மரணமடைந்தார். அதன்பிறகே நாஸ்டர்டாம்ஸ் புகழ் பரவியது.

காஸ்டர்டாடிஸ் சொல்லிய முக்கியமான சோதிடங்கள் சில. அவர் சொல்லியது போலவே இரு உலகப் போர்கள் நடந்தன. இந்தியாவில் இந்திரா காந்தி, ராஜீவ்காந்தியும் பிரதமராயினர். பிறகு, கொடுமையான முறையில் அவர்களுக்கு மரணம் ஏற்பட்டது.

மேலும் அவர்தம் நூலில் கடலின் பெயர் கொண்ட ஒருமதக்கட்சி இந்தியாவை ஆளும் வல்லமை பெறும். ஏ என்னும் ஆங்கில எழுத்தை முதல் எழுத்தாய்க் கொண்டவர் அக்கட்சியின் தலைராய் இருப்பார் என்று பத்தாவது அத்தியாயத்தில் 36 ஆவது விளக்கத்தில் கூறியுள்ளார். அந்நூல் குறிப்பிடும் கடல் இந்துமாக்கடல். ஆகவே கடலின் பெயர் கொண்ட கட்சி பாரதீய ஜனதா ஆகும். அக்கட்சியின் தலைவர் ஏ என்னும் ஆங்கில எழுத்தை உடைய அடல்பிகாரி வாஜ்பாய் ஆவார். இது வியக்கத்தக்க ஒன்றல்லவா? அடுத்து, அந்நூலில் எட்டாவது அத்தியாயத்தில் 33 ஆவது விளக்கத்தில், இத்தாலி நாட்டில் பிறந்தவர் மனத்துக்குள் எடுத்த சபதத்தை முடிப்பார் என்று உள்ளது. இது சோனியா காந்தியைக் குறிக்கிறது. இதற்குக் காலந்தான் பதில் சொல்ல வேண்டும். மேலும், இவர் டயானாவின் மரணத்தைப்பற்றிக் கூறியுள்ளதும் அதிசயத்தக்க ஒன்றாகும்! இவர் மூன்றாவது உலகப்போர் நிகழும் என்றும் எச்சரித்துள்ளார். இந்த மூன்றாவது உலகப்போர் முடிவது கங்கைக்கரை ஓரமாய்த்தான் இருக்குமென்றும் கூறியுள்ளார். இவையெல்லாம் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே, நாஸ்டர்டாம்ஸ் எழுதிவைத்த அதிசயக்குறிப்புகள் ஆகும். சோதிட உலகின் அதிசய தீர்க்கதரசிக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாவார்.

## 982. பதினொன்றில் இராகு கூறும் இரகசியம்!

ஜோதிடக்கலை, இலாபஸ்தானம் என்று கூறும் 11 ஆம் இடத்தைப் பற்றிக்கூறும் விளக்கங்கள் பிரமிக்க வைப்பனவாகும். “11 வது உபஜெயஸ்தானம்” என்னும் சிறப்புடன் திகழ்கிறது. 11 ஆம் இடம் வெளிப்படுத்தும் பலன்களைப் பலரும் அறிவர். மனோபாவத்தைப்பற்றி அறிய இந்த இடம் பெரிதும் பயன்படும். பாவக்கிரகங்களுக்குண்டான பலம் ஏற்படும் இந்த 11 ஆம் இடத்தில் இராகு, கேது, சனி, செவ்வாய், சூரியன் ஆகியன நின்றால் ஜாதகர் ஏதேனும் ஒரு துறையில் திறமைசாலியாய்த் திகழ்வார். ஆனால் மனோநிலையில் குறைபாட்டுடன் இருப்பார். இல்லறத்தில் இனிய சுகம் இருந்தாலும் கசக்கிறது என்பார். 11 ஆம் இடத்திற்கும் இராகுவுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. குருவுக்குங்கூட அந்த இடத்தில் மிகுந்த மதிப்பு உண்டு. புகழையும், கல்விபயிலாமலேயே மேதையாக்கும் தகுதியையும் வழங்கும் அவர்கள், இல்லற சுபிட்சத்தை ஏற்படுத்துவதே இல்லை.

ஸ்ரீ ஆதிசங்கரர் இளமையில் துறவு பூண்டார்; பகவத் கீதைக்கும் உபநிடதத்திற்கும், பிரம்ம சூத்திரத்திற்கும் விரிவு உரை எழுதினார்; அத்வைதத் தாத்பரியத்தை விளக்கிக் கூறினார்.

அவர் ஜாதகத்தில் 11 இல் இராகு இருப்பதைக் காணலாம் 120 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த ஸ்ரீராமானுஜர் குருவையே சிஷ்யனாகப் பெற்றவர். அவர்மனைவி இனிய சுபாவங்களுக்கு அப்பாற்பட்டவர்; அதனால் இல்லறச் சுவையிலிருந்து வெகுதூரம் விலகிவிட்டார். வைஷ்ணவ மதத்திற்குப் புத்துயிர் ஊட்டிய மாபெரும் சமதர்மவாதியாகிய ஸ்ரீராமானுஜர்

ஜாதகத்திலும் இராகு 11 இல் இருப்பதைப் பார்க்கலாம். அதே போல் திருவருட்பாவைத் தந்த வடலூர் இராமலிங்க சுவாமிகள் ஜாதகத்தில் 11 இல் இராகு இருப்பதைக் காணமுடியும். இந்துமதத்துக்குப் புத்துணர்வு ஊட்டிய விவேகானந்தர் ஜாதகத்திலும் 11 இல் இராகு ஆகும். இந்த உலகத்தில் வந்து அவதரித்த அற்புதயோகி அரவிந்தர் ஜாதகத்திலும் 11 இல் இராகு ஆகும். அதே போல், அண்ணா, எம்.ஜி.ஆர் என்.டி.ஆர், கண்ணதாசன், சத்ரபதி சிவாஜி, பெர்னாட்ஷா ஆகியோர் ஜாதகத்திலும் 11 இல் இராகு ஆகும். இவர்களுள் கல்வி பயின்ற மேதைகளும் உண்டு, படிக்காத மேதைகளும் உண்டு. ஆனால், உலகம் அறிந்திடத்தக்க புகழுக்குச் சொந்தக்காரர்களாகிய இவர்கள் பெரும்பாலும் இல்லறத்தில் முழுமையான இனிமை காணாதவர்கள்.

11 இல் இருக்கும் இராகு பகவான் ஜாதகர்களுக்கு இருதாரம் என்ற அமைப்பையோ, குழந்தைச் செல்வமற்ற நிலையையோ, தன்னிலும் வயது மூத்தவரை மணக்கும் நிலையையோ, மனைவி காளியாகவோ, பேயாகவோ இருக்கும் நிலையையோ மச்சாரிய விரதத்தை மேற்கொள்ளுமாறோ, ஜாதி மாறித் திருமணத்தை முடிக்குமாறோ ஏற்படுத்தி சகஜமான இல்லற சுகத்தைச் சோதனைப்படுத்திக் காட்டுவார். இராகு 11 இல் அமைந்தவர்கள் பெரும்பாலும் பரபரப்பான மனம் உள்ளவர்கள். பிரம்மிக்க வைக்கும் சிந்தனைகளால் சிருஷ்டிகளைச் செதுக்கும் சிற்பிகள். அவர்களது தத்துவம் ஏதோ ஒருவகையில் சமுதாயத்தில் சீரிய கருத்து என்ற நிலையில் உலவிக்கொண்டிருக்கும். அறக்கட்டளை, நிறுவனம், பீடங்கள், திருமணமண்டபங்கள், முதலிய அமைப்புகள் அவர்கள் பெயரால் உருவாகி ஜொலித்துக் கொண்டிருக்கும். பெரும்பாலும் அவை பொதுமக்களின் தொடர்புள்ளவையதாகவே

இருக்கும். வரலாற்றில் அவர்களுக்காக இடம் ஒதுக்கப் பட்டிருக்கும். பொது நலத் தொண்டு அவர்களுக்கு இயல்பாகவே அமைந்துவிடும். இல்லறத் தொண்டு இயல்பாகவே குறைந்துவிடும். இதுவே 11 இல் இராகு வெளிப்படுத்தும் உண்மை.

## 983. திருமண வாழ்வின் இரகசியங்கள்!

ஆண், பெண் இருவரும் திருமணப் பொருத்தம் பார்க்கும் போது கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தக் குறிப்புகளை மனத்தில் கொண்டு, ஜாதகத்தை நன்கு ஆராய்ந்து வாழ்க்கையை நல்லபடியாக அமைத்துக் கொள்ள வேண்டும். 1. ஆண் பெண் ஜாதகத்தில் சுக்கிரன் ஏழில் இருந்தால் நல்ல குடும்ப வாழ்க்கை அமையாது. 2. சுக்கிரன் நீசம் பெற்றாலும் திருமணத்திற்குப் பின் நிம்மதி இராது. 3. சுக்கிரன் 11 இல் நின்றால் குருபார்வை இல்லாமலிருந்தாலும் நல்ல குடும்ப வாழ்க்கை அமையாது. 4. சுக்கிரன், சனியுடன் கூடி இருந்தாலும் நல்ல வாழ்க்கை அமையாது. 5. சுக்கிரன் 3, 6, 8 இல் மறைவது கூடாது. இவ்வாறு இருந்தால் நல்ல குடும்ப வாழ்க்கை இல்லை. 6. இரண்டில் சனி, செவ்வாய், சூரியன், இராகு, கேது போன்ற அசுபர்கள் இருந்தாலும் குடும்பவாழ்க்கை அமையாது. 7. ஆண், பெண் நட்சத்திரம் 7, 22 ஆக அமையக்கூடாது. இது விதவை நாசிகதோஷமாகும்" அதனால் இருவருள் ஒருவரை இழக்கும் நிலை உண்டாகும். 8. பெண் இராசிக்கு ஆண் இராசி 6 ஆவது இராசியாகவோ, 8 ஆவது இராசியாகவோ அமையக்கூடாது. இது "சஷ்டாஷ்டகதோஷமாகும்". இதனால் குடும்பத்தில் நிம்மதி இராது. 9. ஆண், பெண் ஜாதகத்தில் இருவருக்கும் ஒரே திசை ஆரம்பிப்பதாகவும் முடிவதுமாகவும்

இருக்கக்கூடாது. அப்படி இருப்பின் 180 நாள்களுக்குள் இருக்கக் கூடாது. 10 யோனிப் பொருத்தம் பார்க்கும்போது ஜென்மப்பகை யோனியாய் இல்லாமல் இருத்தல் வேண்டும். 11. ஆண்களுக்கு புத்திரஸ்தானமான 5 இல் குருவும், பெண்களுக்கு 9 இல் குருவும் இருக்கக்கூடாது. இதனால் புத்திரதோஷம் உண்டு. நன்கு ஆராய்ந்து பார்க்கவும் 12 ஏழில் பாபர் இருப்பது நல்ல கணவன், மனைவிக்கு ஏற்றதன்று. குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் எழும். 13. பெண் ஜாதகப்படி எட்டில் பாபர் இடம் பெறுவது மாங்கல்ய பலத்திற்குக் குறைவு ஆகும். எட்டில் பாபர் இருப்பின் அந்தக் கிரகத்தின் திசை, நடப்பிற்கு வராமல் இருப்பது நல்லது. அந்தத் திசை வரும் காலத்தில் மாங்கல்யத்திற்குச் சோதனை உண்டாகும். 14. இரண்டு, ஏழில் செவ்வாய் இருக்கப்பெற்ற ஜாதகர் குடும்பத்தில் நிம்மதி இராது. 15 பெண் இராசிக்கு, ஆண் இராசி ஏழாவதாக அமைவது "சமசபதகம்" ஆகும். இந்த அமைப்பானால் சிறப்பான குடும்ப வாழ்க்கை அமையும் கும்பம் - சிம்மம் கடகம் - மகரம் - இவை சமசப்தம இராசியாய் இருந்தால் திருமணம் செய்யக்கூடாது. செய்தால் குடும்பத்தில் ஒற்றுமை இருக்காது. 16. மேஷம், ரிஷபம் மிதுனம், சிம்மம், விருச்சிகம் ஆகிய இராசிகள் வளைந்து கொடுக்கும் சுபாவம் இல்லாத இராசிகள் ஆகும். மற்ற இராசிகள் வளைந்து கொடுக்கும் குணமுடையன. இதனைக் கருத்தில் கொண்டு வளைந்து கொடுக்கும் குணம் இருவருள் ஒருவரிடம் அவசியம் இருக்கவேண்டும் என்பதை உணர்ந்து பொருத்தம் அமைப்பது நல்லது.

## 984. கணவன் - மனைவி வயது இரகசியம்!

மனைவி இராசியிலிருந்து கணவன் இராசி வரை எண்ணி வந்த இலக்கை 7 ஆல் பெருக்கி, 27 ஆல் வகுத்தால் மீதி எத்தொகையோ அதுவே மனைவியின் ஆயுள் காலம் ஆகும்.

அதே போல், கணவனின் நட்சத்திரத்திலிருந்து, பெண் நட்சத்திரம் வரை எண்ணி வந்த இலக்கை 7 ஆல் பெருக்கி, 27 ஆல் வகுத்தால் மீதி வருவது எத்தொகையோ அதுவே கணவனின் ஆயுள்காலம் ஆகும்.

## 985. திருமணம் காலதாமதமாவதன் இரகசியம்!

ஒருவருக்குத் திருமணம் காலதாமதம் ஆவதற்குக் கீழ்க்கண்டவையே காரணம் ஆகும். 1. லக்கினாதிபதி இருக்கும் இடத்திலிருந்து சுக்கிரன் எட்டில் மறைந்தால் ஏழாம் அதிபதி சனியாய் இருந்து, சனிபகை பெற்றால் 3. இரண்டாம் அதிபதி நீசம் பெற்றால் 4. பாதகாதிபதி இரண்டாம் இடத்தையோ, ஏழாம் இடத்தையோ பார்வை இட்டால் 5. ஏழாம் அதிபதி 3, 12 க்கு உரியவர்கள் சாரம் பெற்றால் 6. இரண்டுக்கு உரியவர் பாதகஸ்தானம் பெற்றால் 7. சுக்கிரனும், சந்திரனும் பாதகாதிபதியாய் இருந்தால் 8. ஏழுக்கு உரியவர் பாதகாதிபதியுடன் சேர்க்கை பெற்றால் 9. சூரியனும் செவ்வாயும் இணைந்து காணப்பட்டால் 10. சூரியனுடன் இரண்டுக்கு மேற்பட்ட கிரகங்கள் சேர்க்கை பெற்றால் 11. சுக்கரனும் ஏழாம் அதிபதியும் 6, 8 இல் இருந்தால் 12. சந்திரனும், சனியும் சேர்ந்து இருந்தால் 13. ஏழுக்கு உரியவர் நீசம் பெற்றால் 14. சுக்கிரன் ஏழில் நின்றால் 15. இலக்கினத்திற்கு 1, 2, 7, 8 ஆகிய இடங்களில் பாவக் கிரகங்கள் இடம்பெற்றிருந்தால் 16. செவ்வாய் 2, 4, 7, 8

இல் இடம் பெற்றிருந்தால் 17. ஏழாம் அதிபதி 6, 8, 12 இல் நின்றால் 18. ஏழில் சூரியன் இராகு சேர்ந்திருந்தால் 19. சந்திரன் அல்லது சுக்கிரன் எட்டில் மறைவு பெற்றால் 20. ஏழில் சூரியன் தனித்து இடம் பெற்றால் அல்லது கூட்டுக்கிரக அமைப்பைப் பெற்றால் 21. செவ்வாய் வீட்டில் சந்திரன் இடம்பெற்று சனியால் பார்க்கப்பட்டால் 22. லக்கினத்திற்கு 2, 7, 8 இல் சூரியன் தனித்து இருந்தால் 23. மூன்றில் சுக்கிரனும், அதற்கு ஏழில் ஏழாமிடத்து அதிபதியும் இருந்தால் 27 வயதுக்கு மேல் 30 வயதுக்குள் திருமணம் நடைபெறும் 24. 2, 4, 7, 8 இல் செவ்வாய் இருந்து செவ்வாய்க்கு இரண்டில் குரு இருந்தால் காலம் கடந்த திருமணம் நடைபெறும் 25. இலக்கினத்திற்கு 2, 7, 8 ஆகிய இடங்களில் சூரியன் இருந்தாலும் சூரியன், சுக்கிரண் இணைந்து இருந்தாலும் திருமணம் நடைபெறாது.

### 986. யார் காதல் திருமணம் கலப்புத் திருமணம் செய்வார்கள்?

1. ஏழாம் அதிபதி 11 இல் அமையப்பெற்றாலும், 11ஆம் அதிபதி ஏழில் அமையப்பெற்றாலும் ஜாதகர் காதலில் ஈடுபடுவர் 2. இலக்கினத்தில் அல்லது ஏழில் சுக்கிரன் உச்சம் பெற்றிருந்தால் அந்த ஜாதகர் காதலில் ஈடுபடுவார் 3. இலக்னாதிபதியும், ஏழாம் அதிபதியும், 5, 7, 9, 11 இல் இருந்தால் காதலில் ஈடுபடுவர். 4. சுக்கிரனும் செவ்வாயும் இணைந்திருக்கப் பெற்றவர்கள் காதல் புரிவர். 5. சுக்கிரன் ஏழில் இருக்கப் பெற்றவர்கள் காதல் வசப்படுவர் அல்லது அறிமுகமானவர்களைத் திருமணம் செய்துகொள்வர். 6. ஜாதகத்தில் செவ்வாயைச் சனி பார்த்தால் கலப்புத்திருமணம் அமையும். 7. சுக்கிரன், சனியுடன் கூடி இருக்க அல்லது சமசப்தமமாய்ப் பார்வை இடக்கலப்புத்திருமணம் அமையும்.

## 987. ஜோதிடப் பழமொழிகள்!

சோதிடத் தொடர்பான சில பழமொழிகள் உள்ளன. அவை யாவுமே தத்துவார்த்தம் உடையவை; அர்த்தம் பொதிந்தவை அவற்றுள் சில; 1. அஷ்டமி விரதம் குஷ்டம் நீக்கும் 2. நவமிமாலை நனியும் சிறக்கும் 3. அஸ்தநாள் நாற்றுவிட யோக, போக இலாபம். 4. ஆவணி ஆண்மகனால் ஐந்து வயதில் யோகம். 5. ஆடியில் பசு சங்கற்பம் அனைத்து அதிர்ஷ்டமும் நாடி வரும் 6. குடமதில் கும்பம் அவிட்ட அதிர்ஷ்டம் 7. பங்குனி பிறப்பு சித்திரை சிறக்கும் 8. சித்திரை மாதத் சித்தர் வைத்தியம் பத்தரை மாற்றுத் தங்கப் பனி நீர் 9. அதிர்ஷ்ட விருத்தி ஐப்பசி ஜெனனன் 10. ஆனி அசுவினி அனைத்தும் அதிர்ஷ்டம் 11. அட்டமி ஏற்புபட்டம் இழப்பு 12. ஆதித்தசோகுரு சுங்கவாரவசிய மூலிகைத்திரவம் தரும் 13. ஆன்மீக புண்யகாணிக்கை சங்கற்பம் ஆவணியில் அந்தணருக்கு 14 உருட்டும் தோஷம் திருவாதிரைக்கு உண்டு 15. திருட்டிலும் சகுனம், ஓரை பலித்திடுமே 16. நாய் அழுதிடில் நலிவு நிச்சயம் 17. செவ்வாய் சிகிச்சை செம்மை இல்லை 18. ரோகிணி மாமன் காசினி நீச்சம் 19. தெவசத்திற்குப் பைரவ நாய் கூடாதே 20. மாலைக் கழுதை அழுகை மணம் பணம் உண்டு 21 மாசிப்பனிமச்சை துளைக்க மாசி மரம் மகிழ்ந்து ஈன்றிடும் 22. மீனவிருச்சிகசுங்கன் தசை முக்கால் பங்கு அதிர்ஷ்டம் 23. பரணி தரித்திர நிலையிலும் தரணி அதிகாரம். பின் வாழ்வு சிறக்காது 24. கேட்டைச் சந்திரன் மாத்ருதேட்டை 25. சிம்ம சத்யம் ஆத்மஞானம் தத்துவசித்தி.

## 988. காலக்கணக்கின் இரகசியம்!

நமது சாஸ்திரத்தில் ஒரு காலக்கணக்கு உள்ளது. அதன் விவரத்தை அறிந்து கொள்வோம். ஒருநாள் என்பது அறுபது

நாழிகைகள் கொண்டது; 15 நாள்கள் ஒருபட்ஷம் எனப்படும்; 30 நாள்கள் இரு பட்ஷம் ஆறுமாதம் ஓர் அயனம் ஆகும். இரு அயனங்கள் ஒரு வருஷம் ஆகும். இதில் ஆறுமாதங்கள் உத்தராயணம். அது தேவதைகளுக்கு ஒரு பகல். மறு ஆறுமாதம் தக்ஷிணாயனம். அது தேவதைகளுக்கு ஓர் இரவு ஒரு மனித வருஷம் என்பது தேவதைகளுக்கு ஒரு நாள் ஆகும். அப்படி 360 மனித வருஷங்கள் கொண்டது ஒரு தேவ வருஷம் ஆகும். 12, 000 தேவவருஷங்கள் கொண்டது ஒரு சதுர்யுகம். 12,000 x 360 மனித வருஷங்கள். அதாவது 43,20,000 வருஷங்களைக் கொண்டது சதுர்யுகம் எனப்படும். அதில் கலியுகம் 4,32,000 மனித வருஷங்கள்; துவாபரயுகம் 8,64,000 மனித வருஷங்கள், அதாவது 43,20,000 வருஷங்களைக் கொண்டது சதுர்யுகம் எனப்படும். அதில் கலியுகம் 4,32,000 மனித வருஷங்கள்; திரேதாயுகம் 12,96,000 மனித வருஷங்கள், கிருதயுகம் 17,28,000 மனித வருஷங்கள் இப்படி நாலுயுகங்களில் மொத்த மனித வருஷங்கள், கிருதயுகம் 17, 28,000 மனித வருஷங்கள். இப்படி நாலு யுகங்களில் மொத்த மனித வருஷங்கள் சேர்ந்தே 43,20,000 வருஷங்கள். அதுவே ஒரு சதுர்யுகம் என வழங்கப்படும். அப்படி 1000 சதுர்யுகம் பிரம்மாவுக்கு ஒரு பகல், அதாவது, 4,32,00,00,000 மனித வருஷங்கள்.

அதே மாதிரி 1000 சதுர்யுகம் கொண்டது. பிரம்மாவின் ஓர் இரவு. ஆக, 8,64,00,00,000 மனித வருஷங்களைக் கொண்டது பிரம்மாவின் ஆயுள். அதாவது, 4,32,00,00,000 மனித வருடங்கள். ஆகவே, 1000 சதுர்யுகம். ஒரு மன்வந்திரம் என்றால் 713/7 சதுர்யுகங்களைக் கொண்டதே. விஷ்ணு புராணப்படி 30, 67,20,000 மனிதவருஷங்களைக் கொண்டது. 713/7 சதுர்யுகம் என்றால் 71 சதுர்யுகங்களும்,

5103 தேவ வருஷங்களையும் உள்ளடக்கியதே ஒருமன்வந்திரம் ஆகும். அப்படி 14 மன்வந்திரங்கள் பிரம்மாவின் ஒரு பகலில் வந்து போகின்றன. ஒரு பிரம்மாவின் வயது ஏழுகல்பங்களைக் கொண்டது. ஒருபரம், அதாவது இருபராத்தம். ஒரு பராத்தம் என்றால் ½ பரம். அதாவது 1,57,68,000 கோடி மனுஷவருஷங்களைக் கொண்டது. இது தான் நமது முன்னோர்களின் அற்புத ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

## 989. 'அபிஜித்' இரகசியம்!

அபிஜித் முகூர்த்தம் என்பது பகல் 12 மணியைக் குறிக்கும். அந்த முகூர்த்தமானது எல்லா நாடுகளிலும் முக்கியமானது. எத்தனை அவகுணதோஷங்கள் இலக்கினத்திற்கு இருந்தாலும், அவற்றையும், திதிராதி தோஷங்களையும், நவகிரக தோஷங்களையும், போக்கி வெற்றியைத் தரும் இந்த அபிஜித்முகூர்த்தம் ஆகும். ஆனால், இந்த வேளையில் முடிவெட்டுதல், ஷேவிங், உபநயனம் (பூணூல் கல்யாணம்) ஆகியவற்றை மட்டும் பெறக்கூடாது!

## 990. தேளின் இரகசியம்!

ஒரு காரியம் தொடங்கும் முன்போ வெளியில் புறப்படும் போதோ தேள் வந்தால் அக்காரியம் பூரண வெற்றியடையும். சில சமயங்களில் எதிர்பாராத பணவரவும் உண்டாகும். தேள்தென்படுவது தெய்வம் தென்படுவது போலாகும். விருச்சிக இராசி இலக்கினக்காரர்களின் கண்ணில் தேள் தென்பட்டால் இன்னும் அதிர்ஷடம் ஆகும். அதே போல், நண்டு வருவதும் சிறந்த சகுனம் ஆகும். குறிப்பாய்க் கடக இராசி,

இலக்கினக்காரர்களின் கண்ணில் தென்படுவது அதிக அதிர்ஷ்டத்தைத் தரும்.

## 991. ஆடிப்பட்டம் தேடி விதை!

விதைகளில் உறக்கநிலையில் இருக்கும் கருமையானது. நவக்கிரகச் சுழற்சியால் ஆடிமாதத்தில் விழிப்புணர்வு பெறுகிறது. அதனால்தான் “ஆடிப்பட்டம் தேடி விதை” என நம் முன்னோர்கள் சொன்னார்கள். குறிப்பாய், அமாவாசை மிகச் சிறப்பான நாள் ஆகும்.

## 992. கிரகணங்களின் இரகசியங்கள்!

சூரிய கிரகணம் உடல் நிலையிலும், சந்திரகிரகணம் மனநிலையிலும் பலவிதப் பாதக விளைவுகளை ஏற்படுத்தும். இவற்றிற்கு மனிதர்கள் மட்டுமல்ல, விலங்குகளுங்கூட விதி விலக்கு அல்ல. கிரகண காலம் மானிடர்களுக்கு மட்டுமன்றித் தேவர்களுக்கும், கந்தர்வர்களுக்கும், பித்ருக்களுக்குங்கூட முக்கியமான புண்ணியகாலம் எனப் புராதனமான நூல்கள் தக்க ஆதாரத்துடன் விளக்கியுள்ளன. கிரகண நேரத்தில் சாப்பிடக்கூடாது; உடல் உறவு கொள்ளக்கூடாது. காரணம் கிரகணகாலத்தில் உடல் உறுப்புகளும், இந்திரியங்களும் பாதிக்கப்படுவதால், இத்தகைய கட்டுப்பாடு அவசியம் என ஆயுர்வேத வைத்திய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அந்த நேரத்தில் மனமும் பாதிக்கப்படுவதால் தவறான எண்ணங்களைத் தவிர்ப்பதும், ஆன்மீக எண்ணங்களை மட்டுமே மனத்தில் கொண்டிருப்பதும் நல்லது என நமது சாஸ்திரம் தெரிவிக்கின்றது. மற்றும், கர்ப்பிணிப் பெண்களின் உடலையும் ஊடுருவிச்சென்று கர்ப்பத்தில் மிக, மிகப் பாதுகாப்பாய் வளர்ந்து கொண்டிருக்கும் குழந்தையின் அவயவங்களைக்

கடுமையாகப் பாதிக்கும் சக்தி வாய்ந்த கதிர் வீச்சுகள் சூரியனின் வெளிப்பரப்பிலிருந்து கிரகண காலத்தில் உற்பத்தியாகின்றன. ஆதலால், கர்ப்பம் தரித்துள்ள பெண்கள் வீட்டிற்கு உள்ளேயே, உடலில் வெளிவெளிச்சம் எதுவும் படாமல் இருப்பது, அந்தச் சிசுவிற்கு நல்லது. கிரகண காலத்தைப் புண்ணிய காலமாய் நமது புராதன நூல்கள் கூறியுள்ளன.

பலயுகங்களிலும், வாழ்ந்து அவதாரபுருஷர்களுங்கூடக் கிரகணம் நிகழும் காலத்தைப் புண்ணிய காலமாய் ஏற்று, புனிதகாரியங்களில் ஈடுபட்டனர். அக்காலத்தில் உபதேசம் பெறும் மந்திரம் சித்தியை அளிக்கும். அதாவது, அந்த மந்திரத்தைக் கிரகணத்திற்குப் பிறகு நெடுங்காலம் வரை எப்பொழுது உச்சரித்தாலும் உடனடியாகப் பலன் தரும். சூரிய கிரகணம் பிடிக்கும்போதும், சந்திர கிரகணம் விடும்போதும் புனித நீராடி, நம் மறைந்த முன்னோர்களை நினைத்துத் தர்ப்பணம் முதலியவற்றால் பூஜை செய்ய வேண்டும். அப்பூஜையின் பலனைச் சூரிய பகவானும் சேர்க்கின்றனர். அதனால் மகிழ்ந்த முன்னோர்கள் நம்மை ஆசீர்வதிப்பார்கள். இவ்வாறு கருட புராணம், ஸ்ரீமத்மகாபாரதம் போன்ற இணையற்ற, பண்டைய நூல்கள் உறுதியாகக் கூறுகின்றன. இவ்வகையில் கிரகணங்கள் நமக்கு ஓர் அரிய வாய்ப்பை அளிக்கின்றன.

கிரகணங்களை நேரடியாகப் பார்க்கக் கூடாது. குறிப்பாகச் சூரிய கிரகணத்தை எக்காரணத்தைக் கொண்டும் நேராகப் பார்க்கக்கூடாது. ஏனென்றால் அப்போது ஏற்படும் கதிர் வீச்சுகள் கண்ணின் பார்வைச் சக்தியைப் பாதித்துவிடும். இதனை இன்றைய மருத்துவங்களும் ஒத்துக் கொள்கிறது. கிரகண நேரம் முடிந்த பிறகு தலைகுளித்து, சூரிய, சந்திரர்களை வழிபட்டு, அதன்பின்பே எதையும் சாப்பிட வேண்டும். உடல்

ரீதியாக இதுவே சரியான முறையாகும். கிரகண காலத்தின் போது தூங்காமல் இருப்பது நன்மை தரும். இந்த நேரங்களில் இஷ்ட தெய்வத்தைத் தியானம் செய்வதும், சுலோகங்களைப் பாராயணம் செய்வதும், மந்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டிருப்பதும் அளவற்ற நன்மைகளைத் தரும். கிரகண காலத்தில் ஏற்படும் தோஷத்தைத் தர்ப்பை நீக்கி விடுகின்றது. கிரகணம் பிடிப்பதற்கு முன்னால் வீட்டிலுள்ள உணவுப்பொருள், நீர் முதலியவற்றில் தர்ப்பையைப் போட்டு வைத்தால் கிரகணத்தால் ஏற்படும் தீய அணுக்கள் அண்டுவதில்லை. முன்னோர்களின் இந்தக் கண்டுபிடிப்பை இன்றைய விஞ்ஞானம் ஒத்துக்கொள்வது ஆச்சரியமான ஒன்றாகும்!

## 993. ஸர்ப்பதோஷம் நீக்கிடும் அற்புதத்தலம்!

இராகு, கேதுக்களால் ஏற்படும் தோஷத்திற்கு மிகவும் நல்ல பலனும், பரிகாரமும் அளிக்கக்கூடியசக்தி வாய்ந்த திருத்தலம் ஒன்று உள்ளது. அது சென்னையை அடுத்துள்ள அவதார மகாபுருஷராகிய ஸ்ரீராமானுஜர் அவதரித்த புண்ணிய பூமியான ஸ்ரீபெரும்புதூர் ஆகும். அது தலைசிறந்த தலமாய் விளங்குகிறது. ஸர்ப்பங்களுள் முதன்மை ஆனவர் ஸ்ரீமகாவிஷ்ணுவின் ஆசனமானவர் ஐந்து தலைகளினால் பிரகாசிப்பவர் ஆதிசேஷனே ஆவார். அவர் திரேதாயுகத்தில் லக்ஷ்மணனாகவும், துவாபரயுகத்தில் பலராமராகவும், கலியுகத்தில் ஸ்ரீராமானுஜராகவும் அவதரித்தாக விஷ்ணு புராணம் கூறுகிறது. எனவே, இராகு, கேதுவினால் உண்டாகும். காள - ஸர்ப்பதோஷம் மற்றும் இதர நாகஸர்ப்ப தோஷங்களுக்கும் ஸ்ரீபெரும்புதூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீராமானுஜர் தரிசனம் மிகச்சிறந்த பரிகாரமாகும். இந்த ஆலயத்தின் பின்புறம் உள்ள குளத்தை ஸ்ரீமந்நாராயணனின் ஆக்ஞையினால், ஆதிசேஷன் உருவாக்கினார். அதனால் அது

'அனந்தசரஸ்' என்னும் பெயரையும புகழையும் பெற்றதாகும். (ஆதிசேஷனுக்கு அனந்தஸர்ப்பம் என்னும் பெயர் உண்டு) இந்தத் திருக்குளத்தில் நீராடி, ஸ்ரீராமானுஜரையும், ஸ்ரீஆதி கேசவனையும் யதிராஜநாதவல்லித்தாயரையும் தரிசிப்பது காளஸர்ப்பதோஷத்திற்கும், நாகதோஷத்திற்கும் சிறந்த பரிகாரமாகும்.

## 994. திருவுளச்சீட்டின் இரகசியம்!

சிலர் ஜாதகம் இல்லாததால் திருமணப் பொருத்தம் பார்க்க ஆலயத்தின் முன் திருவுளச்சீட்டு போட்டுப் பார்ப்பது வழக்கம். இதனைப் பற்றி நமது சாஸ்திரம் கூறும் விளக்கம் வருமாறு: "பக்தியினால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை. பக்திக்கு மிஞ்சிய சக்தியும் இல்லை. ஜாதகம் இல்லாததால் உன் கருணையை நாடி வந்துள்ளோம்" என்று மனமுருகிக் குலதெய்வத்தை அல்லது இஷ்டதெய்வத்தை வேண்டித் திருவளச்சீட்டுப் போட்டுப் பார்த்தால் மிகச் சரியான உத்தரவு கிடைக்கும். இம்முறைக்குச் சில நிபந்தனைகள் உண்டு. அனு சம்பந்தப்பட்ட வரனின் இருதரப்பினரும் நீராடி, ஆசாரத்துடன் சந்நிதிக்குச் செல்ல வேண்டும். 2. எந்த இறைவன் அல்லது இறைவியாரிடம் உத்தரவு கேட்கிறோமோ அந்த மூர்த்திக்கு அபிஷேக அலங்காரங்கள் செய்ய வேண்டும். பின் மலர்மாலை சார்த்தி அர்ச்சனை செய்ய வேண்டும். நெய் தீபமேற்றித் திருவுளச் சீட்டை மூர்த்தியின் பாதங்களில் வைத்திருக்க வேண்டும். இருக்கக் கற்பூர ஆரத்தி காட்டி, அர்ச்சகரை எடுத்துக் கொடுக்கும்படி கூற வேண்டும். 3. ஒரே ஒரு முறைதான் இம்முறையைக் கையாள வேண்டும் 4. அனைவரும் அந்தத் திருவுளச் சீட்டின் மூலம் அளிக்கும் உதர்தரனு மறுபரிசீலனையின்றித் தயக்கம் இல்லாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும். 5. தங்களுக்குச் சாதகமாய் வர வேண்டும்

என்பதற்காக ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறி, ஒரே விஷயத்திற்குப் பல முறை திருவளச்சீட்டுப் போட்டுப் பார்க்கக்கூடாது. தன்னை நம்பியவர்களை இறைவனும் இறைவியும் என்றும் கைவிட்டதில்லை. வேண்டுவது நம்பிக்கையும் பக்தியுமே.

## 995. செய்வினை என்பதன் இரகசியம்!

உலகில் பலவிதத் தெய்வசக்திகள் உள்ளன. ஒவ்வொரு தெய்வ சக்தியும் குறிப்பிட்ட மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவை ஆகும். அத்தகைய மந்திரங்களை எவ்விதம் பிரயோகிப்பது என அதர்வண வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்திலும் குறிப்பிட்ட சில சூழ்நிலைகளிலும் மட்டும் இத்தகைய மந்திரங்களைப் பிரயோகித்து, அந்தத் தெய்வசக்திகளின் மூலம் சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். இப்பிரயோக முறைகள் மிகக் கடினமானவை ஆகும்; ஆபத்தானவையுங்கூட. சிறு பிழை ஏற்பட்டாலும் தன்னைப் பிரயோகித்தவரையே அது மிகக்கடுமையாகப் பாதிக்கும். மேலும், செய்வினை மந்திரத்தினால் ஏற்படும் துன்பம் மிகமிகக் கொடியதாகும். நெஞ்சில் சிறிதளவும் இரக்கம் இல்லாதவர்களே இத்தகைய கொடிய மந்திரப் பிரயோகங்களை நாடுவர். செய்வினை மந்திரங்களின் சக்தி உள்ள கால நேரம் மிகச்சிறியதே. ஆயினும் அக்குறுகிய காலத்திலேயே குறிப்பிட்ட நபரையும், அவரது குடும்பத்தினரையும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத அளவிற்குக் கடுமையாகப் பாதித்துவிடும். சிலரைத் தவிர மனிதன் என்றும் சுயநலக்காரனாய் வாழவே விரும்புகின்றான்.

குறிப்பிட்ட காரியங்களுக்காக மட்டுமே ஏற்பட்ட மிகச்சக்தி வாய்ந்த இந்த அரிய மந்திரங்களைப் பிறரை

அழித்துத் தான் மட்டுமே வாழ்வதற்காகப் பலர் உபயோகித்துக் கொண்டுள்ளனர்.

செய்வினையில் ஈடுபடுபவர்கள் இப்பிறவியிலோ அடுத்து வரும் பிறவிகளிலோ மிகக்கடுமையான தண்டனைக்கும், துன்பத்திற்கும் ஆளாவார்கள். ஒரு காரணமுமின்றி மற்றவர்களுக்குப் பொறாமையினால் செய்வினை செய்தல் மிகக்கொடிய பாவமாகும். முற்பிறவிகளில் செய்த கொடிய தவறுகளின் காரணமாகவே செய்வினை அனுபவம் ஒருவருக்கு ஏற்படும். செய்வினையினால் பாதிக்கப்பட்டவர்கள் சரபேஸ்வரர், பிரத்தியங்காரதேவி, ஸ்ரீயோகநரசிம்மர், ஸ்ரீசுதர்சனம், வீரபத்திரர், ஸ்ரீஆஞ்சநேயர், சக்தி, துளசி ஆகிய தெய்வங்களைத் தீவிரமாய் வழிபடுவதன் மூலம் அத்தகைய தீயபலன்களிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ளலாம். அனுபவ பூர்வமாய் இதனை உணரலாம்!

## 996. பிறந்த நாளுக்கு மெழுகுவத்தி வேண்டா

இன்று பலர் தங்கள் பிறந்த நாளை மெழுகுவத்தி ஏற்றி அணைத்தும் பலூன் உடைத்தும் கொண்டாடுகிறார்கள். இது மிகப்பெரிய அபசகுனமும், தோஷமும் ஆகும். பிறந்த நாள் அன்று ஆயுள் ஹோமம் செய்வதே மிகச்சிறந்தது ஆகும். மேலும், எல்லோரும் ஆங்கில தேதியையே பிறந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள். இதுவும், ஒரு தவறான செயல் ஆகும். பிறந்த நாளை அவர்களது பிறந்த நட்சத்திரம் அன்றே கொண்டாட வேண்டும். இதுவும் முக்கியமான ஒன்றாகும்!

## 997. மாதங்கள் தரும் தோஷம்!

1. எந்த மாதத்தில் பௌர்ணமி, அமாவாசை இல்லையோ அந்த மாதத்திற்கு விஷமாதம் என்று பெயர்.

2. எந்த மாதத்தில் இரு பௌர்ணமியோ, அமாவாசையோ வருகின்றனவோ அதை மலமாதம் என்று குறிப்பிடுவார்கள். விஷமாதத்திலும், மலமாதத்திலும் சுபகாரிங்களைச் செய்வதை விலக்க வேண்டும். ஆனால், சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களுக்கு இந்தத் தோஷம் இல்லை.

## 998. சோமபானம்!

சோமபானம் என்பது தேவர்களுக்கு மிகப்பிரியமான ஒரு பானம். வேள்விகளில் இந்தச் சோமபானம் தேவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுவதுண்டு. 'சோம' என்னும் செடியின் இரசந்தான் இந்தப் பானம். இந்தச் செடி மஞ்சள் நிறமானது. பாரசீக மொழியில் இதை "ஹோம" என்றனர். அவர்கள் குறிப்பிடும் அந்தச்செடியும் மஞ்சள் நிறமானது. அந்தச் செடியின் இலைகள் இரவில் சந்திர வெளிச்சத்தில்தான் பறிக்கப்படும். அச்செடியின் வளர்ச்சிக்கும் சந்திரன் பெரிதும் பயன்படுகிறதாம். சோமபானம் உண்டோர் மயங்குதல் போலச் சந்திரனுக்கும் அந்த மயக்க சக்தி உண்டு என்று பின்னர்க் கூறப்பட்டது. அதனால் சந்திரனால் பைத்தியம் பிடிக்கும் என்று கருத்து பிறந்தது. இலத்தீன் மொழியில் 'லூனா' என்றால், சந்திரன் என்று பொருள். அதிலிருந்து பிறந்ததே "Lunacy, Lunatic" என்னும் வார்த்தைகள். இவற்றிற்குப் பைத்தியம், பைத்தியக்காரன் என்று அர்த்தம். எனவே, மனத்துக்கும், சந்திரனுக்கும் தொடர்பு உள்ளதால்தான் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், பௌர்ணமியன்று, அதிகம் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். இவையெல்லாம் நவக்கிரகங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள தொடர்பின் இரகசிய வெளிப்பாடுகள் ஆகும்.

## 999. பூமியைப்பற்றிய உண்மைகள்!

பூமிக்கு ஒரு புறம் சுக்கிரன், புதன், சூரியன் என்னும் மூன்று கிரகங்கள் இருக்கின்றன; மற்றொரு புறம் செவ்வாய், குரு, சனி என்னும் மூன்று கிரகங்கள் இருக்கின்றன. சந்திரன், பூமியைச் சுற்றி வரும் ஓர் உபகிரகம் ஆகும்.

## 1000. ஜோதிட இரகசியங்கள் சில!

2000 ஆம் ஆண்டில் மே 5 அன்று புளூட்டோ தவிரச் சூரியக் குடும்பக்கோள்களும், சந்திரனும், ஏறத்தாழ ஒரே வரிசையில் அணிவகுத்த அற்புதகாட்சி நடைபெற்றது. அச்சமயத்தில் பிறகோள்களின் ஈர்ப்பு விசையால் அண்டார்டிகாவில் உள்ளாஸ் உடைந்து பூமிக்கு அபாய விளைவு ஏற்படும் என்று நம்பப்பட்டது. ஆனால், சூரியன் பின்புறத்தில் கோள்கள் அணிவகுத்தால் பூமிக்கு எந்த ஓர் ஆபத்தும் ஏற்படவில்லை.

தேய்பிறை நாள்களைவிட, வளர்பிறை நாள்களில் மனிதனின் அறிவாற்றலும், மதிநுட்பமும் அதிகமாகின்றன. அதனால் எதையும் தெளிவாகப் புரிந்துகொண்டு, முக்கிய விஷயங்களில் சரியான முடிவுகளை எடுக்கும் திறனை மனிதன் பெறுகிறான் என்பதே வானியலை ஆதாரமாய்க் கொண்ட ஜோதிடம் கூறும் உண்மையாகும். ஆதலால்தான் தேய்பிறை நாள்களைவிட, வளர்பிறை நாள்கள் சிறந்தவை ஆகும்.

ஏகாதசி திதியன்று பெருமாளுக்கு உபவாசம் இருப்பார்கள். விஞ்ஞான ரீதியாய் அன்று பூமியைத் தாக்கும் நவக்கிரகங்களின் கதிர்கள் மனிதனின் ஜீரணத்தைப் பாதிக்குமாம். அதற்காகத்தான் நம் முன்னோர்கள் இப்படி ஓர் ஏற்பாட்டினைச் செய்தார்கள்.

இராகு காலம், எமகண்டம் ஆகிய நேரங்கள் கெட்ட நேரங்களாகும்; எந்தக் காரியத்தையும் தொடங்கக்கூடாது என நம்முன்னோர்கள் சொன்னார்கள். விஞ்ஞான ரீதியாய் அந்த நேரங்களில் நவக்கிரகத்திலிருந்து வீசப்படும் கதிர்கள் அந்த புத்தியை ஏற்படுத்துமாம். எனவே தான், இப்படி ஓர் ஏற்பாட்டினை அன்றைய முன்னோர்கள் விஞ்ஞானப் பூர்வமாய் சொல்லியுள்ளார்கள்.

ஏகாதசி திதியன்று எந்த சுபகாரியத்தையும் செய்ய வேண்டா. அன்றைய நாள் இறைவழிபாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நாள் ஆகும்.

அஷ்டதிதியை மோசமான நாள் என்பார்கள். ஆனால், அது அபூர்வமான ஒரு திதியாகும். அது மருத்துவச் சிகிச்சை செய்யவோ ஆபரேஷன் செய்யவோ மிக மிகச் சிறப்பான நாளாகும்.

ஒவ்வொருவரும் மூன்றாம் பிறையை அவசியம் தரிசனம் செய்ய வேண்டும்.

டிசம்பர் 21 ம் தேதியிலிருந்து குளிர்காலம் தொடங்கும். விண்ணில் தெற்கு முகமாய்ச் சென்ற சூரியன் மீண்டும் வடக்கு நோக்கி இந்நாளில் திரும்புகிறது. மேலும் டிசம்பர் 21 இல் இரவுப்பொழுது மிகவும் நீண்டதாயும், பகல் பொழுது மிகவும் குறைவானதாகவும் இருக்கும். அந்தக் குறிப்பிட்ட நாளில் தான் முன்பு கிறிஸ்துமஸ் கொண்டாடப்பட்டது. பின்பு வந்த நூற்றாண்டுகளில் காலண்டர்களில் ஏற்பட்ட மாற்றத்தால் அந்தத் தேதி டிசம்பர் 25க்கு மாறியது.

குரு லக்கினம், கேந்திரம், திரிகோணம் உச்சம் ஆகியவற்றில் இருந்தால் திதி, வாராதி தோஷங்கள் பார்க்க வேண்டா.

## 1001. அக்டோபர் இரண்டாம் நாளின் சிறப்புகள்!

இந்த உலகில் நடக்கும் ஒவ்வொன்றும் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டவை என்பதற்கு அக்டோபர் 2 ஆம் தேதி ஓர் உதாரணம் ஆகும். அக்டோபர் 2 ஆம் தேதியன்று தான் மகாத்மா காந்தி பிறந்தார், அதே அக்டோபர் 2 இல் தான் காந்தி வழி நடந்த லால் பகதூர் சாஸ்திரி பிறந்தார். அதே அக்டோர் 2 ஆம் தேதியன்று தான் தென்னகத்துக் காந்தி என வழங்கப்பட்ட காமராஜர் இறந்தார். அதே அக்டோபர் 2இல்தான் சுதந்திரதிற்காக பாடுபட்டவரும், அயல் நாட்டைச் சார்ந்தவருமான அன்னிபெசன்டு அம்மையார் பிறந்தார்.

## 1002. இயற்கை நடத்திக் காட்டிய அதிசயம்!

நெப்போலியனுக்கும் ஹிட்லருக்குமிடையே பல விஷயங்களில் 129 என்னும் ஒற்றுமை உள்ளது என்பது அதிசயமான ஒன்றாகும். நெப்போலியன் பிறந்தது 1760 ஆம் ஆண்டில் ஹிட்லர் பிறந்தது 1889 ஆம் ஆண்டில். வித்தியாசம் 129 ஆண்டுகள். நெப்போலியன் வியன்னாவைக் கைப்பற்றிய ஆண்டு 1809இல் ஹிட்லர் வியன்னாவைப் பிடித்த ஆண்டு 1938இல் இந்த இரண்டுக்குமிடையே உள்ள வித்தியாசம் அதே 129 ஆண்டுகள் 4. நெப்போலியன் ரஷ்யாவுடன் போரிட்டது 1812ஆம் ஆண்டில். ஹிட்லர் ரஷ்யாவுடன் போரிட்டது 1941ஆம் ஆண்டில். இவ்விரண்டுக்குமிடையே உள்ள வித்தியாசம் 129 ஆண்டுகள்.

நெப்போலியன் தோற்கடிக்கப்பட்டது 1816 ஆம் ஆண்டில். ஹிட்லர் வீழ்த்தப்பட்டது 1945 ஆம் ஆண்டில். இரண்டுக்கும் இடையே உள்ள ஆண்டுகள் 129. இயற்கை நடத்திக் காட்டிய அதிசயத்தைப் பார்த்தீர்களா!

## 1003. இயற்கை தந்த அதிசயப் பொருத்தம்!

ஆபிரகாம்லிங்கனும், கென்னடியும் அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜனாதிபதிகள் ஆவர் அவ்விருவரது வாழ்விலும், சாவிலும் இருந்த ஒற்றுமைகள் பெரும் அதிசயத்தைத் தருகின்றன.

ஆபிரகாம் லிங்கன் 1846 ஆம் ஆண்டு காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கென்னடி 1946 தேர்ந்தெடுக்கப்பட்டார்; 2. ஆபிரகாம்ல லிங்கன் 1860 ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆனார். 3. ஆபிரகாம் லிங்கனைச் சுட்டுக்கொன்ற ஜான்வில் கஸ்பூத் 1839 ஆம் ஆண்டு பிறந்தவன். கென்னடியைக் கொன்ற ஹார்விஆஸ்வாட் 1939 ஆம் ஆண்டு பிறந்தவன் 4. ஆபிரகாம் லிங்கனை தியேட்டரில் சுட்டுவிட்டுத் ஒரு கிடங்கை நோக்கினான், பூத்; கென்னடியை ஒரு கிடங்கின் மாடியிலிருந்து சுட்டு விட்டுத் தியேட்டரை நோக்கி ஓடினான். ஆஸ்வாட். 5. ஆபிரகாம் லிங்கனின் காரியதரிசியின் பெயர், கென்னடி. கென்னடியின் காரியதரிசி பெயர் லிங்கன். இயற்கை அமைத்த இந்த அதிசயப் பொருத்தத்தைப் பார்த்தீர்களா!

## 1004. ஆடி, தை அமாவாசையின் இரகசியம்!

உத்ராயணத் தொடக்கமாகிய தைமாத அமாவாசை அன்றும் தக்ஷிணாயணத் தொடக்கமாகிய ஆடிமாத அமாவாசை அன்றும் அதி அற்புதமான கதிர்கள் சூரிய உதயத்தின் போது வெளிப்படும். அப்போது கடலில் நீரானால் அதி அற்புத சக்தியை நாம் பெறலாம். அதற்குரிய நேரம், பிரம்ம முகூர்த்தமாகிய அதிகாலை மூன்று மணி முதல் ஐந்து மணிவரை உள்ள நேரம் ஆகும். குறிப்பாக, நாகபட்டினம் மாவட்டத்திலுள்ள வேதாரண்யத்திற்கு அருகே உள்ளது

கோடியக்கரை. அந்த ஊரில் அமைந்துள்ள சித்தர்துறை என்னும் இடத்தில் கடலில் நீராடினால் அதி அற்புதசக்தியைப் பெறலாம். இது சித்தர்கள் சொன்ன அதி அற்புத இரகசியம் ஆகும்.

## 1005. ரோகிணி நட்சத்திரத்தின் சிறப்பு!

ரோகிணி நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சரிக்கையில் திதி, வாராதி தோஷங்களையும், நவக்கிரக தோஷங்களையும் குளிகன் முதலான தோஷங்களையும் பார்க்க வேண்டா! அப்படிபட்ட அதி அற்புதமான நட்சத்திரம் ரோகிணி ஆகும்.

## 1006. குருபகவானின் அதி அற்புத இரகசியம்!

குருபகவான் ஓர் இராசியில் ஓராண்டுகாலம் சஞ்சாரம் செய்கிறார். சில இராசிகளில் அவர் சஞ்சாரம் செய்யும் பொழுது நமது பாரத பூமியில் சில இடங்களில் தீர்த்தப் பெருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவை 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும். அவற்றுள் தமிழ்நாடு மிகவும் புகழ் பெற்றதாகும். கும்ப கோணத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் குரு, சிம்ம இராசியிலும், சந்திரன், மகநட்சத்திரத்திலும், சூரியன் கும்பஇராசியிலும் இருக்கும். மாசிமாதப் பௌர்ணமி அன்று "மகாமகம்" நடைபெறும். 2. அதே கேபால் குருபகவான் கன்னிஇராசியில் வரும்போது திருக்கழுக்குன்றத்தில் சங்கு தீர்த்தமும் 3. குருபகவான் கும்ப இராசியில் வரும்போது ஹரித்துவாரில் கும்பமேளாதீர்த்தமும் 4. குரு பகவான் மேஷத்தில் வரும் போது அலகாபத்தில் பிரயாகை தீர்த்தமும், 5. குருபகவான் கடகத்தில் வரும் போது நாசிக்கில் பஞ்சவடி தீர்த்தமும் 6. குருபகவான் துலாத்தில் வரும்போது உஜ்ஜயினியில் மேளதீர்த்தமும் நடைபெறும்!

## 1007. பெண்களுக்குச் சோதிடம் கூறும் இரகசியம்!

தாய்க்கு எட்டாம் இடத்தில் சந்திரன் சஞ்சரிக்கும் போது கருத்தரித்தால், அந்தப் பிரசவம் மிகவும் கடின மாய் இருப்பதுடன், குழந்தை பிறந்த பிறகும் தாயின் உடல் ஆரோக்கியம் கடுமையாய்ப் பாதிக்கப்படும் என்பதே ஜோதிடக் கலையின் இரகசியம் ஆகும். எனவே, தம்பதியர் இந்தக் கால கட்டத்தில் உடல் உறவு கொள்ளாமல் இருபது மிக, மிக அவசியம் என்பதை உணர வேண்டும். மேலும், குழந்தையின் ஜெனன கால ஜாதகத்தில் இலக்கினத்திலிருந்து எட்டாம் இடத்தில் சந்திரன் இருப்பதும் மேற்கண்ட பலனையே தரும்!

## 1008 ஸ்ரீ அரவிந்தர் பிறப்பின் தீர்க்க தரிசனம்!

பாண்டிச்சேரி என்னும் அற்புத இடத்திலிருந்து உலகத்தை ஆளும் ஸ்ரீஅரவிந்தரும், ஸ்ரீ அன்னையும் நமது உலகுக்குக் கிடைத்த அற்புதப்பரிசுகள் ஆகும். இவர்களுள் ஸ்ரீஅரவிந்தர் பிறப்பே நமது பாரத நாட்டில் சிறப்பான ஒன்று ஆகும். ஸ்ரீ அரவிந்தர் பிறந்த தேதி ஆகஸ்ட்டு 15 ஆகும்! நமது பாரத நாடு சுதந்திரம் பெற்றதும் ஆகஸ்ட்டு 15 ஆகும்! என்ன அற்புதமான, அதிசயமான ஒற்றுமை பார்த்தீர்களா?

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் தரிசிக்க வேண்டிய இடம் பாண்டிச்சேரியிலுள்ள ஸ்ரீஅரவிந்தர், ஸ்ரீ அன்னை சமாதி ஆகும். அவசியம் தரிசித்து நம் பாவத்தையும், தோஷத்தையும் போக்கி, ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீஅன்னையின் அருளைப் பெறவேண்டும்.

**ஓம்ஸ்ரீ அரவிந்த அன்னையே துணை!**